உலக இலக்கியம்

# சித்தார்த்தன்

ஹெர்மன் ஹெஸ்ஸே



TVM116165
DCL Tiruvannamalai

தமிழில்: சஃபி

# 1. பிராமணக் குழந்தை

வீட்டுக்கு வெளியிலும், ஆற்றங்கரையிலும் வெயிலேற்று, மஞ்சள் படர்ந்த மூங்கில் காடுகளிலும், அத்தி மரங்களின் நிழல்களிலுமாக சித்தார்த்தன் என்ற அழகான பிராமண இளைஞன் தன் நண்பன் கோவிந்தனுடன் வளர்ந்தான். ஆற்றங்கரையில் பகல் நேரத்தைச் செலவழித்ததன் பலனாக அவன் உடல் சூரிய ஒளி பட்டுச் சற்றுத் தவிட்டு நிறத்துக்கு மாறியிருந்தது.

ஆற்றில் குளியல் மற்றும் யாக கர்மங்கள் எல்லாம் தினசரி செய்ய வேண்டியதாயிற்றே! மாந்தோப்பில் விளையாடும்போதும், அம்மா பக்திப் பாட்டுகளைப் பாடும்போதும், அப்பா புராணங் களைக் கற்பிக்கும்போதும், மகா பண்டிதர்களான மற்ற பிராமணர் களுடன் பொழுதைக் கழிக்கும்போதும் சித்தார்த்தனின் கண்களில் அந்தந்த சந்தர்ப்பத்தின் பிரதிபலிப்பு தென்பட்டு, மறையவே செய்தன.

இதற்குள் சித்தார்த்தன் பல உபநிஷத்துகளையும் கற்றுத் தேர்ந்து, பண்டிதர்களுடன் விவாதம் நடத்துவதிலும், கோவிந்த னுடன் அவை குறித்து வாதப்பிரதிவாதங்கள் செய்வதிலும் ஈடுபட்டான். உபநிடதங்கள், ராமாயணம், பாகவதம் போன்றவற்றில் தெளிந்த ஞானம். இவை குறித்து, தொடர்ந்து கால நேரம் மறந்து சிந்தனையில் ஆழ்ந்திருத்தல், தியானத்தில் தொடர்ந்து எத்த னையோ மணி நேரம் ஈடுபடுதல் போன்றவை சித்தார்த்தனின் வழக்கமான அன்றாட நடைமுறைகளாக இருந்தன.

அமைதியாக அமர்ந்து 'ஓம்'காரத்தை உச்சரிக்கவும், அத்துடன் பிராணாயாமம் செய்யவும் அவனால் சுலபமாக முடிந்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் அவனது தோற்றமே பரிசுத்தமான ஒளியின் மற்றொரு வடிவமாக மாறும்!

பிரபஞ்ச ரகசியங்களின் ஆழப்பகுதிகளில் இறங்கிச் செல்லவும், அழிவற்ற ஆத்மாவைக் கண்டறியவும் சித்தார்த்தனால் முடிந்திருக்கிறது.

இவையெல்லாமே சித்தார்த்தன் என்கிற பிராமண இளைஞனின் தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சி அளித்தன. மகன் புத்திசாலியாகவும், சா திர அறிவில் வல்லவனாகத் திகழ்வதும் எப்படிப்பட்ட அப்பாவுக்கும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதுதானே!

சித்தார்த்தன் ஒரு பண்டிதனாகவும் பூஜை புன காரங்களில் முறை தவறாத உன்னதமான ஒருவனாகவும் விளங்க வேண்டும் என்றெல்லாம் அவன் அப்பா கனவு காண்பதும் உண்மை.

அவனது நடை, கம்பீரம், நடவடிக்கைகள், திடமான ஆரோக்கியம், வாளிப்பான உடல் ஆகியவை சித்தார்த்தனின் தாயிடமும் பெருமிதத்தை ஏற்படுத்தவே செய்தன. பாதங்களைத் திடமாகத் தரையில் ஊன்றி அடிமேல் அடிவைத்து, மிடுக்குடன் தன்னை நெருங்கி வணங்கும் மகனது பிள்ளைப் பருவம் தாண்டிவிட்டிருக்கிறது. இளைஞனான மகனின் உச்சந்தலையில் அந்தத் தாய் முத்தமிடுவாள்.

சித்தார்த்தனின் நடமாட்டம் அந்தச் சுற்றுப்புறத்திலுள்ள பிராமண இளம்பெண்களின் மனங்களைப் படிப்படியாக அலைக்கழிக்கத் தொடங்கியிருக்கிறது எனலாம். மன்னர்களுக்கே உரித்தானது போன்ற கண்களும், நீண்ட மிதமான தசைப்பிடிப்பான உடம்பும், ஆண்மை நிறைந்த அவனது நடவடிக்கைகளும் அந்தப் பகுதியிலிருந்த கன்னிப் பெண்களை வெகுவாகவே கவர்ந்து விட்டன.

சித்தார்த்தனின் நண்பனான கோவிந்தனும் பிராமணன்தான். அண்டை வீட்டுக்காரனும்கூட. கோவிந்தன், சித்தார்த்தனை மிகவும் நேசித்தான். சித்தார்த்தனின் கண்களும், தெளிவான குரலும் அவனைப் பெருமளவு வசீகரித்தது. சித்தார்த்தன் என்ன சொன்னாலும், எதைச் செய்தாலும் கோவிந்தனுக்குப் பிடிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக கோவிந்தன் விரும்பியது சித்தார்த்தனின் அறிவையும், ஆழமான சிந்தனைத் திறனையும், மன உறுதியையும்தான். சித்தார்த்தன் ஒரு சாதாரண பிராமணப் பண்டிதனாக யாகம் மற்றும் தீர்த்தாடனங்கள் செய்து, ஒரு குடும்பத் தலைவனாக இருந்துவிட மாட்டான் என்கிற ஞானோதயம், கோவிந்தனுக்கு வெகு காலத்துக்கு முன்பே தோன்றி விட்டது. ஆனால், அதை அவன் யாரிடமும் சொல்லவில்லை.



மிகவும் தேர்ந்த பிராமண புரோகிதர்கள் எங்கே, சித்தார்த்தன் எங்கே? கோவிந்தனும் அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகி விடவேண்டும் என்று விரும்பவில்லை. சித்தார்த்தனையே பின்தொடர வேண்டும். அவன் என்ன செய்கிறானோ, அதையே தானும் செய்ய வேண்டும். அவன் என்னவாக இருக்கிறானோ, தானும் அதுவாக ஆகவேண்டும். ஆயிரக்கணக்கான ஏனைய பிராமணர்களிலிருந்து மாறுபட்டு வித்தியாசமானவனாக இருக்க வேண்டும். அதுதான் சித்தார்த்தனது லட்சியம். தனக்கும் அதுதான் லட்சியம்!

ஒருவேளை சித்தார்த்தன் ஆத்மஞானம் பெற்று கடவுளுக்கு சமமான ஒருவனாக மாற நேர்ந்தால், தானும் அவன் நண்பன், அடியாள், வாரிசு போன்ற ஏதாவது ஒரு நிலையில் அவனைத் தொடரவும் முடியும். பெரும்பாலானவர்கள் இந்தக் கண்ணோட்டத்துடனே சித்தார்த்தனை நேசித்தனர். எல்லாருக்கும் அன்பையும் மகிழ்ச்சியையும் பரிமாறும் ஒரு நல்ல மனிதனாக சித்தார்த்தன் வளர்ந்திருந்தான்.

சுற்றுப்புறம் இப்படியெல்லாம் இருந்தபோதிலும் சித்தார்த்தன் ஒருபோதும் மகிழ்ச்சி நிரம்பியவனாகவோ, திருப்தி அடைந்தவனாகவோ இருக்கவில்லை. அத்தி மரங்கள் நிறைந்த தோப்புகளில் உலாவும்போதும், நீலநிழல்கள் படர்ந்த மாந்தோப்புகளின் ஊடாக நடக்கும்போதும் தினமும் நீராடும் வேளையிலும், யாகம்

செய்யும்போதும்... அவ்வளவு ஏன் எல்லாருடைய அன்புக்கும் உரியவனான சித்தார்த்தனின் மனத்தில் மட்டும் மகிழ்ச்சியோ, திருப்தியோ எட்டிப் பார்த்ததில்லை. நிம்மதியின்மையை ஏற்படுத்தும் சிந்தனைகளும் கனவுகளும், ஆற்றங்கரையிலிருந்தும், இரவு நேரத்தில் கண்சிமிட்டும் நட்சத்திரங்களிலிருந்தும், பகலில் வெப்பமேற்படுத்தும் சூரிய ஒளியிலிருந்தும் தோன்றி அவனைச் சூழ்ந்து கொள்ளும்.

பூஜைக்காகத் தயாராக்கப்பட்ட அக்னிக் குண்டங்களில் நெய் வார்க்கும்போது ஏற்படும் புகைப்படலங்கள் அந்த இளைஞனின் ஆத்மாவில்... வலியேற்படுத்தும் பலவிதச் சிந்தனைகளை எழுப்பிவிடும். அந்தச் சிந்தனைகள், ஏறத்தாழ அவனை உயிரற்றவனாகவே மாற்றிவிட்டன என்று சொல்லலாம். ரிக் வேத மந்திரங்களை உருப்போடும்போதும், வயது முதிர்ந்த பிராமணப் பண்டிதர்களது மதப் பிரசங்கங்களைக் கேட்கும் போதும் ஒரு விஷயம் சித்தார்த்தனின் மனத்தை வெகுவாக அலைக்கழித்தது.

அதிருப்தியின் விதைகள், அவன் மனத்தில் முளைவிடத் தொடங்கின. பெற்றோரின் அளவற்ற அன்பும், கோவிந்தனுடைய ஆதரவு கலந்த நட்பும் தனக்கு எல்லா சமயங்களிலும் மகிழ்ச்சியையோ அமைதியையோ, ஆறுதலையோ தரவில்லை என்பதும் சித்தார்த்தனுக்கு சில நாட்களுக்கு முன்பே புரிந்திருந்தது. தன் தந்தையும், கிராமத்திலுள்ள தேர்ந்த பண்டித பிராமணர்களுமாகச் சேர்ந்து தங்களது மொத்த ஞானத்தையும் தனக்குக் கற்பித்து விட்டதாகத் தோன்றியது. வெறுமையாகக் கிடந்த அவன் மனத்தில், அவையெல்லாம் இடம் பிடித்துக் கொண்ட போதிலும் இன்னும் ஏராளமான பகுதிகள் வெறுமையாகவே இருந்தன. அதாவது முழுமை பெறாத ஒரு நிலை. சித்தார்த்தனின் அறிவுத்தாகம் இன்னும் தணியவில்லை. அவன் ஆத்மா இப்போதும் எதற்காகவோ துடித்தது!

தினமும் குளித்து, வேதம் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், அதெல்லாம் வெறும் நீரால் கழுவும் ஒரு சடங்கு மட்டுமே. அது பாவத்தைக் கழுவிக் களைவதில்லை. இதயத்தின் கனத்தைக் குறைப்பதில்லை. ஹோமம் செய்வதும், நைவேத்தியம் அர்ப்பிப்பதும், வணங்குவதும் நல்லதுதான். ஆனால், அத்துடன் எல்லாம் முடிந்து விடுகிறதா? தியாகமும் பூஜையும் தனக்கு நிரந்தரமான மகிழ்ச்சியைத் தருகின்றனவா? தெய்வங்களைப் பற்றி என்ன சொல்ல? பிரஜாபதிதான் இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்தார் என்று உறுதியாகச் சொல்ல முடியுமா? அப்படியானால் ஆத்மாவுக்குரிய உண்மையான இடம் எது? ஆத்மாதானே இந்த உலகத்தைப் படைத்தது? தெய்வத்தின் வடிவமும் நம்மைப் போன்றதுதானே? பிறப்பற்றதும் அழிவற்றதுமா? அப்படியானால் இந்த தெய்வங்களுக்கு நைவேத்தியம் அர்ப்பிப்பதும், நாள் தவறாமல் வேதம் ஓதுவதும் சரிதானா? நல்லதுதானா? சொந்த ஆத்மாவைத் தவிர வேறு எதற்கு நாம் பூஜையும், பலியும் செய்யவேண்டும்? வேறு யாரை நாம் வணங்க வேண்டும்? ஆத்மாதானே எல்லாவற்றைக் காட்டிலும் பெரியது?

அந்த ஆத்மா எங்கே வசிக்கிறது? அது தனக்குள்ளேயே இருப்பதல்லவா? அதன் துடிப்பும் வியாபகமும் 'நான்' என்கிற உடம்புக்குள்தானே அடங்கியிருக்கிறது? இதில் 'நான்' எங்கே இருக்கிறேன்? அது சனாதனமானது, சாசுவதமானது. ஆனால், அதன் பிரதிஷ்டை எங்கே? 'நான்' என்பது வெறும் ரத்தமும், எலும்பும், சதையும் மட்டுமல்ல; அதையும் தாண்டிய வேறு ஏதோ ஒன்று. அது வெறும் சிந்தனையோ, சிந்தனையைத் தாண்டியதோ அல்ல. வேறென்ன? இவை குறித்ததெல்லாம் எத்தனை தீவிரமாக யோசித்தும் சித்தார்த்தனுக்குத் திருப்தியான விடை கிடைக்கவில்லை. பிராமணப் பண்டிதர்களின் ஆசிரமங்களில் வருடக் கணக்கில் குருகுல வாசம் செய்து, விவாதம் நடத்திக் கற்றுக் கொண்டதெல்லாம் வியர்த்தம்தானா?

ஆத்மாவைக் கண்டறிய இந்தப் பண்டிதர்கள் கற்பித்தார்களா?. அர்த்தசூனியமான வழியைத் தவிர வேறு எதுவும் இல்லையா? அதைப் பற்றி யாருக்குமே ஒரு தெளிவான கருத்து இல்லை. யாரும் அதை உண்மையில் காட்டித் தரவும் இல்லை. தன் தந்தையோ விவேகம் நிறைந்த பிற பண்டிதர்களோ, குருமார்களோ,

உபநிடதங்களோ. வேதங்களோகூட இந்த வழியிலான சித்தார்த்தனின் தேடலை - தெரிந்து கொள்ளும் ஆர்வத்தை நிறைவு செய்யவில்லை. பிராமணர்கள் கற்பித்த வேத சா திரங் களில் ஓரளவுக்கு எல்லாம் இருந்தன. பூமியின் தோற்றம், மொழியின் தோற்றம், உணவு, மூச்சைக் கட்டுப்படுத்துதல், இந்திரியங்களின் செயல்பாடுகள், தேவாதி தேவர்களின் நடைமுறைகள் போன்றவை எல்லாம் இருக்கவே செய்தன. ஆனால், இவை குறித்த அறிவெல்லாம் உண்மையில் முழுமை யானதுதானா? மிகவும் முக்கியமான ஒன்றைக் குறித்து இவை எதையும் கூறாதபோது-- அதில் எங்கே முழுமை இருக்கிறது. அந்த அறிவைத் தேடி சித்தார்த்தனின் இதயம் துடிப்புடன் செயல்பட்டது.

வேதங்கள் பலதும் மிகவும் நுட்பமான உட்பொருள்களைக் குறித்து விளக்குகின்றன. உண்மைதான்! குறிப்பாக உபநிடதங்கள், சாமவேதத்தில் இப்படிக் கூறுகின்றன: 'உன் ஆத்மாதான் இந்தப் பிரபஞ்சம் என்பது!' மனத்திட்பம் வாய்ந்த ஒருவன், இந்த ஆத்மதரிசனத்தைக் காண்கிறான். அப்போது அவனது மற்ற புலன்கள் செயலற்றுப் போகின்றன. சாம வேதத்தின் இந்தப் பாடலில் எவ்வளவோ நுட்பங்கள், அறிவுக்குப் புலப்படாத விஷயங்கள் பொதிந்துள்ளன. எத்தனையோ யுகயுகங்களாக மனிதன் சம்பாதித்த அறிவைத் தெளிவாக இதில் அடையாளப்படுத்தி யிருக்கிறார்கள். எனவே, அவற்றை முழுவதுமாக ஒதுக்கித் தள்ளவும் முடியாது. இருப்பினும் இந்த பிராமணர்களோ, புரோகிதர்களோ அல்லது வேறு எவருமோகூட இந்தச் சுவடிகளில் பெற்றதைத் தவிர எதையேனும் சுயமாக அனுபவித்திருக் கிறார்களா? சுய அனுபவத்தின் மூலமாகத்தானே ஒருவர் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முடியும்? அனுபவ ஞானம் இல்லாவிட்டால், மற்ற அறிவுகள் ஆயிரம் இருந்து என்ன பயன்? ஆழ்நிலை தியானத்தில் கண்டறியும் ஆத்மதரிசனத்தை விழிப்பு நிலையிலும் யாரால் தரிசிக்க முடியும்? சித்தார்த்தனுக்கு, விவேகம் நிறைந்த பல பண்டிதர்களை மிகவும் நெருக்கமாகவே தெரியும்.

தன்னால் மிகவும் மதித்து வணங்கப்படும் தன் தந்தையே ஒரு மகா பண்டிதர்தான். அமைதியான இயல்பு உடையவரும்கூட



உத்தம குலத்தில் பிறந்த பிராமணோத்தமன். அவரது வாழ்க்கை, மிகவும் சிறந்த வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டு. நல்லியல்புகளும், பிற மனிதர்களுக்கு உதவும் பரோபகாரமும் நிறைந்தவர். இருப்பினும் பெருமதிப்புக்குரிய அவருக்கேகூட மனத்தில் அமைதியை - சாந்தத்தை வரவழைக்க முடிந்ததோ என்னவோ? அவரும் ஒரு பாதையைத் தேடவில்லையா? முடிவற்ற பிரபஞ்ச ரகசியங்களைத் தெரிந்துகொள்ள அவர் மனமும் முற்பட்ட தில்லையா? புண்ணியத் தலங்களை தரிசிக்கவும், வேதங்களை ஓதவும், யாக கர்மங்களில் பங்கு பெறவும் செல்லும்போது, தன் தந்தை முழுமையான திருப்தியுடன் இருந்திருப்பாரா?

தன்னை அலைக்கழிக்கும் பிரச்சினைகள், அப்பாவையும் நிம்மதியிழக்க வைத்திருக்கும் என்ற முடிவுக்கே சித்தார்த்தனால் வர முடிந்தது. மகானான இந்த ஆரிய பிராமணன் தினந்தோறும் நீராடி, தனது அன்றன்றைய பாவங்களைத் தொலைத்து விடு கிறாரா? இதில் ஏதோ ஒரு விபரீதம் தெரிகிறது. தன் அப்பாவுக்குள் ஆத்மா ஒருவேளை நிலைபெறவில்லையோ? தனக்குள்ளேயே கண்டுபிடிக்க முடியாவிட்டால், அந்த ஆத்ம ஒளியை வேறெங்கு கண்டறிவது? அதன் துடிப்பை எவ்விதம் உணர்வது? அதற்கான பிற வழிகள் எல்லாம் தவறாகவே படுகிறது!

சித்தார்த்தனின் சிந்தனைகள் இந்த வழியில்தான் பயணித் தன. இதுதான் அவனது பசி, தாகம், சோகம் மற்றும் எல்லாமுமாக இருந்தன.

சாந்தோக்ய உபநிடதத்திலிருந்து சில வரிகளை அவன் தனக்குத்தானே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டான்: "உண்மையில் பிரம்மா என்பது 'சத்தியம்'தான். இந்த 'சத்திய நேசிப்பாளன்' என்றென்றும் தேவலோகத்தினரால் வரவேற்று உபசரிக்கப்படுகிறான். தேவலோகம் சமீபத்தில்தான் உள்ளது என்று சித்தார்த்தனுக்குத் தெரிந்திருந்த போதிலும், அதற்குள் நுழைய அவனுக்கு அனுமதி கிடைக்கவில்லை. அவன் பழகிய எத்தனையோ பிராமணோத்தமர்களுக்குக் கூட அந்த வாய்ப்புக் கிடைத்ததாக அவனுக்குத் தெரியவில்லை. இது முடிவற்ற - தீர்க்க

முடியாத ஒரு தாகவிடாய். அதற்கான வழியையே சித்தார்த்தன் சதா யோசித்தான்.

"கோவிந்தா, நீ என்னுடன் வருகிறாயா? ஆலமரத்தின் அடிப்பகுதிக்குச் சென்று சற்று நேரம் தியானம் செய்யலாம்!" சித்தார்த்தன் தன் நண்பனை அழைத்தான்.

இருவரும் ஆலமரத்தின் அடிப்பகுதியை அடைந்து தியானம் செய்ய ஆரம்பித்தனர். ஏறத்தாழ இருபதடி இடைவெளியில் இருவரும் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டனர். முதலில் 'ஓம்' என்ற சொல்லை உச்சரித்த பிறகு, சித்தார்த்தன் மெதுவாக ஒரு சுலோகத்தைச் சொன்னான்.

வழக்கமான தியான சமயம் முடிந்தவுடன் கோவிந்தன் எழுந்தான். மாலை நேரம் ஆகியிருந்தது. நீராட வேண்டிய நேரம். கோவிந்தன், சித்தார்த்தனைப் பேர் சொல்லி அழைத்தான். பதில் இல்லை. அவன் சுற்றுப்புறத்தை மறந்தவனாக ஆழ்ந்த தவத்திலிருந்தான். கண்கள் வெகு தொலைவிலுள்ள எதையோ உற்று நோக்குவது போலிருந்தன. நாக்கின் நுனிப்பகுதி பற்களின் இடைவெளி வழியாகத் தெரிந்தது. சுவாச நிலை மிகவும் மந்தமாக இருந்தது. இல்லை... சுத்தமாக நின்றுவிட்டது என்றே சொல்லலாம். தியானத்தில் மூழ்கி... ஓங்காரத்தில் ஒன்றி, தன் ஆத்மாவை அம்பாக மாற்றி அதை பிரஜாபதியை நோக்கி எய்திருந்தான்.

ஒரு தடவை சன்னியாசிகள் சிலர், சித்தார்த்தன் வசித்த கிராமத்தின் வழியே பயணம் செய்தனர். நாடோடிகளாக அலைந்து திரியும் ஒரு சன்னியாசிக் கூட்டம். அவர்கள் இளைஞர்களாகவோ, வயது முதிர்ந்தவர்களாகவோ இல்லை. இளைத்து, மெலிந்த பலவீனமான ஒரு கூட்டம். தூசும், கீறல்களும் விழுந்த உடல். பெரும்பாலானோர் அரை நிர்வாணமாக இருந்தனர். ஏக சிந்தனையிலாழ்ந்த, பழக்கமில்லாத ஒரு விதமான காட்டு மனிதர்கள் போல் தெரிந்தனர். தண்டம், கமண்டலம் வைத்திருந்தனர். சேவை செய்யப் புறப்பட்டிருந்தனர். சுயமான பரித்தியாகத்தை வெளிப்படுத்தும் சூழ்நிலை தென்பட்டது. ஆசைகள் ஏதுமற்ற ஒரு கூட்டம்!



மாலை நேர பூஜையை வழக்கம்போல் நடத்திய சித்தார்த்தன், கோவிந்தனிடம் சொன்னான்: "நண்பனே நாளை விடியல் வேளையில் சித்தார்த்தன் இந்த பைராகிகளுடன் பயணம் புறப்படப் போகிறான். ஆமாம் நான் ஒரு பைராகியாவதென்று தீர்மானித்து விட்டேன்!" அவனது குரலில் உறுதியிருந்தது.

அவனது வார்த்தைகள் அப்பாவியான கோவிந்தனது முகத்தை வெளிற வைத்தன. வில்லிலிருந்து எய்யப்பட்ட ஓர் அம்பு மாதிரி, லட்சியத்தை நோக்கிப் பாய்ந்து செல்லத் துடித்தது சித்தார்த்தனின் கலங்கிய இதயம். கோவிந்தனுக்கு எல்லாம் புரிந்தது. நண்பன் தனது சொந்தப் பாதையில் பயணம் செய்யத் தொடங்கி விட்டான். அவனது எதிர்காலத்துடன்தான் தனது எதிர்காலமும்... கோவிந்தன் உலர்ந்த ஒரு பழத்தோல் மாதிரி வெளிறினான்.

"சித்தார்த்தா, இதற்கு உன் அப்பா ஒப்புக் கொள்வாரா?" கோவிந்தன் தயங்கியபடி கேட்டான்.

சித்தார்த்தன் திடுமென்று தூக்கத்திலிருந்து விழித்த ஒருவனைப் போல் கோவிந்தன் முகத்தைப் பார்த்தான். கோவிந்தனின் மனதில் அப்போது எழும்பியிருந்த மொத்த உணர்வுகளையும் சித்தார்த்தன் ஒரு நொடியில் புரிந்து கொண்டது போலிருந்தது. அவனது வழக்கமான திகைப்பு, பழக்கம் உட்பட எல்லாவற்றையுமே.

"நாம் மேற்கொண்டு இதைப்பற்றி விவாதித்து நேரத்தை வீணாக்க வேண்டாம் கோவிந்தா!" சித்தார்த்தன் மெதுவான குரலில் பேசினான்: "நாளை விடியலில் நான் பைராகி வாழ்க்கையை ஏற்றுக் கொள்வேன். இனிமேல் இதைப் பற்றிய எந்தப் பேச்சும் வேண்டாம்!"

சித்தார்த்தன் அப்பாவின் அறைக்குச் சென்றான். அவன் அப்பா ஒரு மரவுரியை விரித்து அதில் உட்கார்ந்திருந்தார். சித்தார்த்தன் மௌனமாக அப்பாவின் பின்னால் வந்து நின்றான். அவனது வருகையை அவர் உணர்வது வரை அப்படியே நின்றான்.

"யாரது, சித்தார்த்தனா!" அப்பா கேட்டார்: "உனக்கு என்ன வேண்டும்?"

"அன்புக்குரிய அப்பா, உங்களிடம் நான் ஒரு காரியத்துக்காக அனுமதி பெற வந்திருக்கிறேன். நாளை விடியற்காலையில் இந்த வீட்டிலிருந்து விடைபெறப் போகிறேன். வந்திருக்கிற பைராகிகளுடன், நானும் ஒரு பைராகியாகப் புறப்பட விரும்புகிறேன். நீங்கள் இதற்குத் தடை சொல்ல மாட்டீர்கள் என்றும் நம்புகிறேன்!" சித்தார்த்தன் கூறினான்.

சிரேஷ்டமான அந்த பிராமணர் இதைக் கேட்டதும் சற்று நேரம் அப்படியே மௌனமாக உட்கார்ந்தார். அங்கிருந்த ஜன்னல் வழியாகத் தொலைதூர நீலவானத்தில் பரல் மீன்களைப் போல் வெள்ளி நட்சத்திரங்கள் அலைந்தபடியே புது வழிகள் கண்டறிவது தெரிந்தது. அந்த மௌனம் நெடுநேரம் நீடித்தது. மகன் அசைவற்று, நிசப்தமாகக் கூப்பிய கைகளுடன் நிற்கிறான். அப்பாவும் ஏறத்தாழ அதே நிலையில் மரவுரி இருக்கையில் அசைவற்றிருந்தார். நட்சத்திரங்கள் ஆகாயத்தின் கருநீலத்தில் கண் சிமிட்டி ஒளிர்ந்தன. வெகு நேரத்துக்குப் பிறகு மகனைப் பார்த்தபடி அப்பா பேசினார்:

"ஒரு பிராமணன், கோபமாகவும் முரட்டுத்தனமாகவும் பேசுவது அழகல்ல. இருப்பினும் என் மனத்தில் இது மகிழ்ச்சியை ஏற்படுத்தவில்லை. இந்த ஒரு வேண்டுகோளை நீ திரும்பவும் கேட்கக்கூடாது!"

சொல்லிவிட்டு நிதானமாக எழுந்தார். சித்தார்த்தன் மௌனமாக, கூப்பிய கைகளுடன் நின்றிருந்தான்.

"எதற்காக நீ இன்னும் நிற்கிறாய்?" அப்பா கேட்டார்.

"உங்களுக்குத் தெரியுமே!" சித்தார்த்தன் பதிலளித்தான்.

மன வருத்தத்துடன் தனது படுக்கையறைக்கு வந்தவர், கட்டிலில் படுத்தார்.



ஏறத்தாழ இரண்டு நாழிகைகள் கழிந்திருக்கும். அவருக்கு உறக்கம் வரவில்லை. எழுந்தார். அறைக்குள் அங்குமிங்கும் உலாவினார். வீட்டுக்கு வெளியே வந்தார். வெளியிலிருந்து ஜன்னல் வழியாக, தனது தியான அறையைப் பார்த்தார். சித்தார்த்தன் இன்னமும் அப்படியே கூப்பிய கைகளுடன் நிற்கிறான். சித்தார்த்தனின் மஞ்சள் நிறமான உடை நிலவொளியின் பிரதிபலிப்பில் பளபளத்தது. அந்தத் தந்தையின் இதயம் துயரத்தால் நிறைந்தது. மீண்டும் படுக்கையறைக்குத் திரும்பினார்.

மேலும் இரண்டு நாழிகைகள் கழிந்திருக்கும். அவரால் உறங்க முடியவில்லை. மீண்டும் அறைக்குள் உலாவினார். மறுபடியும் முற்றத்துக்கு வந்தார். இப்போது சந்திரன் சற்று மேற்புறமாக நகர்ந்திருந்தான். பலகணி வழியாக மீண்டும் பார்த்தார். சித்தார்த்தன் அப்படியே கற்சிலை போல் நிற்கிறான். நிலவொளி அவன் முகத்தில் வெண்மையைப் படரவிட்டிருந்தது. அப்பாவின் இதயம் துடித்தது. திரும்பவும் வந்து கட்டிலில் படுத்தார்.

இரண்டு நாழிகைக்கு ஒரு தடவை வீதம் ஒவ்வொரு தடவையும் நிம்மதியிழந்தவராக அறையை விட்டு வெளியே வந்து பார்த்தார். ஒவ்வொரு முறையும் நட்சத்திர வெளிச்சத்திலும், இருட்டிலும், சந்திர ஒளியிலுமாக சித்தார்த்தன் அப்படியே நிற்பதைப் பார்த்தார். எந்த விதமான அசைவோ, சத்தமோ அவனிடமிருந்து எழவில்லை. அவரும் மௌனமாகத் திரும்பிச் சென்றார். நேரத்துக்கு நேரம் இரண்டு நாழிகைக்கு ஒரு தடவை அவர் இதயம் கோபம், உத்வேகம், பயம், துயரம் போன்றவற்றால் அலைக்கழிக்கப்பட்டது.

இரவின் கடைசி யாமத்தில், சூரியோதயத்துக்கு முன்னால் அப்பா அந்த அறைக்குள் வந்தார். அவன் சற்றும் தளராதவனாக அப்படியே கூப்பிய கைகளுடன் நின்றிருந்தான். மகன் தன்னை விட உயர்ந்து விட்டதாகவும், அறிமுகமில்லாத ஒருவனாகவும் அவருக்குத் தென்பட்டான்.

"சித்தார்த்தா, நீ எதற்காகக் காத்திருக்கிறாய்?" அப்பா கேட்டார்.

"உங்களுக்குத் தெரியுமே அப்பா!"

"நீ பகல், மதியம், மாலை நேரம் என்று இப்படியேதான் நின்று கொண்டிருக்கப் போகிறாயா?"

"நான் பொறுமையுடன் காத்திருப்பேன்."

"நீ களைத்து விடுவாய் சித்தார்த்தா."

"களைப்படைவேன்தான்..."

"நீ தூங்கி விடுவாய் சித்தார்த்தா."

"தூங்க மாட்டேன்."

"நீ இறந்து விடுவாய் சித்தார்த்தா."

"இறந்து போவேன்."

"உன் அப்பாவுக்குக் கீழ்ப்படிவதைவிட இறப்பதே நல்லதென்று நினைக்கிறாயா?"

"சித்தார்த்தன் ஒருபோதும் அப்பாவின் வார்த்தையை மீறியதில்லை."

"அப்படியானால் நீ உனது திட்டத்தைக் கைவிடுவாய்."

"அப்பா சொல்கிறபடியேதான் நடப்பான் சித்தார்த்தன்."

உதயசூரியனின் முதல் கிரணங்கள் அந்தச் சிறிய அறைக்குள் எட்டிப் பார்த்தன. அந்த வெளிச்சத்தில் சித்தார்த்தனின் முழங்கால்கள் லேசாக நடுங்குவதை அப்பா கவனித்தார். ஆனால், அவன் முகம் அமைதியாகவும், கண்கள் பளபளப்பாகவும் இருந்தன. வெகு தொலைவிலுள்ள எந்த லட்சியத்தையோ அந்தக் கண்கள் தேடுவதாகத் தோன்றும். அப்போதுதான் அப்பாவுக்கு, இனிமேல் சித்தார்த்தன் தன்னுடன் வசிக்க முடியாது என்பது புரிந்தது. அவன் ஏற்கெனவே தன்னை விட்டு வெகு தூரம் விலகிவிட்டதாக அவருக்குத் தோன்றியது.



சித்தார்த்தனின் தோள்கள் இரண்டையும் பிடித்தபடி அப்பா கூறினார்: "நீ வனவாசத்துக்காக ஒரு பைராகியின் வாழ்க்கையை ஏற்று அவர்களுடன் செல். நீ காட்டுக்குள் தன்யமான வழியைக் கண்டறிந்தால், திரும்பி வந்து எனக்கும் அதைக் கற்றுக்கொடு. நீ அங்கு காண்பது மாயை என்றால், திரும்ப இந்த வீட்டுக்கே வந்துவிடு. மீண்டும் நாம் ஒன்றாகவே நமது தெய்வங்களுக்கு பலி மற்றும் யாகங்களைச் செய்வோம். இப்போது நீ போகலாம். நீ உன் அம்மாவை முத்தமிட்டு விடைபெறுவதுடன் எங்கே போகிறாய் என்பதையும் அவளிடம் சொல். நான் ஆற்றுக்குச் சென்று புனித நீராடும் நேரம் நெருங்கி விட்டது."

அப்பா அந்த அறையிலிருந்து மெதுவாக நடந்து வெளியேறினார். சித்தார்த்தன் மெதுவாகக் காலை எடுத்து நடக்கத் தொடங்கியபோது விழுந்து விடுவோம் என்றே நினைத்தான்.

ஆனால், அப்படி நிகழாதவாறு அவனே அவனைக் கட்டுப் படுத்திக் கொண்டான். அப்பாவை வணங்கிய பிறகு, அம்மாவை நோக்கி நடந்தான். அப்பா சொன்னபடியே எல்லாவற்றையும் செய்தான். அந்த சாத்வீகத் தாய் மகனை ஆசீர்வதித்தாள்.

சூரியன் உதித்து உயர்வதற்கு முன்பாக, மரத்துப்போன கால்களால் மெதுவாக அடியெடுத்து வைத்த சித்தார்த்தன், அப் போதும் ஏறத்தாழ அரைத் தூக்கத்திலிருந்த அந்த கிராமத்திட மிருந்து விடைபெற்றான். நடந்தான். அதே நேரம் ஒரு நிழல் மிகவும் கடைசியில் இருந்த சிறிய வீட்டிலிருந்து வெளியேறி, சித்தார்த்தன் என்கிற பிக்ஷாம்தேகியைப் பின்தொடர்ந்தது. அந்த நிழல், கோவிந்தன்தான்!

"நீயும் வந்து விட்டாயா?" புன்னகைத்தபடியே சித்தார்த்தன் கேட்டான்.

"ஆமாம், நானும் வருகிறேன்!" கோவிந்தன் பதிலளித்தான்.

## 2. பைராகிகளுடன்...

அன்று மாலை நேரத்திலேயே கோவிந்தனும் சித்தார்த்தனும் ஒரு பைராகி சங்கத்தைக் கண்டனர். தங்களையும் அவர்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தங்கள் மீது கருணையும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும் என்கிற அவர்களது வேண்டுகோள்களை பைராகி சங்கத் தலைவர் ஏற்றுக் கொண்டார்.

சித்தார்த்தன், வழியில் சந்திக்க நேர்ந்த ஓர் ஏழை பிராமணனுக்குத் தனது உடைகளை தானமாகக் கொடுத்தான். கௌபீன (கோவண)மும் போர்வையும் அணிந்தபடி பைராகி சங்கத்தில் சேர்ந்தான். காவி நிறமான கௌபீனம். அவன் ஒரு நாளில், ஒரு தடவை மட்டுமே சாப்பிட்டான். அதுவும் வேகவைக்காத உணவான பழ வகைகளை. முதல் பதிநான்கு நாட்களையும் பட்டினியாகக் கழித்தான். நோன்பு. படிப்படியாக அந்த நோன்பு, இருபத்தெட்டு நாளாக நீண்டது.

சித்தார்த்தனின் கால்கள் மற்றும் கன்னத்திலுள்ள தசைகள் மற்றும் மஜ்ஜைகள் சுருங்கி வலுவிழந்தன. நீண்டகன்ற விழிகளில் பழக்கமற்ற தன்மையும், விரும்பத்தகாத மாதிரியான கனவுகளும் மாறிமாறி விளையாடின. நகங்கள் வளர்ந்து கீழ்ப்புறமாக நீண்டன. கன்னம் மற்றும் தாடைகளில் செம்பட்டையான முடிகள் அரும்பின. பெண்களைக் கண்டபோது, உடலில் அதிகரித்த வெப்பம் இப்போது குளிர்ச்சியடைந்தது. கிராம வீதிகளில் அழகும் ஆடம்பரமுமான உடைகள் அணிந்து செல்பவர்களைப் பார்க்க நேர்ந்தபோது, சித்தார்த்தனின் உதடுகள் வெறுப்பால் களித்துக் கோணின.

வியாபாரிகள் தீவிரமாக வியாபாரத்தில் ஈடுபடுவதையும், இளவரசர்கள் வேட்டைக்குப் போவதையும், இறந்த உறவினர்களுக்காக உயிருடனிருப்பவர்கள் அழுது புலம்புவதையும், விபசாரிகள் வாடிக்கையாளர்களைத் தேடுவதையும், நோயாளிகளைப் பராமரிக்கும் சில சன்னியாசிகளையும், விதையூன்றுவதற்கான சுபதினத்தைக் கணித்துக் கொடுக்கும் புரோகிதர்களையும்,



ஆண்களும் பெண்களும் தாம்பத்தியத்தில் ஈடுபடுவதையும், தாய்மார்கள் குழந்தைகளின் அழுகையை நிறுத்தி ஆறுதலளிப்பதையும் சித்தார்த்தன் கவனித்தான். வாழ்க்கையின் சாதாரணமான ஒருபுறம். எல்லாமே பழகியவை. உண்மையைச் சொன்னால், இவையெல்லாம் சித்தார்த்தனின் கவனத்தைக் கவரவில்லை. எல்லாமே ஒருவிதமான போலித்தன்மையுடனும் வஞ்சகம் நிறைந்ததாகவும் தெரிந்தது. 'வெறும் மாயை! மகிழ்ச்சியும் அழகும் இதுபோன்ற அன்றாட சம்பவங்களில் ஒளிந்திருக்கின்றன என்ற எண்ணமே சுத்தமான அபத்தம்! எல்லாம் நிலையற்றவை! அழிவையே முகமாகக் கொண்டிருப்பவை. வாழ்க்கை என்பதே வேதனைகளின் பிறப்பிடம்தான்...' இப்படித்தான் சித்தார்த்தனின் சிந்தனைகள் நீண்டன.

சித்தார்த்தனிடம் ஒரேயொரு லட்சியம் மட்டுமே இருந்தது. அதாவது என்றுமே அழியாத தாகமற்ற ஒரு நிலையை அடைதல்! ஆசை, கனவு, மகிழ்ச்சி, துயரம், ஆத்திரம் ஆகிய உணர்வுகளிலிருந்தும் அனுபவிப்புகளிலிருந்தும் என்றென்றைக்குமாக - நிரந்தரமாக விடுதலை பெறவேண்டும். சுகத்தை நாடியும், துயரத்தை ஒழிக்க முற்படுவதுமான மனித வாழ்க்கைக்கு நேர் எதிரான ஓர் அணுகுமுறை. இந்த லட்சியத்தை நோக்கிய சித்தார்த்தனது பயணம் முன்னர் குறிப்பிட்டது போல், வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போலவே லட்சியத்தை நோக்கி விரைந்தது. வெறுமையான ஓர் இதயத்தின் தன்மையைக் கண்டடைய வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், நான் என்பது நிர்விருதியை - பரமானந்த நிலையை அடைய வேண்டும். அதன் பிறகு நடக்கப் போவது என்ன? ஆத்மா அசைவற்ற நிலையை அடையும். உள்ளூடாக ஏற்படும் இந்த உணர்வால், பழைய 'நான்' என்பது காணாமல் போகும். பரமானந்தம் - அதற்குள் அது இறந்தே போயிருக்கும். அப்படிப்பட்ட மறுபிறப்பைக் கண்டடைவதே சித்தார்த்தனது லட்சியமாக இருந்தது. அவனது தேடலின் ரகசியமே அதுதான்!

பைராகிகளின் அன்றாட வாழ்க்கை, கடுமையானதாகவும், இடைவெளியற்று அடுத்தடுத்துத் தொடர்வதுமாக இருந்தன.

சித்தார்த்தன் வாரக் கணக்கில்... ஏன் மாதக் கணக்கில் என்றே சொல்லலாம். உச்சி வெயில் சூரியனுக்கு முன்பாக அசையாமல் அப்படியே நின்றான். பசி, தாகம், எல்லாவற்றையும் வேதனையுடன் அடக்கிக் கொண்டான். அதேபோல் மாதக்கணக்கில் மழையிலும் நின்று நனைந்தான். மழை நீர் தலைமுடியிலிருந்து வழிந்து தோள், பாதங்கள் என்று உருண்டு விழுந்தன. கால்களும் உடம்பும் அந்தக் குளிரில் மரம் போல் குளிர்ந்து, உணர்வற்று மரத்தன. கடுமையான இப்படிப்பட்ட தவத்தின் காரணமாக அவனால் பசி, தாகம், குளிர், வெப்பம் போன்ற இந்திரிய உணர்ச்சிகளைத் துல்லியமாக வெற்றி கொள்ள முடிந்தது. காட்டின் கடுமையான முள்மரப் பரப்புகளை இரண்டு கைகளாலும் அழுத்திப் பிடிப்பான். ஒவ்வொரு மயிர்க்கால்களிலிருந்தும் உள்ளங்கையிலிருந்தும் சிவப்புநிற ரத்தம் வடியும். கைகளின் காயங்கள் புண்ணாக மாறும். அவற்றை அப்படியே வடிய விட்டவனாக அசைவற்று நாட்கணக்கில் உட்கார்ந்திருப்பான். மீண்டும் ரத்தம் வெளியேறாத வரை இதையே தொடர்ந்தான். வேதனையும் எரிச்சலும் தீருவது வரை தொடர்ந்தான்.

முழங்கால்களை மடக்கிவைத்து, சித்தார்த்தனால் மிக விரைவிலேயே ஏகாக்கிரக நிலையை அடைய முடிந்தது. மூச்சுப் பயிற்சியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. தொடர்ந்த இந்தப் பயிற்சிகள், நீண்ட நேரத்துக்கு மூச்சு விடாமலிருக்க அவனுக்கு உதவின. இதயத் துடிப்பை இல்லாமல் செய்யவும் அவனால் முடிந்தது.

மிகவும் வயதான பைராகி ஒருவரின் கீழ் சித்தார்த்தன். 'ஆத்மத்தியாகம்' பயின்றான். அத்துடன் மற்ற பைராகிகளுடன் தியானமும் தொடர்ந்தது. ஒரு தடவை அருகிலிருந்த மூங்கில் காட்டுக்கு மேலாக நாரையொன்று பறந்தது. சித்தார்த்தன் அந்த நாரையைத் தன் ஆத்மாவுக்குள் அடைத்தான். நாரை வழக்கமாகச் சாப்பிடும் சிறு மீன்களை சித்தார்த்தன் உணவாகச் சாப்பிட்டான். அதன் மொழியையே பயன்படுத்தினான். நாரையின் மரணத்தையும் ஏற்றுக்கொண்டான். அருகிலிருந்த ஆற்றங்கரையில்



இறந்து விறைத்தபடி கிடந்த ஒரு நரியை சித்தார்த்தன் கவனித்தான். அவன் ஆத்மா அந்த நரியாக மாறியது!

அப்படியே அந்த ஆற்று மணலில் நாள்கணக்கில் விறைத்தபடி படுத்திருந்தான். அந்த உடல் தாங்க முடியாத அளவுக்கு நாற்றமடிக்கத் தொடங்கியது. கடைசியில் காட்டெருமைகள் அந்த உடம்பை நார்நாராகக் கிழித்தன. எலும்பையும் தோலையும் தவிர மற்றவற்றைக் கழுகுகள் தின்று தீர்த்தன. மீதமிருந்தவை எல்லாம் மட்கி மண்ணோடு மண்ணாகக் கலந்தன. சித்தார்த்தனின் ஆத்மா மீண்டும் மறுபிறப்பெடுத்துப் பிறந்தது; இறந்தது. அழிந்து... மண்ணோடு மண்ணானது. இது எத்தனையோ தடவை திரும்பத் திரும்பத் தொடர்ந்தது. அதன் மூலம் வாழ்க்கையின் எல்லாவித உணர்வுகளையும் அவனால் உணர முடிந்தது. பிறப்பு; இறப்பு. மீண்டும் பிறப்பு; இறப்பு. இதன் நடுவே சுகம், துக்கம் என்கிற உணர்வுகள்! இதன் அடிப்படை என்ன? இந்தக் கேள்வி சித்தார்த்தனை அலைக்கழித்தது. எவ்வளவோ முயன்றும் அதற்கான பதில் மட்டும் கிடைக்கவில்லை. வேதனைகள் இல்லாத அமரத்தன்மை எங்கு உள்ளது, எங்கே தொடங்குகிறது என்பதைக் கண்டுபிடிப்பதற்காக சித்தார்த்தன் ஒரு வேட்டைக்காரனைப் போல் வாழ்க்கை வட்டம் முடிகிற இடத்தின் ஆழப்பகுதியில் பதுங்கியபடி காத்திருந்தான். அவன் முழுமையான இந்திரியக் கட்டுப்பாட்டைப் பயின்று, அதில் தேர்ந்திருந்தான்.

நினைவுத்திறனை முற்றிலுமாக அழித்துக் கொண்டான். 'நான்' என்கிற உணர்விலிருந்து ஓர் ஆயிரம் முறை அவன் விடுபட்டிருப்பான். மிருகமானான், இறந்து ஜடப்பொருள் ஆனான். ஒவ்வொரு தடவையும் அவன் தனது பழைய வாழ்க்கை வட்டத்துக்குத் திரும்பி வருவது, பூரணமான பௌர்ணமி தினத்தன்றோ அல்லது சூரியன் காயும் உச்சி வேளை வெயிலிலோ நடந்தது. 'நான்' திரும்பி வரும்போது வாழ்க்கை வட்டத்தைத் தொடும்போது பசி, தாகம் போன்றவை மீண்டும் ஏற்பட்டன.

சித்தார்த்தன் பைராகிகளிடமிருந்து பலவற்றையும் கற்றுக் கொண்டான். ஆத்மப் பரித்தியாகத்தை அடையும் பலவித வழிகள்.

ஆத்மப் பரித்தியாகியாக மாறி கர்வத்தையும் தியாகம் செய்து, நிறையக் காலத்தைச் செலவழித்தான். அவை மிகவும் வேதனைக் குரிய வழிகளாகவும், அவற்றின் ஊடாக சஞ்சரிப்பது மிகவும் கடுமையான மனோவியல் தாக்கமாகவும் இருந்தது. களைப்பு, பசி, தாகம் போன்றவை கொஞ்சம்கூட அவனைத் தீண்டவில்லை. முழுமையான இந்திரியக் கட்டுப்பாடு கைவரப் பெற்றாகி விட்டது. சம்பூரணமான ஆத்மப் பரித்தியாகத்துக்கான மற்றொரு வழி, தவம் செய்தல்தான். உக்கிரமான தவம். இந்த வேளையில் மனத்திலிருந்து எல்லாவற்றையும் அகற்றி நிறுத்தி, அது அழிவற்ற நிலையைத் தேடுகிறது. இது பைராகிகளின் மத்தியில் மிகவும் சாதாரணமானது. 'நான்' என்கிற ஆணவத்தைத் தவிர்த்துவிட்டு ஒன்றுமற்ற வெறுமையான நிலையிலேயே நாள்கணக்கில் மூழ்கியிருக்க சித்தார்த்தனால் அனாயாசமாக முடிந்தது. இவை எல்லாம் சரிதான். ஆனால், இறுதியில் 'நான்' என்பது திரும்பி வரவே செய்கிறது! எந்த வழியில் ஆத்மப்பரித் தியாகத்துக்கான பயணத்தைத் தொடங்குகிறோம் என்பது பிரச்சினை அல்ல. மீண்டும் இந்த வாழ்க்கை வட்டத்துக்குத் திரும்பி வருவது தவிர்க்க முடியாதது. சித்தார்த்தன் என்கிற பிராமண இளைஞன், 'நான்' என்கிற உணர்விலிருந்து விடுபட்டு மரமாகவும், மிருகமாகவும் சில காலத்தைச் செலவிட்டான். ஆனால், மீண்டும் அவன், 'நான்' ஆகத் திரும்பி வர நேர்ந்தது!

சூரிய ஒளியிலும், நிலா வெளிச்சத்திலும், இருட்டிலும், மழையிலும் எல்லாம் 'நான்' என்கிற உணர்வு மீண்டும் சித்தார்த்த னுக்குள் தோன்றியது. அவன் வாழ்க்கை வட்டத்தின் தண்ட னையை மீண்டும் அனுபவிக்க நேர்கிறது. இவற்றுக்கெல்லாம் ஒரு மாற்று தேடித்தானே சித்தார்த்தன் பைராகிகளுடன் சேர்ந்தான். ஆனால், நிலைமையின் யதார்த்தம் சித்தார்த்தனுக்குள் ஏமாற்றத் தையே அளித்தது.

கோவிந்தன் இன்னமும் சித்தார்த்தனுடன்தான் வசிக்கிறான். சித்தார்த்தன் மேற்கொண்ட அதே யோக முறைகளை அவனும் மேற்கொண்டான். சித்தார்த்தனின் ஒரு நிழல் போலவே அவன்



நாட்களைக் கடத்தினான். யோக முறை சாதகத்தின்போது, தேவைப் பட்டால் மட்டுமே அவர்கள் பர பரம் பேசிக் கொண்டனர். அதுவும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும். சில சமயங்களில் அவர்கள் இருவரும் ஒன்றாகவே பக்கத்துக் கிராமங்களுக்குப் பிச்சை வாங்கி வரச் சென்றனர். தங்களுக்கும், தங்கள் குருமார்களுக்குமான உணவை அவர்கள் பிச்சை யெடுத்துச் சேர்த்தனர். இப்படிப் பிச்சைக்குச் செல்லும் ஒரு வேளையில் சித்தார்த்தன், கோவிந்தனிடம் கேட்டான்:

"உனக்கு என்ன தோன்றுகிறது கோவிந்தா? இதுவரை நாம் பைராகிகளுடன் சேர்ந்து பயிற்சி பெற்றதில், எதையாவது அடைந்திருக்கிறோமா? இதன் உதவியால் நாம் நமது லட்சியத்தை நோக்கிக் கொஞ்சமாவது நகர்ந்திருக்கிறோமா?"

"பைராகிகளுடனான சாதகமுறை நமக்குப் புதிய விஷயங் களைக் கற்பித்திருக்கிறது. மேற்கொண்டும் நாம் நிறைய விஷயங் களைத் தெரிந்துகொள்ள முடியும். சித்தார்த்தா, விரைவிலேயே நீ ஒரு மகானான பைராகியாக மாறுவாய். அவர்களது ஒவ்வொரு பாடத்தையும் நீ எவ்வளவு விரைவில் புரிந்து கொள்கிறாய் தெரியுமா? நம் குருமார்களுக்கும் அது தெளிவாக விளங்கி யுள்ளது. எனவே, நிச்சயமாக ஒருநாள் நீயும் ஒரு புண்ணியனாகத் தான் போகிறாய். அதில் எனக்கு எந்த விதமான சந்தேகமும் கிடையாது!" கோவிந்தன் பதிலளித்தான்.

"எனக்கு அப்படித் தோன்றவில்லை கோவிந்தா! இத்தனை நாள்கள் பைராகிகளுடன் தங்கியிருந்து, அவர்களிடமிருந்து கற்றுள்ள விஷயங்கள் மிகவும் சாமானியமானவைதான். வேறிடங்களில் எங்காவது, இதே விஷயத்தை இன்னும் குறைந்த கால அளவுக்குள் நாம் கற்றுக்கொள்ள முடியலாம். ஒரு விபசாரியின் வீட்டிலோ... ஒரு சூதாட்டக் கும்பலிலோ சேர்ந்து கொண்டாலே இதைவிட அதிகமாகத் தெரிந்து கொள்ளலாம்!" சித்தார்த்தனது கருத்து இவ்விதமாகவே வெளிப்பட்டது.

"நீ வேடிக்கைக்காகச் சொல்கிறாய் சித்தார்த்தா! கடினமான தவ முறைகள், அதை அனுஷ்டிக்கும் சரியான அணுகுமுறை,

புராண, இதிகாசங்களின் உள்ளூடாக மறைந்திருக்கும் மேன்மையான அறிவையும் புலனடக்கத்துக்கான வல்லமையையும் அந்தச் சீரழிந்த இடங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியுமென்றா சொல்கிறாய்?'' கோவிந்தன் நம்பிக்கையற்றவனாகக் கேட்டான்.

தனக்குத்தானே கூறிக்கொள்வது மாதிரி மிகவும் தாழ்ந்த குரலில் சித்தார்த்தன் பேசினான்:

"தவம் என்பது என்ன? உள்ளுறை தியானத்தின் அடிப்படை லட்சியம் என்ன? நோன்பு நோற்பது எதற்காக? மூச்சுப் பயிற்சியைச் சீராக்குவது எதற்காக? இவற்றினுடைய நோக்கமெல்லாம் 'நான்' என்கிற உணர்விலிருந்து விடுபட அல்லது தப்பிக்கத்தான். ஆனால், உண்மை என்னவெனில் அப்படி விடுபடுவதெல்லாம் ஒரு தற்காலிகம் மட்டுமே. இதை மட்டுமே இந்த யோக முறைகளால் சாதிக்க முடியும். வாழ்க்கையின் இடிபாடுகளுக்கிடையே தற்காலிகமாக மன ஆறுதலுக்கு உதவும் ஒரு கைமருந்துதான் இது. நிரந்தரமான ஆறுதலை அவை தருவதில்லை. ஒரு மாட்டு வண்டிக்காரனுக்குக் கூட நாம் செய்வது போலவே, இந்த வாழ்க்கையின் இடிபாடுகளிலிருந்து தப்பிக்கும் வேட்கை ஏற்படுவதுண்டு. அதுவும் கடுமையான வேட்கை! அதற்கு அவன் என்ன செய்கிறான்? கடுமையான மதுவைப் பருகுகிறான். அத்துடன் எல்லாவற்றையும் மறக்கிறான். வாழ்க்கையின் பிரச்சினைகள் அல்லது அதன் இடிபாடுகள் அப்போது அவனை அலைக்கழிப்பதில்லை. ஒரு தற்காலிகமான சுகானந்தத்தை - விடுதலையை அனுபவிக்கிறான். குடித்து மதோன்மத்தனாக அந்த மதுப் பாத்திரத்துக்குப் பக்கத்திலேயே மயங்கிச் சரிகிறான். ஒரு மாட்டு வண்டிக்காரனுக்குக் கிடைக்கும் தற்காலிகமான அதே நிலையே நமக்கும் ஏற்படுகிறது. இதைப் பெறுவதற்கு நாம் இத்தனை காலப் பயிற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டுமா என்ன? எனக்கென்னவோ இந்த முறை அலுப்புத் தட்டுவதாகத் தோன்றுகிறது!"

"சித்தார்த்தா, நீ இதுபோல் ஆயிரம் பேசலாம். இருந்தாலும் நீ ஒரு மாட்டு வண்டிக்காரனோ, குடிகாரனோ அல்லது சாதாரண மனிதனோ அல்ல. பைராகிகளில் சிரேஷ்டமான நீ எப்படி ஒரு குடிகாரனாக முடியும்? மதுவை அருந்துபவன், நீ கூறுவதுபோல் தற்காலிகமான ஒரு தப்பித்தலுக்கு ஆளாகிறான் என்பதும் உண்மையே. அவனது மாயத் தோற்றங்களிலிருந்து அவன் சட்டென்று யதார்த்தத்துக்குத் திரும்புகிறான். எல்லாமே அவனுக்கு பழையபடியே தோன்றுகிறது. அதனால் அறிவோ, ஞானமோ ஏற்படுவதில்லை. அவன் ஒருபோதும் உயர்ந்த இடத்தை நோக்கி நகர்வதில்லை...'' கோவிந்தன் கூறினான்.



சித்தார்த்தன் முகத்தில் புன்னகை மலர்ந்தது. "அதைப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது கோவிந்தா! நான் இதுவரை மதுவருந்தியது இல்லை. ஆனால், இந்த சித்தார்த்தனால் மிகக் கடுமையான தவம் மற்றும் தியானத்தின் மூலமும், பிராணாயாமத்துக்குப் பிறகும் 'நான்' என்கிற உணர்விலிருந்து மிகச்சிறிய அளவில்தான் விடுபட முடிகிறது. முக்தி, விவேகம் போன்றவற்றில் இன்னும் நான் ஒரு குழந்தையாகவே இருப்பது எனக்குத் தெளிவாக புலப்படுகிறது!''

மற்றொரு தடவை இந்த இருவரும் பிட்க்ஷை தேடி காட்டு வழியில் பயணப்பட்டபோது இதுகுறித்துப் பேசிக் கொண்டனர்.

"கோவிந்தா, ஆத்மார்த்தமான நம்முடைய இப்போதைய பயணம் சரியான பாதையில்தான் போகிறதா? நமது ஞானம் நூலளவாவது உயர்ந்திருப்பதாகத் தோன்றுகிறதா? நம்மால் சா வதமான முக்தியை எட்ட முடியுமா? அல்லது நாம் ஒரு வட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுழல்கிறோமா?'' சித்தார்த்தன் கேட்டான்.

"நாம் மிக அதிக அளவில் ஞானத்தைக் கற்றுக்கொண்டு வருவதாகவே தெரிகிறது!'' கோவிந்தன் பதிலளித்தான். "நாம் இன்னும் கற்கவேண்டியது ஏராளம். நீ இப்போது குறிப்பிட்டபடி நாம் ஒரு கடினமான வட்டத்துக்குள் சுற்றிச் சுழல்வதாக எனக்குத் தோன்றவில்லை. நாம் மேற்புறமாக உயர்ந்து கொண்டிருக்கிறோம். வழி சற்று வளைந்ததாகத் தோன்றினாலும் நாம் மேற்புறமாக உயர்கிறோம்!''

“நம் குருநாதரான பைராகிக்கு எவ்வளவு வயதாகி யிருக்கும்?”

“அவருக்கு எப்படியும் அறுபது வயது இருக்கலாம்...” கோவிந்தன் தனது யூகத்தை வெளியிட்டான்.

“அறுபது வயதை நெருங்கியும் இன்னும் அவர் நிர்வாண நிலையை அடையவில்லை. இவருக்கு எழுபது அல்லது எண்பது வயதான பிறகுகூட நிர்வாணம் ஸித்திக்குமா என்பது சந்தேகம் தான். நீயும் நானும் இதேபோல் தியானித்தும், நோன்பு இருந்தும் வருடங்களைத் தள்ளுவோம். கடைசியில் என்ன நிகழும்? நாம் கிழவர்களாவோம். ஆனால், ஒருபோதும் நாம் எதைத் தேடிப் புறப்பட்டோமோ, அந்த ஆத்ம விடுதலை நமக்குக் கிடைக்காது. கோவிந்தா, இந்த பைராகிகளில் ஒருவனுக்காவது எப்போதாவது நிர்வாணம் ஸித்திக்குமென்று எனக்குத் தோன்றவில்லை. அதற்குத் தேவையான பதில்களும் காரணங்களும், தந்திரங்களும் அவர்களிடம் உண்டு. அதுவும் தேவையான அளவுக்கு. அவர்கள், இப்படிப்பட்ட வேடமணிந்து அவர்களையே நிந்தித்துக் கொள்கிறார்கள். மிகவும் முக்கியமானது வழி - ஆத்ம விடுதலைக்கான வழி! அதை இங்கு ஒருபோதும் நம்மால் அடைய முடியும் என்று தோன்றவில்லை!” சித்தார்த்தன் கூறினான்.

“இப்படிப்பட்ட கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத் தாதே சித்தார்த்தா!” கோவிந்தன் வேண்டிக் கொண்டான்: “ஆத்மஞானம் தேடியலையும், அதையே வாழ்க்கையின் விரதமாகக் கொண்டுள்ள ஏராளமான பிராமணப் பண்டிதர்களில், சுகபோகங்களின்மீது தீவிர விரதம் கொண்டுள்ள மகான்களில், கடுமையான பைராகிகளில் எந்த ஒருவரும் ஆத்மஞானம் பெற மாட்டார்கள் என்கிற உன்னுடைய கருத்து சரிதானா? அதற்கான வழியைக்கூடக் கண்டறிய மாட்டார்கள் என்கிற உன் முடிவு நியாயமானதுதானா?”

இதற்கான சித்தார்த்தனது பதிலில் துயரமும், கேலியும் கலந்திருந்தன. தாழ்ந்த வரத்தில் பேசத் தொடங்கினான்:



“விரைவிலேயே உன் நண்பன் இந்த பைராகிக் கூட்டத்திலிருந்து விடைபெறுவான் கோவிந்தா! நீண்ட காலமாக இவர்களுடன் பயணப்பட்டும் எனது பாதையை மாற்றிக்கொள்ளத் தீர்மானித்து விட்டேன். எனக்கு தாகமாக இருக்கிறது. ஒருபோதும் அடங்காத தாகம்! ஆத்மஞானத்தைப் பெற விரும்பும் பொறுமையற்ற தாகம். பைராகிகளுடனான இந்தப் பயணம் என்னுள் இருக்கும் ஆத்மஞானம் தேடும் விடாயைத் தீவிரப்படுத்தி இருக்கிறது.

“எனது கேள்விகளுக்கு, எதிர்பார்ப்புகளுக்கு, நிரந்தரமான மன உளைச்சலுக்கு இதுவரை தகுந்த பதிலோ, ஆறுதலோ கிடைக்கவில்லை. பிறகு நான் ஏன் இவர்களுடன் காலம் தள்ளவேண்டும்? அது நான் என்னையே நிந்தித்துக் கொள்வதில் போய் முடியும். எத்தனையோ வருடங்களாக நான் பிராமணர் களையும், வேதங்களையும், புராண இதிகாசங்களையும் இதுவரை கேள்விகள் கேட்டிருக்கிறேன். அத்தனையும் ஞானம் தேடும் எனது தாகத்தைத் தீர்ப்பதற்காகவே. இப்போது எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா கோவிந்தா, நான் எனது இதுவரையிலான வாழ்நாளையே வீணாக்கி இருக்கிறேன். காட்டெருமைகளையோ, காட்டுக் குரங்குகளையோ கேள்வி கேட்பது போல் உணர்கிறேன். எத்தனை வருடங்களாக நான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருக் கிறேன்... பலன் என்னவோ ஏமாற்றம்தான்.

“என்னுடைய நம்பிக்கை, எல்லாவற்றுக்குள்ளும் நுட்பமான ஏதோ ஒன்று உள்ளது அறிவு எல்லாவற்றிலும் உள்ளது. சில போது அந்த அறிவைப் புரிந்துகொள்வது சுலபமாக இருக்காது. ஆத்மா உனக்குள்ளும், எனக்குள்ளும் ஏன் எல்லா உயிர்களிடத்திலும் உள்ளது. இந்த ஞானத்தின் மிகப்பெரிய எதிரி எதுவென்றால் ஞானியென்று நினைக்கிற அழிவற்ற மனிதம்தான். நான் அவனை விட்டு விலகிப் பயணப்பட வேண்டும்!”

இந்த வார்த்தைகளைக் கேட்ட கோவிந்தன் பாதை யோரத்திலேயே அசைவற்று நின்றுவிட்டான். தன் கைகளை உயர்த்தியபடி சித்தார்த்தனிடம் பேசத் தொடங்கினான்: “அன்புக்குரிய நண்பா, நீ இப்படியெல்லாம் பேசி என்னை மனம்

வருந்தச் செய்யாதே. உண்மையைச் சொன்னால் உன்னுடைய பேச்சு, என்னை மிகவும் வருத்தத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது. ஞானம், தேடி அடையும் ஒன்றல்ல என்று கருதுவதானால், பரிசுத்த மான வேதங்கள் மற்றும் உபநிஷத்துகளில் நீ எதைக் கண்டறிந் தாய்? அவை பொருளற்ற வெறும் செய்யுள் வரிகள் மட்டுமேவா? பிராமணர்களிடமுள்ள புனிதம், பைராகிகளின் கட்டுப்பாடான நெறிமுறை போன்றவை உயிரற்றவையும் வெறுக்கப்பட வேண்டியதும்தானா? அப்படியானால் இந்த பூமியிலுள்ள சகலத்துக்கும் என்ன நிகழும்? இந்த உலகில் அழியாத எதுவுமே இல்லை என்கிறாயா? மூலமற்ற, அதே சமயம் நம்மை ஆதரிக்கும் எதுவுமே நம்மைச் சுற்றி இல்லை என்கிறாயா?''

கோவிந்தன் தனக்குத்தானே சொல்லிக்கொள்வது மாதிரி ஒரு செய்யுளைச் சொன்னான்:

**"ஆத்மாவுள் குடியிருக்கும் நல்லொளி**
**அறியும் வார்த்தைகளின் ஊடாக சுகாதிசயமாக!"**

சித்தார்த்தன் மௌனமாக இருந்தான். கோவிந்தன் சொன்ன இரண்டடிக் கவிதையின் மீது கவனம் செலுத்தினான். குனிந்த தலையுடன் மெதுவாக நடந்து விலகும் நண்பன் கோவிந்தனைப் பார்த்தபடி யோசித்தான். 'நமக்குப் பவித்ரமாகத் தெரியும் எது, இந்த உலகத்தில் மிச்சமிருக்கிறது? இந்த உலகத்தில் நிலையாக இருப்பது எது? ஒன்றுமே இல்லை' என்ற அர்த்தத்தில் சித்தார்த்தன் தலையாட்டிக் கொண்டான்.

இரண்டு பிராமண இளைஞர்களும் பைராகிகளிடம் வந்து சேர்ந்து மூன்று வருடங்கள் கடந்திருந்தன. எல்லா பைராகிகளும் சித்தார்த்தனையும் கோவிந்தனையும் நேசிக்கவே செய்தனர். அப்போதுதான் பல இடங்களிலிருந்தும் ஒரு பாடலைக் கேட்டனர். ஒரு விளக்கம்: புண்ணிய சிரேஷ்டமான கௌதமன் என்ற பெயருள்ள ஒரு மகான் தோன்றியிருக்கிறார். தற்போது பைராகிகள் தங்கியுள்ள வனத்துக்கு அருகிலுள்ள கிராமத்தில் இருக்கிறார். கௌதம புத்தன் கவனத்துக்குரிய ஒரு பிரசாரகர். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் வணக்கத்துக்குரியவர். உலகத்தின் எல்லாத் துயரங்களையும் அவர் தன்னுள் அடக்கிக் கொண்டவர். வாழ்க்கையின் வட்டத்திலிருந்தே விடுதலையானவர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் பிரசாரம் செய்து வருகிறார். அவருடன் ஏராளமான சீடர்களும் உள்ளனர். கௌதமனுக்கு வீடில்லை. குடும்பமில்லை. சொத்து எதுவும் இல்லை. வெறும் காவி வேட்டியும், துண்டும்தான் உடை. யாரையும் கவரத்தக்க உடலுடனும், அமைதி தவழும் பார்வையுடனும் லட்சக்கணக்கான ஜனங்களைக் கவர்ந்த கௌதமனால் பிராமணப் பண்டிதர் களையும், அரசகுமாரர்களையும் வினாடி நேரத்துக்குள் தன் சீடர்களாக்கிக் கொள்ள முடிகிறது. கௌதமனை எல்லாருமே புகழ்ந்தனர். எல்லாருமே கௌதமனை வணங்கவும் செய்தனர்.



ஆரம்பத்தில் கௌதமனின் புகழ் அங்கிங்காக உயர்ந்து வந்தது. கௌதமனின் கதையைப் பட்டணங்களில் பிராமணர் களும், பைராகிகள் காடுகளிலும் பரப்பினர். கௌதம புத்தனின் கதை பரவிப்பரவி அது, சித்தார்த்தன் - கோவிந்தனையும் அடைந்தது. ஆட்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்றவாறு கௌதமனைப் புகழ்ந்தும், விமர்சித்தும், நல்லதாகவும் கெட்டதாகவும் பலவாறு பேசினர்.

ஒரு நாட்டில் அம்மை நோயால் ஆயிரக்கணக்கானோர் தினந்தோறும் இறக்கும்போது ஒரு செய்தி வந்தது. 'திவ்வியனான, மேன்மையான ஒருவர் வந்து விட்டார், எல்லாரது நோய் நொடிகளையும் தணிக்க. அவரது பார்வையும் வார்த்தைகளுமே நோயைத் தீர்த்துவிடுகிறது'. இப்படிப்பட்ட செய்திகள் காட்டுத் தீயாக எல்லா இடங்களிலும் பரவின. சிலர் அதையெல்லாம் அப்படியே நம்பினர். மற்றும் சிலர் சந்தேகப்பட்டனர். பெரும்பாலானவர்கள் அந்த விவேகசாலியைத் தேடிச் சென்றனர். எல்லாருக்கும் விருப்பமான அந்த மகானைக் கண்டு வணங்கப் பொதுவாகவே விரும்பினர். சாக்கிய வமிசத்தைச் சேர்ந்த ஒரு மகான். எல்லாராலும் விரும்பப்படுகிற ஒரு பிரகாரகன். கௌதமன் எங்கு பேசினாலும் மக்கள் அந்த இடத்தை மொய்த்தனர். 'கௌதமன் அளவற்ற ஞானக்கடல். உண்மையிலேயே ஆத்ம

நிர்வாணம் அடைந்தவர், முக்தியடைந்தவர்!' என்றெல்லாம் அவரது சீடர்கள் புகழ்ந்தனர். வியப்படைய வைக்கும், நம்பமுடியாத பல செய்திகளைக் கௌதமன் குறித்துக் கூறினர். 'பிசாசைக் கீழடக்கியவர், தெய்வத்தோடு நேரடியாகவே ஒன்றிரண்டு தடவை பேசியவர்...' இப்படியும் கூறினர்.

ஆனால், கௌதமனது விரோதிகள் பேசியது வேறுவிதமாக இருந்தது. 'இந்தப் பிரசாரகன் ஒரு வஞ்சகன். மனிதர்களை ஏமாற்றுபவன். போலி சன்னியாசி. யாருக்கும் தெரியாமல் சுகபோகங்களில் மூழ்கித் திரிபவன்.'

புத்தனைப் பற்றிய வார்த்தைகள் பொதுவாக கவர்ச்சிகரமாக இருந்தன. அதில் ஏதோ ஒரு மாந்திரீக சக்தி இருந்தது. உலகம் நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறது. எல்லா இடத்திலும் வெறுப்பும், ஏமாற்றமும் அந்தகாரமும் சூழ்ந்திருக்கிறது. வெளிச்சத்தின் தூதனாக வெளிப்பட்டிருக்கிற கௌதமன், அண்டுபவர்களுக்கு ஆதரவாகவும், தாங்கும் தூணாகவும் இருந்ததில் வியப்பில்லை. அவரது வார்த்தைகள் அமைதியையும் சமாதானத்தையும் வலியுறுத்துகின்றன. எல்லாருக்கும் ஆறுதல் தருகிறார். புத்தனது பவித்திரமான பெயரே எல்லா இடங்களிலும் ஒலிக்கிறது. பாரத நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் மொத்தப் பேரும் அவரது வார்த்தையைக் கேட்கின்றனர். அது அவர்களிடம் ஆசையையும் ஆவேசத்தையும் ஏற்படுத்துகிறது. மேன்மை மிகுந்த சாக்கிய முனிவரின் அடியாட்களுக்கு எந்த பிராமணரது வீட்டிலும் எப்போதும் வரவேற்பு இருந்தது.

பைராகிகள் சங்கத்தினரையும் இந்தச் செய்திகள் எட்டவே செய்தன. சிலர் அதை நம்பவில்லை. மற்றும் சிலர் அதை அப்படியே நம்பினர். இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். பைராகிகள், கௌதமனைக் குறித்து மனந்திறந்து பேசியதில்லை. அதற்கும் காரணமிருந்தது. பைராகிகளின் தலைவனான கிழவர், புத்தனை ஓர் ஏமாற்றுக்காரராகவே கருதினார். மட்டுமின்றி, வஞ்சகனும்கூட. 'புத்தன் முன்னாளில் ஒரு பைராகியாக இருந்து பின்னர் சர்வசங்க பரித்தியாகிகளின்



வாழ்க்கையைத் துறந்து, லௌகீக சுகங்களில் மூழ்கித் திரியும் ஒரு நீசன்!' என்றுதான் நினைத்தார், பேசினார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பைராகிகள் புத்தனைப் பற்றி மிகவும் ரகசியமாகவே பேசிக்கொண்டனர்.

ஒரு தடவை கோவிந்தன், சித்தார்த்தனிடம் கூறினான். "நண்பா, இன்று நான் பக்கத்து கிராமத்துக்குப் போனபோது ஒரு பிராமணரின் வீட்டுக்கும் போனேன். மகத நாட்டிலிருந்து வந்த ஒரு பிராமண இளைஞனிடம் பேச நேர்ந்தது. அவன் புத்தனை நேரில் பார்த்ததுடன், புத்தனது பேச்சையும் கேட்டானாம். இந்தச் செய்தி எனக்கு உற்சாகத்தையும், அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலையும் அதிகப்படுத்தியிருக்கிறது. மகானான அவரை நாம் என்றாவது சந்திக்க முடியுமோ என்னவோ? சிரேஷ்டரான அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகளை நாம், நம் காதாரக் கேட்போமா? அதற்கான சந்தர்ப்பம் வாய்க்குமா? சித்தார்த்தா, நாம் சாக்கிய முனிவரின் ஆசிரமத்துக்கே சென்று அவரை தரிசித்து ஞானம் பெற முயற்சி செய்தால் என்ன?"

"நான் என்ன நினைத்தேன் என்றால், என் நண்பன் கோவிந்தன் என்றுமே இந்த பைராகிகளுடனே இருந்து விடுவான் என்றுதான்..." சித்தார்த்தன் கூறினான்: "உன்னுடைய அறுபது அல்லது எழுபதாவது வயது வரை இந்த வனவாசிகளின் தவமுறையைப் பயின்று, காட்டிலேயே உன்னுடைய வாழ்வை முடித்துக் கொள்வாய் என்றே நினைத்தேன். கோவிந்தா, உன்னை நான் தவறாக நினைத்து விட்டேன். உன்னுடைய மனக்கிடக்கையை, ரகசியங்களைக் கொஞ்சம்கூட நான் புரிந்துகொள்ளவில்லை. நண்பா, நீ இப்போது ஒரு வழியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாய் இல்லையா? பரவாயில்லை... நல்லதுதான். ஒருவேளை நீ புத்தனின் சீடனாகக்கூட மாறலாம்."

"என்னைக் கேலி செய்வது என்றால் உனக்கு மிகவும் பிடிக்குமே..." - கோவிந்தன் சற்றுக் கோபமான குரலில் பேசத் தொடங்கினான்: "பரவாயில்லை கேலி செய். இருப்பினும் உனக்கும் அந்த சிரேஷ்டனான கௌதமனைப் பார்க்க வேண்டு

மென்றும், அவரது மதப் பிரசாரத்தைக் கேட்க வேண்டுமென்றும் ஆசை இல்லையா? உண்மையைச் சொல். நீ ஏற்கெனவே என்னிடம் ஒரு தடவை சொன்னது நினைவிருக்கிறதா? நீ அதிக நாள் இந்த வனவாசிகளுடன் தங்கப் போவதில்லையென்று?''

சித்தார்த்தனுக்குச் சிரிப்பு வந்தது. சற்று நேரத்துக்குப் பிறகு வருத்தமும், கேலியும் கலந்த குரலில் அவன் பேசினான்: "நீ சொன்னதெல்லாம் சரிதான். நீ எல்லாவற்றையுமே நினைவில் வைத்திருக்கிறாய். ஆனால், நான் சொன்னது என்ன? யோசித்துப் பார்! மதப்பிரசாரங்கள் கேட்பதிலும் அதன் சாராம்சங்களைப் படிப்பதிலும் எனக்குக் கொஞ்சம்கூட விருப்பமில்லை என்றல் லவா சொன்னேன்? இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகளில் பொருள் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இருப்பினும் நண்பா, நான் இந்தப் புதிய பிரசாரகரது வார்த்தையைக் கேட்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், நான் என்ன நினைக்கிறேன் என்றால், அவரது ஞானம் முழுவதையும் இதற்குள் நான் சுவைத்து விட்டதாகத்தான்.''

"நீ ஒரு புதிய குருவின் உபதேசங்களைக் கேட்கத் தயாராக இருக்கிறாய் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால், ஓர் உண்மையை நீ ஒப்புக்கொள்ள வேண்டும். கௌதமரின் பேச்சைக் கேட்பதற்கு முன்பே, அதன் சாராம்சத்தைக் குறித்து நீ இவ்விதம் மதிப்பிடுவது சரியானதா? அது சரியல்லவென்றே தோன்றுகிறது!'' கோவிந்தன் கூறினான்.

"அது எப்படி இருப்பினும், நாம் கௌதமனை ஒரு முறை சந்திப்போம்; உணர்வோம். அதன்பின் அவரது வழி எந்த அள வுக்கு மேம்பட்டது என்பதைத் தீர்மானிப்போம். இந்தச் சூழ்நிலை யில், கௌதமனின் வெற்றி எதுவென்றால்... நம் இருவரையும் இந்த பைராகிகளின் கூட்டத்திலிருந்து வேறுபடுத்தியிருக்கிறார் என்பதுதான். மற்றவற்றைக் காத்திருந்து கவனிப்போம்.''

அன்றைய தினமே சித்தார்த்தன், பைராகிகளை விட்டுப் பிரியப் போவதைக் குறித்து சங்கத் தலைவரிடம் கூறினான். அவர்



அதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. மிகவும் வினயத்தோடு கூப்பிய கைகளுடன்தான் சித்தார்த்தன் தனது வேண்டுகோளை அவர் முன் வைத்தான். அந்தப் பெரியவர், நண்பர்கள் இருவரையும் வாய்க்கு வந்தபடி ஏசினார். மிகவும் சுறுசுறுப்பான, எதையும் அனுசரித்துப் போகும் இளைஞர்களாக அவர்கள் இருந்ததே அதற்குக் காரணம். அப்படிப்பட்டவர்கள் பிரிந்து போகப் போகிறார்கள் என்றவுடன் அவரது கோபம் உச்சியைத் தொட்டது.

கோவிந்தன் ஓரளவு பயந்தே போனான். ஆனால், சித்தார்த்தனோ, கோவிந்தனது காதில் மந்திரித்தான்: "கோவிந்தா, நான் சில வித்தைகள் கற்றிருப்பதை இந்தக் கிழவனிடம் காட்டியே தீரவேண்டும்!''

சித்தார்த்தன் பைராகிப் பெரியவரை நெருங்கி நின்றான். தன் கண்களை ஏகாக்கிரகமாக்கிக் கொண்டு, அவர் கண்களை உற்றுப் பார்த்தான். விரைவிலேயே கிழவன் சித்தார்த்தனின் மனோவசியத் துக்கு அடிமையாகினான். கிழவரின் சகல இந்திரியங்களையும் சித்தார்த்தன் முழுமையாகக் கீழடக்கினான். அரைத்தூக்க நிலையில் பெரியவர் அப்படியே அசைவற்றுப் போனார். சித்தார்த்தன் என்ன சொன்னாலும் அதைக் கேட்டுக்கொள்ள அவர் தயாராக இருந்தார். கிழவர் தலைதாழ்த்தி, அவர்கள் இருவரையும் பலதடவை வணங்கினார். புறப்படுவதற்கு அனுமதி அளித்தார். நண்பர்களுக்கு 'சர்வ மங்களங்களும் உண்டாகட்டும்' என்று ஆசீர்வதித்தார். சித்தார்த்தனும், கோவிந்தனும் வாழ்த்தை ஏற்று அதற்கு நன்றி தெரிவித்துவிட்டு, அங்கிருந்து வெளியேறினர்.

"சித்தார்த்தா, நான் புரிந்துகொண்டிருப்பதை விட அதிகமாகவே, நீ பைராகிகளிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறாய். வயதான ஒரு பைராகியை வசியத்துக்கு உட்படுத்துவது கடினமான காரியம். அசாத்தியமானது என்றுகூடச் சொல்லலாம். நீ இன்னும் சில காலம் இந்த பைராகிகளுடன் தங்கியிருந்தால், நீர் மேல் நடக்கக்கூடக் கற்றிருப்பாய்!'' பயணத்தின் நடுவில் கோவிந்தன் கூறினான்.

"தண்ணீர் மீது நடப்பதில் எனக்கு எந்தவிதமான ஆசையும் கிடையாது. அந்த மடத்தனமான விஷயங்களையெல்லாம் அந்த பைராகிகளே செய்து கொள்ளட்டும்!" சித்தார்த்தன் பதிலளித்தான்.

## 3. கௌதமன்

சிராவ தி நகரிலிருந்த எல்லாக் குழந்தைகளுக்கும் சிரேஷ்டரான கௌதமனின் பெயர் நன்றாகத் தெரிந்திருந்தது. மௌனமாகப் பிச்சை கேட்டு வரும் புத்தரின் சீடர்களை வரவேற்கவும் உணவு மற்றும் நீரை வழங்கவும் எல்லா வீட்டு வாசல்களையும் திறந்தே வைத்திருந்தனர். நகரின் மையத்தி லிருந்தது ஸ்ரீபுத்தனின் இருப்பிடம். இடம் ஜேதவனம். விசாலமான இந்த இடத்தை கௌதமனுக்கு தானமாகக் கொடுத்தவர் நகரின் பிரமுகரான ஆனந்தபிண்டிகள் என்கிற பெருந்தன வணிகர். அவர் கௌதமரின் உபாசகர்களில் முக்கியமானவரும்கூட.

பலரிடமிருந்து கேட்ட கதைகளின் உதவியாலும் வழி விசாரித்தும் சித்தார்த்தனும், கோவிந்தனும் இறுதியில் சிராவ தி நகரை அடைந்தனர். முதன்முதலாகத் தென்பட்ட வீட்டில் அவர் களுக்கு உணவு கிடைத்தது. அவர்கள் பிஷாந்தேகிகளாயிற்றே. சாப்பிடும்போதே, பரிமாறிய பெண்மணியிடம் சித்தார்த்தன் கேட்டான்:

"மதிப்புக்குரிய பெண்மணியே, சிரேஷ்டரான கௌதம புத்தரின் இருப்பிடம் எங்கு உள்ளது என்பதைத் தெரிவிப்பீர்களா? நாங்கள் வெகு தூரத்திலிருந்து வருகிற பைராகிகளாதலால், இந்த ஊர் எங்களுக்குப் பழக்கமில்லை. அந்த மகானின் உபதேசங்களை நேரடியாக அவரிடமிருந்தே கேட்டுக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எங்களது ஆசை!"

"பைராகிகளே நீங்கள் சரியான இடத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். சிரேஷ்டரான புத்தர் அருகில் - ஜேதவனத்தில் தான் தங்கியிருக்கிறார். ஆனந்தப்பிண்டிகனுடைய தோட்டம்தான் அது. நீங்கள் இன்று இரவு அங்கு தங்கலாம். புனிதப் பயணமாக வரும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் அங்கு தங்க முடியும். அதற்கான வசதிகள் அங்கு செய்யப்பட்டுள்ளன!" பெண்மணி பதிலளித்தார்.



கோவிந்தன் மிகவும் மகிழ்ந்தான். "அப்படியானால் நாம் நமது பயணத்தின் முடிவை அடைந்திருக்கிறோம். புனிதப் பயணியரை உபசரிக்கும் தாயே, தாங்கள் புத்தரை நேரில் பார்த்திருக்கிறீர்களா?"

"நான் அந்த சிரேஷ்டரை எத்தனையோ முறை பார்த்திருக் கிறேன். மஞ்சள் ஆடை உடுத்து, பிச்சைப் பாத்திரத்துடன் இந்தத் தெரு வழியாக மெதுவாக நடந்து போவது இங்கிருப்பவர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு காட்சியும்கூட. நிறைந்த பாத்திரத்துடன் அவர் திரும்பிப் போவார்!" பெண்மணி பதிலளித்தார்.

இதைக் கேட்ட கோவிந்தனின் உற்சாகம் அதிகரித்தது. மேற் கொண்டும் அவன் எதையெல்லாமோ கேட்டுக் கொண்டிருந்தான். 'நேரமாகிவிட்டது' என்று சித்தார்த்தன் நினைவூட்டியதால், இருவரும் அந்தப் பெண்மணிக்கு நன்றி தெரிவித்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டனர். யாரிடமும் வழி விசாரிக்க வேண்டிய தேவையே இருக்கவில்லை. ஏராளமான புத்த சீடர்கள் மற்றும் துறவிகள் ஜேதவனத்தை நோக்கிச் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தனர். இரவு நேரத்தில் சித்தார்த்தனும் கோவிந்தனும் ஜேதவனத்தை அடைந்தனர். அப்போதும் புதிது புதிதாக மனிதர் கள் அங்கு வந்து குழுமினர். பலர் படுத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளில் மூழ்கியிருந்தனர். இத்தனை பரபரப்புக்கு மத்தியிலும் காட்டின் முரட்டுத்தனமான வாழ்க்கையில் பக்குவப்பட்டிருந்த வனவாசிகள் இருவரும் ஆள் அரவமற்ற ஒரு மூலையில் இடம் பிடித்து இரவை அங்கேயே கழித்தனர்.

பொழுது விடிந்தபோது நம்பிக்கை நிறைந்த, ஆவல் நிறைந்த ஒரு மனித சமுத்திரமே கடந்த இரவு அங்கு செலவழித்தது.

சித்தார்த்தனுக்கும் கோவிந்தனுக்கும் புரிந்தது. பௌத்த சன்னியாசிகள் அவர்களுக்கே உரித்தான மஞ்சள் ஆடையை அணிந்தவாறு அந்த மாந்தோப்புக்குள் சுற்றிச் சுற்றி வந்தனர். ஒரு சிலர் ஆங்காங்கு இருந்த மர நிழல்களில் சுற்றுப்புறத்தை மறந்து தியானம் புரிவதில் ஈடுபட்டனர். ஒரு சாரார், பௌத்த சித்தாந்தத்தைக் குறித்து விவாதம் புரிந்தனர். நிழலுள்ள அந்த உபவனம் ஒரு சிறிய நகரமாகவே தோன்றியது. ஏறத்தாழ மதிய நேரத்தில் சன்னியாசிகள் பிச்சைப் பாத்திரங்களுடன் அங்கிருந்து புறப்பட்டனர். அவர்களது ஒரு நாளைய - ஒரு பொழுது உணவுக்கான பிச்சைக்குக் கிளம்பியிருந்தனர். அருகிலிருந்த முக்கிய நகரப் பகுதியை நோக்கிச் சென்றவர்களுடன் புத்தரும் இருந்தார்.

சித்தார்த்தன் புத்தரை கவனித்தான். சட்டென்று அடையாளம் தெரியவும் செய்தது. கையில் பிடித்திருந்த பிச்சைப் பாத்திரத்துடன் சிந்தனையில் ஆழ்ந்தபடி மிகவும் மெதுவாக நடந்து கொண்டிருந்தார். சித்தார்த்தனின் ஆராதனைக்குரிய மகா புருஷன். அவர் தலையில் மஞ்சள் துணியால் உருமாபோல் கட்டியிருந்தார்.

"இங்கே பார்..." சித்தார்த்தன், கோவிந்தனை ரகசியமான குரலில் அழைத்துச் சுட்டிக்காட்டினான். "இதோ இவர்தான் புத்தர்!"

மஞ்சள் நிறத் தலைப்பாகை கட்டிய அந்த சன்னியாசியை கோவிந்தன் கவனித்தான். ஆயிரக்கணக்கில் அங்கு குழுமியிருந்த மற்ற பயணிகளிலிருந்து அவரைப் பிரித்து அறிந்து அடையாளம் காண்பது சற்றுக் கடினமான காரியம்தான். இருப்பினும் கோவிந்தனும் அவரை அடையாளம் கண்டுகொண்டான். ஆமாம்... அவர்தான் மகானான புத்தர். அவர்கள் புத்தரைப் பின்தொடர்ந்தனர்.

புத்தர் தன்னுடைய பாதையில் மிக மெதுவாக நடந்து போனார். சாந்தமான அவர் முகத்தில் மகிழ்ச்சியோ, துயரமோ வெளிப்படவில்லை. உள்ளுக்குள் அவர் சிரிக்கிறாரோ என்கிற சந்தேகம் தோன்றும். ஆரோக்கியமான ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் சிரிப்பு போல் தனக்குத்தானே புன்னகைத்தவராக சிந்தனையிலாழ்ந்து, சாந்தமாக நடந்து கொண்டிருந்தார். மற்ற சன்னியாசிகள் மாதிரியே அவரும் ஒரு நீண்ட அங்கவஸ்திரத்தை அணிந்திருந்தார். ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்த அவரது நடையும், சாந்தி தவழும் கண்களும், முழங்கால் வரை நீண்டு கிடந்த கைகளும், உருண்டையான விரல்களும் அமைதி மற்றும் சமாதானத்தின் தூதர்களாக தெரிந்தன. அவை முழுவதுமான தேஜஸை வெளிப்படுத்தின. அந்த உடம்பில் பிரதிபலித்தவை அடக்கமும் மங்கலடைய முடியாத பிரகாசமும்தான். வித்தியாசமற்ற சமாதானம் - ஆறுதல் - அவரது ஒவ்வோர் அசைவிலும் தெளிவாகப் புலப்பட்டது. பிக்ஷாந்தேகிகளான புத்தனை பைராகிகளான சித்தார்த்தனும், கோவிந்தனும் அடையாளம் தெரிந்து கொண்டதே அந்த உடல் ஒளியை வைத்துத்தான். அந்த நடையில் எந்தவிதமான கலப்போ, வஞ்சகமோ இல்லாதிருந்தது. நான்கு புறமும் ஒளி சொரிந்தபடி மெதுவாக நகரும் ஒரு நட்சத்திரம் போல் நகர்ந்தார், சிரேஷ்டர்களில் சிரேஷ்டரான கௌதம முனிவர்!

"இன்று நாம் அவருடைய உபதேசங்களை நேரடியாகவே கேட்போம்..." கோவிந்தன் கூறினான்.

சித்தார்த்தன் பதில் எதுவும் சொல்லவில்லை. அவனுக்கு உபதேசங்களோ, சித்தாந்தங்களோ குறித்து எந்த விதமான ஆர்வமோ, ஈடுபாடோ இருக்கவில்லை. அவை சித்தார்த்தனுக்குப் புதிய ஞானம் எதையாவது தரும் என்றும் தோன்றவில்லை. புத்தரது உபதேசங்களைப் பற்றி ஏற்கெனவே அவர்கள் இருவரும் கேள்விப்பட்டிருந்தனர். மற்றவர்கள் வாயிலாகக் கேட்டதுதான். இருப்பினும் சித்தார்த்தன், புத்தரை தலை முதல் கால் வரை ஊன்றி கவனித்து ஆராய்ந்தான். உயர்ந்த தலைப் பகுதியும், நெற்றியும், விசாலமான மார்பிடங்களும், அழகான பாதங்களும், முழங்காலைத் தொடுமளவு நீண்டு வளர்ந்த கைகளும் ஞானத்தின் ஊற்றுகள்தான் என்று சித்தார்த்தனுக்கு விளங்கின. அந்த ஞானமும் மேதைமையும் அழிவற்ற சத்தியச் செய்திகளை போதித்தன. சுருங்கச் சொன்னால் இந்த புத்தர் ஒரு திவ்வியமானவர்தான். சித்தார்த்தன் இதுவரை எந்த ஒரு மனிதனையும் இந்த அளவு உள்ளழிந்து பாராட்டியதில்லை!

சித்தார்த்தனும் கோவிந்தனும் புத்தரைப் பின்தொடர்ந்து நகரத்துக்குச் சென்று, புத்தர் திரும்பி வரும்போது மௌனமாகவே அவரைப் பின்தொடர்ந்து ஜேதவனத்துக்கும் வந்தனர். அந்த நாள் முழுவதும் உபவாசம் இருக்கவும் அவர்கள் தீர்மானித்தனர். பிச்சையுடன் திரும்பிய கௌதமன், அன்றைய உணவை மற்ற சீடர்களுடன் அமர்ந்து சாப்பிடுவதையும் நண்பர்கள் இருவரும் கவனித்தனர். கௌதமன் சாப்பிட்டது வெறும் ஒருபிடிச் சோறுதான். சாப்பிட்ட பிறகு மாமர நிழலில் அமர்ந்து தியானத்தில் மூழ்கினார் புத்தர்.

அன்று மாலை நேரத்தில் வெயில் சற்றுத் தணிந்தபோது அங்கிருந்த மொத்த மனிதர்களும் புத்தரது உபதேசத்தைக் கேட்பதற்காக, திறந்த வெளியாக இருந்த பகுதியை நோக்கிச் சென்றனர். சிரேஷ்டரான புத்தரது அமைதி மற்றும் சமாதானம் நிறைந்த அன்றைய உரை மிகவும் பொருள் செறிந்ததாக இருந்தது. கௌதமர் மிகவும் முக்கியத்துவம் கொடுத்துக் கூறியது, மனிதர்களது வேதனை மற்றும் துயரத்தையும் அதிலிருந்து எப்படி விடுபடலாம் என்பது குறித்தும்தான். வாழ்க்கை, துயர் நிறைந்தது. வாழ்க்கையே துயரங்களால் நிரப்பப்பட்டிருக்கிறது என்று வாதிட்டார். இதிலிருந்து விடுபட, முக்தி பெறத் தனது மோட்ச மார்க்கத்தைப் பின்பற்றுமாறு விளக்கினார்.

புத்தரது குரல் மென்மையாகவும் அதே சமயம் உறுதியுடனும் இருந்தது. அவருடைய உபதேசங்களில் அடங்கியுள்ள முக்கியமான தத்துவங்கள் நான்கு. அந்த நான்கு விதமான தத்துவங்கள், எட்டு விதமான மோட்ச மார்க்கங்களை வலியுறுத்தின. தன்னுடைய வழி எல்லாருக்கும் பொருந்தக்கூடியது என்றும் புத்தர் இறுதியில் சுட்டிக்காட்டினார். தெளிவான, அழுத்தமான குரலில் தனது சித்தாந்தங்களை, சீடர்களிடம் விவரித்தார்.

அது ஒளியினுடையதும், ஆத்மாவைத் தொடக்கூடிய மறக்க முடியாத உபதேசமாகவும் இருந்தது.

புத்தர் தனது நீண்ட உபதேசத்தை முடித்தபோது இரவு வெகுநேரமாகின. அதன்பின் சிலர் புத்தருக்கு முன்பாக வந்து,



அவரது சீடர்களாக மாறி குருவணக்கம் செய்தனர். அவர்களை ஆசீர்வதித்தபடி புத்தர் கூறினார்: "நீங்கள் எனது உபதேசத்தை ஊன்றி கவனித்திருக்கிறீர்கள். என்னோடு சேர்ந்து தன்யம் பெறுங்கள். உங்களது எல்லாத் துயரங்களில் இருந்தும் விடுதலை பெறுவீர்களாக!"

இயல்பாகக் கூச்ச இயல்பு கொண்ட கோவிந்தனும் முன்புறம் சென்று புத்தரைப் பார்த்துக் கூறினான்: "நானும் எனது பக்தியை வாமி முன்னால் வெளிப்படுத்துகிறேன். உங்களது உபதேசங்களை நான் முழுமனதுடன் ஏற்று உங்கள் சீடனாக விரும்புகிறேன்!"

கோவிந்தன் விரும்பியபடியே அவனையும் தன் சீடனாக ஏற்றுக் கொண்டார் புத்தர்.

புத்தர் தனது படுக்கையறைக்குள் நுழைந்த பிறகு, கோவிந்தன், சித்தார்த்தனிடம் கூறினான்: "சித்தார்த்தா, உன்னை விமர்சிப்பது எனது கடமையல்ல. இருப்பினும் நான் ஒன்று சொல்கிறேன். நாம் இருவரும் சிரேஷ்டமான கௌதமரின் உபதேசங்களைக் கேட்டோம். ஆனால், நான் மட்டும் அவரது சித்தாந்தங்களைப் புரிந்துகொண்டு, அவரது சீடராகவும் மாறினேன். ஆனால் நண்பா, நீ ஏன் அப்படிச் செய்யவில்லை? ஸ்ரீ புத்தர் காட்டிய மோட்ச மார்க்கத்தை நீ ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை. நீ மேற்கொண்டும் எதற்காகக் காத்திருக்கிறாய்?"

கோவிந்தனது பேச்சைக் கேட்ட சித்தார்த்தன் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தவன் போல் கண்களைக் கசக்கிக் கொண்டான். கோவிந்தனின் முகத்தையே உற்றுப் பார்த்தான். அந்தப் பார்வை சற்று நேரம் நீடிக்கவும் செய்தது. பிறகு அமைதியுடன் பேசத் தொடங்கினான்: "நண்பா, நீ உனது வழியைத் தேர்ந்தெடுத்துவிட்டாய். நீ என்றும் என் உள்ளத்தோடு ஒன்றிக் கலந்த நண்பனும், எப்போதும் என்னைப் பின்தொடர்ந்தவனும்கூட. நான் எத்தனையோ தடவை நினைத்திருக்கிறேன், என்றாவது ஒருநாள் கோவிந்தன் என்னைவிட்டுப் பிரியக்கூடும் என்று. நீ இப்போது

ஒரு முழுமையான மனிதனாகி, உனது சொந்த வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறாய். நீ உனது வழியிலேயே பயணத்தை மேற்கொள், இறுதி வரையிலும்! நண்பா, நீ விரும்பும் மோக்ஷ நிலையை அடைவாயாக! உனக்கு மங்களம் உண்டாவதாக!''

சித்தார்த்தன் பேசிய வார்த்தைகளின் முழுப் பொருளும் கோவிந்தனுக்கு முதலில் புரியவில்லை. அவன் பொறுமையாக மீண்டும் கேட்டான்: "அன்புக்குரிய நண்பா, நீ கௌதமரது வழியைத் தவிர வேறொன்றைத் தேர்ந்தெடுப்பது அசாத்தியமான தாகத் தோன்றுகிறது.''

சித்தார்த்தன், கோவிந்தன் மீது தன் கைகளைப் பதித்து புன்னகையுடன் பேச ஆரம்பித்தான்: "என்னுடைய மங்களகர மான வாழ்த்துகளைக் கேட்டிருப்பாய். நான் அதையே திரும்பவும் கூறுகிறேன். நீ அவரை இறுதிவரை பின்தொடர்ந்து செல். உனக்கு மோட்சப் பிராப்தி ஸித்திப்பதாக!''

அந்த வினாடியில்தான் கோவிந்தனுக்கு, தன் நண்பன் தன்னைவிட்டுப் பிரியப் போகிறான் என்பது புரிந்தது. அவன் துயரடைந்தவனாகத் தலைகுனிந்தான்.

சித்தார்த்தன் மிகவும் கருணை வாய்ந்த குரலில் கோவிந்தனிடம் கூறினான்: "கோவிந்தா, நீ இப்போது புத்தரின் சீடர்களில் ஒருவன் என்ற உண்மையை மறக்கக்கூடாது! நீ ஏற்கெனவே வீட்டையும் பெற்றோரையும் துறந்து வந்தவன். இப்போது சீடனானது மூலம் ஏனைய பொருள்கள், நட்பு சொந்த ஆசாபாசங்கள் போன்றவற்றையும் துறந்திருக்கிறாய். அதனால் தான் சிரேஷ்டனான புத்த குருபாதரின் உபதேசங்களால் கவரப் பட்டாய். அது நீயே உன் சொந்த மனத்தால் தேர்ந்தெடுத்ததும்கூட. நண்பா, நாளைக் காலையில் நான் உன்னைப் பிரிந்து செல்கிறேன்!''

அந்த ஆத்மார்த்தமான நண்பர்கள் இருவரும் வெகு நேரம் அருகிலிருந்த காட்டுப்பகுதிகளில் சுற்றியலைந்தனர். பிறகு புல் தரையின் மீது படுத்தனர். ஆனால், அவர்களால் சுத்தமாக உறங்க முடியவில்லை. 'எதனால் சித்தார்த்தனால், புத்தரின் போதனைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை?' என்பதையே, கோவிந்தன் அடிக்கடி கேட்டான். அவரது தத்துவங்களும், பாடங்களும் எதனால் அவனைக் கவரவில்லை என்றும் கேட்டான். அவரது உபதேசத்தில் என்ன தவறு இருக்கிறது? எனினும் அதற்கெல்லாம் பொருத்தமான பதிலை சித்தார்த்தன் அப்போது சொல்லவில்லை.



"கோவிந்தா, நீ அமைதியாக இரு. சிரேஷ்டரான புத்தரின் சித்தாந்தம் மிகவும் நல்லதுதான். அதில் நான் எப்படி குறை காண்பது?'' என்று மட்டும் ஒரு தடவை குறிப்பிட்டான்.

மறுநாள் விடியற்காலையில் புத்தரின் சீடர்களில் மிகவும் வயதானவராகத் தோன்றும் ஒரு பிக்கு, புத்தர் வசிக்கும் அந்த நந்தவனத்தைச் சுற்றி வந்து, புத்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்ட வர்கள் எல்லாரும் அவர்களுக்குரிய மஞ்சள் நிற ஆடைகளையும் பிச்சைப் பாத்திரங்களையும் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்தார். சீடர்களின் அன்றாட நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் விளக்கினார். இவற்றைக் கேட்ட கோவிந்தன், தன் நண்பனை ஒரு தடவை இறுகக் கட்டியணைத்தான். பிறகு வயதான அந்தப் பிக்குவுடன் புறப்பட்டான்.

சித்தார்த்தனோ யோசனையில் ஆழ்ந்தவனாக அந்தப் பூந்தோட்டத்துக்குள் அலைந்தான். சற்று நேரத்துக்குப் பிறகு சித்தார்த்தனை நோக்கி, மகானான புத்தர் மெதுவாக நடந்து வருவது தெரிந்தது. அவனுக்கு அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மிகவும் பணிவாகப் புத்தரை வணங்கிய பிறகு, "நான் உங்களிடம் ஓரிரு வார்த்தைகள் பேசலாமா?'' என்று கேட்டான் சித்தார்த்தன்.

புத்தர் அதற்கு சம்மதித்ததால் சித்தார்த்தன், "சிரேஷ்டரான புத்தரே, நான் நேற்று உங்கள் உபதேசத்தை கவனத்துடன் செவிமடுத்தேன். அவை முழுவதும் பொருள் செறிந்தவை. நானும் என் நண்பனும் இதைக் கேட்பதற்காக வெகு தொலைவிலிருந்து வந்தோம். கோவிந்தன், உங்கள் சீடனாகி இங்கே தங்கிவிடத் தீர்மானித்து விட்டான். நான் எனது பிச்சையை மீண்டும் தொடர்கிறேன்.''

"உங்களது விருப்பப்படியே செய்யுங்கள்..." புத்தர் மிகவும் வினயத்துடன் பதிலளித்தார்.

"என்னுடைய பேச்சு ஒருவேளை எல்லை மீறியதாகத் தோன்றலாம். இருப்பினும் என் மனதிலுள்ள சில விஷயங்கள் குறித்தும், உங்களது தத்துவம் தொடர்பாகச் சிலவற்றைக் குறித்தும் விவாதிக்க வேண்டும் என்பது எனது விருப்பம். அதற்கு அனுமதியளிக்குமாறு தங்களிடம் வேண்டிக் கொள்கிறேன்..." சித்தார்த்தன் வேண்டினான்.

ஒரு சிறிய முக அசைவின் மூலம் ஸ்ரீ புத்தர், விவாதத்துக்கு அனுமதியளித்தார். சித்தார்த்தன் பேசத் தொடங்கினான்:

"புகழ் பெற்ற உங்களது உபதேசங்கள் ஒவ்வொன்றும் சிலாக்கியமானது; மேன்மையானது. இந்தப் பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தையும், அதன் நிலையாமையையும் அவை எனக்கு உணர்த்தின. காரண காரியங்களுடன் விளக்கினீர்கள். அதற்காக நான் உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன்பு இவை குறித்து எவரும் என்னிடம் விளக்கிய தில்லை. பௌத்த சித்தாந்தங்களின் கோணத்தில் இந்தப் பிரபஞ்சத்தை மதிப்பிடும்போது எல்லா பிராமணர்களது இதயமும் துடிக்கவே செய்யும். இந்தக் கோணத்தில் பர பரம் வேறுபாடற்ற, இணைபிரியாத சங்கிலித் தொடர் போன்ற வாழ்க்கையோட்டம் தெளிந்த நீராகத் தென்படவே செய்கிறது.

"பிரபஞ்சமும், அதில் நிகழும் உயிர்களின் துடிப்பும் கடவுள்களையோ, எதிர்பாராமல் நிகழும் சம்பவங்களையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. வாழ்க்கை நல்லதோ - கெட்டதோ - துயரகரமானதோ - மகிழ்ச்சி வடிவமானதோ, நிச்சய மற்றதோ எப்படியிருப்பினும் அவை, அவ்வளவு முக்கியமான விஷயங்கள் அல்ல. ஆனால், பிரபஞ்ச சக்தியின் இணைப்பும், தொடர்பு அறுபடாத வாழ்க்கையோட்டமும் ஜீவமரணத் துடிப்புகளும் உங்களுடைய ஞானம் நிறைந்த உபதேசத்தில் அடங்கியுள்ளன. வணக்கத்துக்குரியவரே, இப்படியெல்லாம் இருப்பினும் கூட உங்களது சித்தாந்தங்களில் எனக்கு ஒரு மாறுபாடு தெரிகிறது.



"பிரபஞ்ச ரகசியங்களின் இணைப்பிலும், காரணகாரியங் களின் படைப்பிலும் ஓர் இடைவெளி தெரிகிறது. அந்த இடை வெளியின் வழியாக அறிமுகமற்றதும், புதியதும் ஏற்கெனவே அங்கு இல்லாததுமான ஒன்றும், கண்ணுக்குத் தெளிவாகப் புலப் படாததுமான ஒன்று தட்டுப்படுகிறது. அது மோட்சமடைவதைப் பற்றிய உங்களது முடிவுதான். இந்த இடைவெளி சா வதமும், இணைப்பு வடிவமுமான பிரபஞ்சத்தைத் தகர்த்துச் சிதறச்செய்யும் என்பதுதான் எனது தாழ்மையான கருத்து. இது உங்களது கருத் துக்கு எதிராக இருப்பதாகத் தோன்றினால், என்னை மன்னியுங்கள்!"

சித்தார்த்தன் கூறியதை கௌதமர் சாந்தமாகவே செவிமடுத்தார். அவன், தனது பேச்சை நிறுத்தியபோது கௌதமர் சாந்தமான, தாழ்ந்த குரலில் அதற்கு பதிலளித்தார்: "நீ என்னுடைய உபதேசங்களை மிகவும் சிரத்தையோடு கவனித்திருக்கிறாய். பிராமணபுத்திரா, நீ இவை குறித்து மிக ஆழமாக சிந்திக்கவும் செய்திருக்கிறாய். அதுவும் எனக்குப் புரிகிறது. அதில் உனக்கு ஒரு மாறுபட்ட கருத்தும் தெரிகிறது. நீ அதுகுறித்து மேலும் சிந்தித்துப் பார். ஆனால், நான் ஒரு முன்னெச்சரிக்கை செய்கிறேன். என்னுடைய உபதேசங்கள் வெறும் அபிப்பிராயங்கள் மட்டுமல்ல; அபிப்பிராயங்களுக்கு அர்த்தமில்லை. யாரும் அதை அவரவர் விருப்பப்படி ஏற்றுக்கொள்ளவோ, தவிர்க்கவோ செய்யலாம். பௌத்த சித்தாந்தம் அறிவு வேட்கை நிரம்பியவர்களுக்கு, உலக ரகசியங்களை வெளிக்காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்டதும் அல்ல. அதன் நோக்கம் வாழ்க்கையின் இடிபாடுகளிலிருந்தும், தொடரும் துயரங்களிலிருந்தும் விடுபட்டு மேன்மை அடைவதுதான். அதையே கௌதமன் கற்பிக்கிறான்."

"ஞானியே, தாங்கள் என்மீது கருணை கூர்ந்து கோபம் கொள்ளாதிருப்பீர்களாக!" அந்த இளைஞன் மிகவும் தாழ்மையு டன் விண்ணப்பித்தான்: "வார்த்தைகள் குறித்து விவாதம் நடத்துவதற்காக நான் இவ்வளவும் கூறவில்லை. அபிப்பிராயங்கள்

என்பது பெரும்பாலும் முக்கியத்துவம் அற்றவை என்று கூறியதும் சரிதான். நான் ஒன்று சொல்லட்டுமா? நான் ஒருபோதும் சந்தேகக் கண்ணோடு தங்களைப் பார்த்ததில்லை. தாங்கள் ஸ்ரீ புத்தர் என்பதும் பண்டிதர்களும், பிராமணர்களும் வேட்கை நிரம்பிய இளைஞர்களும் வெகு காலமாக அடைய முயற்சிக்கும் லட்சிய சிகரத்தைத் தாங்கள் அடைந்துவிட்டவர் என்பதும் எனக்கு நன்றாகத் துலங்குகிறது. மகாப்பிரபு, நீங்கள் இந்த நிலையை அடைந்தது சொந்த மற்றும் உங்களுக்கே உரித்தான கடின முயற்சியாலுமே என்பதையும் உணர்கிறேன். அதன் முடிவான ஞானத்தை அடைந்ததும் தாங்கள் தனியொரு மனிதர் மட்டுமே. இதன் பொருட்டு தாங்கள் யாரையும் அணுகியதுமில்லை. இவையனைத்தையும் மனமார நான் ஒப்புக்கொள்கிறேன். மேன்மையானவரே, எவரும் மற்றொருவரது வழிகாட்டுதலின் கீழ் மோட்சமடைவது சாத்தியம் அல்லவே. தங்களுக்கு ஞானோதயம் ஏற்பட்ட வினாடியில், தாங்கள் அடைந்த உன்னதமான அனுபவத்தை மற்றவர்களுக்கு வார்த்தையாலோ அல்லது உபதேசத்தின் மூலமாகவே விளக்க முடியுமா என்ன? பௌத்த சித்தாந்தங்கள் பலரது ஞான வேட்கையைத் தணித்துள்ளன என்பதும் உண்மைதான்.

"வாழ்க்கையை எவ்விதம் சன்மார்க்க நெறியில் மேம் படுத்துவது என்பது குறித்தும், தீமையை எவ்விதம் தவிர்ப்பது என்பதையும் தங்களது உபதேசங்கள் தெளிவாக விளக்கவும் செய்கின்றன. இருப்பினும் மகத்தான இந்த சித்தாந்தங்கள் ஓர் உண்மையை உட்கொள்ளவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அது தொடர்ந்து வரும் நம்பிக்கைகள் மற்றும் முன்னரே நிச்சயிக்கப்பட்ட விதி பற்றிய முடிவுகளிலிருந்து தாங்கள் விடுதலையடைந்த நொடியில் - தாங்கள் ஞானம் பெற்ற அந்த வினாடியில் - அனுபவித்த நிலை எது என்பது குறித்துத்தான்! லட்சக்கணக்கான மக்கள் மதியில் தங்களுக்கு மட்டுமே நேர்ந்த, உள்ளுணர்வான அந்த விடுதலை, அந்த உள்ளொளி இந்தத் தத்துவங்களிலோ உங்களது உபதேசங்களிலோ உள்ளூடாக எங்கும் தெரியவில்லை. தங்களது மகத்தான உரையைக் கேட்டபோது இந்த ஒரு சிந்தனைதான் என்னுள் எழுந்தது. எனவேதான் நான் எனது வழிப்படியே செல்லத் தீர்மானித்தேன்.



"என்னுடைய இந்தப் பயணம் மற்றொரு குருவை கண்டுபிடிப்பதற்கோ, புதிய தத்துவ நூல்களைத் தேடியோ அல்ல. ஏனெனில், தங்களைவிட மேம்பட்ட - சிரேஷ்டமான ஒரு குரு இருக்கக்கூடும் என்றோ, பௌத்த சித்தாந்தங்களை விட உயர்ந்த வேறொரு தத்துவம் இருக்கும் என்றோ நான் கருதவில்லை! குருமார்களையும், அவர்களது உபதேசம் மற்றும் தத்துவங் களையும் ஒதுக்கிவிட்டு, மோட்சப் பிராப்தி என்கிற என்னுடைய லட்சியத்தை அடைய நான் எனக்கே உரிய வழியில் செயல்படுவது என்று தீர்மானித்திருக்கிறேன். ஒன்று, நான் எனது லட்சியத்தில் வெற்றி பெறுவேன், அல்லது மரணத்தைத் தழுவுவேன். சிரேஷ்ட மானவரே எப்படி இருப்பினும் தங்களை சந்தித்த இந்த நாள் என்றென்றும் என் நினைவில் நிலைத்திருக்கும். அது நிச்சயம்!"

புத்தர் கண்களை மூடி, சாந்தமாக அமர்ந்திருந்தார். அவர் முகத்தில் விவரிக்க முடியாத உணர்வுகள் வெளிப்பட்டன.

"உன்னுடைய முடிவில் தவறு ஏதும் நேரவில்லை என்று நம்புகிறேன்." சிரேஷ்டமான புத்தர் மிருதுவான குரலில், சாந்தமாகப் பேசினார்: "நீ உன்னுடைய லட்சியத்தில் வெற்றியடைய வாழ்த்துகிறேன். இருப்பினும் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிற பைராகியே நீ யோசித்துப் பார். ஆயிரக்கணக்கான எனது சீடர்களை இங்கே கண்டாய், சர்வசங்க பரித்தியாகிகளான புண்ணியாத்மாக்கள்! இவர்கள் அனைவரும் என் தலைமையி லிருந்து விலகி, காம-மோகங்கள் நிறைந்த இந்த உலக வாழ்க்கைக்குத் திரும்புவது நல்லதென்று நீ கருதுகிறாயா?"

சித்தார்த்தன், புத்தரிடம் பதிலளித்தான்: "அதைக் குறித்து நான் யோசிக்கவில்லை. அவர்களுக்கு பௌத்த மார்க்கத்தின் ஊடாக மோட்சப் பிராப்தி ஸித்திக்கட்டும். மற்றொருவரது வாழ்க்கையை மதிப்பீடு செய்யுமளவு நான் பலம் வாய்ந்தவன் அல்ல. நான் என்னுடைய சொந்த வாழ்க்கையை மதிப்பீடு

செய்வதும், நல்லதென்று எனக்குத் தோன்றுவதை ஏற்றுக் கொள்வதும் சரியென்று கருதுகிறேன். மகாப்பிரபு, பைராகிகளான நாங்கள் 'நான்' என்கிற ஆணவத்திலிருந்து விடுதலை வேண்டி அதற்காக வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்கிறோம். இந்த சித்தார்த்தன் தங்கள் சீடனாக, தங்களை வழிபடுபவனாக மாற நேர்ந்தால், அது வெறும் ஒரு நடிப்பாக மட்டுமே இருக்கும். எனக்கு ஆத்ம விடுதலை ஏற்படுவதோ, எனக்குள் இருக்கும் 'நான்' என்ற ஆணவம் அழிவதோ நிகழாது. மட்டுமின்றி, எனக்குப் புதிய உறவுகளும், கடமைகளும் உண்டாகும். உதாரணமாகத் தங்கள் உபதேசம், தங்களது சீடர்களுடனான என்னுடைய அன்பு போன்ற பற்றுகள் வளர்ந்தும் வருகின்றன."

கௌதமர் ஒரு சிறு புன்னகையுடன் தன் முன்னால் நிற்கும் பிராமண இளைஞன் முகத்தையே சற்று நேரம் ஊன்றி கவனித்தார். பிறகு வலது கையை மெதுவாக உயர்த்தி, சித்தார்த்தனுக்கு விடை கொடுத்தார்: "பைராகி இளைஞனே, நீ மிகவும் கெட்டிக்காரத்தன மாகப் பேசுகிறாய். ஆனால், அதிகப்படியான கெட்டிக்காரத்தனம் ஆபத்தில் தள்ளிவிடும் என்பதையும் மறந்து விடாதே!"

ஸ்ரீ புத்தர் நடக்கத் தொடங்கினார். அவரது அன்பு நிறைந்த புன்சிரிப்பும், பார்வையும் சித்தார்த்தன் மனத்தில் என்றுமே மறையாததாகப் படிந்தன. அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான்: 'இப்படிச் சிரிக்கவும், பார்க்கவும், நடக்கவும், செயல்படவும் முடிந்த ஒரு மனிதனை இதுவரை என் வாழ்நாளில் நான் சந்தித்ததில்லை! எவ்வளவுக்கெவ்வளவு களங்கமற்றவர், மட்டுமல்ல, எவ்வளவு நல்ல மனம் கொண்டவர் இவர். கண்டிப்பாக இவர் 'நான்' என்ற ஆணவத்தை விட்டொழித்தவர்தான். அதில் சந்தேகம் கிடையாது. அதேபோல் நானும் எனக்குள் இருக்கும் 'நான்' என்ற ஆணவத்தை முழுவதுமாகவே வெற்றி கொள்வேன்...'

'இந்த அளவு வணக்கத்துக்குரிய ஒரு மனிதனை நான் இதுவரை பார்த்ததில்லை. இனிமேல் காணவும் முடியாது. வேறு எந்த வகையான, எவ்வளவு மேம்பட்ட குருவின் உபதேசமும் என்னைக் கவர முடியாது. ஏனெனில் இப்படிப்பட்ட மகான்களால் கூட என்னைத் திருப்திப்படுத்த இயலவில்லை. புத்தர் என்னை மிகவும் அதிகமாகக் கவர்ந்ததுடன் என்னிலிருந்து எதையோ அபகரிக்கவும் செய்தார். அதே நேரம் விலை மதிக்க முடியாத வேறு ஏதோ ஒன்றை எனக்கு வழங்கவும் செய்திருக்கிறார். சிரேஷ்டமான புத்தர், என்னுடைய ஆத்மார்த்தமான நண்பன் கோவிந்தனை என்னிடமிருந்து பிரித்து விட்டார். இதுவரை அவன் என்னுடன் இருந்தான். இப்போது அவன் பௌத்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்டு விட்டான். அவரைப் பின்தொடர்கிறான். அதேசமயம் அவர் என்னையே எனக்கு மீட்டுத் தரவும் செய்திருக்கிறார். அதைவிட அதிகமாக வேறெது வேண்டும்?



## 4. உபதேசம்

**கௌ**தம புத்தரும், கோவிந்தனும் வசிக்கும் அந்த உபவனத்திலிருந்து சித்தார்த்தன் வெளியே வந்தபோது, தனது பழைய வாழ்க்கையை அங்கேயே விட்டுவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. ஒவ்வோர் அடியாக கால்களை எடுத்து வைத்து நடந்த சித்தார்த்தன் மனத்தில் இந்த சிந்தனைதான் உயர்ந்திருந்தது. உண்மையைச் சொன்னால், சித்தார்த்தன் தனக்குச் சற்று முன் நிகழ்ந்த அனுபவத்தைக் குறித்து ஆழமாகச் சிந்தித்தான்.

'இந்த வினாடியிலிருந்து தான் முற்றிலும் ஒரு புதிய மனிதனாகி விட்டோம்!' என்கிற உணர்வே அவனை முழுவது மாக ஆட்கொண்டிருந்தது. இழை அறுபடாத இந்த சிந்தனை எல்லாவற்றினது மூலகாரணங்களையும் ஆராய அவனை இறுதியில் உந்தித் தள்ளியது எனலாம். காரணங்களை அதன் யதார்த்த நிலையில் கண்டறிய, ஏகாக்கிரமான சிந்தனை தவிர்க்க முடியாததாக இருந்தது. இப்படிப்பட்ட சிந்தனை வாயிலாகவே ஒருவன் ஞானம் பெற முடியும். சிந்தனையின் மூலமாகவே அனு பவங்கள், நிதரிசன அறிவாக மனத்துள் வியாபகம் பெறுகின்றன.

ஜேதவனத்திலிருந்து திரும்புகையில் சித்தார்த்தனது யோசனைகள் ஏறத்தாழ இப்படி இருந்தன. பிள்ளைப் பருவம் கடந்து, தான் இப்போது இளமைப்பருவத்தை அடைந்திருக் கிறோம். மிகச் சிறு வயதிலும் பின்னரும் தன்னுள் வலுவாக ஒட்டியிருந்த ஓர் ஆசை, இப்போது தன்னை விட்டு விலகி யிருக்கிறது. அது வணக்கத்துக்குரிய குருமார்களிடமிருந்து அவர்களுடைய சித்தாந்தங்களைக் கற்று மனப்பாடம் செய்ய வேண்டும் என்கிற ஆசைதான். கடைசியாகச் சற்று நேரத்துக்கு முன் சந்தித்த மகானான குருநாதனையும் சாக்ஷாத் ஸ்ரீ புத்தரையும் இதோ இப்போது தவிர்த்தாகிவிட்டது. அவரது சீடனாகும் வாய்ப்புக்கூட தனக்குத் தேவைப்படாமல் போய்விட்டது!

கண்களைப் பாதி மூடியவாறு மௌனமாக ஒரு மரத்தின் அடியில் அமர்ந்த சித்தார்த்தனது சிந்தனை, ஒரே வழியில் செயல்பட்டது. 'என் குருமார்களிடமிருந்து நான் கற்றுக்கொள்ள விரும்பியது என்ன? மனித ஆத்மாவின் இயல்பையும் அதன் அடையாளத்தையும் புரிந்து கொள்வது' என்பதுதானே? ஆத்ம பலத்தை வென்று அதிலிருந்து விடுதலை பெறுவதுதான் என்னுடைய முக்கிய நோக்கம். ஆனால், இதுவரை அது சாத்தியமாகவில்லை. 'நான்' என்கிற உணர்விலிருந்து பல தடவை என்னால் விலகியிருக்க முடிந்தது என்பது உண்மைதான். இது ஒரு வகையான கண்ணாமூச்சி விளையாட்டு. உண்மை என்னவென் றால், ஆத்மாவை அடக்கி வைப்பதும் கடினமாகத் தோன்றுகிறது. யதார்த்தத்தில் 'நான்' என்னும் புதிர் என்னை மிகவும் அலைக் கழிக்கிறது. நான் தனியானவன்; மற்றவர்களிடமிருந்து மாறுபட்ட ஒருவன். இருப்பினும் எனது வல்லமைகள் எது என்று இதுவரை எனக்குத் தெரிந்திருப்பது குறைவுதான். பிரபஞ்ச ரகசியங்களின் ஒருபுறமும் - கொஞ்சமும் தெரிந்திருக்கலாம். ஆனால், உண்மையில் நான் யார்? அதற்கான பதில்தான் கிடைக்கவே இல்லை!

எப்போதும் சிந்தனையிலாழும் அந்த பிராமண இளைஞன், தனது இருப்பிடத்திலிருந்து எழுந்து நடக்கத் தொடங்கினான். சற்று தூரம் நடந்தவன் சட்டென்று நின்றான். அதுவரை அமைதியாக



இருந்ததால், ஏதோ ஒரு தெளிவு ஏற்பட்ட அடையாளம் தென்பட்டது. ஒரு புதிய சிந்தனை முகிழ்த்தது. எனக்கு நானே அஞ்ஞாதமாக இருப்பது வேறெதனாலுமல்ல, பயத்தினால்தான். கடுமையான பயம். பவித்ரமான உண்மையைத் தேடி நான் எனது உடலைத் துன்புறுத்துகிறேன். பிரம்ம ரகசியத்தையும், ஆத்ம ஞானத்தையும் தேடும் நான் என்னை [illegible]த்தில் ஹோமிக்கிறேன். இது சரியானதல்ல. [illegible] எங்கோ எனக்குத் தவறு நேர்ந்திருக்கிறது!

11/6/65

தலை உயர்த்திய சித்தார்த்தன் சுற்றுமுற்றும் ஒரு தடவை பார்த்தான். அவன் முகத்தில் புன்னகையொன்று மலர்ந்தது. அவனுள் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது போல் [illegible] முழுவதும் ஒருவிதச் சிலிர்ப்பு பரவியது. அதே நேரம் அவனுக்குள் ஓர் உறுதியும் ஏற்பட்டது. 'நான் ஒருபோதும் சித்தார்த்தனிலிருந்து ஓடிப்போக மாட்டேன். இனிமேல் தொடரும் எனது முயற்சிகள் லௌகீக இன்பங்களின் காரணத்தை ஆராய்வதாகவோ, ஆத்மாவைக் கண்டறிவதாகவோ இருக்காது. என் உடலை அழிக்கவோ, ஆத்மாவுக்குக் காயம் ஏற்படுத்தவோ முற்பட மாட்டேன். வேத, உபநிஷத்துகள் இனிமேல் எனக்குத் தேவையில்லை. நான் என்னிடமிருந்தே எனக்குத் தேவையான வற்றைக் கற்றுக்கொள்வேன். என்னுடைய சொந்த அனுபவங்கள் தான், எனது வழிகாட்டியாக இருக்கும். சித்தார்த்தனது ரகசியங் களை, எனது அனுபவங்களே எனக்கு அடையாளம் காட்டித்தரும்!

தன்னைச் சுற்றியுள்ள உயிர் வகைகளை முதன்முதலாகக் காண்பது போல் சித்தார்த்தன் ஒவ்வொன்றையும் நுட்பமாக கவனித்தான். பிரபஞ்ச மண்டலம் அழகானதாகவும், அறிமுகமற்ற புதிய ஒன்றாகவும், புதுமையாகவும் தோன்றியது. தளிர் மற்றும் பூக்கள் நிறைந்த நந்தவனங்கள், பாய்ந்து வந்து மேலிருந்து கொட்டும் அழகான அருவிகள், பனி படர்ந்த மலைச் சிகரங்கள், வண்ண வண்ணமாகத் தெரிந்த வானவில் ஆகியவை சித்தார்த்தன் கண்களுக்கு மகிழ்ச்சியளித்தன. அழகு நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தின் ஊடாகவே சித்தார்த்தன் இனிமேல் ஆத்மஞானம்

தேடி அலையப் போகிறான். இயற்கை படைத்த ஒவ்வொன்றும் மாயமென்றோ, திடுமென்று தோன்றியதோ, கற்பனை வயப் பட்டதோ அல்ல என்று அவனுக்குத் தோன்றியது. நதி நதியாகவும், பெரிய மரங்கள் நிறைந்த காடுகள் காடுகளாகவுமே சித்தார்த் தனுக்குத் தென்பட்டன.

சிந்தனை வளமுள்ள சித்தார்த்தனுக்கு இனிமேல் இவை தவிர்த்தலுக்கு உரியவை அல்ல. அவனுக்குள் குடிகொண்டிருக்கும் புனிதம், இயற்கையின் எழிலை யதார்த்தம் என்றே கண்டு கொண்டது. ஒவ்வொன்றின் பொருளும், அதன் உண்மை இயல்பும் எங்கும் ஒளித்து வைக்கப்படவில்லை. அவை, தமக்குள்ளேயே அவற்றை வெளிப்படுத்தவும் செய்கின்றன. இந்தக் கணத்தில் வாழ்க்கையின் இன்பங்களில் திளைத்து மகிழ சித்தார்த்தனின் உள்ளம் தீவிரமாக விரும்பியது.

இதுவரை எப்படிப்பட்ட மடத்தனத்துடன் செயல்பட்டிருக் கிறோம்? ஏதாவது ஒரு புத்தகத்தைப் படிக்க நேரும்போது, அதில் உள்ள எழுத்துகளோ, கருத்துகளோ வெறுப்புக்குரியனவாகத் தோன்றியதில்லை. அவற்றைப் பொய்யென்றோ, பொருளற்ற தென்றோ கருதியதில்லை. அவ்வாறு எண்ணுவது அறிவற்ற செய்கையும்கூட. ஒவ்வோர் எழுத்துக்கும், சின்னங்களுக்கும் அதற்கென்றே உயர்வும் மரியாதையும் உள்ளன. அவற்றைத் துச்சமாகக் கருதக்கூடாது. பிரபஞ்ச சாரத்தைக் குறித்துப் படிக்கும் போது, தனக்கு நேர்ந்த தவறாக மற்றவர்கள் சுட்டிக்காட்டிய ஒரு விஷயம் கவனத்தில் எழுந்தது. பதம் பதமாகப் பிரித்துப் படிக்கும்போது, அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு பொருள் இருப்பதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை என்பது. அது உண்மைதான். இந்தப் பொருட்படுத்தாத தன்மை காரணமாகப் புற உலக வாழ்க்கையே எனக்குப் பொருட்டானதாகவோ, பொருள் நிறைந்ததாகவோ தோன்றியதில்லை. என் புலன்களையும் அவசியம் இல்லாததாகவே கருதினேன்.

கடந்த கால சம்பவங்கள் எல்லாம், பூர்வ ஜென்மத்தின் நினைவுபோல் சித்தார்த்தனுக்குத் தெளிவற்றுத் தெரிந்தன. தான்



இப்போது ஓர் ஆத்மஞானி என்ற எண்ணம் மனத்துள் எழுந்தபோது, அவன் மொத்த உடலும் நடுங்கியது. நாக்கு குழறுவது போல் இருந்தது. தனக்கு முன்பாகக் கொடிய விஷமுள்ள பாம்பு ஒன்று படம் எடுத்து நிற்பதாகத் தெரிந்தது. இந்தத் தோற்றத்துக்கு என்ன காரணம்? புதுப்பிறவி கைவரப்பெற்ற சித்தார்த்தன் ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்க வேண்டும்! தன்னுள் ஒரு புதுக்கருத்து வடிவம் கொண்ட அந்த நிமிடத்திலேயே - ஸ்ரீ புத்தருடன் ஜேதவனத்தில் பேசி விடைபெற்ற அந்த நேரத்திலேயே - சித்தார்த்தன் இயல்பாகத் தனது சொந்த வீட்டுக்குத் திரும்பியிருக்க வேண்டும். அன்புக்குரிய தன் பெற்றோரைப் பிரிந்து, சர்வசங்க பரித்தியாகியாகும் தீர்மானத் துடன் காடுகளில் ஆத்மஞானம் தேடி வருடக்கணக்கில் அலைந்த சித்தார்த்தன், இப்படிச் செய்யவே முயன்றிருக்க வேண்டும். ஆனால், நடந்தது அதற்கு எதிர்மாறாக இருந்தது. தான் இதற்கு முன்பு யாராக இருந்தோமோ, அந்த மனிதனாகத் தற்போது இல்லை. என்னுடைய மறுபிறப்பு முழுமையானது. நான் சித்தார்த்தனோ, பிராமணனோ, புரோகிதனோ அல்ல. ஒரு புதிய பிறப்பும், உயிரும் தன்னுள் முகிழ்த்திருக்கிறது. தான் இப்போது புதுப் பிறவியெடுத்தவன். அப்படிப்பட்ட நான் திரும்பவும் வீட்டுக்குச் சென்று யாகங்கள் நடத்துவதையோ, தோத்திரங்களை உருப்போடுவதையோ செய்வதா? இனிமேல் என்னால் அவற்றைத் தொடர முடியாது. அது உறுதி!

சித்தார்த்தன் ஒருகணம் அசைவற்றுப் போனான். ஒருசில விநாடிகள் அவன்மீது பனிக்கட்டிகள் பெயர்ந்து விழுந்தது போல் தோன்றியது. உடல் முழுக்க மரத்துப் போனது போலிருந்தது. தனது தனிமையான நிலை குறித்த நினைவு எழுந்தபோது ஒரு சிறிய பறவையைப் போல் அவன் இதயம் மலர்ந்து துடித்தது. குடும்ப உறவுகளுடன் வருடக்கணக்கில் அலைந்து திரிந்த போதுகூட, அவனுக்கு இப்படியோர் அனுபவம் நேர்ந்ததில்லை!

இதுவரை தியானத்தில் ஆழ்ந்தபடி, நாட்கணக்கில் நாட்களைக் கடத்தியபோதும் தான் ஒரு பிராமணப் புரோகிதரின்

மகன் என்பதும். அதன் பொருட்டு மதம் தொடர்பான தினசரிக் கடமைகளைத் தான் தவிர்க்கக் கூடாது என்பதும் ஒரு விரதமாக - நிர்பந்தமாக இருந்தது. இப்போது அவன் வெறும் சித்தார்த்தன் மட்டுமே. கடந்த காலத்தின் உறவுகளோ, அது தொடர்பான சடங்கு சம்பிரதாயங்களோ இனி அவனைக் கட்டுப்படுத்தாது!

சித்தார்த்தன் ஒரு நீண்ட பெருமூச்செறிந்தான். 'தன்னைப் போல் தனிமையான மற்றோர் உயிர் இந்த பூமியில் இருக்க முடியாது. தான் ஒரு பாரம்பரியமுள்ள குடும்பத்தில் பிறந்த ஒருவனோ, கலைகளுடன் தொடர்புள்ள ஒரு கலைஞனோ, கோயிலில் அர்ச்சனை நடத்துகிற ஒரு பூசாரியோ அல்ல. பைராகிக் கூட்டத்தின் ஓர் உறுப்பினர்கூட அல்ல. அவன் வேறு எவருடைய தலைமையின் கீழோ, மற்றொருவரது கட்டுப்பாட்டிலோ இருக்க வேண்டிய நிர்பந்தம் இல்லை. சுருக்கமாகச் சொன்னால் அவனுக்கு இந்த சமூகத்துடன் எந்தவிதமான ஒரு தொடர்பும் இல்லை.

ஆள் அரவமற்ற காட்டுப் பகுதிகளில் ஏகாந்தமாக தவம் இருக்கும் முனிவர்களுக்கு உதவவும் மனிதர்கள் உள்ளனர். மற்ற முனிவர்களது உதவி இருக்கும். கோவிந்தன் ஸ்ரீ புத்தரின் சீடனாக மாறி ஒரு புத்த பிட்சுவாக மடத்தில் தங்கியிருக்கிறான். கோவிந்தனின் சகோதரர்களான எண்ணிக்கையற்ற இதர சீடர்கள் பேசும் மொழியைத்தான் கோவிந்தனும் பேசுகிறான். ஆனால், நானோ?' சித்தார்த்தன் தனக்குத்தானே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டான். எனக்கு எந்தவொரு மனிதனது உதவியும் கிடையாது; நான் மற்றவர்களது மொழியைப் பயன்படுத்தவு மில்லை.

நீல நிற ஆகாயத்தில் வெள்ளி நட்சத்திரம் போல் சுடர்விட்டுப் பிரகாசித்த சித்தார்த்தன், சற்று நேரம் தீவிரமான ஏமாற்றத்துக்கு அடிமைப்பட்டான். தன்னைச் சுற்றியுள்ள யதார்த்தமற்ற உலகம் ஒரு பனித்துளி மாதிரி உருகிக் கரைவதாக சித்தார்த்தன் உணர்ந்தான். இருப்பினும் இப்போது தன்னைப் பற்றி, தனக்குள் ஒரு பூரணமான சுயநினைவிருந்தது. இந்த ஆத்மார்த்த மான சுயநினைவுதான், அவனது மறுபிறப்பின் பிரசவ



வேதனையாக இருந்தது. பொறுமையற்றவனாக சித்தார்த்தன் விரைவாக நடக்கத் தொடங்கினான். தன்னுடைய வீட்டை நோக்கியோ, தந்தையிடமோ அல்ல! எல்லையற்றதும் சர்வ சாதாரணமானதுமான வாழ்க்கையின் இன்பங்களைத் தேடி முன்னேறுபவனாக நடந்தான்.

## 5. கமலா

ஒவ்வொரு நாளும் சித்தார்த்தன் ஒவ்வொரு புது விஷயத்தைக் கற்றான். வியப்புக்குரிய இந்தப் பிரபஞ்சம், அவனுக்கு நூதனமாகத் தெரிந்தது. இங்கு சூரியோதயங்கள் - அ தமனங்கள், நிலவிலிருந்து உதிரும் குளிர்ந்த நிலவொளி, அமைதியான வானமண்டலத்தில் மெதுவாக நகர்ந்து பயணப்படும் நட்சத்திரக் கூட்டங்கள், வெள்ளி மேகங்கள்... காட்டருவிகள், பலவிதக் குரல்களை எழுப்பியபடி பறந்து செல்லும் பறவைகள், மெல்லிய கொடித் தண்டுகளால் தழுவப்பட்ட மரங்கள், விசையுடன் பாய்ந்து செல்லும் மாபெரும் நதிகள். பனித்துளியை ஏற்றுக் கொண்டதால் குளிர்ந்த குறுஞ்செடிகள், நீலமும் மஞ்சளும் கலந்த மலைச் சிகரங்கள், மனத்தைக் கவரும் மணத்துடனும், நிறங்களுடனும் காற்றிலாடும் பூக்கள்... இப்படி எல்லாமே இருந்தன.

பறவைகள் பாடுவதும், தேனீ ரீங்கரிப்பதும், பருவ காலங்கள் மாறிமாறி வருவதும் சித்தார்த்தனுக்கு மகிழ்ச்சி தரக்கூடியவையாக மாறின. நெல் வயல்களின் ஊடாகத் தென்றல் ஓடி விளையாடி அலைகளை எழுப்பின. எத்தனையோ நூற்றாண்டுகளாக இவை யெல்லாம் எந்தவொரு மாற்றமும் இல்லாமல் நடைபெறுகின்றன. வடிவம் மற்றும் வண்ணங்களில் சிறு சிறு மாற்றங்கள் இருக்கலாம். ஆனால், சூரிய-சந்திரர்கள் தினமும் ஒளி சொரிகின்றனர். நதிகளின் நீரோட்டம் ஒருபோதும் தடைப்பட்டதில்லை. பூக்கள் மலர்வதும், தேனீக்களின் ரீங்காரமும் முடங்கியதில்லை. இவையெல்லாம் சித்தார்த்தனை முன்னர் ஒருபோதும் கவர்ந்ததே

இல்லை. பிரபஞ்ச மண்டலத்தின் இந்தச் செயல்கள் எல்லாம் நிலையற்ற தோற்றங்களாகவோ, மாயாஜால வித்தை போலவோ தோன்றியதால், அவற்றை வெறுக்கவும் நிந்திக்கவும் கூடச் செய்தான். அவை யதார்த்தங்களை பிரதிபலிக்கவில்லை. யதார்த்தம் கண்களுக்குத் தெரியாதது. நமது பார்வை சக்தியின் புலனால் உணர முடியாத நிலையில் வெகு நுட்பமானது.

விவரிக்க முடியாததும், எண்ணிக்கையற்றதுமான யதார்த்தத்தையே சித்தார்த்தனின் கண்கள் தேடியலைந்தன. ஆனால், இப்போது இகலோகத்தின் எல்லாப் பொருள்களும் காட்சிகளும் அவனை வசீகரிக்கின்றன. ஒரு சராசரி மனிதனைப் போலவே சித்தார்த்தனும் லௌகீக விஷயங்களில் ஆர்வமுள்ளவனாக விளங்கினான். அவன் இனிமேல் ஒருபோதும் கண்ணுக்குப் புலப்படாத யதார்த்தங்களைத் தேடி அலைய மாட்டான்! உலகத்தை அதன் உண்மையான இயல்புடன்தான் காணவேண்டும். எளிமையும் களங்கமுமற்ற உலகம். இந்தக் கோணத்தில் பார்க்கும்போது அதன் விளக்க முடியாத அழகைப் பருக முடிகிறது. சூரிய-சந்திரர்கள் மிகவும் அழகானவர்களாகவும் இதயத்தைக் கவர்பவர்களாகவும் உள்ளனர்.

சின்னச்சின்ன அருவிகளும், குறுமணல் திட்டுகளும், மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும் காட்டுப்பகுதிகளும், பாறைக் கூட்டங்களும், செம்மறி ஆடுகளும், வண்ணத்துப் பூச்சிகளும் மகிழ்ச்சியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இவற்றை ஒரு குழந்தையின் மனநிலையில் மிகவும் எளிமையாகக் காண முடிந்தால், ரசனைக்கு உரியவை. சந்தேகமான பார்வையுடன் அவற்றை அணுகுவது தவறு. சில பகுதிகளில் சூரிய வெப்பம் கடுமையாகத் தோன்றலாம். வேறு சில இடங்களில் குறிப்பாக மர நிழல்களில் சூரிய ஒளி குளிர்ந்த தன்மையுடன் தட்டுப்படுகிறது. சில இடங்களில் வாழைப்பழங்கள் விளைகின்றன. மற்றும் சில இடங்களில் பூசணியும், பயிறும், கிழங்குகளும் விளைகின்றன. அந்தந்த இடத்துக்கு ஏற்றாற்போல் அவை வளர்கின்றன. இரவு-பகல்களின் கால அளவு கூடுகிறது, குறைகிறது. விலை மதிப்பற்ற பொருள்களைத் தன்னகத்தே கொண்ட பாய்மரக் கப்பல்கள்



கடலில் விரைந்து பயணம் செய்வதைப் போல் ஒவ்வொரு நாழிகையும் ஓடி அகலுகின்றன.

சித்தார்த்தன் எல்லாக் காட்சிகளையும் பார்த்தான். கண்களுக்குக் குளுமையாகவே தெரிந்தன. ஒரு குரங்குக் கூட்டம் காட்டின் மரக்கிளைகளில் தாவிக் குதித்து விளையாடியது. தாய்க்குரங்குகள் குட்டிகளுக்குப் பாலூட்டின. ஆண் ஆடு ஒன்று, பெண்ணுடன் இணை சேருகிறது. அருகிலிருந்த காட்டுச் சோலையின் ஓடையில் அன்றைய உணவைத் தேடி மீன் ஒன்று நீந்தி மறைந்தது. அந்த ஓடையின் நீரோட்டம் சித்தார்த்தனை மகிழ்ச்சியடைய வைத்தது. ஓய்வில்லாமல் பாயும் நீர்வீழ்ச்சியும் ஆற்றோட்டமும் சக்தி மற்றும் எதிர்பார்ப்பின் ஓர் அடையாளமாக சித்தார்த்தனுக்குத் தோன்றியது. அந்த ஓட்டத்தின் இடையே சில இடங்களில் அது நீர்க்குமிழிகளை உருவாக்குகிறது. வினாடிக்கும் குறைவான நேரத்துள் அந்தக் குமிழி உடைபட்டுப் புதிய புதிய பாதைகளில் பாய்ந்தபடி நீரின் பயணம் தொடரவே செய்கிறது.

இயற்கையின் நியதியும், ஒழுங்கும் எப்போதும் இப்படிப் பட்டதுதான். எனினும் சித்தார்த்தன் அதை ஒருபோதும் நேரடியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை. அவனது கவனம் இதிலெல்லாம் பதியவில்லை என்பதுதான் சரி. இப்போதுதான் அவன் அதையெல்லாம் பார்த்து ரசிக்கிறான். நிழலும் வெளிச்சமும் பொருள் பொதிந்தவை. நம் கண்களாலேயே இவற்றைக் காண முடிகிறது. மனக்கண் மூலமாக சூரியன் மற்றும் சந்திரனின் நிலைகளை உணர்கிறோம். உயிருள்ளதும் உயிரற்றதுமான எல்லாப் பொருள்களிலும் அததற்குரிய கவிதைத் தன்மை இருக்கிறது. அவற்றைப் புரிந்துகொள்ளப் பொறுமையும் ஆவலும் மனிதனுக்குத் தேவை. அது இப்போது, சித்தார்த்தனுக்கு கைவரப் பெற்றுள்ளது.

சித்தார்த்தன் ஜேதவனத்தில் நேர்ந்த அனுபவங்களை நினைவு கூர்ந்தான். பௌத்தத் தத்துவங்களும், கோவிந்தனை விட்டுப் பிரிந்ததும், புத்த தேவருடன் நடத்திய பேச்சு போன்றவையும் உள்ளில் எழுந்தன. புத்தருடன் பேசும்போது தனக்கு அந்த

சமயத்தில் அஞ்ஞாதமாக இருந்த பலவற்றைக் குறித்தும் பேசியது நினைவில் எழுந்தது. புத்தரது ஞான ரகசியம் சாதாரணமான தாகவும், அதே நேரம் அது குறித்து விளக்குவது கடினமான தாகவும், அதே நேரம் அது குறித்து தனக்கு அதே நிலை ஒன்றாகவும் தோன்றியது. இப்போதோ தனக்கு அதே நிலை வாய்த்துள்ளது. மறுபிறப்பின் ஆரம்பம் என்பதே அன்றாட வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் தங்கியுள்ள ஆத்மானந் தத்தை அனுபவித்து, உணர்வதற்கானது. ஆத்மா என்பது தன் உடலுக்குள்ளே உள்ளதுதான் என்கிற உண்மை வெகு நாட்களுக்கு முன்பே சித்தார்த்தனுக்குப் புரிந்த விஷயம்தான். இருப்பினும் அவனால் ஆத்மாவைப் பிரித்தறிய முடியவில்லை. அதன் காரணம் ஆத்மாவை சிந்தனை வட்டத்துக்குள் குறுக்கி நிறுத்த அவன் முயன்றதுதான். உடம்பு ஆத்மா அல்ல. இந்திரியங்களோ, சிந்தனையோ, விவேகமோ, கலையோ ஆத்மாவைக் கண்டறிய உதவும் பொருள்களல்ல. இவையெல்லாம் வெளிப்புற அடை யாளங்களாக இருக்கலாம். இவை ஆத்மாவைக் கண்டறியவோ, அதிலிருந்து விடுபடவோ மனிதர்களுக்கு உதவுவதில்லை!

புலன்களை கடுமையாகக் கட்டுப்படுத்துவதால் மட்டுமே ஒருவருக்கு ஞானோதயம் ஏற்படுவதில்லை. ஆழமான, இடைவெளியற்ற சிந்தனையோட்டத்தால்கூட ஆத்மாவின் வடிவதை வெளிப்படுத்த முடியாது. உண்மையில் என்ன செய்ய வேண்டுமென்றால், ஒவ்வொரு மனிதனும் தனக்குள் ஒலிக்கும் உள்ளொலிகளை கவனிக்க வேண்டும். அந்த நாதம்தான் அவனது வழிகாட்டியாக அமையும். ஸ்ரீ புத்தர், ஆத்ம ஞானம் கைவரப்பெற்ற - சிலிர்ப்பை ஏற்படுத்திய - விவரிக்க முடியாத அந்தத் தருணத்தில் அவர் ஏன் போதி மரத்தடியில் தவத்தை அனுஷ்டித்தார்? இதயத்தின் ஆழப்பகுதியிலிருந்து அவருக்கு ஒரு செய்தி கிடைத்திருக்கும். அது 'போதி மரத்தடியில் சென்று அமர்க!' என்று உபதேசித்திருக்கலாம். ஹோமம் செய், விடியல் காலக் குளியலுக்குப் பிறகு மந்திர உச்சாரணம் செய், உபவாசம் இது... உறங்கு- என்பது போலெல்லாம் இருக்கவில்லை அந்த உபதேசம்! அவரது மனம் எதை உபதேசித்ததோ, அதை அவர் பின்பற்றினார். கண்களுக்குத் தெரிந்த - புலனால் உணரமுடிந்த வேறு எந்தக்



கட்டளை மற்றும் உபதேசத்துக்கும் செவிமடுக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், தேவையான நல்ல விஷயம் எதுவாக இருப்பினும் அதை அங்கீகரிக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

இரவு வேளையில் படகோட்டியின் குடிசையில் உறங்கும் போது சித்தார்த்தன் ஒரு கனவு கண்டான். கோவிந்தன் தனக்கு முன்பாக நிற்கிறான். அவன் முகத்தில் சாந்தம் தென்பட்டபோதிலும் துயரம் கலந்த குரலில் அவன் கேட்டான்: "நீ எதற்காக என்னை விட்டுப் பிரிந்தாய்?"

சித்தார்த்தனால் அந்தக் கேள்வியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சட்டென்று பாய்ந்து இரண்டு கைகளாலும் கோவிந்தனை அப்படியே வாரிக் கட்டித் தழுவினான். மார்புடன் அணைத்தவன் தொடர்ந்து அவனை இடைவிடாமல் முத்தம் இட்டான், சித்தார்த்தனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. சட்டென்று நிகழ்ந்த அந்த மாற்றத்தை ஓர் அதிசயம் என்றுதான் சொல்ல வேண்டும். கோவிந்தனின் வடிவம் கண் மூடித் திறப்பதற்குள் ஒரு பெண்ணாக மாறியது. கோவிந்தன் அணிந்திருந்த காவி உடைக்குள் இரண்டு மார்பிடங்கள் உயர்ந்து எழும்பின. சித்தார்த்தன் ஒரு குழந்தை மாதிரி அதை உறிஞ்சிக் குடித்தான். அந்த சுகத்திலேயே திளைத்தவனாக ஒருவித மயக்கத்தில் அப்படியே படுத்திருந்தான்.

அந்தப் பாலுக்குப் பல்வேறு விதமான சுவைகள் இருப்ப தாகத் தெரிந்தது. மனிதர்கள், சூரிய-சந்திரர்கள், வனாந்தரங்கள், வாசனைப் பூக்கள், பழ வகைகளின் அம்சங்கள் எல்லாம் அதில் கலந்திருப்பதாக, அதுவரை காட்டுவாசியாகத் திரிந்த சித்தார்த்த னுக்குத் தோன்றியது. ஒருவித போதை, மூளையை மரத்துப் போகச் செய்தது. சித்தார்த்தன் கண் விழித்தபோது, குடிசையை ஒட்டியபடி ஆறு விசையுடன் பாய்வது தெரிந்தது. விடியற்காலை சூரியனின் ஒளிக்கதிர்கள் அந்த நீர்த்துளிகளில் மோதிப் பிரதிபலித்ததால் ஒளியே ஒருவிதமான மங்கலுடன் தெரிந்தது. சற்றுத் தொலைவிலிருந்த காட்டிலிருந்து ஆந்தையொன்று தெளிவான குரலில் சத்தம் எழுப்பியது.

பொழுது நன்றாக விடிந்ததும், தான் படுத்திருந்த குடிசையின் உடைமையாளனான படகோட்டியிடம், தன்னை மறு கரையில் கொண்டு போய்விடுமாறு கேட்டுக் கொண்டான் சித்தார்த்தன். மூங்கிலாலான ஒரு தெப்பத்தில் படகோட்டி அவனை மறுகரைக்கு அழைத்துப் போனான். தெப்பம் புறப்பட்ட அந்த நொடியிலிருந்தே ஆற்று நீரின் விசை - நீரோட்டம் சட்டென்று வலுக்கூடியதாக அவர்களுக்குத் தோன்றியது. ஆறு சீறிப்பாய்ந்து கொண்டிருந்தது.

"ஆகா... எவ்வளவு அழகான நதி!" சித்தார்த்தன் படகோட்டியிடம் கூறினான்.

"உண்மைதான்! இது அழகான நதிதான். மற்ற எல்லாவற்றையும் விட இதை நான் அதிகமாக நேசிக்கிறேன். இதன் சலசலப்பு எனக்கு எத்தனையோ விஷயங்களைப் புரிய வைத்துள்ளது. இதன் அடிப்பரப்பில் பரவிக்கிடக்கும் ஞானத் திரவியங்கள் மனித வாழ்க்கைப் போராட்டத்தில் ஆறுதல் அளிப்பதும், அவர்களது சந்தேகங்களை அகற்றவும் உதவக்கூடியது!" படகோட்டி தனது கருத்தை வெளிப்படுத்தினான்.

சித்தார்த்தன் ஆற்றின் மறுகரையை அடைந்தான். படகோட்டியிடம் நன்றி தெரிவித்து விடைபெற்றபோது, அவனுக்குக் கூலியாகக் கொடுக்கத் தன்னிடம் எதுவும் இல்லையென்று வருத்தப்பட்டான்.

"கூலியோ, பரிசோ தருவதற்கு என்னிடம் எதுவுமில்லை. வீடோ, உறவோ எதுவுமற்ற ஒரு வனவாசி நான்!"

"அது எனக்கும் புரிகிறது தோழரே. நீங்கள் எனக்கு இப்போது எதையும் தரவேண்டாம். பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்கு ஏதாவது கிடைக்கும்போது, எனக்கு எதையாவது தருவீர்கள்."

"ஒகோ... உனக்கு அப்படித் தோன்றுகிறதா என்ன?" சித்தார்த்தன் விளையாட்டாகக் கேட்டான்.



"கண்டிப்பாக!" படகோட்டி பதிலளித்தான்: "அதையும் நான் இந்த நதியிலிருந்துதான் கற்றுக் கொண்டேன். எல்லாம் திரும்ப வரும். பைராகியான பிராமண இளைஞனே நீயும் ஒருநாள் திரும்பி வருவாய். இப்போது உன் அன்பு மட்டுமே எனக்குரிய கூலியாக இருக்கட்டும். நீ யாக கர்மங்கள் செய்யும்போது என்னையும் நினைத்துக்கொள். அது போதும்!"

சிரித்தபடியே இருவரும் விடைபெற்றுப் பிரிந்தனர். படகோட்டியின் அன்பும், ஆத்மார்த்தமான பேச்சும், போலித்தனமில்லாத நடவடிக்கையும் சித்தார்த்தனுக்கு மிகவும் பிடித்துவிட்டது. இவனும் கோவிந்தனைப் போலத்தான். வழியில் தட்டுப்படுகிற எல்லாருமே ஒருவிதத்தில் கோவிந்தனைப் போல்தான். எல்லாருமே என்னிடம் அன்பும், கருணையும் உள்ளவர்களாக இருக்கின்றனர். நன்றியுடன் நடந்து கொள்கின்றனர். உண்மையைச் சொன்னால்... அவர்கள்தான் அன்புக்கும், நன்றிக்கும் உரியவர்கள். இருப்பினும், அவர்களிடம் சிந்திக்கும் பழக்கம் குறைவாகவே உள்ளது - குழந்தைகளைப்போல்!

மதிய நேரத்தில் சித்தார்த்தன் ஒரு கிராமத்தின் வழியாக நடந்து போனான். குழந்தைகள் விளையாடியும் பர பரம் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொண்டும் இருந்தனர். ஓடி ஒளிந்தனர். சில குழந்தைகள் பிடிவாதத்துடன் சண்டையில் ஈடுபட்டனர். முன்பின் தெரியாத பைராகி ஒருவரைப் பார்த்தவுடன் வெட்கப்பட்டு ஓடி மறைந்தனர். அந்த கிராமத்தின் முக்கிய வீதி சென்று முடிவடையும் இடம் ஒரு காட்டருவியின் அருகில்தான். மேற்கொண்டு பாதை சிறுத்து அருவிக்கரையை ஒட்டியே சென்றது. அருவிக்கரையில் இளம் பெண் ஒருத்தி முழங்காலை மடக்கியபடி துணி துவைத்துக் கொண்டிருந்தாள். சாதாரணமாகப் பயணிகள் செய்வது போல் அவளைப் பார்த்துக் கையை உயர்த்தி ஆட்டினான். வணக்கமும், விடைபெறலும் இணைந்த ஒரு செயல் அது. கண்களில் ஆவேசம் தளும்பியபடியே அந்த இளம்பெண் தலையை உயர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் முகத்தில் மெலிதான புன்னகை ஒன்று விரிந்தது.

சித்தார்த்தன் அவளை ஆசீர்வதித்த பிறகு, பக்கத்திலிருக்கிற பட்டணத்துக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்று வழி கேட்டான். இருந்த இடத்திலிருந்து எழுந்து வந்தவள், சித்தார்த்தனை நெருங்கி அவன் முகத்தை ஊன்றி கவனித்தாள். அவள் உதடுகள் ஈரத்தால் பளபளத்தும், விழிகள் பாதி மூடியவாறும் இருந்தன. வேடிக்கையாகச் சற்று நேரம் பேசிய அவள் அவன் எதையாவது சாப்பிட்டானா என்று விசாரித்தாள். அவள் எவ்வளவோ தெரிந்துகொள்ள விரும்பினாள். காட்டில் வசிக்கும் பைராகிகள் இரவில் தனியாகவா உறங்குகின்றனர்? அவர்கள் பெண்ணுடன் உறவு கொள்ளலாமா?... இதுபோல் எத்தனையோ சந்தேகங்கள். அவள் அதற்குப் பின் செய்த செயல் சித்தார்த்தனை வியப்படைய வைத்தது. அவள் தன் இடது காலை உயர்த்தி, சித்தார்த்தனின் வலது காலின் மீது மிதித்தாள். அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண்கள், ஆண்களை உறவு கொள்ள அழைக்கும் ஒரு சமிக்ஞையைக் காட்டினாள். சித்தார்த்தனின் ரத்தம் சூடேறியது. முந்தைய நாள் இரவில் தான் கண்ட கனவு நினைவில் எழுந்தவுடன் சர்வ கட்டுப்பாடுகளையும் ஒரு கணத்தில் துறந்தான். தலையைக் குனிந்து அவள் மார்பிடங்களின் மையத்தில் ஆவலுடன் மாறி மாறி முத்தமிட்டான். பின்பு தலையை மெதுவாக உயர்த்தி அவளைப் பார்த்தபோது புன்னகைத்தபடியே அவள், அவனையே வெறித்தாள். அழகான நகர்ப்புறப் பெண்ணாக இருந்தாள். காமவயப்பட்ட அந்த இளம்பெண், அதற்குள்ளாக சித்தார்த்த னுக்கு அடிமையாகி விட்டாள் என்பதும் தெரிந்தது.

சித்தார்த்தனும் காமவயப்பட்டான். அவன் அதுவரை எந்தப் பெண்ணையும் தொட்டு அனுபவப்பட்டதில்லை. சித்தார்த்தன் அவளை இறுக அணைக்கத் துடித்தாலும் ஏனோ சற்று நேரம் தயங்கினான். அந்த விநாடியில்தான் அவனது உள்ளுணர்வு 'கூடாது' என்று எச்சரித்தது. சட்டென்று அந்தப் பெண்ணின் முகத்திலிருந்த மாந்திரீக சக்தி மறைந்தது. சாதாரணமான ஓர் இளம் பெண்ணின் இயல்புகள் மட்டும் வெளிப்பட்டன. சித்தார்த்தன் அவள் கன்னங்களை மெதுவாக வருடி ஆறுதல்படுத்திவிட்டு - ஏமாற்றமடைந்த அவளிடமிருந்து சட்டென்று விலகி நடக்கத் தொடங்கினான்.



அன்று மாலை நேரத்துக்கு முன்பாகவே சித்தார்த்தன் அருகிலிருந்த ஒரு பெரிய நகரத்தை அடைந்தான். அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. வெகு நாட்களாக நாடு மற்றும் வீட்டைத் துறந்து அலைந்து திரிந்த சித்தார்த்தன், ஜனங்களின் மத்தியில் நடமாட மிகவும் விரும்பினான். முந்தைய நாள் இரவு படுத்திருந்த படகோட்டியின் குடிசைதான், வெகு நாட்களுக்குப் பின்பு சித்தார்த்தன் படுத்துக்கொள்ள இடம் தந்த ஒரு கூரை.

நகர எல்லையின் உட்புறமாக வேலி கட்டி மறைக்கப்படாத அழகான ஒரு நந்தவனத்தில் பிரம்பால் நெய்த பெரிய பெரிய கூடைகளுடன் ஆண்களும் பெண்களுமாக ஒரு கூட்டமே நடந்து செல்வதை சித்தார்த்தன் கவனித்தான். அவர்களது மத்தியில் அழகாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கு ஒன்றில் பேரழகியான பெண் ஒருத்தி அமர்ந்திருந்தாள். நான்கு பேர் பூவேலைகள் நிறைந்த அந்தப் பல்லக்கைச் சுமந்து சென்றனர். பல்லக்கில் செல்பவள் அவளைச் சூழ்ந்து நடந்து வரும் கூட்டத்தின் தலைவி என்பது, அவர்களது நடவடிக்கைகளிலிருந்தே புரிந்தது. வண்ணங்கள் பல நிறைந்த பட்டுக்குடை அவள் தலையின் மேற்புறம் நிழல் கொடுத்தது. சித்தார்த்தன் சட்டென்று அப்படியே அசைவற்று நின்றான். அந்த ஊர்வலமே அவனுக்குப் புதுமையாக இருந்தது. வேலைக்காரர்களில் ஆண்களும் பெண்களும் ஏராளமாக இருந்தனர். பேரழகியான அந்தப் பெண்ணை சித்தார்த்தன் உற்றுப் பார்த்தான். பலவகைப்பட்ட பூக்கள் கலந்த சரத்தைச் சூடி, அவள் கொண்டை மேற்புறமாக முடியப்பட் டிருந்தது. அடர்த்தியான, கருமையான கூந்தலுக்குக் கீழே அழகு கொழிக்கும் முகம் தென்பட்டது. சன்னமான புருவங்களும், நீண்ட கண்களும் கோவைப்பழம் போன்ற சிவந்த உதடுகளும், துடிதுடிப்பான அவள் முகத்துக்கு மேலும் மெருகூட்டின.

பேடைமானின் விழிகள் போன்ற அந்தக் கண்கள் எப்படிப்பட்டவரையும் வசீகரிக்கத் தக்கவை. அதே நேரம் அவை

ஆழ்ந்த ஆராய்ச்சிப் பார்வையையும் மேற்கொள்ளக் கூடியவை என்பதையும் புலப்படுத்தின. வடிவொத்த அவள் உடலை பச்சையும் தங்க நிறமும் கலந்த ஒரு சேலை மறைத்திருந்தது. கைகளோ, மென்மையானதாகவும், தங்க வளையல்களால் அலங்கரிக்கப்பட்டும் விளங்கியது.

அவள் அழகில் சித்தார்த்தனது மனம் லயித்தது. அந்தப் பெண்ணைச் சுமந்து வந்தவர்கள் அவனை நெருங்கி வந்தபோது, சித்தார்த்தன் தலை குனிந்து அவளுக்கு வணக்கம் செய்தான். தலையை நிமிர்த்தியபோது ஒளிவாய்ந்த அவள் முகமும், அத்தரின் மணம் வாய்ந்த பூக்களும் எல்லாம் கலந்து உன்மத்தம் பிடிக்கச் செய்யும் ஒரு காட்சியையே அவன் எதிரிட வேண்டியிருந்தது. அந்தக் காட்சியை அவன் முற்றிலுமாக ரசித்தான் என்று சொல்லலாம். ஒரு விநாடி நேரம் அவனைப் பார்த்த அந்த அழகியும் தலையைச் சற்றுச் சாய்த்துப் புன்சிரிப்பு ஒன்றினால், அவனது வணக்கத்துக்கு பதில் வணக்கம் செய்தாள். அந்தக் கூட்டம் மெதுவாகப் பூந்தோட்டத்துக்குள் மறைந்தது.

சித்தார்த்தன் இந்தக் காட்சியை அதிர்ஷ்டத்தின் அடையாளம் என்றே கருதினான். தான் அந்த நகருக்குள் நுழைவது நல்லதற்காகவே என்று தோன்றியது. அந்தக் கூட்டம் சென்ற பாதையைத் தொடர்ந்து சென்று அவளை நெருங்க சித்தார்த்தன் விரும்பியபோதிலும், அவன் அப்படிச் செய்யவில்லை. அதற்குக் காரணம் கேலித்தொனியுடன் தன்னை கவனித்த வேலைக்காரர்களின் ஏளனப் பார்வைகள்தான்.

சித்தார்த்தன் நினைத்தான்: 'நான் இப்போதும் ஒரு பைராகிதான். பிக்ஷாந்தேகி. இனியும் இப்படி நடந்து கொள்ளக் கூடாது. நந்தவனத்துக்குள் இப்படிப்பட்ட வேடத்துடன் நுழைவதும் நல்லதல்ல.' பிறகு எதையோ நினைத்துக் கொண்டவனாகத் தனக்குத்தானே சிரித்தான்.

சற்று நேரத்துக்குப் பிறகு அந்த வழியாக வந்த சில பயணிகளிடம் கேட்டு அந்த நந்தவனத்தைப் பற்றியும், அதன் எஜமானியான பெண்மணி குறித்தும் சித்தார்த்தன் ஏராளமான



விவரங்களைத் தெரிந்து கொண்டான். அது கமலா என்கிற புகழ்பெற்ற தேவதாசியின் நந்தவனம். அவள் பட்டணத்துக்குச் சென்று திரும்பி வரும்போதுதான், சித்தார்த்தன் அவளை சந்தித்தான். இந்த நந்தவனத்தைத் தவிர பட்டணத்துக்குள்ளேயும் ஒரு பெரிய மாளிகை அவளுக்கு இருக்கிறது.

சித்தார்த்தன் உடனடியாக நகரத்துக்குத் திரும்பினான். அவனுக்கு ஒரேயொரு லட்சியம்தான் இருந்தது. அதை நிறைவேற்றிக் கொள்ள முயன்றதுதான் அவனது அடுத்த கட்ட நடவடிக்கையாக இருந்தது. சற்று நேரம் பல தெருக்களின் வழியாகச் சுற்றியலைந்தான். பிறகு ஒரு கோயில் குளத்தை அடைந்து அதன் கரையில் படுத்துச் சற்று நேரம் ஓய்வெடுத்தான். அதற்குள் ஒரு நாவிதன் அவனுக்கு அறிமுகமானான். ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து ஒருவனது தாடியை மழித்துக் கொண்டிருந்தான். சித்தார்த்தனின் மேன்மை தங்கிய முகமும், இனிமையான பேச்சும், நாவிதனை மிகவும் கவர்ந்தன. சமீபத்திலிருந்த விஷ்ணு கோயிலில் அவர்கள் இருவரும் மீண்டும் சந்தித்தனர். விஷ்ணு மற்றும் லக்ஷ்மி தேவியின் கதையை சித்தார்த்தன் நாவிதனிடம் விவரித்தான். இரவு நேரத்தில் நதியோரத்துப் படகுத் துறைக்கு வந்து, அங்கிருந்த படகு ஒன்றில் படுத்தான். ஏற்கெனவே நண்பனாகி விட்ட நாவிதன் சித்தார்த்தனின் முகத்தை மழித்தான். முடிவெட்டி விட்டான். எண்ணெய் தேய்த்து விட்டான். குளியலை முடித்துக்கொண்டு சித்தார்த்தன் நகர வீதிக்கு வந்தபோது, தான் ஒரு புதிய மனிதனாகி விட்டதாக அவனுக்குத் தோன்றியது.

மதியத்துக்கு மேல் கமலா நந்தவனத்துக்கு வரும் வழியை எதிர்பார்த்து அதன் முகப்பில் நின்றிருந்தான். அவள் வந்தாள். சித்தார்த்தன் தலை தாழ்த்தி தனது வணக்கத்தைத் தெரியப்படுத்தினான். அவள் பதில் வணக்கம் செய்தாள். அவள் உட்புறம் சென்ற பிறகு அவளுடைய வேலைக்காரன் ஒருவனை அழைத்து, பிராமண இளைஞன் ஒருவன் உன் எஜமானியிடம் பேச விரும்புவதாகத் தெரிவிக்குமாறு கூறினான். சற்று நேரத்துக்குள்

திரும்பி வந்த வேலையாள் சித்தார்த்தனை அவளிடம் அழைத்துப் போனான். கமலா, சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த கூடாரத்தினுள் மெத்தை மீது படுத்திருந்தாள்.

"நீங்கள் நேற்று நந்தவனத்துக்கு வெளியே என்னைப் பார்த்து வணக்கம் சொன்னீர்கள், இல்லையா?" - கமலா.

"ஆமாம், நான் நேற்றுதான் உங்களைப் பார்த்தேன்."

"நேற்று உங்கள் முகத்தில் தாடியும் மீசையும் இருந்ததே?"

"நீங்கள் எல்லாவற்றையும் கவனித்திருக்கிறீர்கள். பெற்றோரைத் துறந்து, நாடு மற்றும் வீட்டைத் துறந்து காடுகளில் அலைந்து திரிந்த பைராகி ஒருவனை நேற்று நீங்கள் பார்த்தீர்கள். நான் ஒரு தவமுனிவனாக மூன்று வருடங்கள் காடுகளிலேயே அலைந்தேன். ஆனால், இப்போது அதைத் துறந்து விட்டேன். இந்த நகருக்குள் நுழைவதற்கு முன் முதன்முதலாக நான் பார்த்தது உன்னைத்தான். அன்புள்ள கமலாவே, நான் இப்போது இங்கு வந்திருப்பது, உன்னை எனக்கு மிகவும் பிடித்து விட்டது என்பதைத் தெரிவிப்பதற்காகவே. நான் உன்னை நேசிக்கிறேன். இதேபோல் இனிமேல் நான் மற்றொரு பெண்ணை நேசிப்பது கடினம் என்று தோன்றுகிறது!"

கமலா சிரித்தாள். மயிலிறகால் ஆன விசிறியைத் தனக்குத் தானே மெதுவாக வீசியபடி அவள் கேட்டாள்: "இவ்வளவுதான் நீங்கள் என்னிடம் சொல்ல விரும்பியது இல்லையா?"

"ஆமாம்... இதைச் சொல்லவும் உன்னிடமான எனது நன்றியைத் தெரிவிக்கவுமே நான் வந்தேன். நான் உனக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், உனது அழகு அபூர்வமானது. நீயும் என்னை விரும்பினால், என் தோழியாகவும் வழிகாட்டியாகவும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். உனக்குப் பிடித்தமான, ஈடுபாடுள்ள கலைகள் எதுவும் எனக்குத் தெரியாது. உன்னிடமிருந்து நான் அவற்றைக் கற்றுக்கொள்ள விரும்பு கிறேன்."



இதைக் கேட்ட கமலா உரத்த குரலில் சிரித்தாள்.

"இப்படிப்பட்ட ஓர் அனுபவம் எனக்குப் புதிது. பிராமண இளைஞர்கள் உட்படப் பல இளைஞர்களும் விலை உயர்ந்த ஆடைகள் மற்றும் செருப்பு அணிந்து, ஏராளமான பணத்துடன் என்னிடம் வருகின்றனர். அவர்களது தலைமுடியில் தைலம் மணக்கும். அழகர்கள். ஆனால், கோவணம் உடுத்து, தீட்சை எடுத்த பைராகி ஒருவர் என்னை வந்து சந்திப்பது இதுதான் முதல் தடவை!"

"உன்னிடமிருந்து இதற்குள்ளாகவே நான் சிலவற்றைக் கற்றுக் கொண்டேன். நேற்றும் சிலதைக் கற்றுக் கொண்டேன். இங்கே பார்... என்னுடைய தீட்சையைத் துறந்து நான் முகம் மழித்திருக்கிறேன். தலையில் எண்ணெய் தேய்த்து, படிய வாரியிருக்கிறேன். அம்மணீ, மேற்கொண்டு பெரியதாக எதுவும் தேவையில்லை. உடை, பணம், செருப்பு போன்றவைதான் பிரச்சினை எனில், நான் அதைவிடக் கடினமான வேறு எத்தனையோ காரியங்களைச் சாதித்திருக்கிறேன். நீ கூறியதெல்லாம் என்னைப் பொறுத்தவரை மிகவும் சாதாரணமானவை.

"என்னுடைய ஆசையை நீ நிறைவேற்ற வேண்டும். அது வேறொன்றும் அல்ல. உனது நண்பனாக இருக்கவும், உன்னிட மிருந்து காமரகசியங்களைக் கற்றுக்கொள்ளவும் விரும்புகிறேன். கமலா, எல்லா வகையிலும் நான் உனக்குப் பொருத்தமான மாணவனாக இருப்பேன் என்று உறுதி அளிக்கிறேன். உன்னால் கற்பிக்க முடியாத, எவ்வளவோ கடினமான விஷயங்களை நானாகவே புரிந்தும் கற்றுக் கொண்டும் இருக்கிறேன்."

கமலா சிரித்தபடியே பேசினாள்: "இல்லை, இப்போதும் நீங்கள் நான் வரவேற்கும் நிலையில் இல்லை. உங்களுக்கு நல்ல உடைகளும், செருப்பும், பணமும் தாராளமாக வேண்டும். இந்தக் கமலாவுக்கு நீங்கள் விலையுயர்ந்த பரிசுப் பொருள்களைக் கொண்டு வரவேண்டும். காட்டுவாசியாக இருந்த பைராகியே உங்களுக்கு நான் சொல்வது விளங்கியதா?"

"நன்றாகவே புரிகிறது" சித்தார்த்தன் சற்று அடங்கிய குரலில் கூறினான்: "உனது எழிலான முகத்திலிருந்து இந்த உத்தரவுகள் வெளியாகின்றன. உன் உதடுகள் அத்திப்பழம் போல் சிவப் பானவை. கவர்ச்சியானவை. என் உதடுகளும் அழகானவை யல்லவா? அவை பொருந்தக்கூடியதும் அல்லவா? அதெல்லாம் போகட்டும் கமலா. உனக்கு என்னைப் பார்த்தால் பயமாக இல்லையா? காட்டில் வாழ்ந்த அறிமுகமற்ற ஒருவன் உன்னிடம் காதலென்று சொல்லி வருவது ஆபத்தென்று தோன்ற வில்லையா?"

"மடையனான ஒரு வனவாசிக்கு நான் எதற்காக பயப்பட வேண்டும்? குள்ள நரிகளும், ஆந்தைகளும் நிறைந்த காட்டி லிருந்து வரும் உங்களுக்குப் பெண்களைப் பற்றி என்ன தெரியும்?"

"பைராகிகள் எதற்கும் பயப்படாதவர்கள். மிகவும் சக்தி வாய்ந்தவர்கள். அவர்களால் உன்னை அபாயத்துக்குள்ளாகவோ, உனது பணத்தைத் திருடவோ கூட முடியும்!"

"இல்லை.. பைராகி! எனக்கு அந்த மாதிரியான பயமெல்லாம் கிடையாது. ஒரு பிராமணனோ, பைராகியோ அவரது மேதமையையும், சிந்தனா சக்தியையும் யாராவது திருடிக்கொண்டு போவார்கள் என்று பயப்படுவது உண்டா? இல்லை. ஏனெனில், அது அவர்களுக்கே உரித்தானது. அதை யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்களோ, எந்த அளவில் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த அளவு மட்டுமே பிறருக்குக் கிடைக்கும். என்னுடையதும் ஏறத்தாழ அது போலத்தான்.

"கமலாவின் உதடுகள் கவர்ச்சியாகவும் இன்பத்தை வழங்குவதாகவும் இருக்கலாம். அவை அத்திப்பழம் போல் சிவப்பாகவும் இருக்கலாம். அழகாகவும்கூட இருக்கலாம். ஆனால், அவளது விருப்பத்துக்கு மாறாக அதைச் சுவைத்துப் பாருங்கள் பார்க்கலாம். அவளுக்கு இன்பத்தை வழங்கத்



தெரிந்தாலும், அவை ஒரு துளி இன்பத்தைக் கூட வழங்காது. காமரகசியங்களும் அப்படிப்பட்டவைதான். நீங்கள் கெட்டிக் காரரான ஒரு மாணவர்தான். அதனால் இதையும் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். ஒருவர் அன்பை யாசித்தோ, விலைக்கு வாங்கியோ அடையலாம். அதை ஒரு பரிசாகக்கூடப் பெறலாம். ஆனால், அதை ஒருபோதும் திருட முடியாது. நீங்கள் சிலவற்றைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களைப் போன்றவர் களுக்குத் தவறான கணிப்புகள் ஏற்படுவது வருத்தத்துக் குரியதுதான்!"

சித்தார்த்தன் தலை குனிந்தபடியே அவள் சொல்வது சரிதான் என்று ஒப்புக்கொண்டான். "கமலா, நீ சொன்னது சரிதான். அது வருத்தத்துக்குரிய ஒன்றும் கூட. உன் உதடுகளிலிருந்து ஒரு துளி அமிர்தம் கூட நஷ்டமடையக்கூடாது. எனக்கும் அப்படித்தான். எனவே சித்தார்த்தன் நீ சொன்னது போல் உடைகள், செருப்பு மற்றும் பணத்துடன் திரும்பி வருவான். அதெல்லாம் இருக்கட்டும் கமலா, நீ எனக்கு ஓர் உபதேசம் தரமுடியுமா?"

"உபதேசமா, ஏன் தரக்கூடாது? யார்தான் மூடனும் அஞ்ஞானியுமான ஒரு வனவாசிக்கு உபதேசம் கொடுக்க மாட்டார்கள்?"

"அன்புக்குரிய கமலாவே மேற்குறிப்பிட்ட மூன்று பொருள் களையும் உடனே பெற நான் என்ன செய்ய வேண்டும்?"

"பிரியமுள்ள நண்பரே, ஏராளமான மனிதர்கள் அதைத் தெரிந்து கொள்ளத்தான் ஆசைப்படுகிறார்கள். உங்களது அறிவைப் பயன்படுத்தித்தான் உடை, செருப்பு மற்றும் பணத்தை சம்பாதிக்க வேண்டும். தரித்திரனான ஒரு மனிதனால் மற்ற வழிகளில் இவற்றை சம்பாதிக்க முடியாது!"

"எனக்கு யோசிக்கவும், காத்திருக்கவும் உபவாசம் இருக்கவும் தெரியும்."

"வேறெதுவும் தெரியாதா?"

"தெரியாது. ஆனால், கவிதை எழுதத் தெரியும். என் கவிதைக்கு நீங்கள் ஒரு முத்தம் தருவீர்களா?"

"உங்களது கவிதை எனக்குப் பிடித்திருந்தால்; நான் ஒரு முத்தம் தருகிறேன்."

ஒரு நிமிட நேரம் யோசனையிலாழ்ந்த சித்தார்த்தன் பாடத் தொடங்கினான்.

**"தங்குமிடம் நோக்கிப் போகின்றாள்**
**நீலவானத்தின் வானவில்லைப் போல்**
**காதல் கொண்டவன் கமலாவின் மீது**
**கண்கள் பதித்து மயங்கி நிற்க**
**தாமரை மலர்வது போலவள் நெருங்கியதும்**
**போதை முதிர்ந்தது போல் தலைதாழ்த்தியவன்**
**சிரித்தவளாக நெருங்குபவளின் கரம்**
**பற்றுவதன் பின்தான் கடவுளின் ஹோமம் கூட!"**

கவிதையைக் கேட்ட கமலா கைத்தட்டி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தாள். அவளது தங்க வளையல்கள் மணி நாதம் எழுப்பின.

"உங்கள் கவிதை உண்மையிலேயே நன்றாக உள்ளது. இதற்காக ஒரு முத்தம் கொடுத்தால் அது நஷ்டமில்லை!" கமலா கூறியபடியே கண்களால் சித்தார்த்தனை அருகே வருமாறு அழைத்தாள். நெருங்கிய அவன் உதட்டுடன், அத்திப்பழம் போன்ற தன் உதட்டைப் பதித்து அழுத்தி ஆழமாக முத்தமிட்டாள். சித்தார்த்தனுக்கு அப்போது எழுந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. எந்த அளவுக்குக் கெட்டிக்காரத்தனமும், திறமையும் நிறைந்தவள் அவள் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. அவள் அவனை முற்றிலுமாக வசீகரித்துக் கீழடக்கினாள். முதல் முத்தத்தைத் தொடர்ந்து அவள் முத்தமழை பொழிந்தாள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தது. சித்தார்த்தன் மூச்சை அடக்கியபடி முத்தங்களை ரசித்தவாறு அசைவற்று நின்று போனான். அந்த விநாடியில் அவன் ஒரு குழந்தை போலாகி விட்டிருந்தான். தன் முன்பாகத் திரண்டு வந்த மேதமை மற்றும் அன்பின் தீவிரத்தில் சித்தார்த்தன் தன்னையே மறந்து விட்டான்.



"உங்களது கவிதை மிகவும் நன்றாக இருக்கிறது!" கமலா சொன்னாள்: "என்னிடம் பணம் நிறைய இருந்தால், உங்களது கவிதைக்கேற்ற நல்ல பரிசளித்திருப்பேன். இருப்பினும் கவிதை எழுதி அதிகம் பணம் சம்பாதிப்பது கடினம் என்று தோன்றுகிறது. கமலாவின் நண்பனாவதற்கு அதைவிட அதிகப் பணம் தேவை!"

"என்... என் கமலாவே உனது முத்தம் போதையளிக்கக் கூடியதுதான்!" சித்தார்த்தன் துண்டு துண்டாகப் பேசினான்.

"அது உண்மைதான். அதனால்தான் என்னிடம் ஏராளமான பணம், ஆடைகள் மற்றும் செருப்புகள் உள்ளன. ஆபரணங்களுக்கும் குறைவில்லை. ஆனால், நீங்கள் என்ன செய்ய முடியும்? சிந்தித்தல், உபவாசம், கவிதை... இவை தவிர உங்களுக்கு வேறென்ன செய்ய முடியும்?"

"எனக்கு தியான தோத்திரங்கள் தெரியும். இருப்பினும் இனிமேல் பாடப்போவதில்லை. நான் வேத உபநிஷத்துகளைப் படித்திருக்கிறேன்."

"இருங்கள், உங்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியுமில்லையா?"

"நன்றாகவே! என்னைப் போன்ற பலருக்கு எழுதவும், படிக்கவும் தெரியும்."

"நிறையப் பேருக்கு என்று சொல்லாதீர்கள். எனக்கு அதெல்லாம் தெரியாது. உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருப்பதும் நல்லதுதான். அது பயன்படும். சில மந்திர உச்சாரணங்களும் கூட தேவைப்படலாம்."

இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு வேலையாள் அங்கு வந்து, கமலாவின் காதில் கிசுகிசுத்தாள்.

"நான் ஒருவரை உடனடியாக சந்திக்க வேண்டி உள்ளது.." கமலா சொன்னாள்: "சித்தார்த்தா நீங்கள் இங்கிருந்து உடனே புறப்பட வேண்டும். பிறர் கண்ணுக்குத் தெரியாமல் அதைச்

செய்வது நல்லது. நாம் மீண்டும் நாளைக் காலை இதே இடத்தில் சந்திக்கலாம்."

கமலா சொன்னதையொட்டி அவள் வேலையாள் சித்தார்த்தனுக்கு வெளுத்த அங்கவ திரம் ஒன்றை வழங்கினான். தொடர்ந்து என்ன நடக்கிறது என்பது விளங்காமல் மலைத்துப் போய் நின்றிருந்த சித்தார்த்தனை அழைத்துக் கொண்டு, ஒரு குறுகிய பாதை வழியாக அந்த நந்தவனத்தின் பின்புறத்துக்கு வந்தான் வேலையாள். எவர் கண்ணுக்கும் தெரியாமல் அங்கிருந்து கிளம்புமாறு கூறி எச்சரித்துவிட்டு வேலைக்காரன் மறைந்தான்.

காட்டுவாசியான சித்தார்த்தனுக்கு நந்தவனத்தின் பின்புறமிருந்த வேலியைத் தாண்டி, சாலையை அடைவதில் எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. கமலாவுடன் ஏற்பட்ட சந்திப்பில் திருப்தியடைந்த சித்தார்த்தன் மீண்டும் நகரத்துக்குத் திரும்பி வந்தான். பயணிகள் இரவு நேரத்தில் உறங்கும் சத்திரம் ஒன்றின் முன் நின்றவாறு அமைதியுடன் பிக்ஷை கேட்டான். கிடைத்த பணியாரத்துடன் ஒதுக்குப்புறமாக ஒதுங்கினான். 'நாளையிலிருந்து ஒருவேளை பிக்ஷை எடுக்க வேண்டி வராமல் போகலாம்' என்று தோன்றியது.

சட்டென்று சித்தார்த்தனின் உள்ளத்திலிருந்து ஒரு குரல் தன்மானத்துடன் ஒலித்தது: 'என்ன நான் பிக்ஷை எடுப்பதா? ஒருபோதுமில்லை! நான் இப்போது பைராகியல்லவே?' என்று நினைத்தவனாகக் கையிலிருந்த பணியாரத்தை வாலாட்டியபடி அருகிலிருந்த நாயிடம் வீசியெறிந்தான். அன்று முழுவதும் எதுவும் சாப்பிடாமல் கழித்தான்.

'இப்போது வாழ்க்கை எவ்வளவு எளிமையாக இருக்கிறது?' சித்தார்த்தன் நினைத்துப் பார்த்தான் எந்தவிதமான பிரச்சினைகளும் கிடையாது. பைராகியாக இருந்தபோது வாழ்க்கை கடினமானதாகவும், சகிக்க முடியாததாகவும் இருந்தது. சிதைவுபட்ட ஆசைகளும், வலிகளும் சோதனைகளும் அவனை விடாமல் அலைக்கழித்தன. இப்போதோ எல்லாம் சுலபமாகி விட்டன.



கமலாவை அவன் வெற்றி கொண்டதும், அவளிடமிருந்து இனிமையான சூடான முத்தங்கள் பெற்றதும் எத்தனை விரைவாக நடந்துவிட்டன! மேற்கொண்டு தேவைப்படுவது பணமும் உடைகளும், ஒரு ஜோடி நல்ல செருப்பும்தான். அதெல்லாம் உடனே சம்பாதிக்கக் கூடியவை. வீணாக அதை நினைத்து உறக்கத்தைத் தவிர்க்க வேண்டியதில்லை!

அடுத்த நாள் கமலாவை சந்தித்தது நகரத்திலிருந்த அவளது வீட்டில்தான். படிகளைத் தாண்டி வரும் சித்தார்த்தனை கவனித்தபடியே கமலா சொன்னாள்: "எல்லாமே நினைத்தபடியே நடக்கின்றன."

அவளுக்கு வணக்கம் சொன்ன சித்தார்த்தன் ஒரு சிறிய திண்டின் மீது அமர்ந்தான். கமலா தொடர்ந்து பேசினாள்: "காமசாமி உங்களைப் பார்க்க விரும்புகிறார். அவர், இந்த நகரத்தின் மிகவும் பணக்கார வியாபாரி. நீங்கள் அவரைத் திருப்தியடைய வைத்தால், அவரிடமே ஒரு வேலை கிடைக்கும். பைராகியே... நீங்கள் உங்களது கெட்டிக்காரத்தனத்தைக் காட்ட வேண்டும். என் நண்பர்கள் சிலர் மூலமாக உங்களைப் பற்றி நான் காமசாமிக்கு ஏற்கெனவே தகவல் தெரிவித்திருக்கிறேன். அவர் மிகவும் செல்வாக்குள்ள ஒருவர். நீங்கள் அவரிடம் அன்பாக நடந்து கொள்ளுங்கள். ஆனால், ஒரு வேலைக்காரனாக மாறிவிடாதீர்கள். உங்களை அவருக்குச் சமமானவராகக் காண்பதில்தான் நான் மகிழ்ச்சி அடைகிறேன். காமசாமிக்கு வயதாகிவிட்டது. சற்றுச் சோம்பலும் சேர்ந்திருக்கிறது. உங்கள் மீது அவருக்கு அன்பு ஏற்பட்டால், அதுவே ஒரு பெரிய விஷயம் தான்."

சித்தார்த்தன், கமலாவின் உதவிக்கு நன்றி தெரிவித்தான். அவன் சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகின்றன என்பதை அறிந்த கமலா பலவகைப்பட்ட பழங்களுடன் பால் மற்றும் பணியாரங்களை எடுத்து வருமாறு வேலைக்காரனிடம் கூறினாள். எல்லாம் வந்து சேர்ந்தன. அவற்றைத் திருப்தியாகச் சாப்பிட்டுப் பசியைத் தணித்தான். கடைசியாக சித்தார்த்தன் விடைபெற்றுப் புறப்படும்

போது கமலா கூறினாள்: "சித்தார்த்தா, நீங்கள் அதிர்ஷ்டம் செய்தவர். ஒவ்வொரு கதவும் உங்களுக்காக மிகவும் விரைவில் திறக்கின்றன. அதெப்படி சாத்தியமாகிறது? உங்களிடம் ஏதாவது வசீகர சக்தி உள்ளதா, என்ன?"

"நான் நேற்றே உன்னிடம் சொல்லவில்லையா? எனக்குக் காத்திருக்கவும், சிந்திக்கவும், உபவாசம் இருக்கவும் தெரியும். அவை பயனுள்ளவை என்பது உனக்குத் தெரியவில்லை. நாளடைவில் இவையெல்லாம் மனிதர்களுக்கு உதவக் கூடியவை தான் என்பதை அறிந்து கொள்வாய். மடையனான பைராகிகளுக்கு - குள்ளநரிகள் மற்றும் ஆந்தைகளின் கூட்டத்திலிருந்து வருகிறவர்களுக்கு இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் பலவும் தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் ஒரு வனவாசி. ஜடைமுடி மற்றும் நீண்ட தாடி மீசையுடன் அலைந்து திரிந்த ஒரு பிக்ஷாம்தேகி. நேற்று பேரழகியான கமலாவை முத்தமிட்டிருக் கிறேன். விரைவிலேயே நான் ஒரு வியாபாரப் பிரமுகராகி ஏராளமான பணம் சம்பாதிப்பேன். நீ அவசியம் என்று கருதும் செருப்பு, ஆடைகள் மற்றும் பல பொருள்களும் என்னை வந்து சேரும்!" சித்தார்த்தன் கூறினான்.

"உண்மையாக இருக்கலாம். ஆனால், என்னுடைய உதவி யில்லா விட்டால் உங்களால் இதெல்லாம் முடிந்திருக்குமா?" கமலா கேட்டாள்.

"பிரியத்துக்குரிய கமலா, உன்னுடைய இந்த நந்தவனத் துக்குள் என் முதல் காலடியைப் பதித்தபோது, எனது முன்னேற்றத்தின் முதல் படியை மிதித்து விட்டேன். என்னுடைய முக்கிய உத்தேசம் எதுவாக இருந்தது தெரியுமா? பேரழகியான கமலாவிடமிருந்து காமரகசியங்களைக் கற்க வேண்டும் என்பது. அவளுடன் உடலின்பத்தை உணரவேண்டும் என்பது. அந்தத் தீர்மானத்துக்கு வந்தவுடன் அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதும் எனக்குத் தெரியும். முதல் சந்திப்பின்போது நீ பார்த்த பார்வையிலேயே, நீ எனக்கு உதவுவாய் என்பதும் எனக்குத் தெளிவாகத் தெரிந்தது."



"நான் உதவி செய்ய விரும்பியிருக்காவிட்டால்...?"

"எனக்கு உதவ நீ விரும்பினாய். கேள் கமலா... ஒருவன் நீர்நிலையில் ஒரு கல்லை எடுத்து எறிந்தால், அது நீருக்கு அடியில் அமிழ்கிறது. சித்தார்த்தனின் விஷயமும் அப்படித்தான். ஒரு லட்சியம் உள்ளபோது சித்தார்த்தன் எதுவும் செய்வதில்லை. அவன் சிந்திப்பான், காத்திருப்பான், உபவாசம் இருப்பான். லௌகீக காரியங்களுக்கான அவனது பயணமும் நீர்நிலைக் கல் போன்றதுதான். சித்தார்த்தன் சம்பவங்களால் சூழப்படும்போது அதனுடன் சுழல்கிறான். அதன் போக்கைக் கட்டுப்படுத்த அவன் முயல்வதே இல்லை. அவனுக்குள் ஒரு லட்சியம் உள்ளபோது வேறெதுவும் அவன் மனத்தில் கடந்து வருவதும் இல்லை. இந்தத் தத்துவத்தை நான் பைராகிகளிடமிருந்து கற்றுக் கொண்டேன். இதையே அஞ்ஞானமானவர்கள் மந்திர சக்தி என்றும், மனோவசியம் என்றும் சொல்கிறார்கள். மற்றும் சிலரோ இதை பிசாசுகளின் சக்தி என்கின்றனர். இதில் பிசாசோ, மந்திரமோ எதுவுமில்லை. எவரும் கடுமையான பயிற்சியின் மூலம் இந்த சக்தியைப் பெற முடியும். ஒவ்வொரு மனிதனும் சிந்திக்கவும், காத்திருக்கவும், உபவாசமிருக்கவும் தெரிந்து கொண்டால் அவன் அவனது லட்சியத்தை அடைவான்."

கமலா, அவனது பேச்சை கவனத்துடன் கேட்டாள். அவனது குரலும், தொனியும் முகத்தின் ஒளியும் அவளுக்கு மிகவும் பிடித்துப் போனது.

"நண்பரே இதெல்லாம் ஒருவேளை நீங்கள் சொல்வது போலவே இருக்கலாம்..." கமலா மிருதுவான குரலில் பேசினாள்: "அல்லது சித்தார்த்தன் அழகான ஓர் இளைஞனாக மாறியதாலும் இருக்கலாம். அவரது பார்வை பெண்களுக்குள் உணர்வைக் கிளர்ந்தெழச் செய்வதாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் நீங்கள் அதிர்ஷ்டக்காரர்தான்!"

சித்தார்த்தன் அவள் இரண்டு கைகளையும் பிடித்து உயர்த்தி அதில் முத்தமிட்டவாறு விடைபெற்றான்: "என் வழிகாட்டியே, நீ

சொன்னதெல்லாம் அப்படியே இருக்கட்டும். எனது பார்வை உனக்கு எப்போதும் விருப்பமானதாக இருக்கட்டும். உன் மூலமாக எனக்கு எப்போதும் அதிர்ஷ்டம் வாய்க்கட்டும்!"

## 6. மக்கள் மத்தியில்...

மறுநாள் சித்தார்த்தன், வணிகப் பிரமுகரான காமசாமியை சந்திப்பதற்காக அவரது வீட்டை அடைந்தான். காமசாமியின் காரியதரிசி அவனை விலையுயர்ந்த கம்பளங்கள் மற்றும் அலங்காரப் பொருள்கள் நிறைந்த அறைகளின் வழியாக அழைத்துச் சென்று வரவேற்பு அறையில் உட்கார வைத்தான்.

சற்று நேரத்துக்குள் காமசாமி அங்கு வந்தார். நட்புடன் சித்தார்த்தனுக்கு வணக்கம் சொன்னார். இந்த வியாபாரி, உடல் பருத்து, சற்று நரைத்த தலைமுடி கொண்ட வயதானவர். அவர் கண்கள் நல்ல ஒளியுடனும், நடவடிக்கைகள் கௌரவமானதாகவும் இருந்தன. இருவரும் கனமான கம்பளம் விரித்த ஒரு மெத்தை மீது அமர்ந்தனர். காமசாமி பேச்சைத் தொடங்கினார்.

"நீங்கள் பண்டிதனான ஒரு பிராமணர் என்றல்லவா நான் கேள்விப்பட்டேன். பிறகு எதற்காக ஒரு வியாபாரியிடம் வேலை செய்ய விரும்புகிறீர்கள்? நீங்கள் பணத்தட்டுப்பாட்டில் இருக்கிறீர்களா என்ன?"

"அப்படிச் சொல்ல முடியாது. எனக்கு எந்தவிதமான குறைவும் கிடையாது; ஒருபோதுமே இருந்ததில்லை. நான் வெகு காலம் வசித்தது வனவாசிகளான பைராகிகளுடன்தான்!"

"நீங்கள் வனவாசிகளிடமிருந்து வருகிறீர்கள் என்றால், ஏன் பணம் தேவைப்படாது? அவர்களிடம்தான் எந்தவிதமான சொத்தும் கிடையாதே?"

"நீங்கள் சொல்வது புரிகிறது. என்னிடம் நிலமோ, பணமோ கிடையாது. ஆனால், நான் இதையெல்லாம் சம்பாதிக்காமல்



இருப்பது எனது சொந்த விருப்பத்தை ஒட்டித்தான். அவை எனக்குத் தேவையாகவும் இல்லை!"

"உங்களுக்கு எந்தவிதமான சொத்தும் இல்லையென்றால் எப்படி வாழ்வது?"

"பிரபுவே, நான் இதுவரை அதைப்பற்றி யோசித்ததில்லை. கடந்த மூன்று வருடங்களாக எந்த் சொத்துபத்தும் இல்லாமல்தான் வாழ்ந்திருக்கிறேன். எனவே, எப்படி வாழ வேண்டும் என்பதை நான் இன்னும் தீர்மானிக்கவில்லை."

"அப்படியானால், நீங்கள் இதுவரை மற்றவர்களது பணத்தில் காலம் கழித்திருக்கிறீர்கள். அப்படித்தானே?"

"லௌகீகமான பொருளில் அது அப்படியேகூட இருக்க லாம். வியாபாரியும் மற்றவர்களுடைய பணத்தால்தானே வாழ்கிறார்?"

"உண்மைதான். ஆனால், வியாபாரி மற்றவர்களின் பணத்தை அபகரிப்பதில்லை. பணத்தைப் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாகப் பொருள்களைக் கொடுக்கிறானே!"

"எல்லாமே அப்படித்தான். எல்லாரும் கொடுக்கிறார்கள்; வாங்கிக் கொள்கிறார்கள். வாழ்க்கையே அப்படிப்பட்டதுதான்!"

"ஆகா... இது என்ன பதில் - நீங்கள் திருப்பிக் கொடுக்க எதுவுமில்லாதபோது..?"

"எல்லாருமே பிறருக்குள்ளதைக் கொடுக்கவே செய் கிறார்கள். வீரன் வலுவையும், வியாபாரி சரக்கையும், ஆசிரியன் வித்தையையும், விவசாயி விளைபொருளையும், மீனவன் மீனையும் திருப்பித் தருகிறான்."

"அப்படியே இருந்தாலும் நீங்கள் எதைத் திருப்பித் தருவீர்கள்? உங்களுக்கு என்ன தொழில் தெரியும்?"

"சிந்திக்கவும், காத்திருக்கவும், உபவாசம் இருக்கவும் தெரியும்."

"அவ்வளவுதான் தெரியுமா?" காமசாமி கேட்டார்.

"அவ்வளவுதான்..." சித்தார்த்தன் பதிலளித்தான்.

"அதனால் என்ன பயன்? உதாரணமாக உபவாசத்தால் எதை சாதிக்க முடியும்?"

"உபவாசத்தால் எத்தனையோ பிரயோஜனங்கள் உண்டு. ஒருவருக்கு சாப்பிட எதுவும் இல்லாதபோது, உபவாசம் மிகவும் சிறந்தது. சித்தார்த்தனுக்கு உபவாசம் இருப்பது தெரியவில்லை என்றால், உங்களிடமோ, மற்றும் எவரிடமோ வேலை செய்ய வேண்டியது ஓர் அவசியமாக இருந்திருக்கும். பசி அவனைத் தூண்டியிருக்கும். ஆனால், நான் பொறுமையாகப் பசியின் போதுகூடக் காத்திருக்க முடியும். நான் பசிக்கு அடிமையாகாதவன். பசி பொறுக்க முடியாதவனும் அல்லன். அதனால் அப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டியதில்லை. அதற்கெல்லாம் இந்த உபவாசம் எனக்கு உதவியிருக்கிறது."

"விருந்தாளியான பைராகியே, நீர் சொல்வது சரிதான். ஒரு நிமிடம் காத்திருங்கள். இதோ வந்து விடுகிறேன்..." என்று சொல்லிப் பக்கத்தில் இருந்த அறைக்குள் சென்ற காமசாமி கையில் ஒரு ஓலைச் சுருளுடன் திரும்பி வந்தார். அதை சித்தார்த்தனிடம் கொடுத்துவிட்டு வாசிக்குமாறு கூறினார். அதில் ஒரு பெரும் வியாபாரத்துக்கான நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தது. சித்தார்த்தன் அதைப் படித்தான்.

அவன் படிப்பதைக் கேட்ட காமசாமி மிகவும் மனம் மகிழ்ந்தார். "நல்ல விஷயம்!" தலையை ஆட்டியபடி ஒப்புக் கொண்டவர், மற்றோர் ஓலைச்சுவடியை நீட்டி, "இதில் நீங்கள், எனக்காக எதையாவது எழுதுங்கள்..." என்றார். சித்தார்த்தன் அந்தச் சுவடியிதழை வாங்கி எழுதினான். 'எழுத்து நல்லது; யோசனை என்பது அதைவிட நல்லது. கெட்டிக்காரத்தனம் நல்லது; பொறுமை அதைவிட நல்லது!'

சித்தார்த்தன் எழுதியதைப் படித்த காமசாமி மிகவும் மகிழ்ந்தார்.



"உங்கள் கையெழுத்து மிகவும் அழகாக உள்ளது சித்தார்த்தா. நாம் நிறைய விஷயங்கள் குறித்துப் பேச வேண்டியுள்ளது. எனவே, நீங்கள் இன்று என் விருந்தாளியாக இங்கு தங்குங்கள்!" காமசாமி அழைப்பு விடுத்தார்.

அவரது நல்ல மனத்துக்கு நன்றி தெரிவித்த சித்தார்த்தன், அன்று அங்கு தங்கத் தீர்மானித்தான். கோடீ வரனான ஒரு வணிகப் பிரமுகரின் ஒய்யாரமான மாளிகையில் சித்தார்த்தன் தங்கினான். வேலைக்காரர்கள் புதிய உடைகளையும், செருப்பையும் அவனுக்கு முன்பாகக் கொண்டு வந்து வைத்தனர். மற்றொரு வேலைக்காரன் அவன் குளிப்பதற்கான வசதிகள் செய்து கொடுத்தான். சித்தார்த்தன் அதுவரை ஒரு நாளைக்கு ஒரு தடவை மட்டுமே உண்பது வழக்கம். அன்று அவர்கள் இருவரும் மதுபானத்தை அளவுக்கு மீறி அருந்தினர். காமசாமியின் பேச்சு பெரும்பாலும் அவரது வியாபாரத்தைப் பற்றியும், பண்டக சாலைகளைப் பற்றியுமே இருந்தது. பண்டக சாலையின் வரவு-செலவு கணக்குகளையும் சித்தார்த்தனுக்கு அவர் காட்டத் தவறவில்லை. வியாபாரம் தொடர்பாக அவர் பேசிய பேச்சுகளை சித்தார்த்தன் கவனத்துடன் கேட்டுக்கொண்டானே தவிர, அவரிடம் அதிகமாகப் பேசவில்லை. கமலாவின் எச்சரிக்கையை நினைவில் கொண்டு ஒரு வேலைக்காரனைப் போல் அவரிடம் நடந்து கொள்ளாதது மட்டுமல்ல; அவரிடம் சரிக்கு சமமான ஒரு மனிதனாகவே உட்கார்ந்து பேசினான். காமசாமியும் சித்தார்த்தனிடம் வெகு மரியாதையாக நடந்து கொண்டார்.

காமசாமி வியாபார விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையான நபராக இருந்தார். சித்தார்த்தனோ இதையெல்லாம் வெறும் பொழுது போக்காக மட்டுமே நினைத்தான். இந்த விளையாட்டின் முறைகளைப் புரிந்துகொள்ள ஆனமட்டும் முயற்சி செய்த போதிலும் அவையெல்லாம் அவன் இதயத்தை மகிழ்ச்சிப்படுத்த உதவவில்லை!

காமசாமியின் வீட்டில் தங்கத் தொடங்கிய சில நாட்களிலேயே சித்தார்த்தன் அவரது வியாபார விஷயங்களில் ஈடுபடத்

தொடங்கினான். அதுவும் வெகு இயல்பாக நடந்தது. இருப்பினும் தினமும் சித்தார்த்தன் குறிப்பிட்ட நேரத்தில் கமலாவின் வீட்டுக்குச் சென்று அவளை சந்தித்தான். நல்ல ஆடை அணிகளுடன், அத்தர் மற்றும் வாசனைத் தைலங்கள் பூசி, விலை உயர்ந்த பரிசுப் பொருள்களுடன் அவன் ஒவ்வொரு நாளும் கமலாவை சந்தித்தான். அத்திப்பழம் போன்ற கமலாவின் உதடுகள் அவனுக்குப் பல புதிய அனுபவங்களைக் கற்பித்தன. அவளின் மென்மையான கைவிரல்கள் அவனை, அவள் மார்புடன் சேர்த்து இறுக்கி அணைத்தன. உடலுறவு ரகசியங்களின் அரிச்சுவடியை - இந்த விஷயத்தைப் பொறுத்தவரை ஒரு குழந்தையாக இருந்த சித்தார்த்தனுக்கு அவள் தேவையான அளவுக்குக் கற்பித்தாள். காமவயப்பட்டு இணை சேரும் ஆண்-பெண் உடலின் அசைவுகள் மற்றும் சைகைகளால் உச்சகட்ட இன்பத்தை நுகர்வதும், அதற்குப் பிறகும் விலகாமல் அந்த நிலையிலேயே மணிக்கணக்காக நேரத்தைச் செலவிடுவதால் ஏற்படும் இந்திரிய சுகங்களையும் கமலா, சித்தார்த்தனுக்கு அனுபவபூர்வமாகக் கற்பித்தாள். இத்தகைய உறவுகளின்போது அதில் ஈடுபடும் ஆண்-பெண் இருவரும் அவரவருக்கு விருப்பமுள்ள முறை மற்றும் சடங்குகள் கொண்டு பர பரம் மற்றவரைக் கீழ்ப்படுத்த நேரும் சந்தர்ப்பங்களையும், அது உடலுறவின் உச்சகட்டத்தை அடைவதற்கு முன்பாக நிகழ வேண்டும் என்பதையும் கமலா அவனுக்கு விவரித்தாள். கெட்டிக்காரியும், பேரழகியுமான கமலாவின் படுக்கையறையில் சித்தார்த்தன் மணிக்கணக்கில் இன்பம் துய்த்தபடி கிடந்தான். அவன், அவள் சீடனாகவும், காதலனாகவும், நண்பனுமாக மாறி மாதங்கள் பல கடந்தன. சித்தார்த்தனின் நிகழ்கால வாழ்க்கையின் ஒவ்வோர் அசைவும், கமலாவை மையப்படுத்தியே நிகழ்ந்தது; காமசாமியின் பணம் சம்பாதிக்கும் மொத்த வியாபாரத்தைச் சுற்றி அல்ல!

நாட்கள் செல்லச் செல்ல வியாபாரத்தின் முக்கியமான கட்டங்களில் காமசாமி, சித்தார்த்தனை பொறுப்பேற்கச் செய்தார். விற்பனை தொடர்பான கடிதப் போக்குவரத்து, விற்பனை செய்ய வேண்டிய பொருள்களின் விலை நிர்ணயம் போன்றவை குறித்து



காமசாமி விவாதித்தது சித்தார்த்தனிடம் மட்டுமே. அது தவிர்க்க முடியாத ஒரு வழக்கமாகவும் தொடர்ந்தது. காமசாமிக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. கம்பளி, பருத்தி, அரிசி போன்ற விற்பனைப் பொருள்களைக் குறித்து சித்தார்த்தனுக்குப் பெரிய ஞானம் எதுவுமில்லை. ஆனால், நடுநிலையுடன் ஒவ்வொன்றையும் கண்காணிக்கவும் நிர்வகிக்கவும், எதிராளியின் பேச்சை ஊன்றி கவனித்து, அவர்களிடம் ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் காமசாமியைவிட, சித்தார்த்தனது திறமை மிகவும் பயன் பட்டது.

ஒருநாள் காமசாமி, தன் நெருங்கிய நண்பரிடம் இப்படிக் கூறினார். "இந்தப் பிராமணன் ஒரு நல்ல வியாபாரியல்ல; ஒருபோதும் தேர்ந்த வியாபாரி ஆகவும் முடியாது. அவருக்கே அதில் ஆர்வம் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனால், அதிர்ஷ்டமும் வெற்றியும் இயற்கையாகவே அவரை வந்து அடைகிறது. இதன் ரகசியம் எனக்குப் புரியவில்லை. ஒருவேளை அது மனோவசியத்தாலோ, அல்லது வனவாசிகளிடமிருந்து பெற்ற பயிற்சியாலோ இருக்கலாம். வியாபாரத்தில் லாபம்-நஷ்டம் ஏற்படுவதைப் பற்றி அவர் யோசிப்பதாகவே தெரியவில்லை!"

நண்பர், காமசாமிக்கு ஆறுதல் கூறினார்: "நீங்கள் கிடைக்கும் லாபத்தில் மூன்றில் ஒரு பகுதியை அவருக்குக் கொடுங்கள். நஷ்டம் ஏற்பட்டால் அதையும் சித்தார்த்தன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லுங்கள். இந்த உடன்படிக்கை ஒருவேளை அவரை வியாபார விஷயத்தில் தீவிர ஈடுபாடு உள்ளவராக மாற்ற உதவலாம்!"

காமசாமி தன் நண்பரின் அறிவுரைப்படியே செயல்படத் தீர்மானித்தார். இந்த ஏற்பாடும் சித்தார்த்தனிடம் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. லாபம் கிடைத்தால் சகஜமாக அதை ஏற்றுக்கொண்டான். நஷ்டம் ஏற்பட்டபோதோ, எந்தவிதமான சத்தமும் இல்லாமல், "இன்றைய வியாபாரம் சரியில்லை!" என்று சாதாரணமாக ஒதுக்கித் தள்ளினான்.

உண்மையைச் சொன்னால், வியாபார விஷயத்தில் அவனுக்கு எந்தவிதமான ஈடுபாடும் இருக்கவில்லை. ஒரு தடவை அறுவடை நேரத்தில் பக்கத்து கிராமத்திற்கு நெல் கொள் முதலுக்காகப் போனான். அங்கு போய்ச் சேர்ந்தபோது வேறு யாரோ ஒரு வியாபாரி அந்த நெல்லை வாங்கிச் சென்றுவிட்டார் என்ற செய்தி சித்தார்த்தனை எட்டியது. இருப்பினும் அந்த கிராமத்தில் சில நாட்கள் தங்கி, அங்கிருந்த விவசாயிகளைப் பழக்கப்படுத்திக் கொண்ட பிறகு சித்தார்த்தன் திரும்பி வந்தான். அவர்களது வாழ்க்கை முறையில் ஆர்வம் காட்டிய சித்தார்த்தன், ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அந்தக் கிராமத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குச் சில வெள்ளி நாணயங்களைப் பரிசளிக்கவும் செய்தான். பயணம் வெற்றிகரமாக முடிந்ததாக நினைத்துத் திரும்பிய சித்தார்த்தனிடம் காமசாமி கோபத்துடன் சண்டை போட்டார். அரிசியும், கோதுமையும் வாங்க முடியாதபட்சத்தில் உடனே திரும்பி வந்திருக்க வேண்டும் என்றும், அதற்கு பதிலாக அங்கேயே தங்கி நேரத்துடன் பணத்தையும் செலவு செய்தது விவேகமற்ற செயல் என்றும் கூறினார், வியாபாரத்தையே கண்ணாகக் கருதிய காமசாமி.

"அன்பு நண்பரே, என்னைத் திட்டாதீர்கள்! அங்கு ஏற்பட்டது நஷ்டமென்றால், நான் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்தப் பயணம் எனக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. ஏராளமான மனிதர்களுடன் பழகவும், அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்குகொள்ளவும் முடிந்ததை விலை மதிப்பற்ற ஓர் அனுபவமாக நான் எண்ணுகிறேன். ஒரு பிராமண குடும்பத்தாருடன் பழக நேர்ந்தது. குழந்தைகளுடன் இணைந்து மகிழ்ச்சியடைய முடிந்தது. ஏழை விவசாயிகள் தங்களது புன்செய் நிலத்தை எனக்குக் காட்டினர். அங்கு யாருமே என்னை பண ஆசை பிடித்த ஒரு வியாபாரியாகக் கருதவில்லை!"

"சொன்னதெல்லாம் சரிதான். ஆனால், உண்மையில் நீங்கள் ஒரு வியாபாரியல்லவா, இதை ஓர் உல்லாசப் பயணமாகக் கருதலாமா?" காமசாமி சற்றுக் கோபத்துடன் கேட்டார்.



"அதில் சந்தேகமே இல்லை! நான் என்னுடைய மகிழ்ச்சிக் காகவே இந்தப் பயணத்தை மேற்கொண்டேன். ஏன் அப்படிச் செய்யக்கூடாது? எத்தனை புதிய மனிதர்களுடன் நான் பழக நேர்ந்தது? அக்கம்பக்கத்து கிராமங்களின் விளைச்சல் பற்றியும் அங்கு நெல்லின் விலை என்ன, எவ்வளவு வரி கொடுக்கிறார்கள் என்றெல்லாம் கூட என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. பல மனிதர்களின் நட்பையும், அன்பையும் சம்பாதித்தேன். ஆனால், நான் உங்களைப் போல் இருந்திருந்தால்... நெல்லும், கோதுமையும் கிடைக்கவில்லை என்றவுடன் என்னடா இது ஒரு தொல்லை என்று உடனே திரும்பியிருப்பேன். கொஞ்சம் பணமும் நேரமும் அப்படி வீணாகிப் போயிருக்கும். ஆனால், நான் அங்கு தங்கியிருந்த ஒரு சில நாளில் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடிந்தது. எனக்கு அதில் சுகமும் திருப்தியும் இருப்பதாகவே தெரிகிறது. பொறுமையற்று, அவசரப்படுத்தி நான் யாரையும் தொல்லைக்கு உள்ளாக்கவில்லை. மேற்கொண்டு என்றாவது ஒருநாள் நான் அந்த கிராமத்துக்கு நெல் வாங்கச் செல்ல நேர்ந்தால், அவர்கள் என்னை அன்புடன் வரவேற்று உபசரித்து வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்!"

"முதல் தடவை வந்தபோது கோபம் காட்டி அவசர அவசர மாகத் திரும்பிப் போகவில்லையே என்று ஆறுதலடைந்திருப் பார்கள். எப்படியானாலும் அந்தப் பயணம் ஒரு பயணமாகவே இருக்கட்டும். நீங்கள் வீணாகச் சண்டையிட்டு மனவருத்தம் கொள்ளத் தேவையில்லை. என்றாவது நான் உங்களுக்கு ஒரு பாரமாகவோ, தொல்லையாகவோ இருப்பதாகத் தெரிந்தால்... அன்று என்னிடம் சொல்லுங்கள். அந்த விநாடியிலேயே இந்தச் சித்தார்த்தன் உங்களிடமிருந்து விடைபெற்றுப் பிரிந்து விடுவான். அதுவரை நாம் நல்ல நண்பர்களாக இருப்போமே?"

காமசாமியின் வருமானம் மூலமாகவே சித்தார்த்தனின் வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது என்கிற விஷயத்தைப் புரிய வைக்க முயன்ற காமசாமியின் முயற்சியும், தோல்வியில்தான் முடிந்தது. சித்தார்த்தன் தனது சொந்த முயற்சியால்தான் வாழ்க்கை

நடத்துகிறான். எல்லா வியாபாரிகளும் மற்றவர்களைக் கசக்கிப் பிழிந்து உறிஞ்சிக் குடிப்பவர்களாக இருக்கின்றனர். காமசாமியின் துயரத்தையும் சித்தார்த்தன் ஒருபொருட்டாக எடுத்துக்கொள்ள வில்லை. காமசாமி ஏற்கெனவே நிறைய விஷயங்களில் ஈடுபட்டு மிகுந்த துயரத்திலிருந்தார். ஒரு தடவை, சித்தார்த்தனது எல்லா வெற்றிகளுக்கும் மூலகாரணம் தான்தானென்றும், அவன் பொருளாதார ரீதியாக வளர்ந்திருப்பதற்கு தான் கற்றுக்கொடுத்த வியாபார ரகசியங்களே காரணம் என்றும் சித்தார்த்தனுக்குப் புரிய வைக்க முயன்றார்.

சித்தார்த்தன் இப்படிப் பதிலளித்தான்: "உங்களது வேடிக்கைப் பேச்சை நிறுத்திக் கொள்ளுங்கள். நண்பரே, உங்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டது ஒரு பொருளை என்ன விலைக்கு விற்பது என்பதையும், நூறு பணத்துக்கான சரியான வட்டி எவ்வளவு என்பதையும்தான். இதுதான் உங்களுக்குள்ள அறிவு. ஆனால், எப்படி உன்னதமாக சிந்திக்க வேண்டும் என்பதை நான் உங்களிடமிருந்து கற்றுக்கொள்ளவில்லை. அருமை நண்பரே, அந்த விஷயத்தை நீங்கள் என்னிடமிருந்து கற்றுக்கொள்வதுதான் நல்லது."

சித்தார்த்தனின் மனம் உண்மையில் வியாபாரத்தில் நாட்டம் கொள்ளவே இல்லை. கமலாவுக்குப் பணம் மற்றும் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுக்க ஒரு கருவியாகப் பணத்தை நினைத்தானே தவிர, வியாபாரத்தை வாழ்க்கைக்கான முக்கியமான தொழிலாக நினைக்கவில்லை. அப்படி இருந்தும் இதற்குள் அவனிடம் ஏராளமான பணம் சேர்ந்துவிட்டது. சாதாரண மக்களின் கஷ்டமான வாழ்க்கை முறைகளும், குற்றம் குறைகளும் சித்தார்த்தனுக்குத் தெரியாத விஷயங்களாக இருந்தபோதிலும், அவனது கவனம் அவர்களைப் பற்றியதாகவே இருந்தது. அவர்களுடன் வேறுபாடின்றிப் பழக முடிந்தபோதிலும், அப்படிப்பட்ட மனிதர்களுடன் முற்றிலும் ஒன்றிவிடாமல் ஏதோ ஒன்று தன்னைப் பிரித்து வைத்திருப்பதாக அவ்வப்போது சித்தார்த்தனுக்குப் புலப்பட்டது. அதன் காரணம் அவன் ஒரு வனவாசியாகக் கழித்த வாழ்க்கைதான்.



வெறும் மிருகம் போலவே நடந்துகொண்ட மனிதர்களையும், குழந்தை மாதிரி களங்கமற்ற மனத்துடன் நடந்து கொண்டவர் களையும் சித்தார்த்தன் சந்திக்க நேர்ந்தது. இவர்களெல்லாம் ஏதோ ஒன்றுக்காக, மிகுந்த கஷ்டத்துடன் நாட்களைத் தள்ளி நீக்கினார்கள். முக்கிய நோக்கம் பணம் சம்பாதிப்பதே. அது ஒன்றுதான் அவர்களது லட்சியம் என்று தோன்றியது. பிற துணை லட்சியங் களாகப் புகழ், நல்ல ஆடைகள், காலணிகள் போன்றவற்றை சேமிப்பதாக இருந்தது. சித்தார்த்தனுக்கோ இதெல்லாம் ஒருவிதக் குழந்தை விளையாட்டாகத் தோன்றியது. மனிதர்கள் பர பரம் ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக்கொள்வதும், வேதனைப் படுத்திக் கொள்வதும் வெளிப்படையாகவே தெரிந்தது. பைராகிகள் வெகு சாதாரணமாகக் கருதும் சிறிய வேதனை மற்றும் துன்பங்களும் சாதாரண மனிதர்களை நிம்மதியிழக்க வைத்தன. அன்றாட வாழ்க்கையின் தவிர்க்க முடியாத அல்லது பிரிக்க முடியாத பகுதியான துயரங்களால் தாக்கப்பட்டு அவர்கள் நிம்மதி இழந்து தவித்தனர்.

சித்தார்த்தனை நெருங்கிய அனைத்துத் தரப்பினரையும், அவன் சமமாகவே வரவேற்று உபசரித்தான். துணி வகைகள் விற்பனை செய்ய வரும் வியாபாரியும், பத்துப் பணத்தைக் கடன் வாங்க வரும் அயல்காரனும், இரக்கத்துக்குரிய தனது தரித்திர நிலையைக் கூறி பிச்சையெடுக்க வருபவனும் அங்கு வரவேற்கப்பட்டனர். பணக்காரரான வியாபாரப் பிரமுகர்களும், அவனது தோட்டத்தை கவனிக்கும் வேலைக்காரனும் சித்தார்த்தனுக்கு ஒரே மாதிரித் தெரிந்தனர். எல்லாரிடமும் சித்தார்த்தன் கனிவுடன் நடந்து கொண்டான். திடுமென்று காமசாமி அவனது வீட்டுக்குள் வந்து கொடுக்கல்-வாங்கலில் நஷ்டம் ஏற்பட்டதாகவும், அதற்குக் காரணம் அவனது கவனக்குறைவுதான் என்றும் குற்றம் சாட்டுவார். அவரது பேச்சை ஊன்றி கவனிக்கும் சித்தார்த்தனுக்கு அதெல்லாம் உண்மைதான் என்பதும் விளங்கும். அது முடிந்தவுடனேயே தன்னைக் காண வந்திருக்கும் அடுத்த பார்வையாளரை சந்திக்கப் புறப்படுவான். சமீப காலமாக சித்தார்த்தனைக் காண ஏராளமானவர்கள் வந்தனர். சிலர் அவனை

ஏமாற்றிப் பணம் பெறவும், சிலர் சரக்கு வாங்கவோ அல்லது விற்கவோ... இப்படி ஒவ்வொரு தேவையையும் முன்னிட்டு வந்தனர். ஊரில் நடக்கும் சண்டை சச்சரவில் நியாயம் கோரிக்கூட ஆட்கள் வந்தனர்.

எல்லாரிடமும் அவன் கருணையுடன் நடந்து கொண்டான். பணம் தேவைப்பட்டவர்களுக்கு முடிந்த அளவு கொடுத்தான். சமாதானம் செய்ய வேண்டியவர்களிடம் அதைச் செய்தான். உபதேசம் கேட்டு வருபவர்களுக்கு அதை வழங்கினான். இவையெல்லாம் அவனுக்கு ஒரு வேடிக்கை விளையாட்டாக மட்டுமே இருந்தது. ஒரு காலத்தில் தெய்வங்களை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக ஹோமம் செய்த மனநிலையுடன் சித்தார்த்தன் இவற்றில் பங்கெடுத்தான்.

அவன் உள்மனத்திலிருந்து சில நேரங்களில் சன்னமான குரல் ஒன்று உயரும். அது அவனை அலைக்கழித்தது. தன்னுடைய தற்போதைய வாழ்க்கை விசித்திரமானதென்றும், தான் செய்வதெல்லாம் நேரத்தை வீணாக்கும் வேலையென்றும் தோன்றும். பெரும்பாலான நேரங்களில் இவை தனக்கு மகிழச்சியையும் திருப்தியையும் அளித்தாலும்கூட, உண்மையான வாழ்க்கை தன்னைத் தொடாமல் காலத்திரைக்குள் வேகமாக மறைக்கிறது. அது தனது கையை மீறிய நிலைமை என்றும் தோன்றும். ஒரு கெட்டிக்காரப் பந்து விளையாட்டுக்காரன் பந்து விளையாடுவது போலிருந்தது. இருப்பினும் சித்தார்த்தனின் இயல்பான நடவடிக்கைகள் அதில் எந்தவிதமான பங்கும் வகிக்கவில்லை. உண்மையான சித்தார்த்தன், குழந்தை விளையாட்டு போன்ற இந்த வாழ்க்கையிலிருந்து விலகி, வெகு தூரத்தில் ஏகாந்தமாக வாழ விரும்பினான். இப்படிப்பட்ட நினைவுகள், அவனை அடிக்கடி பயப்படுத்தின. அவன் ஆசைப்பட்டது, குழந்தைகளிடமும் விவசாயிகளிடமும் நெருங்கிப் பழகி, அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கேற்று, அவர்களில் ஒருவராக வாழ்நாட்களைக் கழிக்க வேண்டுமென்றுதான். ஓர் ஆராய்ச்சியாளனைப் போல் அவர்கள் மத்தியில் வாழ்வது சகிக்கக்கூடியதாகவே தோன்றியது.



கமலாவை தினமும் சந்திப்பதை சித்தார்த்தன் ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தான். அவளிடமிருந்து அன்பு மற்றும் ஆண்-பெண் உறவு குறித்து நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டான். அவளுடன் சல்லாபம் புரிந்து, தேவையான போது உபதேசம் வழங்கியும், அவளிடமிருந்து உபதேசம் பெற்றும் மாதக்கணக்கில் சித்தார்த்தன் அந்த நகரத்தில் வசித்தான். அடிக்கடி நிகழ்ந்த இப்படிப்பட்ட சந்திப்புகளின் பலனாக கோவிந்தன், சித்தார்த்தனைப் பற்றிப் புரிந்து கொண்டதைவிட, அதிகமாக கமலாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

ஒருதடவை சித்தார்த்தன் கமலாவிடம் சொன்னான்: "கமலா, ஒரு வகையில் நீயும் என்னை மாதிரிதான். நீ, நீ மட்டுமேதான், மற்றவர்களிலிருந்து மாறுபட்டவள். விவரிக்க முடியாத ஒரு நிசப்தம் உன்னுள் குடியிருக்கிறது. அது ஓர் அடைக்கலப் பகுதியும்கூட. என்னைப் போலவே, எப்போது வேண்டுமானாலும் நீயும் இந்த லௌகீக வாழ்க்கையைவிட்டு அதில் கலந்துவிட முடியும். அந்த வேறுபாடு எப்போது வேண்டுமானாலும் நிகழலாம். மிகவும் குறைந்த மனிதர்களால் மட்டுமே அது முடியும். ஆனால், முயன்றால் எல்லாருமே பெறக்கூடிய நிலைதான் அது!"

"எல்லா மனிதர்களும் கெட்டிக்காரர்கள் இல்லை..." கமலா சொன்னாள்.

சற்று நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்த சித்தார்த்தன் பேசத் தொடங்கினான்: "கெட்டிக்காரத்தனத்துக்கும் இதற்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. கமலா! காமசாமியிடம் என்னைப்போலக் கெட்டிக்காரத்தனம் உண்டு. ஆனால், அவரிடம் இப்படிப்பட்ட உள்நோக்குப் பார்வை கிடையாது. குழந்தைகளைப் போல் களங்கமற்ற இதயமுள்ள பலரிடமும் இது இருக்கும். பெரும்பாலும் மரத்திலிருந்து பழுத்து உலர்ந்து பின்பு கீழே விழும் இலை போன்றது அது. காற்றினால் அலைக்கழிக்கப்பட்டு, லட்சியமில்லாமல் சற்றுத் தூரம் பறந்து சட்டென்று எங்காவது தரையில் விழும். மிகக் குறைந்த மனிதர்களால் மட்டுமே ஆகாய வீதியின் நட்சத்திரம் போல் ஜொலிக்க முடியும். அப்படிப்பட்ட

வர்கள் நிச்சயித்த பாதையிலேயே முன்னேறுவார்கள். அவர்களுடைய வழிகாட்டி, அவர்களுக்கு உள்ளேயே உள்ளது. எனக்குத் தெரிந்த மகாத்மாக்களில் ஒரே ஒருவருக்கு மட்டும்தான் இந்த வல்லமை உள்ளது. அவர், ஜேதவனத்திலுள்ள புண்ணிய புருஷரான கௌதம புத்தர். அவர் இதை மோட்சப்பிராப்தி என்று குறிப்பிடுகிறார். ஆயிரக்கணக்கான மனிதர்கள் தினந்தோறும்... ஏன் ஒவ்வொரு நாழிகைதோறும் அவரை சந்திக்கின்றனர். இருப்பினும் அவர்கள் எல்லாரும் உலர்ந்து, உதிர்ந்து விழும் இலைகள்தான்! அப்படிப்பட்டவர்களின் உள்ளே, அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய விவேகமான வழிகாட்டி எதுவும் இல்லை."

கமலா அவனை ஊன்றி கவனித்தாள். பிறகு சிரித்தபடியே பேசத் தொடங்கினாள்: "நீங்கள் அவரைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசுகிறீர்கள். பைராகிகளின் சிந்தனை இன்னும் உங்களிடமிருந்து முற்றிலுமாக விடுபடவில்லை!"

சித்தார்த்தன் மௌனம் பூண்டான்.

அவர்கள் இருவரும் கூடலில் ஈடுபட்டனர். கமலாவுக்குத் தெரிந்த நாற்பதுக்கும் மேற்பட்ட முறைகளை அன்று பயன்படுத்தி அவர்கள் இரவின் கடைசி யாமம் வரை நேரத்தைச் செல வழித்தனர். அவளது வடிவழகான உடல் மென்மையுடன், திடமாகவும் இருந்தது. அவளிடமிருந்து யார் ஒருவர் இன்பத்தையும், திருப்தியையும் வேண்டுகிறார்களோ அவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் நூதனமும் நுட்பமுமான காமம் தொடர்பான பல ரகசியங்களை அவளிடமிருந்து தெரிந்து கொள்ள முடியும். கடைசியில் சித்தார்த்தன் களைப்படைந்தான். அவள் இடுப்பைப் பற்றியபடியே பட்டுத்துணி விரித்த மெத்தையில் சரிந்தான்.

அந்த தேவதாசி அவன் முகத்தைப் பிடித்து உயர்த்தி களைப்படைந்த அவன் கண்களையே வெகுநேரம் பார்த்தாள்.

"என் வாடிக்கையாளர்களிலேயே மிகவும் உத்தமர் நீங்கள்தான்!" கமலா யோசனையில் ஆழ்ந்தபடி பேசினாள்:



"இதுவரை நான் சந்தித்த நபர்கள் எல்லாரையும்விட உங்கள் உடல் வலு அதிகம். நீங்கள் இந்தக் கலையில் தேர்ந்து விட்டீர்கள், சித்தார்த்தா. ஒரு காலத்தில் எனக்கும் வயதாகக்கூடும். உங்கள் மூலமாக நான் ஒரு குழந்தை பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்னதெல்லாம் உண்மைதான் எனினும், நீங்கள் இன்னும் ஒரு பைராகியாகவே இருக்கிறீர்கள். உண்மையைச் சொல்வதானால் நீங்கள் என்னை நேசிக்கவில்லை. மட்டுமல்ல, யாரையுமே நேசிக்கவில்லை. இதுதானே உண்மை?"

"இருக்கலாம்..." சித்தார்த்தன் உதாசீனமாக பதிலளித்தான். "நானும் உன்னை மாதிரிதான். உன்னாலும் யாரையும் நேசிக்க முடியாது. அல்லது நேசிப்பையே நீ எப்படித் தொழிலாகக் கொண் டிருக்க முடியும்? ஒருவேளை நம்மைப் போன்றவர்கள் நேசிக்க முடியாதவர்களாக இருப்போம். சாதாரணமான மனிதர்களால் அது முடிகிறது. அதுதான் அவர்களது வாழ்க்கை ரகசியம்!"

## 7. சம்சார சாகரம்

**சி**த்தார்த்தன் வெகு நாட்கள் லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டு, முழுமையான வாழ்க்கையை அனுபவித்தான் என்றாலும், அவன் மனம் அப்போதும் நிம்மதியற்றுத் தவித்தது. ஒரு பைராகியாக அலைந்த காலத்தில் கடுமையான கட்டுப்பாடு மற்றும் பயிற்சிகள் காரணமாக ஏறத்தாழ உயிரற்றுப் போயிருந்த இந்திரியங்கள் மறுபடியும் விழித்துக் கொண்டன. உயிர்த் துடிப்புடன் செயலாற்றத் தொடங்கின. செல்வம், புகழ், பருவ சுகங்கள் போன்றவற்றை வேண்டுமளவு அனுபவித்தாலும், இதயத்தின் ஆழத்தில் சித்தார்த்தன் என்றுமே ஒரு பைராகியாகவே இருந்தான். கெட்டிக்காரியான கமலா இதைத் தெரிந்து கொண்டிருந்தாள். அவனது வாழ்க்கையின் போக்கை நிர்வகித்தது சிந்தனையும், பொறுமையும் உபவாசமும்தான். சமூகத்தின் சாதாரணமான ஜனங்கள் அப்போதும் அவனுக்கு அறிமுகமற்ற

வர்களாக இருந்தனர். அவள், அவனிடமிருந்து மிகவும் வேறுபட்டிருந்தாள்.

வருடங்கள் பல கடந்தன. சுகபோகங்களில் மூழ்கித் திளைத்திருந்த சித்தார்த்தன் அதைத் தெரிந்துகொள்ளவே இல்லை. அவன் பெரும் பணக்காரனாகியிருந்தான். நகரத்தில் அவனுக்கு ஒரு பெரிய வீடும் அதில் ஏராளமான வேலைக்காரர்களும் அவனிடம் இருந்தனர். நகர எல்லையில் மிகப்பரந்த அளவில் ஒரு பூந்தோட்டமும், அதற்குள் உல்லாசமாகப் பொழுதுபோக்க மறைவான மண்டபம் ஒன்றும் இருந்தது. சித்தார்த்தன் கவனத்துக்குரிய ஒருவனாகி விட்டிருந்தான். அவனை எல்லாருக்கும் பிடித்திருந்தது. பண உதவியோ, சிக்கலான சமயங்களில் யாருக்காவது வேறு ஏதாவது உதவியோ தேவைப்பட்டால் அவர்கள் சித்தார்த்தனை அணுகினர். இருப்பினும் கமலாவைத் தவிர, அவனுக்கு நெருக்கமான நண்பர்கள் எவரும் இருக்கவில்லை!

சித்தார்த்தனது இளமைக்காலத்தில் அவனுள் ஏற்பட்டிருந்த உன்னத உணர்வுகளும், புத்தரை சந்தித்தபோது அவன் உணர்ந்த அனுபவத்தின் விளைவான மன எழுச்சியும், மற்றவர்களிடமிருந்து தன்னை வேறுபடுத்திய பவித்திரமான உள்ளுணர்வும், மனக்குரலும்... இப்படி எல்லாமே இப்போது வெறும் நினைவாக மட்டுமே மீதமிருந்தன. அவன் உள்மனத்தில் ஒரு நீரூற்று மாதிரிப் பொங்கிப் பிரவகித்த ஊற்று, இப்போது வற்றிவிட்டிருந்தது. நாதம் எழுப்பிய தந்திக் கம்பிகள் அறுபட்டிருந்தன. அவற்றின் தொடர்பு அசைவற்றுப் போனது என்றுகூடச் சொல்லலாம். இருப்பினும் பைராகிகளிடமிருந்தும், தகப்பனாரிடமிருந்தும், புத்தரிடமிருந்தும் ஏனைய பிராமண பண்டிதர்களிடமிருந்தும் கற்றுக்கொண்ட பலவற்றைத் தனது சொந்த வாழ்க்கையில் கடைப்பிடிக்கவே செய்தான்.

மிதமான அன்றாட அலுவல்கள், ஆழ்ந்த சிந்தனையுடனான பயிற்சி, மணிக்கணக்கில் நீண்டு தொடரும் தியானம், 'நான்' என்ற ஆணவத்தைக் குறித்த ஞானம் போன்றவற்றை சித்தார்த்தன் கைவிட்டதில்லை.



ஆனால், வேறு பல வாழ்க்கை முறைகளும், பார்வைகளும் அவனிடம் மாற்றம் பெற்று, வழி மாறியிருந்தன. ஒரு தடவை சுழற்றி விட்டால் வெகு நேரம் சுழன்ற பிறகு படிப்படியாக வேகம் குறைந்து கடைசியில் நின்றுவிடும் குயவரின் களிமண் பொருந்திய சக்கரம் மாதிரி, பைராகியாக இருந்த சித்தார்த்தனின் சிந்தனைத் திறனும், அறிவுத்திறனும் மிகவும் வலுவுடன் செயல்பட்டன. இப்போதும் அவை முற்றிலுமாகச் செயலிழந்து விட்டதென்று கூற முடியாது.

முற்றிய மரத்தின் அடிப்பகுதியில் ஈரம் தேங்கி முற்றிலுமாக அதை அழிப்பதுபோல் மாயமான பிரபஞ்சத்தின் சங்கிலிகளான சுக துக்கங்கள் சித்தார்த்தனின் ஆத்மாவில் ஒன்று சேர்ந்து மெதுவாக அதை அழியும் நிலைக்குக் கொண்டு வந்திருந்தன. அவனது வாழ்க்கையையே இந்த மாற்றம் சீர்குலைத்தது. நாளுக்கு நாள் சித்தார்த்தனது இதயத்தின் கனம் அதிகரித்தது. விலையுயர்ந்த எத்தனையோ பொருள்கள் நஷ்டமடைந்தாலும் அவன் இந்திரியங்கள் முழுவதும் லோகாயத வாழ்க்கையில் அழுந்தி விட்டிருந்தன.

வியாபாரத் தொடர்பான விஷயங்களை எப்படிப் பொறுமையுடன் கையாள்வது என்பதை சித்தார்த்தன் இதற்குள் கற்றுவிட்டிருந்தான். மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தவும், பெண்களை வசீகரிக்கவும் சித்தார்த்தனால் இப்போது சுலபமாக முடிந்தது. விலையுயர்ந்த உடை மற்றும் செருப்பு அணிந்தே நடமாடினான். சித்தார்த்தன் உடல் மீது தெளிக்கப்பட்ட வாசனைத் திரவியங்களின் மணம், அவனைச் சுற்றி எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. வேலைக்காரர்கள் ஏதாவது தவறு செய்துவிட்டால் கண்டபடி அவர்களைத் திட்டத் தொடங்கினான்.

மேலும் இனிப்புப் பண்டங்களையும், மீன், இறைச்சி போன்றவற்றையும் சாப்பிடத் தொடங்கியிருந்தான். அதிகமாகக் குடித்தான். இவை அன்றாட சம்பவங்களான பிறகு அவன் படிப்படியாகச் சோம்பல் நிறைந்தவனாகவும், ஞாபக மறதி உள்ளவனுமாக மாறினான். சூதாட்டத்தில் அவனது ஆர்வம்

அதிகரித்தது. தேவதாசிகளின் நாட்டிய நாடகங்களிலும், சங்கீதக் கச்சேரிகளிலும் ஆர்வம் கொண்டான். எனினும் தான் மற்றவர்களிலிருந்து மாறுபட்டவன் என்கிற நினைவு உள்ளுக்குள் இருந்தது. பிற மனிதர்களைத் துச்சமாக மதிக்கத் தொடங்கினான்.

காமசாமி எதற்காகவாவது அவனைக் கோபித்துச் சத்தம் போட்டால், சித்தார்த்தன் பதிலுக்கு அவரைக் கேலி செய்தான். ஆனால், படிப்படியாகத் தெளிவற்ற முறையில் வருடங்கள் பல கடந்ததுடன் அவனது கேலியும், உன்னதமான லட்சியங்களும் மறைந்து விட்டன. சித்தார்த்தன் பெரும் வியாபாரி ஆனதுடன், சாதாரண மனிதர்களது பலவீனங்களும் அவனிடம் படியத் தொடங்கின. எதிர்பார்ப்பும், ஏமாற்றங்களும் அவனிடம் நிழல் வீசின. இருப்பினும் சாதாரண மனிதர்களைப் பற்றி அவனிடம் பொறாமை இருக்கவே செய்தது. அதன் காரணம், அவர்களிடம் இருக்கும் நேசிக்கும் இயல்பும், சுகமும் துக்கமும் கலந்த இந்த வாழ்க்கையுடனான அவர்களது அடக்க முடியாத ஆசையும்தான்! சித்தார்த்தனால் இவையெல்லாம் முடியாத விஷயங்களாக இருந்தன. எனவே பொறாமைப்பட்டான்!

சாதாரண மனிதர்கள் தங்கள் குழந்தைகளை நேசித்தும், உறவினர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டும், பரிதவித்தும் வாழ்ந்தனர். எதிர்காலம் குறித்த நம்பிக்கை அவர்களிடமிருந்தது. பணத்தையும் புகழையும் அவர்கள் விரும்பினர். குழந்தைத் தனமான இந்த இயல்புகளை, சித்தார்த்தன் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவில்லை. மகிழ்ச்சியற்றதும், ஆத்மவஞ்சனையை ஏற்படுத்தக்கூடியதுமான மோசமான குணங்களை சித்தார்த்தன் கற்றுவிட்டிருந்தான். சிரிப்பும் கும்மாளமுமாக உறங்கிய ஓர் இரவுக்குப் பிறகு, படுக்கையில் படுத்தவாறு மணிக்கணக்கில் விழித்தபடி இருப்பான். அவனுக்கு உறக்கம் வருவதே அபூர்வமானது. களைப்பும், ஏமாற்ற உணர்வும் சித்தார்த்தனை அரித்துத் தின்னத் தொடங்கின.

காமசாமி தன் மன வேதனையால் சித்தார்த்தனிடம் ஏதாவது பேச நேர்ந்தால், அவரிடம் சீறி விழுந்தான். சூதாட்டத்தில் பணம்



நஷ்டமடைந்தால் அதை மிகவும் சாதாரணமாக எடுத்துக்கொண்டு வாய்விட்டு உரத்த குரலில் சிரிப்பான். கோபம் அவனது இயற்கையான மற்றொரு குணமாக மாறியிருந்தது. சித்தார்த்தன் முகத்தில் இப்போதும் தீட்சண்ணியமான ஒளி பரவியிருப்பினும், அவன் சிரித்த சந்தர்ப்பங்கள் குறைந்து வந்தன. அதற்கு பதிலாக நாளாக நாளாக அவன் முகத்தில் பணக்காரனான வியாபாரி களிடம் எப்போதும் தென்படும் அதிருப்தியும், மகிழ்ச்சியற்ற நிலையும் நிலையாகக் குடியிருந்தன. செல்வந்தர்களுக்கே உரித்தான சோம்பலும், விரக்தியும் சதா சித்தார்த்தனது ஆத்மாவைக் காயப்படுத்தின.

சன்னமான ஒரு மூடுபனி போலவும், பின்னர் சற்று வலுத்தும் இறுதியில் கனமான பனிக்கட்டி போலவும் கடுமையான சோம்பல் சித்தார்த்தனைச் சூழ்ந்தது. நாளடைவில் அதுவே கடுமையான ஓர் ஆத்ம நோயாக மாறியது. காலப்புழக்கத்தால் நைந்து, நெளிவுசுளிவுகள் விழும் ஒரு துணியைப்போல் அவன் ஆத்மா சுருங்கி, கறை புரண்டதானது. கோவிந்தனை விட்டுப் பிரிந்த பிறகு, சித்தார்த்தன் தொடங்கிய புதிய வாழ்க்கை, அதன் உண்மையான ஒளியை இழந்து மங்கலடைந்து குன்றியது. உதிர்ந்து விழவிருக்கும் ஒரு மலரைப் போல, மனத்தின் ஆழத்தில் ஏமாற்றமும், குமட்டலும் நுரைத்துப் பொங்கின. ஆரம்பத்தில் அவன் அதை அவ்வளவாக கவனிக்கவில்லை. அல்லது பொருட்படுத்தவில்லை எனலாம். இதயத்தின் உட்புறத்தில் ஒலித் திருந்த நாத ஒலி - வாழ்க்கையின் இக்கட்டான சந்தர்ப்பங்களில் அவனுக்கு வழிகாட்டிய அந்த வழிகாட்டி, தற்போது ஊமையாகி விட்டதை சித்தார்த்தன் புரிந்து கொண்டான்.

வெளியுலகில் தோன்றி மறையும் சுகங்கள் சித்தார்த்தனை அடிமைப்படுத்தியிருந்தன. மோசமான ஆசைகள், மிதமிஞ்சிய சுகபோகம் போன்ற நீச குணங்கள் அவனிடம் தென்பட்டன. ஒருபோது சொத்துச் சேர்ப்பதிலிருந்த பற்றின்மை மறைந்து, இப்போது அந்த இடத்தில் சொத்துச் சேர்க்கும் தீவிரம் அதிகரித்தது. இப்போது அவை விளையாட்டுப் பொருள்களல்ல; மாறாக அவை

சங்கிலிகளாக மாறி அவனைப் பிணைத்திருந்தன. கடுமையான ஒரு சுமையாகவும் மாறியிருந்தன. அழிவின் ஆழத்தை நோக்கிச் செல்லும் அவனது பயணம், பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது. இது சூதாட்டத்தில் அவனுக்கு ஏற்பட்டிருந்த அளவற்ற ஈடுபாட்டின் மூலம்தான் வெளியானது.

சித்தார்த்தனது இதயத்தில் தான் ஒரு பைராகி என்ற உணர்வு மறையத் தொடங்கியதுடன், பணம் வைத்து விளையாடும் சூதாட்டத்தில் அவனது ஆர்வம் அதிகரித்தது. முன்பெல்லாம் சராசரி மனிதர்களது ஒரு பொழுதுபோக்கு என்ற முறையில்தான் சூதாட்டத்தில் கலந்து கொண்டான். சூதாட்டத்தில் சித்தார்த்தன் கெட்டிக்காரனாக இருந்தான். அதிலிருந்த ஆர்வம் அவனிடம் ஒருபோதும் குறையாமல் அதிகரிக்கவும் செய்தது. சித்தார்த்தன் பணத்தை இந்த வழியில் வாரி இறைத்தான். வியாபாரிகளின் கபட தேவதையான பணத்துடன் சித்தார்த்தனுக்கு இருந்த துச்சமான மனநிலையை வெளிப்படுத்திய விதம்தான், சூதாட்டத்தில் பணம் சம்பாதித்து அதை மதுவிலும் மங்கையிலும் செலவழித்த முறை!

சில சமயம் ஆயிரக்கணக்கில் பணம் கிடைக்கும்; சில இரவுகளில் ஆயிரக்கணக்கில் தொலைப்பான். ஒரு தடவை கடன் தொகை அதிகமானபோது, அதற்காக அவனது வீட்டைக் கடனாளிகள் எடுத்துக்கொண்டனர். பணம் சம்பாதிப்பதில் பேராசையும், அதற்காக அலையவும் சித்தார்த்தன் விரும்பினான். இத்தகைய சந்தர்ப்பங்களில் மட்டுமே - இந்த மனோநிலையில் மட்டுமே அவனால் சற்றாவது மகிழ்ச்சியடைய முடிந்தது. அலுப்பும் சோம்பலும் நிறைந்த அவனது வாழ்க்கையில் சற்று ஆறுதல் தந்தது. சுறுசுறுப்பான ஒரு சூதாட்டக்காரனின் தாராளமான செலவுகளும், அதற்கே உரிய சட்டதிட்டங்களும்தான். சூதாட்டத்தில் பெரிதாக நஷ்டம் ஏற்பட்டால், அதை எப்படி ஈடு செய்வதென்று யோசிப்பதுதான் அடுத்த கட்டம். கடன் வாங்கியவர்கள் சரியான நேரத்தில் திருப்பித் தராவிட்டால், மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தான். அவர்களை மிரட்டிப் பணம் பெற்று, சூதாட்டத்தில் செலவழித்தான்.



விளையாட்டில் ஏற்படும் நஷ்டத்துக்காக வருத்தப்பட்டதுடன், திரும்பப் பெற ஆர்வமும் கொண்டான். ஏழைகள் மற்றும் வறியவர்களைப் பார்க்கும்போது அவனுக்குத் தோன்றிய இரக்கமும் பரிதாபமும், அப்படிப்பட்டவர்களுக்குத் தன்னால் இயன்ற அளவில் உதவி செய்வதும் அவனிடமிருந்து சுத்தமாக மறைந்தது. இப்போது அவன் கடின இதயம் கொண்ட ஒரு வியாபாரி மட்டுமே. உண்ணும்போதும் உறங்கும்போதும்கூட ஆயிரக்கணக்கில் பணம் சம்பாதிப்பது எப்படி என்று மட்டுமே யோசிக்கிற சராசரி மனிதனாகியிருந்தான்.

மனத்தில் ஏற்பட்ட ஒருவித மந்தத் தன்மையிலிருந்து சிலபோது விடுதலை கிடைத்தது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தனது படுக்கை அறையிலுள்ள கண்ணாடியில் பிரதிபலிக்கும் தன் உருவத்தையே பார்த்தான். முகம் முதுமையால் பீடிக்கப்பட்டும், முடி நரைத்தும் ஒருவிதமான தோற்றத்தை அடைந்திருந்தான். வெட்க உணர்வும், குற்ற உணர்வும் அவன் மனத்தைப் புரட்டியது. இதிலிருந்து விடுபட மீண்டும் சூது விளையாட்டை நாடுவான். மனத்தின் இடிபாடுகளிலிருந்து தப்பிக்க மதுபானத்தையும் நிரந்தரமாக நாடத் தொடங்கினான். அர்த்தமற்ற ஒரு வாழ்க்கை வளையத்துள் சிக்கிக்கொண்டு அவன் நோயாளியாகவும், சரியான காலத்துக்கு முன்பே வயோதிகத்தன்மை பெற்றவனுமானான்!

இந்த சந்தர்ப்பத்தில்தான் சித்தார்த்தன் ஒரு கனவு கண்டான். மாலை நேரத்தில் சித்தார்த்தன், கமலாவுடன் அவளது பூந்தோட்டத்தில் அசோக மர நிழலில் அமர்ந்து வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருக்கிறான். சட்டென்று கமலாவின் முகபாவம் மாறுகிறது. கோபத்துடன் பேசத் தொடங்கினாள். அவளுக்கேற்பட்டிருந்த துயரத்தையோ, சோம்பலையோ பேச்சுக்கு நடுவே அவள் மறைக்கவில்லை. முதன்முதலாக புண்ணியாத்மாவான புத்தரைப்பற்றிப் பேசுமாறு அவனிடம் கேட்டுக் கொண்டாள். புத்தரின் தோற்றம், அவரது அமைதியும் பவித்திரமும் நிறைந்த பிற குணங்கள் குறித்தும் ஏராளமான விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினாள். வெகு நேரம் சித்தார்த்தன் புத்தரைக் குறித்துப்

பேசினாள். எல்லாவற்றையும் கவனித்துக் கேட்ட கமலா கடைசியில், ஒரு பெருமூச்செறிந்தபடி பேசினாள்: "ஒருவேளை நான் திடுமென்று புத்தரின் உபதேசங்களையேற்று, அவரது சீடப்பெண்ணாக மாறலாம். என்னுடைய நந்தவனம் மற்றும் வீட்டை அவருக்கு அர்ப்பணித்து, அந்த மகானின் தத்துவங்களை மனமார ஏற்று, மீதமுள்ள என் வாழ்நாளைக் கழிக்க நேரலாம்..." என்றவள் சித்தார்த்தனிடம் தனது அன்பை வெளிப்படுத்தும் செயல்களால் அவனை மிகவும் மகிழ்ச்சிப்படுத்தினாள். அவளிடமிருந்து மொத்த வசிய சக்தியையும் ஒன்று திரட்டி வெளிப்படுத்தினாள். அவனைத் தன் மார்புடன் சேர்த்து அணைத்து, அவன் உதடுகளில் அழுத்தி முத்தமிட்டாள். திடுமென்று தோன்றி மறையக்கூடிய மாயமான சுகத்தின் கடைசித் துளியையும் சுவைத்துத் தீர்க்கும் வேட்கையுடன் அவள் இருப்பதாகத் தெரிந்தது. மரணமும், தீவிர உணர்வும் இவ்வளவு நெருங்கியவை என்பதை சித்தார்த்தன் இதற்கு முன் உணர்ந்ததே இல்லை!

அந்த அன்பு வெளிப்பாட்டுக்குப் பிறகு கமலாவின் கண்களில் நீர் நிறைந்தது. அவள் முகம் சித்தார்த்தனது முகத்தை நெருங்கியது. இருவரும் அந்த மாலை நேரத்து இளம் வெயிலை முகங்களில் வாங்கியவாறு புல்தரையில் அப்படியே மல்லாந்து படுத்திருந்தனர் - வெகு நேரம் வரையில்! கமலாவின் கண்களில் துயரமும், முகத்தின் சுளிவுகளில் வயோதிக அடையாளங்களும் மறைந்திருப்பதை கவனித்தான். அவளது பேரழகு நிறைந்த முகமலரில் சோம்பலும், ஏமாற்ற உணர்வும் கறுப்பு நிழலைப் படரவிட்டிருந்தது. கமலாவின் வாழ்க்கை வசந்தம் உலர்ந்து, கருகிய மலர் போல் நிலத்தில் உதிர்ந்து விழுந்தது. அந்த வாழ்க்கை அர்த்தமற்றதாக இருந்தது என்பதையும், அதற்கென்று பிரத்தியேகமாக எந்த ஒரு லட்சியமும் இல்லையென்பதையும், இன்று அவள் மரணத்தைக் குறித்து பயப்படுகிறாள் என்பதையும் அந்த ஆழமான நீலநிறக் கண்கள் அவனிடம் மௌனமான மொழியில் மந்திரிப்பதாகத் தோன்றியது. சித்தார்த்தனின் தலைமுடி ஆங்காங்கு நரை தட்டியிருந்தது. தெளிவற்றதாக இல்லை



யென்றாலும் ஆழமான பயத்துடன்தான் அன்று சித்தார்த்தன் அவளிடமிருந்து விடைபெற்றான்.

அந்த இரவை சித்தார்த்தன் நடனமணிகள் மற்றும் பாடகிகளுடன் சேர்ந்து உல்லாசமாகக் கழித்தான். ஏராளமான நண்பர்களை அன்றைய விருந்துக்கு அவன் அழைத்திருந்தான். பலவகையான மது வகைகளும், பலகார வகைகளும் விருந்தில் பரிமாறப்பட்டன. அந்த வீடே அன்று பாட்டும், சிரிப்பும், மகிழ்ச்சியும், கும்மாளமுமாக நிறைந்திருந்தது. தான் எல்லாரைவிடவும் உயர்ந்தவன் என்ற தோரணையில் விலை உயர்ந்த உடை மற்றும் வாசனைத் திரவியங்களுடன் வந்த விருந்தாளிகளை தகுந்த மரியாதையுடன் வரவேற்று உபசரித்தான். ஏராளமான மதுவை அருந்தினான். அன்று ஏறத்தாழ நள்ளிரவு வேளையில் படுக்கையறைக்கு வந்தான். படுத்தவுடன் களைப்பும், மனோ வேதனையும் அவனை சூழ்ந்துகொண்டு வாட்டி வதைத்தன. கடுமையான ஏமாற்றத்தில் அவன் மனம் உமித்தீ மாதிரி எரிந்தது. உறக்கம் வரவில்லை.

அவனது இதய பாரம் அதிகரித்தது. ஒரு கட்டத்தில் அதை சகித்துக்கொள்ள முடியாது என்றும் தோன்றியது. தன்னால் இந்தப் போலி வாழ்க்கையைத் தொடர முடியாது. ருசியற்ற மது போலவோ, கம்பிகள் அறுபட்ட இசைக்கருவி போலவோ, அவன் இதயம் உபயோகிக்க முடியாததாக இருந்தது. சொந்த நடவடிக்கைகளைக் குறித்து யோசித்தபோது, அவன் மனமே அவனைக் குற்றஞ்சாட்டியது. சுருக்கங்கள் விழுந்த முகமும், மதுவின் மணம் படிந்த வாயும், வாசனைத் தைலங்கள் தேய்த்த தலைமுடியும் அவனுக்குள் குற்ற உணர்வைத் தோற்றுவித்தன. அர்த்தமற்ற தனது இந்த வாழ்வை முடித்துக்கொண்டால் என்ன என்றுகூட சித்தார்த்தனுக்குத் தோன்றியது. சுற்றிலும் கடுமையான இருட்டு பரவியிருந்தது. தன் ஆத்மாவையும் இந்த இருட்டு கவ்வி யிருக்கிறது. ஏறத்தாழ பொழுது விடியும் நேரத்தில்தான் சித்தார்த்தன் சற்றுக் கண் அயர்ந்தான். சூனிய நிலையில் இரண்டு அல்லது மூன்று யாமங்கள் படுக்கையில் மல்லாந்தபடி படுத்திருந்தான். அப்போது அவன் மீண்டும் ஒரு கனவு கண்டான்.

கமலா, தங்கக் கூண்டு ஒன்றில் அழகாகப் பாடும் மைனா ஒன்றை வளர்த்து வந்தாள். அந்தப் பறவையை சித்தார்த்தன் கனவில் கண்டான். வழக்கமாகக் காலையில் கண் விழித்தவுடன் பாட்டுப் பாடும் அந்த மைனா, அன்று மௌனமாக இருந்தது. ஆச்சரியமடைந்த சித்தார்த்தன் கூண்டை நெருங்கிப் பார்த்தான். இறந்துபோன மைனா, விறைத்த உடலுடன் கூண்டின் அடித்தட்டில் மல்லாந்து கிடந்தது. கூண்டைத் திறந்து அதைக் கையில் எடுத்த சித்தார்த்தன், ஒரு விநாடி அதை உள்ளங்கையிலேயே வைத்திருந்து, பிறகு பாதையில் வீசியெறிந்தான். சட்டென்று அவனுள் ஒருவிதப் பீதி பரவியது. கடுமையான நெஞ்சு வலியுடன் அவன் இப்படி நினைத்துக் கொண்டான். 'தன்னிடமிருந்த விலையுயர்ந்த பொருள்கள் எல்லாம், நன்மையானவை எல்லாம் இந்த அழகான பறவையைப் போலவே இறந்து, விறைத்துப் போய்விட்டன. தானும் இப்போது இப்படிப்பட்ட ஒரு பிணம் மட்டுமே!'

துயரமான இந்தக் கனவிலிருந்து விழித்தபோது, ஆழமான துயரம், சித்தார்த்தனை அநாதரவான நிலைமைக்குத் தள்ளி விட்டிருந்தது. இதுவரையிலான தனது வாழ்க்கை அர்த்தமற்றது என்றும், அதில் பெருமிதப்படுவதற்கு எதுவும் இல்லையென்றும் அவனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. உயிருள்ளதாக எதுவும் தற்போது தன்னிடம் கிடையாது. விலையுயர்ந்ததாக, தான் நினைத்த எதுவுமே இப்போது தன்னிடம் இல்லை. உடைந்த கப்பலிலிருந்து கரையை நோக்கி நீந்தி வரும் பரிதாபத்துக்குரிய ஒரு பயணி போல இருந்தது சித்தார்த்தனது அப்போதைய நிலை.

சித்தார்த்தன் தாங்கமுடியாத துயரத்துடன் அருகிலிருந்த தனது பூந்தோட்டத்துக்குச் சென்றான். தட்டிப்படலை இழுத்து மூடி ஒரு மாமரத்தின் அடியில் அமர்ந்தான். அவன் உள்ளம் அதிகப்படியான பயத்தில் துடிக்கத் தொடங்கியது. மரணம் நெருங்குவதாகத் தோன்றியது. 'நிமிடங்கள் செல்லச்செல்ல, தான் இறக்கிறோம் - வாடிக் கருகுகிறோம்' என்று உணர்ந்தது. படிப்படியாகச் சற்று நேரத்தில் அவன் மனம் அமைதியடைந்தது.



அந்த சமயத்தில் இப்படிப்பட்ட சிந்தனைகள்தான் அவனைச் சூழ்ந்தன.

'எப்போது நான் பூரண மகிழ்ச்சியோடு இருந்தேன்? எனக்கு எப்போதெல்லாமோ மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது! சிறு வயதில் பண்டித பிராமணர்கள் என்னைப் புகழ்ந்து நாலு வார்த்தைகள் பேசியபோதும், சக மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதில் அவர்களைவிட அதிகமாக நான்கு சுலோகங்களைச் சொன்னபோதும், பிராமணர்களுடன் சேர்ந்து அவர்களது ஹோம கர்மங்களுக்கு உதவும்போதும் நான் அதிகமான மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைந்திருக்கிறேன். அவ்வப்போது மனத்தில் 'கடவுள் உன்னைத் திரும்பத் திரும்ப அழைக்கிறார்; உனக்கு முன்பாக உள்ள கடவுளின் வழியை நீ பின்தொடர வேண்டும்' என்பது போன்ற சிந்தனைகள் எழுந்தன.

இளமைப் பருவத்தில் எனது லட்சியம் 'நான்' என்கிற பிரபஞ்ச ரகசியத்தின் பொருளைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதில் ஈடுபட்டிருந்தது. அதற்காகத் தனிமையில் முயற்சி செய்தபோதும், வனவாசிகளான பைராகிகளுடன் சேர்ந்து கடுமையான தினசரிப் பயிற்சிக்கு ஆளாகி மனத்துக்கும், உடம்புக்கும் பக்குவம் தேடியபோதும் தனக்கு மகிழ்ச்சி கிடைக்கவே செய்தது. அப்போதும்... 'ம்... முன்னால் போ! இதுதான் உனக்கு சரியான பாதை!' என்று உள்மனம் தொடர்ச்சியாக மந்திரித்தது. இந்த மந்திர உச்சரிப்பு சித்தார்த்தன் தன் பெற்றோரைப் பிரிந்து பைராகிகளுடன் சேர்ந்து காடுகளில் அலைந்து திரிந்தபோதும், சிரேஷ்டரான புத்தரை சந்தித்தபோதும், அவர் கைவிட்ட அஞ்ஞாதமான ஏதோ சத்தியத்தைத் தொடர்ந்தபோதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த நாத ஒலி அடங்கவில்லை. இந்த நாதம்தான் எனது வழிகாட்டி. அதன் ஒலியைக் கேட்டு எத்தனை நாள்களாகின்றன? என்னுடைய வழிகாட்டி இதுவரை வாழ்க்கையில் என்னைப் பின்தொடர்ந்த வழிகாட்டியின் குரல் இப்போது எவ்வளவு சூனியமாகியிருக்கிறது? இதற்கு ஒரு முடிவே கிடையாதா?

வேட்கையற்று, லட்சியமில்லாமல் மாயையான சுகங்களில் மூழ்கி, இதோ நான் எனது வாழ்க்கையையே நாசப்படுத்தியிருக் கிறேன். நான் சாதாரண மனிதரிலும் கீழ்ப்பட்ட எவ்வளவு மோசமானவனாக மாறியிருக்கிறேன்? நான் எவற்றையெல்லாம் ஒதுக்கியிருந்தேனோ, அந்த முறைகளையும், லட்சியங்களையுமே கைக்கொண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கை வீணானதென்று தெரிகிறது. காமசாமி போன்றவர்களின் வியாபார உலகம் அவனுக்கு இப்போது ஒரு நாடக மேடை போலத் தோன்றியது. நகைப்புக்கிடமான நாடகங்களை ஒவ்வொருவரும் அரங்கேற்றி நடிக்கின்றனர். மற்றவர்கள் அதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறார்கள்!

கமலா மட்டுமே அவனது விருப்பத்துக்குரிய ஒருத்தியாக இருந்தாள். அவன், அவளை நேசித்தான். இப்போதும் அப்படியேதானா? இப்போது அவனுக்கு அவளும், அவளுக்கு அவனும் ஒரு தேவையாக உள்ளனரா? முடிவற்ற விளையாட்டில் அல்லவா அவர்கள் ஈடுபட்டிருந்தனர்? அதற்காக மட்டுமே வாழ வேண்டுமா என்ன? அது ஒரு வெறும் பொழுதுபோக்கு மட்டுமில்லையா? இல்லை. இது சம்சார சாகரத்தின் ஊடாகப் பயணப்படும் முடிவற்ற ஒரு யாத்திரை. அர்த்தமற்ற யாத்திரை! ஒரு தடவை அல்லது இரண்டு தடவை விளையாடிப் பார்க்கலாம் என்றில்லாமல், நிரந்தரமாக ஈடுபடும் இந்த விளையாட்டில் அவனுக்கு விரக்தி தோன்றியது. உடல் முழுவதும் கடுமையாக மரத்துப்போனது போலிருந்தது. அத்துடன் உள்மனத்துள் விலையுயர்ந்த ஏதோ ஒன்று இறந்துபோனது போலவுமிருந்தது.

அந்த நாள் முழுவதும் சித்தார்த்தன் தனது மாந்தோப்பி லேயே பொழுதைக் கழித்தான். தன் தந்தையையும் கோவிந்த னையும் பற்றி எழுந்த சிந்தைகள் அவன் மூளையைச் சூடேற்றின. தனது விருப்பத்துக்குரிய ஜனங்களையும், நாட்டையும் வீட்டையும் துறந்து வெளியேறியது மற்றொரு காமசாமி ஆவதற்காகத்தானா? இரவின் இருள் பரவுவது வரை அவன் தோப்பிலேயே இருந்தான். நட்சத்திரங்கள் ஆகாயத்தில் மெதுவாக உலாவுவதை கனமற்ற மனத்துடன் வேடிக்கை பார்த்த சித்தார்த்தன் இப்படி யோசித்தான்: 'நான் இப்போது எனக்கு சொந்தமான மாந்தோப்பில்தான் இருக்கிறேன்' இப்படி நினைத்தபோதே அவன் முகத்தில் சன்னமான புன்னகை பரவியது. 'இந்த மாந்தோப்பும், வீடும் ஒரு மனிதனுக்குத் தேவையானதுதானா? இல்லை! எனக்கு இவற்றின் தேவை இல்லை!' அவன் மெதுவாக எழுந்தான். மாந்தோப்பிட மும், அதையொட்டி மணம் பரப்பும் பூக்கள் நிறைந்த பூந்தோட்டத் திடமும் என்றென்றைக்குமாக விடைபெற்றான். அன்று முழுவதும் பசியை அடக்க அவன் உணவு எதுவும் சாப்பிடவில்லை. மனத்தைப் போலவே அவன் உடலும் மிகவும் களைத்திருந்தது. பட்டணத்துக்குள் இருந்த தனது வீட்டையும், அலங்கரிக்கப்பட்ட படுக்கை அறையையும், விருந்து அறை மற்றும் உணவுப் பொருள்களை எல்லாம்கூட நினைவு கூர்ந்தான். அவையெல்லாம் தற்போது விலக்கப்பட்டவை. தனக்கு அவை எதுவும் தேவையில்லை என்று தோன்றியது!



அன்றைய இரவின் கடைசி யாமத்தில் சித்தார்த்தன் அந்த நகரத்தை ஒதுக்கிவிட்டுப் புறப்பட்டான். அதன் பின் ஒருபோதும் அவன் திரும்பி வரவில்லை! காமசாமி வெகுநாட்கள் அவனைத் தேடிக் கண்டுபிடிக்க முயற்சி செய்தார். ஒருவேளை சித்தார்த்தன் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களிடம் சிக்கிக் கொண்டானோ என்று காமசாமி நினைத்தார். கமலா மட்டும் அவனைப் பற்றி எதுவும் விசாரிக்கவில்லை. சித்தார்த்தனைக் காணவில்லை என்றவுடன் அவள் அதற்காக வியப்படையவும் இல்லை. சித்தார்த்தன் வீடோ, உறவினர்களோ அற்ற ஒரு காட்டுவாசியாக இருந்தவனவல்லவா? வெறும் ஒரு பிக்ஷாம்தேகி. உண்மையைச் சொன்னால், கமலா ஓரளவு எதிர்பார்த்ததும் கூட. அவர்களிடையே நிகழ்ந்த கடைசி சந்திப்பைப் பற்றி நினைத்தபோது அவளது அனுமானம் உறுதியடைந்தது. எப்படி இருப்பினும் அவள் இதயத்தோடு அதிகமாக நெருங்கவும், அவனது கட்டளைப்படி தன்னையே அவனுக்கு ஒரு காட்சிப் பொருளாக்கவும் முடிந்ததில் கமலா பெரும் மனநிறைவு கொண்டாள்.

'சித்தார்த்தன் காணாமல் போய்விட்டான்!' என்ற சேதி வந்தவுடனேயே, அவள் தங்கக்கூண்டில் தான் வளர்க்கும்

மைனாவை நோக்கி வந்தாள். கூண்டின் கதவை மெதுவாகத் திறந்தாள். அந்த மைனாவை எடுத்து நீல ஆகாயத்தை நோக்கிச் சுதந்திரமாகப் பறக்க விட்டாள். பறந்து மறைந்த அந்தப் பறவை சென்ற திசையையே பார்த்தபடி தூரத்தில் கண்களைப் பதித்தவளாக, எவ்வளவு நேரம் நின்றிருந்தாள் என்று கமலாவுக்கே தெரிய வில்லை. மறுநாளிலிருந்து கமலா, தனது தாசி வேலையை நிறுத்திக் கொண்டதுடன் அதற்காகப் பயன்படுத்தி வந்த அறையை இழுத்துப் பூட்டவும் செய்தாள். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவள் எந்த வாடிக்கையாளரையும் சந்திக்கவில்லை. வரவேற்கவும் இல்லை. சில நாட்களுக்குப் பிறகு கடைசி முறையாக சித்தார்த்தனுடன் தான் கொண்ட உறவு, கர்ப்பமாகத் தன் வயிற்றில் வளர்வதை உணர்ந்தாள்.

## 8. நதிக்கரையில்...

சித்தார்த்தன் பட்டணத்திலிருந்து நெடுந்தொலைவிலுள்ள காட்டில் வெகுநேரம் அலைந்தான். அவனுக்கு ஒரு விஷயம் புரிந்தது. இதுவரையிலான தனது வாழ்க்கை வியர்த்தமானது. மனத்தை மரத்துப் போகச் செய்யும் ஒரு வாழ்க்கையைத் தொடர்வது அசாத்தியமானதாகத் தெரிந்தது. பாட்டுப் பாடிய மைனாப் பறவை இறந்துவிட்டது. அதன் மரணம் தொடர்பான கனவை நினைத்துப் பார்த்தான்.

தன் இதயத்துடிப்பும் நின்றுவிட்டது போல உணர்ந்தான். சம்சாரக் கடலில் எந்தவித உதவியும் அற்றவனாக இடைவிடாது நீந்திக் கை கால்கள் களைப்படைந்து இப்போது மூழ்கி இறக்கிறோம். நான்கு திசைகளிலிருந்தும் மரணம் தனது பயங்கரமான முகத்தால் கேலி செய்தது. களைப்பும், துயரமும் இதுவரை இந்த அளவு கடினமாக இருந்ததில்லை. சித்தார்த்தனுக்கு சாந்தியும், ஆறுதலும் தரக்கூடிய எதுவுமே இந்த உலகத்தில் கிடையாது.



நெருக்கடி நிறைந்த தனது வாழ்க்கையை இத்துடன் முடித்துக்கொண்டால் என்ன என்றுகூட சித்தார்த்தனுக்குத் தோன்றியது. எங்காவது விழுந்தோ, புலிகள் தன் மீது பாய்ந்து கடித்துக் குதறியோ, ஒரு துளி விஷம் கலந்த மது அருந்தியோ எப்படியாவது தான் இறந்துவிட வேண்டும். மரணம், வெட்கத் துக்குரிய தனது கடந்த கால வாழ்க்கைக்கு ஒரு திரையிட்டுவிடும். தான் நீண்ட ஓர் உறக்கத்தில் ஆழ்ந்து விடலாம். ஒருபோதும் விழிக்க முடியாத உறக்கம். அதுதான் இப்போதைய தேவை! எல்லாவிதமான களங்கங்களும் தனது வாழ்க்கை மீது கறை தடவியுள்ளது. செய்யாத பாவங்கள் ஏதாவது உள்ளதா என்ன? இல்லை! இதற்கெல்லாம் பொறுப்பாளி யார்? தானேதான்! இந்த நிலையில் மேற்கொண்டும் வாழ்வது உசிதம்தானா? மூச்சு விடுதல், உணவு உண்ணுதல், உறங்குதல், பெண்களுடன் உறவு கொள்ளுதல்... என்பது மாதிரியான வாழ்க்கை வட்டத்தை அவன் முற்றிலுமாக வெறுத்தான். அதற்கெல்லாம் ஓய்வு அளிக்க வேண்டியது அவசியம்!

சித்தார்த்தன் அந்தக் காட்டுக்குள் பாய்ந்து வரும் அகன்ற நதிக்கரைக்கு வந்தான். தனது இளமைப் பருவத்தில் கௌதம புத்தரை சந்தித்துவிட்டுத் திரும்பியபோது, இந்த நதியைக் கடந்துதான் காமசாமி வசிக்கும் பட்டணத்தை அடைந்தான். தன்னிடம் கூலிகூட வாங்காமல் இந்தக் கரைக்குக் கொண்டுவந்து சேர்ந்த நற்குணம் வாய்ந்த படகுக்காரனை நினைவு கூர்ந்தான். சீறிப்பாய்ந்தோடி வரும் ஆற்றைப் பார்த்தபடி கரையில் சிறிது நேரம் நின்றான் சித்தார்த்தன். பசியும், களைப்பும் அவனை பலவீனப்படுத்தியிருந்தன. இனிமேல் எதற்காக முன்னோக்கிச் செல்ல வேண்டும்? எங்கு போவது? தனக்கு எந்த ஒரு லட்சியமும் கிடையாது. வேதனைக்குரிய ஒரேயொரு எண்ணமாக மீந்திருப்பது அழியக்கூடிய இந்த உயிரை முடித்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே. பழைய கள்ளைத் துப்பிவிட வேண்டும். கசப்பும் வேதனையும் நிறைந்த சித்தார்த்தனது வாழ்க்கைக்கு ஓய்வளித்து விடு. அதுமட்டும் நடந்துவிட்டால், திகைப்பூட்டும் - பயமேற்படுத்தும் கனவுகளைக் காண வேண்டி இருக்காதே!

நதிக்கரையில் தென்னை மரம் ஒன்று சற்றுச் சாய்வாக வளர்ந்திருந்தது. சித்தார்த்தன் அதன்மீது சாய்ந்து நின்றான். கைகளால் மரத்தைத் தழுவியபடி கீழ்ப்புறம் தெரிந்த ஆழமான நீர்ப்பரப்பை கவனித்தான். அந்த விநாடியில் அப்படியே கையை நழுவ விட்டுச் சுழல்கள் நிறைந்த நீரில் களைத்து விழுந்துவிட உளமார விரும்பினான். ஆற்றின் அடிப்பரப்பை அடைந்து விடலாம். ஆழமான அடிப்பரப்பில் நீரின் குளிரிலும், சூனியதையிலும் சித்தார்த்தனின் ஆத்மா பிரதிபலித்தது. அவன் ஒருவித தர்மசங்கடத்தில் தத்தளித்தான். வாழ்க்கையை இப்போதே முடித்துக் கொள்வதே நல்லது. தான் வெறுக்கும் இந்த உடலை முதலைகள் கடித்துக் குதறட்டும். மந்தமும், மோசமான நடவடிக்கைகளும் படிந்த தன் ஆத்மா அப்படியாவது அணையட்டும். பிசாசுகள் தனது இதயத்தைப் பிளந்து ரத்தத்தை உறிஞ்சட்டும்!

உணர்வேறிய முகத்துடன் சித்தார்த்தன் ஆற்றின் நீர்ப்பரப்பைப் பார்த்தான். அவனது பார்வை ஆழத்தில் இறங்கி வெறித்தபடி இருந்தது. அவன் முகம் அதில் பிரதிபலிக்கவும் செய்தது. அதைப் பார்த்தபோது அருவருப்பாக இருந்தது. தன் கைகளைச் சற்று தளர்த்தி, தென்னை மரத்திலிருந்து விடுவித்து, உடலை ஆற்று நீரில் வீச சித்தார்த்தன் தயாரானான். கண்களை மூடி அவன் மரணத்தை நேரிட்டான்.

சரியாக அதே சமயத்தில் வெகு தொலைவிலிருந்த சித்தார்த்தனின் ஆத்மாவிலிருந்து ஒரு குரல் எழுந்தது. அது ஒரு வார்த்தையாக இருந்தது. எந்தவித யோசனையுமின்றி அவன் அதை உச்சரித்தான். எல்லா பிராமணர்களுடைய மந்திர உச்சாரணம் தொடங்குவதும் முடிவதும் அந்த ஒரு வார்த்தையில்தான். அது பவித்திரமான 'ஓம்'கார நாதம். மனித ஆத்மாவுக்குப் பரிபூரணத்தைத் தரும் வல்லமையை எடுத்துரைக்கும் புண்ணியம் நிறைந்த சொல்! ஓம்கார நாதம் சித்தார்த்தனின் காதுகளில் எதிரொலித்த அதே விநாடியில், மயங்கிக் கிடந்த அவன் ஆத்மா விழித்தது. தான் செய்யவிருந்த முட்டாள்தனம் அவனுக்குச் சட்டென விளங்கவும் செய்தது.



சித்தார்த்தன் பீதியடைந்தான். தான் என்ன செய்யவிருந்தோம்? தற்கொலை முயற்சியா? அந்த அளவுக்குத் தன் மனம் மாறாட்டம் அடைந்துவிட்டதா? என்ன ஒரு மோசமான நிலை! மனத்துக்கு அமைதி ஏற்படுத்த உடலை அழிப்பதா? கடந்த கால வாழ்க்கையின் வலிகளும், ஏமாற்றங்களும் அவன் மனத்தை மரத்துப் போகச் செய்திருந்தன. அந்த ஓம்கார நாதமோ உயிரற்றுப் போன ஒன்றுக்குப் புத்துயிர் ஊட்டியது. அத்துடன் தான் மேற்கொண்ட கடந்தகால வாழ்க்கையின் ஈனமான பகுதிகள் மிகவும் தெளிவாகப் புலப்பட்டன.

சித்தார்த்தன் அந்த மந்திரச் சொல்லை மறுபடி உச்சரித்தான். 'ஓம்!' விவரிக்க முடியாத அந்த இடைவெளியில் பிரபஞ்ச சத்தியத்தைப் பற்றி கூடுதலான தெளிவு பிறந்தது. வாழ்க்கையின் நிலையாமையையும், வாழ்க்கையின் பிற பவித்திரமான உணர்வுகளும் அவனைப் புல்லரிக்கச் செய்தன.

இந்த நிலை ஒரு மின்னல் கீற்றுப் போல விநாடி நேரத்துக்கும் குறைவாகவே இருந்தது. விநாடி நேர மனத்தின் ரசவாதம்! துயரத்தின் கனம் தாங்கமாட்டாதவனாக சித்தார்த்தன் அருகிலிருந்த மற்றொரு தென்னை மரத்தின் அடிப்பகுதியில் சாய்ந்து உட்கார்ந்தான். சற்று நேரத்துக்குள் 'ஓம்'கார நாதத்தை உருவிட்டபடியே தென்னை மரத்தின் வேர்ப்பகுதியில் தலைசாய்த்து எல்லாவற்றையும் மறந்தவனாக ஆழ்ந்து உறங்கத் தொடங்கினான்.

ஆழ்ந்த, கனவுடனான ஒரு நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான் சித்தார்த்தன். எவ்வளவு நேரம் இப்படி உறங்கினான் என்று அவனுக்கே விளங்கவில்லை. நீண்ட நேரம் - மணிக்கணக்கில் உறங்கிவிட்டதாக அவனுக்குத் தோன்றியது. திடுமென்று கண் விழித்து எழுந்தபோது, பத்து ஆண்டுகள் கடந்துவிட்டதுபோல் தெரிந்தது. உடல் மீது நீர்த்துளிகள் துளித்துளியாகத் தெறித்து விழுந்ததுடன் சிற்றலைகளால் எழுந்த சத்தமும் கேட்டது. இருப்பினும் தான் எங்கிருக்கிறோம்? எப்படி அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள முடியவில்லை. மேற்புறமாக அவன் பார்த்தபோது மரங்களின்

உச்சிப்பகுதிகளும், பாடிப்பறந்த பறவைகளும் இன்னும் உயரத்தில் வெண்மை கலந்த ஆகாயமும் தெரிந்தன.

தான் எங்கிருக்கிறோம், எப்படி அந்த இடத்தை அடைந்தோம் என்பதும் படிப்படியாக நினைவுக்கு வந்தன. மீண்டும் அதே இடத்தில் அப்படியே படுத்திருக்க வேண்டுமென்று தோன்றியது. வாழ்க்கையின் கடந்த கால நிகழ்ச்சிகள் பனிப்படலம் ஒன்றினால் மூடப்பட்டிருந்தது. இறந்த காலத்தின் ஆழப்பகுதிகளில் அடக்கம் செய்யப்பட்ட அவை, சித்தார்த்தனுக்கு இப்போது அவ்வளவு முக்கியமானதாகப் படவில்லை. உறக்கத்திலிருந்து விழித்ததுடன் தனது இறந்தகால வாழ்க்கை முற்றுப்பெற்றுவிட்டது. இப்போது ஏற்பட்டிருப்பது ஒரு மறுபிறப்பு. கடந்தகால வாழ்க்கை வெட்கரமானதாகவும், மனத்தை அலுப்படையச் செய்வதாகவும் இருந்ததால், அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவர சீறிப்பாய்ந்து வரும் நதியின் பெருக்கில் ஆழப்பகுதியில் பாய்ந்து விடுவதென்று தான் முடிவெடுத்ததையும், பின்பு தென்னை மரத்தின் அடியில் அமர்ந்திருந்தபோது ‘ஓம்’கார நாதம் கேட்டதும் நினைவுக்கு வந்தது. அதன்பிறகு கண்விழித்தபோது உலகம் முற்றிலும் புதிய கோணத்தில் தென்பட்டது. மிருதுவான குரலில் மீண்டும் அந்த நாதத்தை எழுப்பினான். “ஓம்!” அந்த உறக்கமே, ‘ஓம்’ என்கிற நாதப்பிரம்மத்துக்குள் முழுமையாக ஆழ்ந்து இறங்கும் ஒரு முயற்சியாக இருந்தது.

எவ்வளவு சுகமான உறக்கம்! மீண்டும் புத்துணர்வையும், தெளிவையும் வரவழைத்த ஆழ்ந்த நீண்ட ஓர் உறக்கம். அவன் அதை வரவேற்றான். ஒருவேளை அவன் தண்ணீரில் பாய்ந்து மூச்சுத்திணறி இறந்திருக்கலாம். இது ஒரு புதிய வாழ்க்கையாகவும் இருக்கலாம். இல்லை... அப்படி நிகழ்ந்திருக்க வாய்ப்பு இல்லை. கைகால்கள் எல்லாம் பழையபடியே உள்ளன. தான் ஒருபுறத்தை மட்டுமே ஆதரிக்கும் சித்தார்த்தனேதான். ஆனால், இந்த சித்தார்த்தன் பல காரியங்களிலும் பழைய சித்தார்த்தனிலிருந்து மாறுபட்டிருந்தான். இப்போது முற்றிலும் உணர்வு வாய்ந்த உற்சாகமான மனிதனாக இருந்தான்.



சித்தார்த்தன் எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தபோது மஞ்சள் ஆடை அணிந்து, முண்டனம் செய்த தலையுடன் ஒரு சன்னியாசி தனது எதிர்ப்புறத்தில் அமர்ந்து தியானம் புரிவதை கவனித்தான். ஜடைமுடிகள் இல்லாமல், சிந்தனை வயப்பட்டு அமர்ந்திருந்த அந்த யோகீ வரனை சித்தார்த்தன் சற்று நேரம் ஊன்றி கவனித்தான். அது வேறு யாருமல்ல, தன் பிள்ளைப் பருவத் தோழனான கோவிந்தனேதான்! பௌத்த சீடனான கோவிந்தன். கோவிந்தனுக்கும் வயதாகியிருக்கிறது. இருப்பினும் அவன் முகத்தில் உத்வேகம், ஆவல், நம்பிக்கை போன்ற பழைய அடையாளங்கள் இப்போதும் படிந்திருந்தன. தான் அவனை கவனிக்கிறோம் என்பதை உணர்ந்த கோவிந்தன், திரும்பவும் தன்னைப் பார்த்த மாதிரியில் அவன், தன்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பதும் புரிந்தது. கோவிந்தனுக்கு, சித்தார்த்தன் அறிமுகமற்றவனாக இருந்தபோதிலும் அவன் விழித்து எழுவதை எதிர்பார்த்தவாறு கோவிந்தன் எதிர்ப்புறப் பாறை மீது அமர்ந்திருக்க வேண்டும்.

“நான் நன்றாக உறங்கிவிட்டேன். நீ எப்படி இங்கு வந்து சேர்ந்தாய்?” சித்தார்த்தன் கேட்டான்.

“ஆமாம், நல்ல உறக்கத்தில் ஆழ்ந்திருந்தீர்கள்...” கோவிந்தன் பதிலளித்தான்: “பாம்பும், காட்டுப்பன்றியும் குள்ளநரிகளும் நிறைந்த ஆபத்தான இந்த இடத்தில் படுத்து உறங்குவது விவேகமற்ற செயல். நான் சிரேஷ்டரான சாக்கிய முனிவரின் சீடர்களில் ஒருவன். எங்களது ஒரு பிரிவு புனித யாத்திரைக்காக இந்த வழியாகச் செல்லும்போது, நீங்கள் இங்கு படுத்திருப்பதைக் காண நேர்ந்தது. ஆபத்தான இந்த இடத்தில் படுப்பது நல்லதல்ல என்பதால் உங்களைத் தட்டி எழுப்ப முயன்றேன். ஆழ்ந்த உறக்கத்திலிருந்ததால் நீங்கள் கண்விழிக்கவில்லை. எனவே, மற்றவர்களை அனுப்பிவிட்டு நான் உங்களுக்குக் காவலாக இருந்தேன். களைப்பினால் நானும் சற்றுக் கண் அயர்ந்து விட்டேன் என்று தோன்றுகிறது. நீங்கள் கண் விழித்து விட்டதால் நான் விடைபெற விரும்புகிறேன். அனுமதி தாருங்கள். நான் எனது சங்கத்தாருடன் சேரவேண்டும்!”

"யோகி வரரே எனக்குக் காவல் இருந்ததற்கு நன்றி. மகானான சாக்கிய முனிவரின் சீடர்கள் இரக்கம் உள்ளவர்களும், சிரேஷ்டமானவர்களும்தான். நீ இப்போது போகலாம்!"

"நான் புறப்படுகிறேன். உங்களுக்கு மங்களம் நேர்வதாக."

"உனக்கு மறுபடியும் எனது நன்றி."

"அப்படியானால் நான் புறப்படுகிறேன்!" கோவிந்தன் குனிந்த தலையுடன் பேசினான்.

"அப்படியே ஆகட்டும் கோவிந்தா!"

சித்தார்த்தனது வார்த்தையைக் கேட்டு, கோவிந்தன் ஒருகணம் அப்படியே அசைவற்று நின்றான்.

"மன்னிக்க வேண்டும். உங்களுக்கு எப்படி என் பெயர் தெரிந்தது?"

சித்தார்த்தன் சிரித்துக் கொண்டான். "கோவிந்தா எனக்கு உன்னை நன்றாகவே தெரியும். உன் அப்பாவிடமும், வேதபாட சாலையில் பிராமண குமாரர்களுடனும், யாக, ஹோமங்கள் நடத்தும்போதும் உன்னை நான் அறிந்திருந்தேன். நீ ஒரு காலத்தில் பைராகியாக இருந்ததும், கடைசியில் ஜேதவனத்தில் நீ பௌத்த மார்க்கத்தை ஏற்றுக்கொண்டதும் எனக்குத் தெரியும்."

"ஓகோ.. நீ சித்தார்த்தன் அல்லவா?" கோவிந்தன் உரத்த குரலில் கேட்டான். அவனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லாதிருந்தது. "இப்போது எனக்கு உன்னை அடையாளம் தெரிந்துவிட்டது. நான் ஏன் இதற்கு முன்பே உன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை? வணக்கம் சித்தார்த்தா. மீண்டும் உன்னை சந்திக்க நேர்ந்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்!"

"எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த சந்திப்புக்காக நானும் மகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய உறக்கத்தின்போது எந்தவிதத் தொந்தரவும் ஏற்படாமல் எனக்குக் காவலாக இருந்ததற்கு மீண்டும் எனது நன்றி. ஆனால், அது அவசியமாக இருக்கவில்லை. அது போகட்டும். நண்பனே நீ இப்போது எங்கே போகிறாய்?"



"குறிப்பாக இன்ன இடத்துக்கு என்று சொல்ல முடியாது. பிட்சுக்களான நாங்கள் மழைக்காலத்தைத் தவிர மற்ற நேரங்களில் ஊர் ஊராகச் சுற்றுவோம். புத்தரின் உபதேசங்களை நாடெங்கிலும் பரப்புவதுதான் எங்களது வாழ்க்கை லட்சியம். இதெல்லாம் இயல்பான ஒன்றாக நடந்து கொண்டிருக்கிறது. நீ எங்கே போகிறாய் சித்தார்த்தா?"

"ஒரு வகையில் நானும் உன்னைப் போல்தான். குறிப்பாக எங்கும் செல்ல வேண்டியதில்லை. ஒரு புனிதப் பயணம் புறப்பட்டிருக்கிறேன் எனலாம்..." சித்தார்த்தன் பதிலளித்தான்.

"நீ இப்போது புனிதப் பயணம் புறப்பட்டிருந்தால் நான் அதை நம்புகிறேன். ஆனால், மன்னிக்க வேண்டும் சித்தார்த்தா. உன்னைக் கண்டால் நீ புனிதப் பயணம் புறப்பட்டிருப்பது போல் தோன்றவில்லையே? ஒரு பெரிய வியாபாரப் பிரமுகர் மாதிரித் தெரிகிறது. விலையுயர்ந்த உடை, செருப்பு மற்றும் வாசனைத் தைலங்கள் தேய்த்தபடி வெகு அழகான தோற்றத்துடன் ஒருவர் புனிதப் பயணம் புறப்படுவது இதுதான் முதல் தடவையாக இருக்கும். ஆனால், இதெல்லாம் ஒரு பைராகிக்குப் பொருத்தமான தல்ல."

"நீ பழையபடி ஒவ்வொன்றையும் ஊன்றி கவனிக்கிறாய். கூர்மையான உன் கண்கள் எல்லாவற்றையும் கவனிக்கவே செய்கின்றன. ஆனால், இப்போதும் நான் ஒரு பைராகிதான் என்று உன்னிடம் சொன்னேனா? நான் புனிதப் பயணம் புறப்பட்டிருப்பது என்னவோ உண்மைதான்!"

"நீ தீர்த்த யாத்திரை போவது இந்த முறையில்தானா? பல வருடங்களாக தீர்த்த யாத்திரை செய்யும் நான், இப்படியொரு வேடத்தில் எந்தப் பயணியையும் பார்த்ததே இல்லை!"

"அன்பு நண்பா, நீ சொல்வதை நானும் ஒப்புக்கொள்கிறேன். இன்று, நீ முதல் தடவையாக அப்படிப்பட்ட தீர்த்த யாத்திரைப் பயணியைப் பார்க்கிறாய். இந்த உலகில் வெளிவேஷங்கள் எல்லாம் தற்காலிகமானவை என்பது உனக்கும் தெரியும். ஒருவரது

உடையும், செருப்பும், வாரிவிடப்பட்ட தலைமுடியும் முற்றிலுமாக அழியக்கூடியது. நமது உடம்பே அழியக்கூடியதல்லவா? நீதான் பார்க்கிறாயே! பிரபுக்களைப்போல் நான் உடை உடுத்தியிருப்பது ஒரு காலத்தில் நானும் பணக்கார வியாபாரியாக இருந்ததால், நாகரிகமாக முடி வெட்டி தலைவாரியிருப்பது, சமீப காலம் வரை நானும் ஒரு நாகரிக மனிதனாக இருந்ததால்."

"அப்படியானால் இப்போது நீ யார் சித்தார்த்தா?"

"அது எனக்குத் தெரியவில்லை! உன்னைப்போல் மிகவும் குறைவான அறிவுதான் எனக்கும் உள்ளது. ஒருபோது நான் ஒரு பணக்காரனாக இருந்தேன். இப்போது அதுவும் இல்லை. ஒன்றும் இல்லாதவன். நாளை என்ன நடக்கும் என்பதும் நிச்சயமில்லை. நான் சுற்றியலைகிறேன்."

"உனது பணமெல்லாம் நஷ்டமடைந்து விட்டதா?"

"நண்பா அதையெல்லாம் நான் இழந்து விட்டேன். அல்லது அவை என்னை இழந்துவிட்டன. இதில் நடந்தது எது என்பது எனக்குத் தெரியவில்லை. கோவிந்தா, மாயை நிறைந்த உலகத்தில் விநாடிக்கு விநாடி எல்லாமே தலைகீழாகிக் கொண்டிருக்கிறது. பிராமண குமாரனான சித்தார்த்தன் எங்கே? கோடீ வர பிரபுவாக இருந்த சித்தார்த்தன் எங்கே? வனவாசியாக இருந்த சித்தார்த்தன் எங்கே? நீர்க்குமிழிகளான அவை சட்டென்று மறைகின்றன. கோவிந்தா இதெல்லாம் உனக்குத் தெரியாததா என்ன?"

மனத்தில் பொங்கியெழும் சந்தேகங்களுடன் கோவிந்தன் தனது பால்யகால நண்பனை வெகுநேரம் ஊன்றி கவனித்தான். கடைசியில் புத்தபட்சுக்கள் வழக்கமாகச் செய்வது போல் தலைகுனிந்து வணங்கிவிட்டு அங்கிருந்து நடந்து அகன்றான்.

நடந்து செல்லும் கோவிந்தனையே பார்த்த சித்தார்த்தன் சிரித்துக் கொண்டான். அவன் இப்போதும் தனது பால்யகால நண்பனும், நம்பிக்கைக்கு உரியவனான கோவிந்தனை நேசிக்கிறான். திருப்தி நிறைந்த, ஆனந்தமும் மகிழ்ச்சியும் நிறைந்த



ஒரு சுபவேளையில் தனது உறக்கம் தனக்குள் ஏற்படுத்திய பவித்திரமான பரிவர்த்தனைக்குப் பிறகு சித்தார்த்தனால் யாரையும் அல்லது எதையும் நேசிக்க முடிகிறது. அன்பு நிறைந்த இதயம்தான் அவனிடம் இருந்தது. மாந்திரீக சக்தியால் ஏற்பட்ட ஒரு மாற்றம்தான் இது என்பதில் அவனுக்கு சந்தேகமே இல்லை! அன்பின் ஊற்றான சித்தார்த்தனுக்கு இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா ஜீவஜாலங்களையும் நேசிக்கும் அளவு தணியாத தாகம் உடைப்பெடுத்தது. தன் ஆத்மாவுடன் ஒட்டிப் பிணைந்திருந்த நோய் எதுவென்று சித்தார்த்தனுக்குப் புரிந்தது. அது வேறொன்றுமில்லை, பிறிதொரு பொருளையோ, மனிதனையோ தன்னால் நேசிக்க முடியாமல் இருந்த நிலைதான்.

நடந்து கொண்டிருந்த புத்த பிட்சுவைப் பார்த்த சித்தார்த்தன் மறுபடியும் சிரித்தான். மணிக்கணக்கில் நீண்ட அவனது உறக்கம் அவனுக்கு சக்தியையும் உற்சாகத்தையும் வழங்கிய போதிலும், நாட்கணக்கில் எதுவும் சாப்பிடாமல் இருந்ததால் கடுமையான பசி எடுத்தது. பசியால் சற்று வாட்டமிருப்பினும் மகிழ்ச்சியுடன் பழைய காலத்தைப் பற்றி யோசித்தான். கமலாவிடம் வீம்பாக என்ன பேசினோம்? பசியைத் தாங்கிக்கொள்ளவும், காத்திருக்கவும், சிந்திக்கவும் எல்லாம் முடியும் என்றுதானே? இவைதானே எனது மூலதனமாக இருந்தன? அழிவற்ற மூலதனம்! பல வருடங்கள் தொடர்ந்த களைப்பற்ற முயற்சியின் பலனாகத் தான் அடைந்த சாதனைகள் அவை. இன்று தனது அத்தகைய வல்லமைகள் அழிந்திருக்கின்றன. பசியை அடக்கவோ, சிந்திக்கவோ, பொறுமையுடன் காத்திருக்கவோ இப்போது தன்னால் முடியவில்லை. அழியக்கூடியதும், நிந்தனைக்கு உரியதுமான இந்திரிய சுகங்களுக்கும், பௌதிகமான சொத்துகளுக்காகவும் தான் அவற்றையெல்லாம் பண்டமாற்றுச் செய்ய நேர்ந்துவிட்டது. ஆடம்பரமாகவும், அழகாகவும் வாழ வேண்டும் என்ற ஆசையில் விலையுயர்ந்த பலவும் ஹோமிக்கப்பட்டு விட்டன. நிந்தனைக்கு உரிய நான் முற்றிலும் சூனியமான ஒரு பாதையில் இதுவரை பயணப்பட்டிருக்கிறேன். அதன் விளைவாக இன்று நான் ஒரு சராசரி மனிதனாகியிருக்கிறேன். பரிகாசத்துக்கு உரியவனாகவும்கூட!

சித்தார்த்தன் தன்னுடைய தற்போதைய நிலையை எண்ணிப் பார்த்தான். யோசிக்கும்போது விரக்தி ஏற்பட்டாலும் சிந்தனைக் கம்பிகளை இறுக்கி இணைத்து அதில் சில நாத ஒலிகளை ஏற்படுத்த முயன்றான்.

'தோன்றி மறையும் சுகங்களும் செல்வமும், புகழும் இப்போது என்னைவிட்டுப் பிரிந்துவிட்டன. நான் மீண்டும் குழந்தைப் பருவத்தை அடைந்திருக்கிறேன். என்னிடம் என்னுடையதான எதுவும் இல்லை. அறிவோ, கல்வியோ எதுவுமில்லை. என்ன ஒரு விபரீதம் இது? பருவம் முதிர்ந்து, முடி நரைத்து, உடம்பின் வலுக்குறைந்த பிறகு மீண்டும் குழந்தைப் பருவத்துக்குத் திரும்புவது? தனது விதி ஆச்சரியகரமானது. இந்த எண்ணம் தோன்றியபோது சித்தார்த்தனின் மனத்தில் புன்சிரிப்பு ஒன்று உதித்தது. அப்படியானால், தான் பின்னோக்கிப் போகிறோம்! மீண்டும் நிர்வாணத்துடன், அறிவற்ற ஒரு குழந்தையாக மாறியிருக்கிறோம். பல் இல்லாத பச்சைக்குழந்தை! அதை நினைத்த சித்தார்த்தன் வருந்தவில்லை. நிலையற்ற இந்த உலகத்தின் நிலையை எண்ணிச் சிரிப்புதான் வந்தது. இது முட்டாள்களின் உலகம். மனிதர்களுக்கு எப்படியெல்லாம் விபரீதமான விதிவாய்ப்புகள் ஏற்படுகின்றன. தன்னைப் பொறுத்த வரை எல்லாம் பின்னோக்கி போகிறது. சித்தார்த்தன் இதைத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டபோது, அருகில் அமைதியாகப் பாயும் நதியின் மீது பார்வையை ஓட்டினான். மெதுவான சலசலப்பில் தயங்கித் தயங்கிப் பாயும் நீரின் போக்கும் பின்னோக்கியதுதான். அந்தக் காட்சி அவனுக்கு ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்தது. எத்தனையோ வருடங்களுக்கு முன்பு இந்த நதியில் விழுந்தல்லவா தான் உயிரை விடத் தீர்மானித்தோம்? ஒருவேளை அது வெறும் கனவுதானோ?'

சித்தார்த்தன் முழுமையான ஓர் ஆத்மப் பரிசோதனைக்குத் தயாரானான்.

'வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது! தான் இதுவரை, நிச்சயமாகத் தவறான வழியில்தான் பயணம் செய்திருக்கிறோம்.



சிறுவனாக இருந்த காலத்தில் தேவர்களும், ஹோமமும், யாகமும் என்னைக் கவர்ந்தன. தேவர்களின் உலகத்தின் மீதுதான் எனது கவனம் பதிந்திருந்தது. இளமையின் ஆரம்பத்தில் வனவாசிகளுடன் சேர்ந்து கடினமான தவமுறைகளின் பயனாக அவர்களிடமிருந்து ஆழமாகச் சிந்திக்கவும், இந்திரியங்களைக் கட்டுப்படுத்தவும் கற்றோம். பிரம்ம ரகசியத்தைப் புரிந்து கொள்வதுதான் அப்போதைய லட்சியமாக இருந்தது. அழிவற்ற ஆத்ம ஞானம் பெற வேண்டும். வாலிபப் பருவத்தில் பாப விமோசனம் தேடுவதில் கவனம் செலுத்தினோம். அதற்காகக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்தோம். உடம்பை எப்படிப்பட்ட தாக்குதல் மற்றும் சோதனைகளுக்கும் அசையாததாகப் பதப்படுத்தி வைத்தோம்.

'வெகு நாட்கள் எதையும் சாப்பிடாமல் பட்டினி கிடந்து பசியை அடக்க மிகவும் சுலபமாகக் கற்றோம். அந்த சந்தர்ப்பத்தில்தான் புண்ணிய ஆத்மாவான கௌதம புத்தரின் உபதேசங்களைப் பற்றிக் கேள்விப்பட்டோம். அதன் பலனாகப் பிரபஞ்சத்தின் மொத்த அளவும் அடங்காத அளவுக்கு என்னுள் ஞானப்பிரவாகம் உயிர் ரத்தம் போல், ரத்தக் குழாயின் ஒவ்வொரு இழையிலும் பாய்ந்தன. நூதனமான ஒரு திசையில் பௌத்தப் பிரசாரங்கள் வழிகாட்டின. ஸ்ரீபுத்தரால், சித்தார்த்தன் வெகுவாகக் கவரப்பட்டாலும், பௌத்த சித்தாந்தங்கள் அவனது தாகத்தைத் தணிப்பதாகத் தெரியவில்லை. விரைவிலேயே சித்தார்த்தன் மகானான புத்தரிடமிருந்து விலகினான்.

'காம ரகசியங்களையும், இந்திரிய சுகங்களையும் பிற்பாடு கமலாவிடமிருந்து கற்றான். இந்தக் கலையில் அவள் தேர்ந்தவளாக இருந்தாள். வியாபார விஷயங்களையும், பணம் சம்பாதிக்கும் முறைகளையும் நகரின் பிரதான வியாபாரப் பிரமுகராக இருந்த காமசாமி கற்பித்தார். வியாபாரத்தில் ஈடுபட்டு எத்தனையோ லட்சம் ரூபாயை சம்பாதித்தோம். அவற்றைச் சூதாடியும், வறியவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தும் அழித்தோம். விலையுயர்ந்த உடைகளை உடுக்கவும், நறுமணம்

பரப்பும் வாசனைத் திரவியங்களைப் பூசி நடக்கவும் லௌகீக சுகங்களை அனுபவிக்கவும் அதிக அளவில் ஆர்வம் காட்டினோம். மாய உலகில் வெகு காலத்தை இப்படி வியர்த்தமாகச் செலவழித்ததன் பயனாக, தன்னிடமிருந்த சாத்வீக குணங்கள் எல்லாவற்றையும் இழந்தோம்!

'காரிய காரணங்களின் உறுதியும், ஒற்றுமையும், தர்ம நிஷ்டையின் தேவையும் தன்னில் எந்தவிதமான சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. தான் மரத்துப்போன மனத்தின் சொந்தக் காரனாகியிருக்கிறோம். பலவிதங்களிலான, நிந்தனைக்கும், இரக்கத்துக்கும் உரிய தவறுகளைச் செய்ததன் பலனாக இப்போது தான் ஓர் ஆடவன் என்கிற நிலையிலிருந்து இறங்கி, ஒரு குழந்தையாக மாறியிருக்கிறோம். தேர்ந்த ஒரு சிந்தனையாளன் என்ற நிலையிலிருந்து– ஒரு சாதாரண மனிதனாகியிருக்கிறோம். இது பொருள் செறிந்த ஒரு பரிணாமமில்லையா? தன் இதயத்துள் வசிக்கும் இனிமையாகப் பாடும் மைனா இன்னும் இறக்கவில்லை. பலதரப்பட்ட மூடத்தனம், அதர்மம், தவறுகள், துயரம், ஏமாற்றம் போன்றவற்றை அனுபவித்த பிறகே, ஒரு புதிய வழி தனக்கு முன்பாகத் திறக்கப்பட்டது.

'தான் ஒரு குழந்தையாகி மீண்டும் ஒரு புதிய பயணத்தைத் தொடங்க வேண்டியுள்ளது. அப்படித்தான் இருக்கவும் முடியும். தன் மனம் இந்தப் புதிய பாதையின் ஊடாக நடக்க ஆவேசப் படுகிறது. நூதனமான இந்தப் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்பு விரக்தியின் கொடுமையான ஆழங்காண முடியாத பள்ளத்தில் விழுந்து மானசீகமாகத் தோல்வியடையவும் நேரிட்டது. தற்கொலை மட்டுமே சரியான முடிவு என்று தோன்றிய நிலைக்கு, தான் வந்து சேர்ந்ததும், அதிர்ஷ்டவசமாக அதற்குப் பிறகே, தான் விரும்பிய, பவித்திரமான உணர்வுகள் சந்தனத்தைப் பூசியது போன்றதொரு சுகத்தை அளித்தன. ஆத்ம நிலையை உணர, தான் ஒரு மூடனாக வேண்டியிருந்தது. மறுபிறவிக்கு முன், ஒரு பாவியாக நேர்ந்தது. தன்னுடைய இந்தப் புதிய பாதை தன்னை எங்கே கொண்டு செல்கிறது? இந்த வழியும் மடத்தனமான ஒன்றாக



இருக்குமோ? வளைந்தும் நெளிந்தும், இழை இழைகளாகப் பிரிந்தும் போகிற நெருக்கடி நிறைந்த வழி. அது என்னை எங்கு கொண்டு போனாலும் சரி, நான் அந்த வழியிலேயே முன்னேற வேண்டியதுதான்!' சித்தார்த்தன் ஒரு முடிவுக்கு வந்தான்.

அவன் மனத்துள் வலுவுடன் துடித்த ஆனந்தத்துக்கு அளவில்லை. அவன் தனக்குத்தானே கேட்டுக் கொண்டான்.

'தனக்கு இந்த ஆனந்தமும், மகிழ்ச்சியும் எங்கிருந்து கிடைத்தன? தான் சுகமாக வெகு நேரம் உறங்கியதால்தான் இந்தப் புதிய ஆனந்தம் உண்டானதா? அல்லது நான் உச்சரித்த பவித்திரமான 'ஓம்'கார நாதத்திலிருந்தா? ஒரு வேளை தான் பெற்றோரையும், வீட்டையும் துறந்து ஒரு பைராகியாக அலைந்ததாலா? அல்லது அவலத்துக்குரிய எனது பயணம் முடிவு பெற்றதாலா? அல்லது இப்போது ஒரு குழந்தையை போல், முந்தைய வாழ்க்கை நிலையிலிருந்து விமோசனம் பெற்று, எல்லையற்ற புனிதத்தின் கீழே நிற்பதாலா? காரணம் எதுவானாலும் இந்த விடுதலை எவ்வளவு சுககரமானது!

தான் தப்பித்து வந்த இடங்களில் எப்போதும்... நைந்த வாழ்க்கையின் சுகந்தமும், அளவற்ற போகத்தின் குற்றகரமான சோம்பலின் நிழல்களும் நெருக்கியடித்து அடர்ந்திருக்கும். அத்தகைய சுற்றுப்புறத்தை, தான் எந்த அளவுக்கு வெறுத்து வந்தோம். பயங்கரமான அந்த உலகத்தில் தான் எத்தனையோ வருடங்களைச் செலவழித்திருக்கிறோம்? தன்னைக் குறித்து யோசிக்கும்போது, அவமானத்துக்குரிய ஒரு குற்ற உணர்வே எழுகிறது. தான் வெளியுலகின் அத்தனை வீழ்ச்சிகளிலும் விழுந்து மூழ்கிவிட்டோம். நாள்தோறும் ஆத்மாவின்மீது கடுமையான சம்மட்டி அடிகளை விழவைத்து இந்த அகாலத்திலேயே முதுமையடைந்தோம்.

என் உடலின் திண்மையும் வனப்பும், மறைந்து, குரூரமான ஓர் உயிராக மாறியிருக்கிறேன். நான் ஒரு காலத்தில் பெருமிதப் பட்டது போல் இனியும் கெட்டிக்காரன் என்று நடிக்க முடியாது.

எப்படி இருப்பினும் தன்னால் ஒரு நல்ல காரியம் செய்ய முடிந்திருக்கிறது. ஆத்ம நிந்தனையும், பாவமும் நிறைந்த பழைய வாழ்க்கையிலிருந்து விலகி வந்து விட்டோம். அதுவே பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான்!

நீண்ட வருடங்களாக முட்டாள்தனமாக நடந்து கொண்ட போதிலும், தற்போது நல்ல புத்தி ஏற்பட்டிருக்கிறது. தன் ஆத்மாவின் உள்ளுக்குள் இருந்த அழிவற்ற நாதத்தை இப்போது கவனித்து விட்டோம். அந்த ஒரு காரியத்துக்காகவே பாராட்டப்பட வேண்டியவன்தான்.

சித்தார்த்தனுக்கு, அவனைக் குறித்தே ஓர் உயர்ந்த மதிப்பு தோன்றியது. அத்துடன் பசியால் வயிற்றுக்குள் எழுந்த முனகலும் கேட்டது. வலியும், துயரமும் நிறைந்த வாழ்க்கை, நாட்களை, இறந்த காலத்தின் வெகு தூரத்தில் தள்ளி நிறுத்தியாகி விட்டது. அந்தக் கடுமையான அனுபவம் சித்தார்த்தனைக் கொடிய ஏமாற்றத்தின் உச்சிக்கும், தற்கொலையின் விளிம்புக்கும் கொண்டு சென்றவையல்லவா? இருப்பினும் அதன் பிறகு எல்லாமே சரியாகவே நடந்து வருகின்றன. இல்லாவிட்டால் காமசாமியுடன் இன்னும் சில நாட்கள் தங்கியிருந்திருக்கலாம். ஏராளமான பணம் சம்பாதித்து, அதையும் ஊதாரித்தனமாகச் செலவழித்திருக்கலாம். ஆத்மாவை ஒதுக்கி வைத்துவிட்டு, நிலையற்ற உடல் சுகங்களை அனுபவித்துத் தீர்த்திருக்கலாம். புலன்களால் இயங்கும் மாயா ஜாலங்கள் நிறைந்த அந்த நரகத்தில் அவன் என்றென்றைக்கு மாகக் கால் இடறி விழுந்தே போயிருக்கலாம்.

அதிலிருந்து தன்னைக் காப்பாற்றியது இறுதிக் கட்டமாகத் தன்னிடம் ஏற்பட்ட தீவிரமான ஏமாற்றமும், அதன் மூலம் எழுந்த தற்கொலை எண்ணமும்தான்! ஆத்மாவை ஆஹுதி செய்ய முயன்றதுதான் காரணம். அழகாகப் பாய்ந்தோடும், பளிங்கு போன்ற நீரில் தன்னுடைய நெறி தவறிய உடம்பை வீசி எறிவது! மனத்தைக் குமட்டும் அனுபவங்களும், கொடிய ஏமாற்றமும் தன்னை முற்றிலுமாக அழித்து விடவில்லை. தன் இதயப்பகுதியில் தத்தித் தவழும் மைனா, இப்போதும் உயிருடன் உள்ளது. அதன்



மென்மையான இசையொலியை இப்போதும் கவனிக்க முடிகிறது. அதனால்தான் ஆனந்தமுள்ளவனாக மாற முடிந்தது. நரைத்து வெண்மையேறிய தலைமுடியின் கீழே தென்பட்ட முகத்தில் சாந்தியும், தேஜஸும் ஒளி வீசியது.

எல்லாவற்றையும் சுயமாகவே அனுபவித்து அறிவது எனக்கு மிகவும் பிடித்தமானதும்கூட. என்னுடைய சிறு வயதில் செல்வமும், இந்திரிய சுகங்களும், வெளியுலகின் நிலையற்ற மற்ற சுகங்களும் மிகவும் அற்பமானவை என்று குருமார்கள் கற்பித்தனர். இது நன்றாகத் தெரிந்த ஒரு விஷயமாயினும், அதைப் பூரணமாக அறிய நேர்ந்தது இப்போதுதான். எனது அறிவால் மட்டுமல்ல, இதயம், கண், காலியான வயிறு போன்றவற்றால் அதை அறிந்து கொண்டேன். இந்தக் காலகட்டத்திலாவது என்னால் இதைப் புரிந்துகொள்ள முடிந்ததும் நல்லதற்குத்தான்.

தனக்கு நேர்ந்த பரிணாமம் குறித்து சித்தார்த்தன் ஆழமாக யோசித்தான். தன் இதயத்துக்குள் இருந்தபடி சங்கீதத்தை ஆலாபனை செய்யும் பறவையின் குரலை ஊன்றி கவனித்தான். ஆத்மாவுக்குள் இருக்கும் இந்தப் பறவை மட்டும் இறந்திருந்தால், தான் அழிந்து மண்ணோடு மண்ணாகியிருப்போமா? நிச்சயமாக இருக்காது! தனக்குள் வேறு ஏதோ ஒன்று தகர்ந்து சிதிலமாக வில்லையா? வெகு காலமாக அழிய வேண்டும் என்று தான் விரும்பியவைதானே அவை? தீட்சண்ணியமான சன்னியாச நெறி முறைகளுக்கு உட்பட்டு ஒரு பைராகியாக இருந்த காலத்தில் அழிய வேண்டும் என்று நினைத்தவைதாமே அவை! 'நான்' என்ற ஆணவமும் அது தொடர்பாக எழுந்த மனோநிலையும் அல்லவா அது? 'நான்' என்ற அகந்தையை முழுமையாக வெற்றி கொள்ள எத்தனையோ வருடங்கள் தீவிரமாக முயலவில்லையா? இன்று வரை தனக்கு அதில் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. அந்த உணர்வு, அந்த நிலை தனது வாழ்க்கையின் எல்லாவித மகிழ்ச்சியையும் துடைத்து அழித்திருக்கிறது.

'நான்' என்கிற உணர்வை வெற்றிகொள்ள முடியாத தாலேயே தனக்கு எதுவும், எப்போதும் பயமளிக்கக்கூடியதாக

தெரிந்தன. அந்த உணர்வுதானே இந்தக் காட்டில், அழகான நதிக்கரையில் இப்போது இறந்து போனது? அதனால்தானே, தான் இப்போது மகிழ்ச்சியும், நிர்மலமும் தளும்பி வழியும் மனத்துடன் ஒரு குழந்தையின் நிலைக்கு இறங்கிவர முடிந்தது!

தான் ஒரு பிராமணனாகவும், வனவாசியாகவும் இருந்த காலத்தில் 'நான்' என்ற உணர்வுடன் நிரந்தரமாக மல்லிட்டு அதை வெற்றிகொள்ள முடியாமல் இருந்த நிலைக்குக் காரணம் என்ன என்பது, இப்போது சித்தார்த்தனுக்கு விளங்கியது. வேத வாக்கியங்களை உருவிட்டும், ஹோம கர்மங்களை நடத்தியும் சம்பாதித்த அமிதமான அறிவு, அவனது முயற்சிகளைத் தடை செய்தது. ஆத்மபலம் தேடும் முயற்சியில் உடலின் அங்கங்களைக் காயப்படுத்தி, உயிரற்றுப் போகச் செய்தோம். தன்னில் கர்வமும் அகங்காரமும்தான் அப்போதும் முன் வரிசையில் இருந்தது. நான்தான் மிகவும் கெட்டிக்காரன், எல்லாரையும்விடத் தேர்ந்தவன், எல்லாக் காரியத்தையும் செய்ய முடிந்தவன் நான்தான், எல்லாரையும் விட பிரம்மஜன் நான்தான் என்ற உணர்வே மேலோங்கி இருந்தது.

'நான்' என்கிற ஆணவம் எனது அறிவிலும் முனிவர் பதவியிலும் நுழைந்து தொற்றியது. விரதம் மற்றும் ஹோம காரியங்களால் இந்த உணர்வை அழிக்க முற்பட்டபோதும், அதுபாட்டுக்குத் தன்னுள் வளர்ந்தது. தன் உள்ளுக்குள் எழும் நாதம், மைனாவின் பாடலில் பொதிந்துள்ள பொருள் என்னவென்று சித்தார்த்தனுக்குப் புரியவைக்க முயன்றதை அவன் உணர்ந்தான். எந்த குருநாதரிடமிருந்தும் தன்னால் மோட்சம் பெற முடியவில்லை. அதனால்தான் நிலையற்ற அற்ப சுகங்களை நாடி தான் மாயா உலகத்துக்குத் திரும்ப நேர்ந்தது. பெண்ணும், மதுவும் சூதாட்டமும் தனது வாழ்வில் இடம் பெற்றதுடன், புரோகிதனும் வைராகியும் தன்னை விட்டுப் பிரிந்து விட்டனர்.

வாழ்க்கை அனுபவங்களை நேரடியாக அனுபவித்து அறிய முடிந்தால் மட்டுமே மோட்ச மார்க்கத்தை அடைய முடியும் என்று



எண்ணினோம். பைத்தியக்காரத்தனமான உலகத்தில் கசப்பும், வேதனையும் நிறைந்த சூனியமான ஒரு வாழ்க்கையை நடந்த நேர்ந்ததுகூட, சுகம் தேடி அலைபவனும், பணத்தாசை பிடித்தவனுமான சித்தார்த்தனை அழிப்பதற்காகவே. அப்படிப்பட்ட வெகு சாதாரணமான சித்தார்த்தன் சற்று நேரத்துக்கு முன்பு ஏற்பட்ட நீண்ட உறக்கத்தின்போது இறந்து விட்டான். மறுபிறவி எடுத்த சித்தார்த்தன்தான் இப்போது இருப்பவன். இவனும் குழந்தைத் தன்மையிலிருந்து மாறி, வயதாகிப் பின் இயற்கைக்கு இரையாகிப் போவான். சித்தார்த்தன் என்பதே தற்காலிகமான நிலையின் வெளிப்பாடுதான். எல்லா வடிவங்களும், உணர்வுகளும் அழியக்கூடியவையே. இருப்பினும், இன்று அவன் ஒரு குழந்தை. குழந்தைகளுக்கே உரிய மகிழ்ச்சிதான் அவனிடம் குடிகொண்டுள்ளது.

இப்படி எதையெல்லாமோ யோசித்தபோது அவனது பசியும் அதிகரித்தது. தலையின் மேற்புறமாக ரீங்கரித்தபடி சுறுசுறுப்பாகப் பறந்து சென்ற தேனீக்கள் சித்தார்த்தனது கவனத்தைக் கவர்ந்தன. அவற்றுக்கு இருப்பது போன்ற மகிழ்ச்சியும் நிறைவும்தான் அப்போது சித்தார்த்தனுக்கும் அனுபவமானது. அமைதியாகப் பாயும் நதியின் பக்கமாகக் கண்களைத் திருப்பினான். என்ன ஓர் அழகு! எந்த அளவுக்கு அது மனத்தைக் கவரும் வல்லமை பெற்றுள்ளது. அந்த நதி சித்தார்த்தனிடம் குறிப்பாக எதையோ சொல்ல விரும்புவது போல் தெரிந்தது - இதுவரை அவன் தெரிந்து கொள்ளாத ஏதோ ஒரு ரகசியத்தை! முதுமை பீடித்தவனும், களைத்து ஏறத்தாழ ஆபத்தான நிலையில் இருப்பவனுமான சித்தார்த்தன் அந்த நதிக்குள் விழுந்து இறந்து விட்டான். புதிய சித்தார்த்தன், விசையாகப் பாயும் அந்த நதியிலிருந்து உதித்து எழுந்ததால், அவன் இந்த இடத்தைவிட்டு வேறோர் இடத்துக்குச் செல்ல விரும்பவில்லை!

# 9. படகோட்டி

‘மீதமுள்ள வாழ்நாளை இந்த நதிக்கரையிலேயே செலவிட வேண்டியதுதான்!’ சித்தார்த்தனது சிந்தனை இப்படித்தான் போனது. ‘அன்பு நிறைந்த படகோட்டி ஒருவர் ஒரு தடவை என்னைக் கரை கடத்தினார். அவருடைய குடிசையிலிருந்து தொடங்கிய வாழ்க்கைப் பயணம் ஒரு புதிய பாதையில் திரும்பியது. அந்த வாழ்க்கையும் பழையதாகி இற்றுப்போய் விட்டது. எனது தொடரும் வாழ்க்கையும் அந்தக் குடிசையிலிருந்தே ஆரம்பமாகட்டும்!

சாந்தமாகப் பாயும் அந்த ஆற்று நீரின் நிர்மலமான தோற்றமும், அது படைக்கும் படிகம் போன்ற நீர்க்குமிழிகளும், நீர்ச்சுழல்களும் சித்தார்த்தனின் இதயத்தைக் கவர்ந்தன. அந்தக் குமிழிகளில் நீல ஆகாயமும், நீர்ப்பரப்பில் தனது உருவமும் பிரதிபலிப்பதைப் பார்த்தான். நதி பச்சை, வெள்ளை, நீலம் மூன்றும் கலந்த நெடும் பரப்பாகத் தெரிந்தது. கண்களால் பார்த்தபடியே இருந்தான். அவனுக்கு அந்த நதியோடு அன்பு தோன்றியதுடன், அதன் கவர்ச்சிக்கு அடிமையாகவும் செய்தான். அத்துடன் நன்றியும் தோன்றியது. மனத்தைக் கவரும் அதன் சலசலப்பு சத்தம் சித்தார்த்தனின் அந்தராத்மாவில் மீண்டும் ‘ஓம்’கார நாதத்தின் மந்திரத் தொனியை முழக்கியது.

அந்தச் சத்தம் மறுபடியும் மறுபடியும் சித்தார்த்தனிடம் வேண்டியது. ‘நீ இந்த நதியை நேசி. அதனுடன் ஒன்றி இணைந்து விடு. அதிலிருந்து ஞானம் பெறு!’ சித்தார்த்தனும் அதற்குத் தயாராக இருந்தான். யார், இந்த நதியையும், அதன் ரகசியத்தையும் முழுமையாகப் புரிந்து கொண்டவர்? அப்படி எவராவது இருந்தால், அவரால் மட்டுமே எல்லா ரகசியங்களையும், பிரபஞ்ச ரகசியங்களையும் கூடச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

இன்று நதியின் ஒரு ரகசியத்தை மட்டுமே சித்தார்த்தனால் பார்க்க முடிந்தது. அவன் ஆத்மாவை இறுகப் பிடித்த ஒரு சத்தியம் அது. ஆற்று வெள்ளம் நிரந்தரமாக ஓடினாலும் அதன் ஒவ்வொரு



விநாடியிலும் ஒவ்வொரு துளியும் புதியது என்கிற உண்மையை! அது யாருக்குப் புரியும்? சித்தார்த்தனுக்கும் அதன் அர்த்தம் முழுமையாகப் புரியவில்லை. தெளிவற்ற ஒரே ஒரு நினைவு மட்டுமே அவனிடம் மீதமிருந்தது. எப்படி இருப்பினும் இந்த நினைவு பிற்பாடு, அவனை அதைக் குறித்து அதிகமாக யோசிக்க ஊக்குவித்தது.

கடுமையான பசி, சித்தார்த்தனுக்கு ஒரு தொல்லையாகத் தோன்றியது. எதையோ சாப்பிட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களாகிறது. நீர்த்துளிகள் ஒவ்வொன்றாக விழும் சத்தத்தையே கவனித்தாலும் பசி மிகவும் கடுமையாகத் தெரிந்தது. மேலும் சற்று நேரம் கரைப்பகுதியில் சுற்றி நடந்தவன், படகுத்துறைக்கு வந்தான். படகும் படகோட்டியும் அங்கேயே இருந்தனர். சித்தார்த்தனுக்குப் படகோட்டியை உடனே அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்தது. அவனும் முதுமையடைந்திருந்தான்.

“என்னை அக்கரைக்குக் கொண்டு போகிறீரா?” சித்தார்த்தன் கேட்டான்.

படகோட்டிக்கு வியப்புத் தோன்றியது. தனக்கு முன்பாக நிற்கும் பயணி, சாதாரணமானவன் அல்லன். விலை உயர்ந்த ஆடைகளையும், செருப்பும் அணிந்து ஒரு பிரபு மாதிரித் தோன்றுபவன், நடைப் பயணமாக அதுவும் உதவிக்கு ஆட்கள் எவருமின்றி, தனது படகில் ஏறி மறுகரை போக விரும்புகிறானா? யோசித்தாலும் சித்தார்த்தனை ஏற்றிக்கொண்டு படகுக்குத் துடுப்பு போட்டான்.

“நீ உனக்கு விருப்பமான ஒரு தொழிலை ஏற்றுக் கொண்டிருக்கிறாய்!” சித்தார்த்தன் சொன்னான்: “இந்த நதிக்கரையில் வசிப்பதிலும், தினந்தோறும் இந்தப் படகின் மூலம் பல பயணிகளையும் கரை கடத்தி விடுவதிலும் உனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது இல்லையா?”

படகோட்டி சிறிதாகப் புன்னகைத்தான். வழக்கம் போல் இயல்பாகத் துடுப்பு போட்டான். “இது எனக்கேற்ற தொழில்தான்

பிரபு. எல்லாத் தொழிலும் பெருமைக்கு உரியதல்லவா?" படகோட்டி மற்றொரு கேள்வியை சித்தார்த்தனுக்கு பதிலாகத் தந்தான்.

"இருக்கலாம்... எனினும் உனது தொழில் எனக்குப் பொறாமையை ஏற்படுத்துகிறது."

"இருக்காது. உங்களுக்கு இந்தத் தொழிலுடன் உள்ள ஆசை சட்டென்று விலகக்கூடியது. உங்களைப் போன்ற ஒரு பிரபுவுக்கு உகந்ததல்ல இந்த வேலை!"

சித்தார்த்தன் உரக்கச் சிரித்தபடி கூறினான்: "எனது வேடம் மற்றும் உடையைப் பார்த்து, என்னை மதிப்பிட்டு விட்டாய். நண்பரே, தயவு செய்து என்னுடைய இந்த உடையை நீயே எடுத்துக்கொள். எனக்கு இது தேவையில்லை. அதுமட்டுமல்ல, என்னைக் கரை சேர்க்கும் உனக்குக் கூலி தரக்கூட என்னிடம் எதுவுமில்லை!"

"நீங்கள் வேடிக்கைக்காகச் சொல்கிறீர்கள் பிரபு!"

"நிச்சயமாக வேடிக்கை இல்லை! அன்பான நண்பரே... ஒரு தடவை கூலியே வாங்காமல் என்னை அக்கரை சேர்த்தீர்கள். இன்றும் அதையே செய்யுங்கள். அதற்கு பதிலாக எனக்குத் தொல்லையாக இருக்கிற இந்த உடைகளை வாங்கிக் கொள்ளுங்கள்."

"அப்படியானால் மதிப்புக்குரிய நீங்கள், மேற்கொண்டு உடையணியாமலே இருக்க விரும்புகிறீர்களா?"

"நான் வெகுதூரம் போக விரும்பவில்லை. விலை உயர்ந்த இந்த உடைகளுக்கு பதில் எனக்குப் பழைய துணிகள் ஏதாவது இருந்தால் கொடுத்து உதவு. பிறகு என்னையும் ஓர் உதவியாளனாக ஏற்று உன்னுடன் தங்கிக்கொள்ள அனுமதித்தால் போதும். படகோட்டவும் எனக்குக் கற்றுக்கொடு!"

சித்தார்த்தனது வார்த்தைகளைக் கேட்ட படகோட்டி சற்று நேரம் அவனை ஊன்றிக் கவனித்தான். அவன் எதையோ யோசிப்பதுபோல் தெரிந்தது.



"இப்போது உங்களை எனக்கு ஞாபகம் வருகிறது!" படகோட்டி அதைச் சொல்லவும் செய்தான்: "நீங்கள் ஒரு தடவை எனது குடிசையில் ஓர் இரவைக் கழித்தீர்கள் இல்லையா? ஏறத்தாழ இருபது வருடங்கள் ஆகியிருக்கும். அன்று நீங்கள் ஒரு பைராகியாக இருந்தீர்கள் என்றும் நினைக்கிறேன். ஆனால், உங்கள் பெயர் எனக்கு... ஞாபகமில்லை!"

"பெயர் சித்தார்த்தன். அன்று நீங்கள் என்னைப் பார்த்தபோது நான் ஒரு வனவாசியாக இருந்தேன். உண்மைதான்."

"அன்புக்குரிய சித்தார்த்தா, வணக்கம். உங்கள் வரவு நல்வரவாகட்டும். என் பெயர் வஸுதேவன். நீங்கள் இன்று என் விருந்தாளியாக இருங்கள். இரவில் எதையாவது சாப்பிட்ட பிறகு நாம் விவரமாகப் பேசுவோம். நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? உங்களுக்கு இந்த ஆடைகளின் மீது ஏன் இத்தனை வெறுப்பு என்பது பற்றியெல்லாம் என்னிடம் அப்போது தெளிவாகச் சொல்லுங்கள்."

படகு அப்போது நதியின் மையப்பகுதியை அடைந்திருந்தது. வஸுதேவன் தனது திடமான கைகளால் விசையாகத் துழைந்தான். ஆற்றின் நீரோட்டம் அங்கு அதிக விசையுடன் இருப்பதுபோல் தட்டுப்பட்டது. அதனால் எல்லாம் வஸுதேவன் தனது முயற்சியைக் கைவிடவில்லை. அவன் துடுப்புப் துழைவதை வேடிக்கை பார்த்தபடி சித்தார்த்தன் வெறுமனே உட்கார்ந்திருந்தான். வெள்ளை மனம் கொண்ட வஸுதேவன் விருந்தளிப்பை ஏற்றுக் கொள்வது, ஒரு பெரும் புதையல் கிடைத்ததுபோல் தோன்றியது சித்தார்த்தனுக்கு. படகு மறுகரையை அடைந்தவுடன், படகைத் துறையில் பிணைத்துக்கட்டி, சித்தார்த்தன் வஸுதேவனுக்கு உதவினான்.

இருவரும் குடிசையை அடைந்தனர். கொஞ்சம் சப்பாத்தியும் பாலும் சாப்பிட்டனர். இந்த உணவே சித்தார்த்தனுக்கு அமுதம் போலிருந்தது. அவன் சாப்பிட்டு எத்தனை நாளாகிறது? வஸுதேவன் கொடுத்த மாம்பழத்தையும் சித்தார்த்தன் மகிழ்ச்சியுடன் சாப்பிட்டான்.

மாலை நேரம் கடந்த சமயத்தில் நதியின் பக்கம் சாய்ந்திருந்த ஒரு மரத்தின் அடிப்புறத்தில் இருவரும் சென்று அமர்ந்தனர். சூரியன் மறைந்ததும் உதயசந்திரன் தனது தண்ணொளியால் வான்வெளியைப் பால் நிறமாக்கினான். ஆங்காங்கே நீல நட்சத்திரங்கள் ஒளி சிந்தின.

சித்தார்த்தன் தனது வாழ்க்கை வரலாறு முழுவதையும் வஸுதேவனிடம் கூறினான். ஏமாற்றம் நிறைந்த அந்தக் கடைசி நிமிடத்தைப் பற்றியும், அதன் பிறகு வஸுதேவனைக் காண நேர்ந்ததையும் குறிப்பிட்டான். அந்தக் கதை முடிவடைந்தபோது இரவு கடைசி யாமத்தை எட்டியிருந்தது.

வஸுதேவன் எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டான். அவனது இளம்பருவம், கல்வி, வாழ்க்கை ரகசியங்களைத் தெரிந்துகொள்ள அவன் மேற்கொண்ட பயிற்சிகள், சோதனைகள், அவனது இப்போதைய தேவையைக்கூட ஏக சிந்தையுடன் கேட்டுக் கொண்டிருந்தான். பொறுமையுடன் மற்றவரது பேச்சை கவனித்துக் கேட்கும் வஸுதேவனின் இயல்பு, சித்தார்த்தனை அவன் மீது அதிக மதிப்பு கொள்ளச் செய்தது. வஸுதேவன் எதையும் பேசவில்லையென்றாலும், தனது வாழ்க்கைக் கதையைக் கேட்பதில் வஸுதேவன் ஆர்வம் காட்டியது தெளிவாகத் தெரிந்தது. அவன், சித்தார்த்தனைப் புகழவோ, குற்றப்படுத்தவோ முயலவில்லை. எல்லாவற்றையும் கவனித்துக் கேட்க மட்டுமே செய்தான். மற்றொரு மனிதனது ஆசை மற்றும் ஏமாற்றங்களிலும், துயரத்திலும் கவனம் செலுத்தும் அந்த நல்ல மனிதனோடு சித்தார்த்தனுக்கு மிகுந்த நன்றியுணர்வு தோன்றியது.

சித்தார்த்தன் தனது கதையை முடித்துக் கொள்ள நதியை நோக்கிச் சாய்ந்த மரத்தின் மீது அமர்ந்ததும், கடுமையான ஏமாற்றத்தின் காரணமாக ஆற்றில் பாய்ந்து வாழ்க்கையை முடித்துக்கொள்ள முயன்றதையும், அப்போது கேட்ட 'ஓம்'கார நாதமும், பவித்திரமான இந்த ஒலி தன்னை அந்தக் கொடும் செயலிலிருந்து காப்பாற்றியதையும் வஸுதேவனிடம் தெளிவாகக் கூறினான். படகோட்டி இந்த சந்தர்ப்பத்தில் அவனது பேச்சை அதிக



சிரத்தையுடன் கவனிப்பதாகத் தோன்றியது. கண்களை மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

சித்தார்த்தன் பேசி முடித்தபிறகு இருவரும் சற்று நேரம் மௌனமாக இருந்தனர். வஸுதேவன் பேச்சைத் தொடங்கினான்: "நான் நினைத்தபடியே நடந்திருக்கிறது. நதி உங்களிடம் பேசியிருக்கிறது. உங்களிடம் அன்பு காட்டியிருக்கிறது இது நல்லதுதான். மிகவும் நல்லதென்று தோன்றுகிறது. பிரியமுள்ள சித்தார்த்தா நீ என்னுடன் தங்கலாம். ஒரு காலத்தில் எனக்கு மனைவி இருந்தாள். அவள் இறந்து எத்தனையோ வருடங்களாகிறது. அதன்பிறகு நான் தனிமையில் வாழ்கிறேன். நம் இருவரும் வசிப்பதற்கான வசதி எனது குடிசையில் உள்ளது."

"நான் என்றும் உன்னிடம் நன்றி உள்ளவனாக இருப்பேன்!" சித்தார்த்தன் தொடர்ந்தான்: "நண்பனே உன்னுடைய அன்பு கலந்த அழைப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். எனது கதையை கவனத்தோடு கேட்டதற்காகவும் நான் நன்றியுள்ளவனாக இருப்பேன். சக உயிர்களின் சுக துக்கங்களில் பங்கெடுப்பவர்களும், கருணையின் நிதிகளுமான மனிதர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். இந்தக் கருணைக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன். உனது பொறுமையும், கருணையும் மற்ற நற்குணங்களையும் நீ எனக்கும் கற்பிப்பாயாக!"

"அது என்னால் முடியாது. இந்த குணங்களை நதியிலிருந்து நீயே கற்றுக்கொள்வாய். எனக்கு இவற்றைக் கற்பித்ததும் நதிதான். நதிக்குப் பிரபஞ்ச ரகசியமெல்லாம் மனப்பாடம். ஒருவர் விரும்பினால் நதியிலிருந்து அதைக் கற்றுக் கொள்ளவும் முடியும். இப்போதே வாழ்க்கையின் அபாரமான தாழ்ந்த பகுதிக்கு இறங்குவதுகூட படிப்படியாகத்தான் இருக்க வேண்டுமென்று நதி உனக்குக் கற்பித்திருக்கிறது. அதுதான் நல்லதென்றும் சொல்லியிருக்கிறது. பிரபு பதவியிலிருந்த பிராமணன், விரைவிலேயே துடுப்புப் போடவும், படகைத் துறையில் கட்டவும் கற்றுக் கொள்வாய். இது நதி கற்பிக்கும் அடிப்படைப் பாடம். மற்றவற்றையும் நதி உனக்குக் கற்பிக்கும் அதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம், சித்தார்த்தா!"

"மற்றவை என்பது எதெல்லாம்?" சித்தார்த்தன் ஆர்வத்துடன் கேட்டான்.

வஸுதேவன் மரத்திலிருந்து எழுந்தான். "நேரம் அதிகமாகி விட்டது!" சித்தார்த்தனிடம் சொன்னான்: "நாம் போய்ப் படுக்கலாம். மற்றவை என்பது என்னென்ன என்பதை என்னால் இப்போது சொல்ல முடியாது. நீயாகவே அதையும் புரிந்து கொள்வாய். ஒருவேளை இப்போதேகூட உனக்கு அது தெரிந்திருக்கலாம். நான் அதிகம் படிக்காதவன். அழகாகப் பேசவோ, ஆழமாக சிந்திக்கவோ முடியாது. தர்மநெறியுடன் நடந்து கொள்ளவும், மற்றவர்கள் பேசுவதை கவனமுடன் கேட்கவும் மட்டுமே எனக்குத் தெரியும். திறமையாகப் பேசவும், மற்றவர்களுக்குக் கற்பிக்கவும் எனக்குத் தெரிந்திருந்தால், நான் என்றோ ஆசிரியர் வேலைக்குச் சென்றிருப்பேன். நான் இப்போது ஒரு படகோட்டி அல்லவா? எத்தனையோ பயணிகளை தினந்தோறும் கரைகடத்தி விடுகிறேன். அவர்கள் திருமணத் தொடர்பு கொள்ளவோ, வியாபார நிமித்தமாகவோ, பணம் சம்பாதிக்கவோ அல்லது தீர்த்த யாத்திரைக்கோ இந்த நதியைக் கடந்து போகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் இந்த நதி ஒரு தடை மட்டும்தான். படகோட்டி அவர்களது பயணம் தாமதப்படாமலும், தடைபடாமலும் மறுகரை சேர்க்கிறான். இருப்பினும் ஆயிரக்கணக்கான பயணியரில் சிலர்கூட நதியை ஒரு தடையாகக் கருதியதில்லை. அவர்கள் இந்த நதியிலிருந்து உயரும் உயிர் நாதத்தை கவனிக்கிறார்கள். என்னைப் போலவே அவர்களுக்கும் இது பவித்திரமான ஒன்றாகத் தெரிகிறது. சரி நாம் படுக்கலாம்."

சித்தார்த்தன் படகோட்டியுடன், அவனது குடிசையில் தங்கினான். படகு கட்டவும், மரத்துண்டுகளை அறுத்து துடுப்புச் செய்யவும், அதை இழைத்துப் பளபளப்பாக்கவும் சித்தார்த்தன் மிக விரைவிலேயே கற்றுக் கொண்டான். படகுத்துறையில் வேலை இல்லாதபோது அவன் வஸுதேவனுடன் தோட்டத்தில் வேலை செய்தான். வாழை, தக்காளி போன்றவற்றை அவர்கள் நட்டு



வளர்த்தனர். அதற்குத் தேவையான உரமிடுதல், காட்டுக் கொடிகளைக் கொண்டு கூடை முடைதல் போன்றவற்றிலும் சித்தார்த்தன் விரைவிலேயே தேர்ந்தான். சில நேரம் இருவருமாகச் சேர்ந்து காட்டில் விறகு பொறுக்கச் செல்வார்கள். கிடைத்தால்... காட்டிலிருந்து தேனும் சேகரித்து வருவார்கள். சித்தார்த்தன் எல்லா வேலைகளையும் மகிழ்ச்சியோடு செய்தான். இப்போது இருப்பது போன்ற நிம்மதி இதுவரை அவன் அனுபவிக்காத ஒன்று!

வஸுதேவன் கற்பிக்க முடிந்ததைவிட, எத்தனையோ அதிகமான அறிவை, நதி சித்தார்த்தனுக்கு அளித்தது. தொடர்ந்து பலவகைப்பட்ட ஞானம் நதியிலிருந்து சித்தார்த்தனுக்குக் கிடைத்தது. எல்லாவற்றையும் மறந்து சிந்திக்கவும், சஞ்சலம் இல்லாத மனத்துடன் கூர்ந்து கவனிக்கும் வல்லமையும் படிப் படியாக சித்தார்த்தனுக்கு வாய்த்தன. திட்டமிடாமல், உணர்வுகளின் தீவிரமும் இல்லாமல் திறந்த மனத்துடன் ஏகாக்கிரக சிந்தையுடன் நதியின் மந்தத் தொனியில் மையம் கொள்ள அவனால் முடிந்தது. ஒருபோதும் சித்தார்த்தன் அவசரப்பட்டதில்லை. நதியின் ஒவ்வொரு சிறிய சலனத்தையும் அவன் கவனித்தான்.

மாதங்களும் வருடங்களும் கடந்தன. சித்தார்த்தன் வஸுதேவனுடன் சந்தோஷமாக வாழ்ந்தான். இயல்பிலேயே குறைவாகப் பேசும் வஸுதேவனுடன் சித்தார்த்தன் எப்போதாவது பேசினான். அதுவும் குறைந்த வார்த்தைகள் மட்டுமே. ஆனால், அந்த வார்த்தைகளில் அடங்கியிருந்த பொருள் மிகவும் உன்னதமாக இருந்தது.

"காலம் என்கிற ஒன்று இல்லை என்கிற ரகசியத்தை, நீயும், இதற்குள் நதியிடமிருந்து புரிந்து கொண்டாயா?"

வஸுதேவனின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ஒரு சன்னமான சிரிப்புடன் பேசத் தொடங்கினான்: "உண்மைதான் சித்தார்த்தா, இந்த நதி ஒரு நிமிடத்தில் எல்லா இடத்திலுமாகப் பரவியிருக்கிறது. அதன் உற்பத்தி தானத்திலும் நீர்வீழ்ச்சியிலும், படகுத்துறையிலும், நீரோட்டத்திலும் கடலிலும், மலைமுகடு

களிலும் இந்த நதி எப்போதும் வியாபித்தே உள்ளது. அதன் பிரவாகத்தில் நிகழ்காலத்துக்கு மட்டுமே முக்கியத்துவம். நேற்றின் அல்லது நாளையின் நிழலாக இன்று என்பது நதிக்கு அனுபவமாவதில்லை. அது இந்தக் காலத்திலேயே காலூன்றி நிற்கிறது. கடந்த காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் நீரோட்டத்தின் தடையற்ற போக்கில் இடமே கிடையாது. இதைத்தானே நீ கேட்டாய்?"

"ஆமாம்!" சித்தார்த்தன் பேசினான்: "அந்த ரகசியத்தைப் புரிந்துகொண்டபோது எனது வாழ்க்கையை இந்தப் புதிய அறிவின் வெளிச்சத்தில் விமர்சிக்க முயன்றேன். ஓர் அர்த்தத்தில் எல்லா வாழ்க்கையுமே ஒரு நதிப் பிரவாகம் மாதிரிதானே? எனது குழந்தைப் பருவம், இளமை, முதுமை போன்றவை ஒரு நிழலால் வேறுபடுத்தப்படுகிறது. அது யதார்த்தமானதல்ல. எனது பூர்வ ஜென்மம், கடந்த காலமல்ல. மரணமும் அதைத் தொடர்ந்து பிரம்மத்துவத்துக்குள்ள லயிப்பும் எதிர்காலமல்ல. எதுவும் கடந்த காலத்திலோ, நிகழ் காலத்திலோ நிலையாக இருப்பதில்லை. எல்லாம் நிகழ்காலத்தில் அடங்கியிருக்கின்றன. அதுமட்டுமே யதார்த்தமாக உள்ளது."

சித்தார்த்தன் மிகவும் மகிழ்ச்சியோடுதான் இதையெல்லாம் கூறினான். இந்தப் புதிய ஞானம் அவனுக்கும் ஆனந்தம் அளித்தது. அப்படியானால் எல்லாத் துயரமும், தன்னையே தான் தண்டிப்பதும், பயமும் காலத்தை வென்றல்லவா நிலை பெற்றுள்ளது? ஒருவரால் காலத்தை வெற்றிக்கொள்ள முடியுமென்றால், எல்லாத் துயரங்களையும் கஷ்டங்களையும் சமச்சித்தத்துடன் எதிர்கொள்ள முடியும்... இல்லையா? சித்தார்த்தன் மிதமிஞ்சிய மகிழ்ச்சியுடன் இவை குறித்து வஸுதேவனுடன் சர்ச்சை செய்தான். வஸுதேவனோ, ஒளி பொருந்திய ஒரு புன்னகையை உதிர்த்தவாறு அவன் சொன்னதையெல்லாம் தலையாட்டி ஒப்புக்கொண்டான்.

பிந்தைய மழைக்காலத்தில் நதியில் வெள்ளம் உயர்ந்தது. கரைமீறிப் பாய்ந்தது. நீரோட்டத்தின் விசை ஆயிரம் மடங்கு



அதிகரித்திருந்தது. 'கலகல'வென்ற ஓசையுடன் பாய்ந்து செல்லும் நதியை ஆராய்ந்தவாறே சித்தார்த்தன் சொன்னான்: "நதியால் பலவிதமான சத்தங்களை எழுப்ப முடிகிறது இல்லையா? ஒன்றை கவனி நண்பா. அதனால் மன்னனைப் போலவும், வீரனைப் போலவும், காளையைப் போலவும், ஆந்தை போலவும், கர்ப்பிணியான பெண் போலவும் ஆயிரக்கணக்கான சப்தங்களை எழுப்ப முடியும்!"

"உண்மைதான்!" வஸுதேவனும் சம்மதித்தான்: "எல்லா ஜீவஜாலங்களின் சப்தங்களும் அதில் உள்ளன."

"உனக்குத் தெரியுமா?" சித்தார்த்தன் கேட்டான்: "ஒருவன் ஏகாக்கிரமாக கவனிக்கும்போது நதி என்ன சப்தத்தை எழுப்புகிறதென்று...?"

வஸுதேவன் ஒரு குழந்தையைப் போல உரத்த குரலில் வாய்விட்டுச் சிரித்தான். அவன் களங்கமற்றவன். தலைகுனிந்து சித்தார்த்தன் காதில் இப்படி மந்திரித்தான்: "ஓம்... ஓம்..."

இந்தச் சத்தத்தையே சித்தார்த்தனும் கேட்டான்.

மீண்டும் வருடங்கள் சில கடந்தன. சித்தார்த்தனது சிரிப்பு இப்போது வஸுதேவனுடையதுபோல் ஆகியிருக்கிறது. அவன் முகம் ஓர் ஒளிவட்டத்தால் சூழப்பட்டிருந்தது. காலம், சுளிவு களையும், முதுமையையும் அந்த முகத்தில் செதுக்கி விட்டிருந்த போதிலும், சாந்தியும் ஆனந்தமும் அதற்கு முழுமையாக இடங்கொடுக்கவில்லை. எத்தனையோ பயணிகள் அந்த இருவரையும் பார்த்து சகோதரர்கள் என்றே நினைத்தனர். பெரும்பாலும் எல்லா மாலை நேரங்களிலும் அவர்கள் இருவரும், ஆற்றுப்பக்கம் சாய்ந்து வளர்ந்திருக்கும் மரத்தின் மீது அமர்ந்தபடி, நதியின் ஒவ்வோர் ஓசையையும் கேட்பார்கள். அமைதியாக உட்கார்ந்தபடி அந்த நதியின் முழு அசைவையும் கவனிக்கும் அந்த இருவருக்கும் அது வெறும் நீர் ஓடும் நதி மட்டுமல்ல!

அந்த நீர்ப்பரப்பின் மந்திரத்தொனியில் அவர்கள் கண்டடைந்தது, அழியாத உயிரினதும், நிலைபெற்றுள்ளதுமான

திவ்யமான இசையை. சில நேரங்களில் அவர்கள் இருவரும் ஒரே காரியத்தைப் பற்றியே யோசித்துக் கொண்டும் இருக்கலாம். பயணிகளின் கஷ்டங்களைப் பற்றியோ, ஏதாவது ஒரு பயணிக்கு நேர்ந்த ஆபத்து அல்லது விபத்து பற்றியோ அவர்கள் யோசிப்பார்கள். நதி அவர்களிடம் நல்லது எதையாவது கூறினால், பர பரம் ஒருவரை ஒருவர் பார்த்து மகிழ்ச்சி அடைவார்கள். ஒரு கேள்விக்கு ஒரே பதில்தான் இருவருக்குமே கிடைப்பது.

அந்த நதிக்கரையிலிருந்தும், படகோட்டியிடமிருந்தும் அற்புதமான ஒரு தேஜ ஒளிர்ந்தது. எல்லாப் பயணிகளுக்கும் அதை கவனிக்க முடிந்தது. சிலர், அவர்களது முகத்தைப் பார்த்தவுடன் தங்களது வாழ்க்கையின் கஷ்டங்களை விவரிக்கத் தொடங்குவார்கள். பரம சாத்வீகமான படகோட்டிகள் இருவரும் அதை வெகு கவனமாகக் கேட்டுக் கொள்வார்கள். மற்றும் சிலர், தங்களையும் மீறிச் செய்துவிட்ட பாவ கர்மங்களைச் சொல்லி வருத்தப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு ஆறுதல் சொல்லி உதவுமாறு படகோட்டிகளிடம் கேட்டுக் கொள்வார்கள்.

ஒருசில சந்தர்ப்பங்களில், சில பயணிகள் ஒரு நாள் இரவு அவர்களுடைய குடிசையில் தங்கிக்கொள்ள அனுமதி கேட்டனர். அவர்களுக்கும் நதியின் உயிர் சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்பது ஆசையாக இருக்குமோ? இரண்டு புண்ணிய ஆத்மாக்கள் அந்தப் பகுதியில் வசிப்பது நாடு முழுவதும் செய்தியாகப் பரவியது. ஆர்வம் நிறைந்த கிராமத்தினர் அவர்களைப் பார்க்கவும், அவர்களிடமிருந்து உபதேசம் பெறவும் கூட்டம் கூட்டமாக வந்தனர். அவர்களது கேள்விகளுக்கெல்லாம் பதில் எதுவும் கிடைக்கவில்லை. மந்திரவாதிகளோ, முனிவர்களோ அல்ல அந்த இரு படகோட்டிகளும். மக்களும் அவ்வாறு கருதவில்லை. அன்பு மிகுந்த இரண்டு முதியவர்களையே அங்கு கண்டனர். அதிகம் பேசாத மௌனிகளாகவும், பாமரர்கள் மாதிரியும் கிராமத்தின ருக்குத் தோன்றியது. சாதாரணமாகக் காண முடிந்த வயதானவர் களிலிருந்து மாறுபட்ட இரண்டு முதியவர்கள். இவர்களிடம் தெய்விகச் சக்திகள் உண்டு என்று செய்தி கூறிய நபர்களின்



பெருந்தன்மையைப் பழித்தபடி, தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள்.

பின்னும் வருடங்கள் பல கடந்தன. படகோட்டிகளை யாரும் அவ்வளவு பொருட்டாக கவனிக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில்தான் ஒருநாள் சில புத்த பிட்சுக்கள் அந்த இடத்துக்கு வந்தனர். சாக்கிய முனிவரின் சீடர்கள்! மஞ்சள் உடையும், கமண்டலமும் ஏந்தியிருந்தனர். தலையை மொட்டையடித்து ததாகரின் உபதேசங்களைப் பரப்புவதை லட்சியமாகக் கொண்ட புத்தத் துறவிகள். அவர்களும் மறுகரைக்குச் செல்ல வேண்டியிருந்தது. இந்தத் துறவிகள் மறுகரைக்குச் செல்ல விரும்பியது, மிகவும் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டு, படுத்த படுக்கையாகக் கிடக்கும் புத்த தேவனைக் கடைசியாக சந்திப்பதற்கும், அவருக்கு வணக்கம் செலுத்தவும்தான் என்பதும் புரிந்தது.

ஒரு கூட்டத்தினர் மறுகரைக்குச் சென்று சேர்ந்த சற்று நேரத்திலேயே, மற்றொரு புத்தத்துறவிகள் கூட்டம் வந்து சேர்ந்தது. புத்த பகவான் பற்றிய செய்திகளையும், அவரது நோயைப் பற்றியுமே பெரும்பாலானவர்கள் பேசினர். மன்னனின் கட்டளையை ஏற்று படை வீரர்கள் போருக்குத் தயாராவது போல, வரிசை வரிசையாக ஆயிரக்கணக்கான புத்தத்துறவிகள் வந்தனர். காந்தத்தால் கவரப்பட்டதுபோல் புத்தரின் இருப்பிடத்தை நோக்கிச் சென்றனர். ஒரு யுகத்தின் காவலனான அந்தப் புண்ணிய ஆத்மா, முடிவற்ற தன்மை பெறும் கட்டத்துக்குத் தாங்களும் ஒரு கர்ம சாட்சியாக இருக்க விரும்பினர்.

சித்தார்த்தன் இந்த சந்தர்ப்பத்தில் மரணத் தறுவாயில் இருக்கும் சாக்கிய முனிவரைப் பற்றி நினைத்தான். எத்தனையோ ஆயிரக்கணக்கானவர்கள் அவரது உபதேசங்களிலிருந்து மனத்தெளிவு பெற்றிருக்கிறார்கள். தனக்குக்கூட அவரது நெருக்கம் மிகவும் விருப்பமான ஒன்றாகவே இருந்தது. ஸ்ரீபுத்தரைக் குறித்து, அன்புடனான நினைவு எழுந்தபோது ஒரு காலத்தில் தான் அவரை சந்தித்தபோது வயதை மீறிய அறிவு உள்ள ஆணவத்தில் அகம்பாவத்துடன் எதையெல்லாமோ பேசியதும் நினைவில் தெளிந்தது.

அவரது உபதேசங்களில் பெரும்பாலானவற்றைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாமற்போனாலும், அவரைவிட்டுப் பிரிந்தபோது, தன்னுள் வருத்தம் ஏற்படவே செய்தது. ஆத்மார்த்தமாக சத்தியத்தைத் தேடும் ஒருவர் ஒருபோதும் மற்றொருவரது உபதேசத்தையோ, சிக்ஷையையோ அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், மோட்ச வழியைக் கண்டறிந்த ஒருவருக்கு, எந்த வழியில் போனால் மோட்ச வழி திறக்கும், எந்த வழி சிறந்தது என்பது குறித்தெல்லாம் மிகவும் விளக்கமாகப் பேச முடியும். சாக்கிய முனிவரும் அப்படிப்பட்டவர்தான். பவித்திரமான, அழிவற்ற ஒரு மகான்!

மரணப்படுக்கையில் படுத்திருந்த ஸ்ரீ புத்தரை காண வந்த ஏராளமான மனிதர்களுடன் ஒருநாள் தேவதாசிகளில் பேரழகியான கமலாவும் இருந்தாள். இதற்குள் அவள் தனது தாசித் தொழிலைக் கைவிட்டு, தனது வீடு மற்றும் நந்தவனத்தை கௌதமரின் சீடர்களுக்காக தானம் செய்திருந்தாள். புத்தரின் சீடர்களில் ஒருத்தியாக மாறியிருந்தாள். தீர்த்த யாத்திரை புரிந்த பயணிகளில் ஒருத்தியாக கமலாவும் வந்தாள். புத்தரின் உடல்நலக் குறைவைக் கேள்விப்பட்டு ஒரு தடவை - கடைசித் தடவையாகவாவது அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் நடைப்பயணமாகவே பயணம் தொடங்கியிருந்தாள் கமலா. கமலாவுடன், மிகவும் எளிமையான உடையணிந்து அவள் மகனும் இருந்தான். பயணத்தின் வழியில் அவர்கள் சித்தார்த்தனும் வஸுதேவனும் படகோட்டும் படகுத்துறையை அடைந்தனர். அதற்குள் பயணத்தால் ஏற்பட்ட களைப்பினாலும், பசியினாலும் அவள் மகன் ஒவ்வொரு விதமான பிடிவாதம் செய்து அவளை அலைக்கழித்திருந்தான். உடனடியாக வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்றும், 'எங்காவது ஓய்வெடுக்க வேண்டும்' என்றும், 'எதையாவது சாப்பிட வேண்டுமென்றும்' அடம்பிடித்தான். அவன் அடிக்கடி அழுதுகொண்டும், வற்புறுத்தவும் செய்ததால் கமலா அவனுடன் ஆங்காங்கே தங்கி ஓய்வெடுத்தாள். அந்தச் சிறுவன் ஒவ்வொரு தடவையும் தனது ஆசைகளை கமலாவின் மீது சாட்ட முற்பட்டான். நடுநடுவே அவனுக்கு ஏதாவது உணவுப்



பண்டங்களைக் கொடுத்தும், எதையாவது சொல்லி ஆறுதல் படுத்தியும், சில வேளைகளில் மிரட்டியும் அம்மா, அவனுடன் பயணத்தைத் தொடர்ந்தாள். துயரம் மிக்க இந்தப் பயணம் புறப்பட எதற்காக அம்மா தீர்மானித்தாள் என்பது பற்றி எவ்வளவுதான் யோசித்தும் அவனுக்கு விடை கிடைக்கவில்லை. முன்பின் தெரியாதவனும், மரணமடையப் போகிறவனுமான ஒரு மனிதனைக் காண எதற்காக இவ்வளவு கஷ்டப்பட்டுத் தன் தாய் போகவேண்டும்? யோசிக்க யோசிக்க அவனுக்கு எந்தவிதமான விடையும் கிடைக்கவில்லை. அவர் இறக்கப்போகிறார் என்றால், இறந்து போகட்டுமே. அதற்கு அவன் என்ன செய்ய? இப்படித் தான் இருந்தது மகனது சிந்தனை!

கமலாவுடன் வந்த மற்ற பயணிகள் படகுத்துறைக்குச் சற்றுத் தொலைவில் வந்தபோது பாலசித்தார்த்தன் ஓய்வெடுத்தே தீரவேண்டும் என்று அடம்பிடித்தான். அவனது அலறலும் பிடிவாதமும் அதிகமாகித் தாங்க முடியாமலானபோது கமலா, அருகிலிருந்த புல்தரையில் அவனைப் படுக்க வைத்தாள். அவன் சாப்பிடுவதற்காக ஒரு வாழைப்பழமும் கொடுத்தாள். அன்று அதிகமாக நடந்ததால் அவளுக்கும் அதிகக் களைப்பாக இருந்தது. அவனுக்கு அருகிலேயே துணி ஒன்றை விரித்துப் படுத்தாள். படுத்த சற்று நேரத்துக்குள்ளேயே கடினமான வேதனையால் வாய்விட்டு அலறினாள். அருகே படுத்திருந்த பையன் திடுக்கிட்டுக் கண்விழித்தபோது பயத்தால் வெளிறி நடுங்கியபடி இருக்கும் தாயைப் பார்த்தான். கமலாவின் உடையின் அடிப்புறத் திலிருந்து அவளைக் கடித்த கருநாகம் புல்லின் மீது மெதுவாக ஊர்ந்து போனது.

அவர்கள் இருவரும் உதவி வேண்டி, ஆட்கள் யாரும் தென்படுவார்களா என்று தேடினர். படகுத்துறையை நெருங்கிய சமயத்தில் மேற்கொண்டு ஓர் அடிகூட நடக்க முடியாமல் கமலா மயங்கித் தரையில் விழுந்தாள். மகன் தன் தாயின் உடம்பைக் கட்டிப்பிடித்து உரத்த குரலில் அழுதான். அலறல் கலந்த அழுகையைக் கேட்டதும் அருகே ஓய்வெடுத்துக் கொண்டிருந்த

வஸுதேவன் அந்த இடத்துக்கு ஓடிவந்தான். கமலாவைத் தோளில் போட்டுக்கொண்டு வந்து படகில் போட்டான். பிறகு படகைத் துழைந்து தனது குடிசைக்கு வந்து சேர்ந்தான். சித்தார்த்தன் அவர்களுக்கான இரவு உணவைச் சமைப்பதில் ஈடுபட்டிருந்தான். சட்டென்று சிறுவனின் முகத்தைப் பார்த்த சித்தார்த்தன் சற்று வியப்படைந்தான். ஏதோ நினைவு வந்தது போலிருந்தது. கமலாவைப் பார்த்தவுடன் அவனுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. வந்திருப்பவன் தன் மகன்தான் என்பதை அறிந்ததும் அவன் இதயம் துரிதகதியில் துடிக்கத் தொடங்கியது.

வஸுதேவனும், சித்தார்த்தனும் கமலாவின் உடலில் ஏற்பட்டிருந்த காயத்தைக் கழுவி, பச்சிலை மருந்தை வைத்துக் கட்டினர். அவளுக்குச் சற்று ஆறுதல் ஏற்பட்டதாகத் தோன்றியது. சற்று தண்ணீர் குடித்த பிறகு அவளது மயக்கமும் அகன்றது. சித்தார்த்தன் வழக்கமாகப் படுத்து உறங்கும் கட்டிலில் கமலாவைப் படுக்க வைத்திருந்தனர். அவள் கண் திறந்து பார்த்தபோது தன் முகத்தை ஊன்றி கவனித்தபடி, பணிவிடை செய்யும் சித்தார்த்தனை கவனித்தாள். முதலில் இது ஒரு கனவு என்று நினைத்தாள். கமலா மெதுவாகச் சிரித்தாள். ஒரு காலத்தில் தன் காதலனாக இருந்த அந்த பிராமணனின் முகத்தைப் பார்த்தாள். படிப்படியாகத் தனது தற்போதைய நிலை புரிந்தபோது பரபரப்புடன் மகனைத் தேடினாள். பாம்பு கடித்த பகுதி நீர் கோத்து வீங்கியிருந்தது.

"அவனும் இங்கேயேதான் இருக்கிறான்..." சித்தார்த்தன் அவளுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டுக் கூறினான்.

கமலா, சித்தார்த்தனின் கண்களை உற்றுப் பார்த்தாள். உடலுக்குள் புகுந்த கடுமையான விஷம் ரத்தக் குழாய்களின் வழியாக மூளைப்பகுதியை அடைந்துவிட்டதால், அவளால் வாயைத் திறந்து பேசவும் முடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டுப் பேசினாள்.

"என் அன்புக்குரிய சித்தார்த்தா, உனக்கும் மிகவும் வயதாயிருக்கிறது. தலைமுடி நரைத்திருக்கிறது. இருந்தாலும் எனக்கு நீ முதன் முதலாக என்னைப் பார்ப்பதற்காக எனது நந்தவனத்துக்குச் செருப்பில்லாமல் அழுக்கடைந்து கிழிந்த துணியுடன், ஜடைமுடியுடன் வந்த வனவாசியான பிராமண இளைஞன்தான்! என்னையும் காமசாமியையும் விட்டுப் பிரிந்தபோது நீ முற்றிலும் மாறியிருந்தாலும் இப்போது நீ பழைய பிராமண இளைஞனாகவே தெரிகிறாய். உன் கண்களுக்கு, இளைஞர்களின் கண்களைப் போன்ற பளபளப்பு உள்ளது. எனக்கும் வயதாகிவிட்டது. போகட்டும், என்னைப் பார்த்தவுடன் உன்னால் சட்டென்று அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்ததா?"



சித்தார்த்தன் புன்னகை புரிந்தபடி பதிலளித்தான்: "பிரியமான கமலாவே, உன்னைப் பார்த்ததும் புரிந்து கொண்டேன்!"

"இவனை உனக்குப் புரிந்ததா? இவன் உன் மகன்!" அருகிலிருந்த பாலசித்தார்த்தனை சுட்டிக்காட்டியபடி கமலா கூறினாள்.

சற்று நேரத்துக்குள் கருணை நிறைந்த அவள் விழிகள் மூடிக்கொண்டன. சிறுவன் உரத்த குரலில் அலறி அழத் தொடங்கினான். சித்தார்த்தன் அவனைத் தன் மடியில் படுக்கவைத்து அவன் தலையை வருடினான். அவன் முகத்தைப் பார்த்த சித்தார்த்தனுக்கு சிறு வயதில் தான் கேட்ட பாடல் ஒன்று நினைவில் எழுந்தது. அதை ராகமாகப் பாடி அவனை உறங்கவைத்து, வஸுதேவனின் படுக்கையில் கிடத்தினான். வஸுதேவன் மண்ணால் செய்த அடுப்பில் கொதிக்கும் தண்ணீரில் அரிசியைக் களைந்து போட்டான்.

சற்று நேரம் இருவரும் முகத்தோடு முகம் பார்த்து மௌனமாக அமர்ந்திருந்தனர்.

"கமலா இறக்கிறாள்..." சித்தார்த்தன் பேசினான்.

வஸுதேவன் ஒப்புக்கொண்டவனாகத் தலை அசைத்தான். அடுப்பிலிருந்து வந்த தீயின் வெளிச்சத்தில் தயவு நிறைந்த அவன் முகம் தெளிவாகத் தெரிந்தது.

சற்று நேரத்துக்குப் பிறகு கமலா மறுபடியும் கண் விழித்தாள்: அவள் முகத்தில் கடுமையான வேதனை நிழலடித்தது. வெளிறிய முகமும், சற்றுத் திறந்தபடி இருந்த வாயும் துடிதுடித்த கண்களும் வேதனையின் அடையாளங்களாக அவனுக்குத் தெரிந்தன. அந்த வேதனை தனக்குள்ளும் பரவுவதை சித்தார்த்தன் உணர்ந்தான். கமலாவுக்கும் அது தெரிந்தது என்றே தோன்றியது.

சித்தார்த்தனைப் பார்த்தபடி அவள் கேட்டாள்: "உன் கண்கள் மாறியிருக்கின்றன. பழைய காலத்தில் உன்னிடமிருந்த கண்களாக இல்லை அவை. நீ இப்போதும் சித்தார்த்தன்தான் என்று நான் எப்படிப் புரிந்து கொள்வது?"

சித்தார்த்தன் பதிலளிக்காமல், அவள் கண்களைப் பார்த்தான்.

"நீ சாந்தியையும், ஆறுதலையும் கண்டறிந்து விட்டாயா?" அவள் கேட்டாள்.

அவன் மீண்டும் மெதுவாகச் சிரித்தான். தன் கைகளால் அவள் இரண்டு கைகளையும் இறுக்கிப் பிடித்தான்.

"சரிதான்!" அவள் குரலைத் தாழ்த்தியபடி பேசினாள்: "எனக்கது புரிந்துவிட்டது. நானும் ஆறுதலைக் கண்டடைவேன்."

"உனக்கு அது ஸித்தித்துவிட்டது!" சித்தார்த்தன் அவள் காதில் மெதுவாக மந்திரித்தான்.

கமலா அவனைச் சற்று நேரம் ஊன்றி கவனித்தாள். தீர்த்தாடனம் புறப்பட்ட குழுவினருடன் சேர்ந்து கௌதமரின் சந்நிதியை அடைந்து, அந்தப் புண்ணிய புருஷரின் முகத் தாமரையை தரிசித்து, பிறவிப் பயன் அடைய வேண்டுமென்று அவள் விரும்பினாள். ஆனால், அதற்கு பதிலாக சித்தார்த்தனின் சந்நிதிக்குத்தான் அவளால் வர முடிந்தது. அது அவளுக்கு மிகவும் மகிழ்ச்சியானதாக இருந்தது. இந்த விவரத்தை அவனிடம் தெரிவிக்க விரும்பினாள். ஆனால், விநாடிக்கு விநாடி வளர்ந்த இயலாமை அதற்கு அவளை அனுமதிக்கவில்லை. கமலா, சித்தார்த்தன் முகத்தையே பார்த்தபடி படுத்திருந்தாள். கொஞ்சம்



கொஞ்சமாக அவள் கண்களின் பளபளப்புக் குறைந்து கொண்டே வந்து மறைந்தது. கடைசியான உயிர் மூச்சு அந்த உடம்பிலிருந்து விடுபட்ட பிறகு, சித்தார்த்தன் தன் விரல்களால் அவள் கண்களை வருடி மூடினான்.

அவளது மென்மையான முகத்தைப் பார்த்தபடி சித்தார்த்தன் வெகுநேரம் அந்தக் கட்டிலிலேயே அமர்ந்திருந்தான். கமலாவின் கோணிய உதடுகளும், வெளிறிய கன்னக் கதுப்புகளும் ஒருகாலத்தில் அவள் எப்படிப்பட்ட அழகியாக இருந்தாள் என்பதை சித்தார்த்தனுக்கு நினைவூட்டின. வாழ்க்கையின் வசந்தத்தில் அவள் உதடுகள் சிவந்த அத்திப்பழம் போல் ஒளி பொருந்தி இருந்ததாக, தான் நினைத்ததுண்டு.

அவளது வெளிறிய முகத்தின் மீது கண்களைப் பதித்தபடி வெகுநேரம் அமர்ந்திருந்தான். கன்னங்களில் ஆங்காங்கே சன்னமான வாய்க்கால்களாகச் சுளிவுகள் தென்பட்டன. தன் முகமும் அதுபோல் வெளிறியும் உடல் மொத்தமும் விறைப் படைந்து வருவதாகவும் சித்தார்த்தனுக்குத் தோன்றியது. மரணம் தன்மேலும் அதன் குளிர்ந்த கரங்களை அழுத்தி வைத்திருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அந்த விநாடியிலேயே தனது மற்றும் கமலாவின் இளமைக்காலத்தின் ஒளி பொருந்திய முகங்களும், அவளது சிவந்து, பருத்த உதடுகளும் ஒன்றிணைந்து பருவ சுகம் அனுபவிப்பதாகவும் தோன்றியது. அந்த விநாடியில் அவனுக்கு ஏற்பட்ட உணர்வுகள் முற்றிலும் கடந்தகால உண்மை உணர்வை அப்படியே உட்கொண்டிருந்தன. வாழ்க்கையின் விவரிக்க முடியாத யதார்த்த நிலையை - ஒவ்வொரு விநாடிகளின் நிலையற்ற தன்மையை சித்தார்த்தனால் உணரமுடிந்தது.

சித்தார்த்தன் தனது சமாதியிலிருந்து விழித்தபோது வஸுதேவன் அவனை சாப்பிட அழைத்தான். சித்தார்த்தன் நட்புடன் அதை மறுத்தான். ஆட்டைக் கட்டும் தொழுவத்தில் இரண்டு ஓலைப் பாய்களை விரித்து ஒன்றில் வஸுதேவன் படுத்தான். சித்தார்த்தனுக்கு உறக்கம் வரவில்லை. அவன் குடிசையை விட்டு வெளியே வந்து இரவு முழுவதும் நதியின்

தாளலயம் மிக்க ஆத்மார்த்தமான நீரோட்டம், அதன் மந்திரத் தொனி ஆகியவற்றை வெகு உன்னிப்பாக கவனித்தான். தனது வாழ்க்கையின் நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு கட்டத்தையும் அவன் நினைவு கூர்ந்தான். கடந்தகால சம்பவங்களே அவனை அதிகமாக மனம் வருந்தச் செய்தன. அவ்வப்போது குடிசையின் உட்புறம் சென்று மகன் உறங்குகிறானா என்று கவனித்தான்.

பொழுது விடிவதற்கு முன்பே தொழுவத்திலிருந்து எழுந்து வந்த வஸுதேவன், சித்தார்த்தனிடம் கேட்டான்: "நீ இதுவரை தூங்கவே இல்லையா?"

"இல்லை வஸுதேவா, நான் இங்கே உட்கார்ந்தபடி நதியின் தத்வோபதேசங்களைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அது என்னிடம் முக்கியமான பல சேதிகளைச் சொன்னது. அது எனது சிந்தையை உற்சாகத்துடன் தட்டி எழுப்புகிறது. எல்லாக் காரிய காரணங்களதும் அடிப்படையான ஐக்கியம் குறித்து இப்போது நான் தெளிவு பெற்றுள்ளேன்."

"நீ மிகவும் துயரடைந்திருக்கிறாய், சித்தார்த்தா. ஆனாலும் துயரம் உன் ஆத்மாவுக்குள் நுழையவில்லை."

"இல்லை... என் அன்புக்குரிய நண்பா, நான் எதற்காகத் துயரப்பட வேண்டும்? உல்லாசத்துடன் வியாபாரியாக இருந்த நான், இப்போதுதான் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். என் மகன் எனக்குக் கிடைத்து விட்டானே!"

"நான், உன் மகனையும் எனது விருந்தாளியாக வரவேற்கிறேன். சரி நாம், நமது வேலைகளைச் செய்வோம். நாம் செய்து முடிக்க வேண்டிய வேலைகள் ஏராளமாக உள்ளன. என் மனைவி இறந்த அதே கட்டிலில்தான் கமலாவும் இறந்திருக்கிறாள். என் மனைவியை உள்வாங்கிய அதே குன்றுப்புறத்தில் கமலாவுக்கும் நாம் சிதை மூட்டுவோம்."

பாலசித்தார்த்தன் உறங்கும்போது சித்தார்த்தனும், வஸுதேவனும் கமலாவின் உடலை முறைப்படி சிதையிட்டனர்.

# 10. மகன்

**பா**லசித்தார்த்தனுக்கு எதிர்பாராமல் நிகழ்ந்த அம்மாவின் மரணம் பெரிய இழப்பாக இருந்தது. அவன் கதறி அழுதான். மிகவும் பயந்து போன அந்தச் சிறுவன் தாயை எரித்து அடக்கம் செய்த சிறு குன்றின் சரிவுக்குச் சென்று மணிக்கணக்கில் அழுதான். தனது கொடூரமான விதியை எண்ணி தன்னையே பழித்துக் கொண்டான். தொடர்ந்த அழுகையாலும், சரியாகச் சாப்பிடாத தாலும் அவன் முகம் வெளிறிச் சோகை பீடித்தது போலானது. அவனை ஆறுதல் படுத்துவதற்காக சித்தார்த்தன் மேற்கொண்ட முயற்சிகளும் மாறாக விரக்தியையே அவனிடம் ஏற்படுத்தின. அவன் சித்தார்த்தன், வஸுதேவன் ஆகியோரிடமிருந்து மாறுபட்டுத் தனிமையில் இருக்க விரும்பினான்.

சித்தார்த்தன் மகனிடம் மிகவும் அன்புடன் நடந்து கொண்டான். அம்மாவின் மரணத்தால் மகனுக்கு ஏற்பட்ட துயரத்தில் சித்தார்த்தனும் பங்கு கொண்டான். தான் அதுவரை பாலசித்தார்த்தனுக்கு அறிமுகம் இல்லாத ஒருவனாக இருந்ததாலேயே, அவனால் தன்னை ஓர் அப்பாவாக நினைத்து நேசிக்க முடியவில்லை என்பதும் சித்தார்த்தனுக்கு விளங்கியது. நாட்கள் செல்லச் செல்ல அம்மாவின் அபரிமிதமான செல்லத்தினால் பையனின் நிலை மிகவும் மோசமாகி இருப்பதை சித்தார்த்தன் உணர்ந்தான். பணக்காரத்தனமான முறையில் அவன் வளர்க்கப்பட்டிருந்தான். எந்த ஒரு காரியத்துக்கும் அவனுக்கு வேலைக்காரர்களின் உதவி தேவைப்பட்டது. படுக்கை விரித்துப் போடவும் துணிகளைத் துவைத்து, மடித்து வைக்கவும்கூட அவனுக்கு வேலைக்காரன் தேவைப்பட்டான்.

அதுவரை அறிமுகமில்லாததும், பழகியிருந்ததற்கு நேர்மாறானதுமான அந்தச் சூழ்நிலையுடன் பாலசித்தார்த்தனால் இணங்கிப் போக முடியவில்லை என்பதும் சித்தார்த்தனுக்கு விளங்கியது. அதற்காக மகனை, அப்பா வற்புறுத்தவுமில்லை. அவனுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் சித்தார்த்தன் செய்து

கொடுத்தான். அந்தக் குடிசையில் சமைக்கப்படும் உணவில் நல்ல ஒரு பகுதியை மகனுக்குக் கொடுத்தான். படிப்படியாக அன்பும் பொறுமையும் கைக்கொண்டு, மகனைக் கீழ்ப்படுத்தி விடலாம் என்று சித்தார்த்தன் நினைத்தான்.

மகன் தன்னுடன் வசிக்க நேர்ந்ததில் முதலில் சித்தார்த்தன் மகிழ்ச்சியடைந்தான். ஆனால், காலம் செல்லச் செல்ல இந்த மகிழ்ச்சியின் அளவு குறைந்தது. எப்போதும் முகத்தை உம்மென்று வைத்தபடி மற்றவர்களிடம் வெறுப்பையே காட்டினான் பாலசித்தார்த்தன். பிடிவாதமும், திமிரும் நிறைந்த அவனது நடவடிக்கைகள் தாங்கமுடியாததாக இருந்தன. வயதானவர்களிடம் மரியாதை இல்லாமலும் வீட்டு வேலைகளில் ஆர்வமற்றும் இருந்தான். அக்கம் பக்கத்து வீடு மற்றும் தோட்டங்களில் நுழைந்து காய், பழங்களைத் திருடித் தின்றான். இந்த நிலையில் தன் மகனால் தனக்கு மகிழ்ச்சியோ நிம்மதியோ கிடைக்காமல், வருத்தமும் தொல்லையும்தான் அதிகம் ஏற்படுவதாக சித்தார்த்தனுக்குப் புரிந்தது. இருப்பினும் சித்தார்த்தன் பதினோரு வயதான தன் மகனை நேசித்தான். அவனிடமிருந்து கிடைக்கும் மகிழ்ச்சியும் திருப்தியையும்விட, அவனால் விளைந்த வருத்தம் மற்றும் தொல்லைகளே சித்தார்த்தனுக்கு மிகவும் பிடித்திருந்தன.

பாலசித்தார்த்தன் அவர்களுடன் குடிசையில் வசிக்கத் தொடங்கிய பிறகு வஸுவேனும் சித்தார்த்தனும் தங்களது எல்லா வேலைகளையும் ஒருவிதமாகப் பிரித்துக் கொண்டனர். படகுத்துறை மற்றும் வெளிவேலைகளை வஸுதேவனும் வீடு மற்றும் தோட்ட வேலையை சித்தார்த்தனும் மேற்கொண்டனர். இப்படியாகத் தன் மகனுடன் அதிகமான நேரத்தைச் செலவிட சித்தார்த்தனால் முடிந்தது.

மகன் தன்னைப் புரிந்துகொள்வான் என்றும், தனது அன்பை ஏற்றுக் கொள்வதுடன், அன்பைத் திருப்பித் தருவான் என்றும் எதிர்பார்த்துப் பார்த்து மாதங்கள் பல கடந்தன. வஸுதேவனும் பொறுமையுடன் வெகுநாளாக இதை கவனிக்கவும் செய்தான். ஒரு நாள் பாலசித்தார்த்தன் தன் அப்பாவை பிடிவாதம் மற்றும் திமிரால் மிகவும் காயப்படுத்தினான். சாப்பிடுவதற்காக அவர்கள் வைத்திருந்த இரண்டு பாத்திரங்களையும் எறிந்து உடைத்தான்.



அன்று மாலை நேரத்தில் வஸுதேவன், சித்தார்த்தனுக்கு அருகே வந்து அமர்ந்து மென்மையான குரலில் பேசத் தொடங்கினான்:

"நான் ஒரு நண்பன் என்ற நிலையில் பேசுகிறேன். எனவே, என்னை மன்னிக்க வேண்டும். சித்தார்த்தா, நீ மிகவும் மனவேதனை அடைகிறாய். அதற்குக் காரணம் உன் மகன். அவன் நம் இருவரையும் தண்டிக்கிறான். அந்தப் பையன் வேறொரு விதமான வாழ்க்கையை அனுபவித்து வளர்ந்தவன். அதிக சுகம் கண்டவன். அவன் வேறொரு உலகத்தில் வாழ விரும்புகிறான். வெளியுலக சுகத்தையெல்லாம் விட்டுவிட்டு, தானாகவே இந்த முரட்டு வாழ்க்கையை நாடி வந்தவனல்ல. பட்டணத்தின் நாகரிகமும், ஆடம்பரமும் அவன் விரும்பாமலேயே இழக்க நேர்ந்த ஒன்று. நான் நதியிடம் இதைப் பற்றிப் பலதடவை பேசி, அதன் கருத்தையும் கேட்டேன். ஆனால், நதி சிரித்துக் கொண்டது. என்னுடைய மற்றும் உன்னுடைய முட்டாள்தனத்தைப் பார்த்து அது வாய்விட்டுச் சிரித்தது. நாம் எவ்வளவு மூடர்களாக இருக்கிறோம்? நீர் நீருடனும், மண் மண்ணோடும், இளமை இளமையோடுமே இணைகிறது. உன் மகனுக்கு இங்கே மகிழ்ச்சி கிடைக்குமென்று நினைக்கிறாயா? நதியிடம் இதுகுறித்துப் பேசி, அது என்ன சொல்கிறது என்று கவனி."

சித்தார்த்தன் வருத்தத்துடன் வஸுதேவனின் கருணை நிறைந்த முகத்தைப் பார்த்தான். அங்கு அமைதியும், திருப்தியும் அலையடித்தன.

"நான் எப்படி அவனைக் கைவிட முடியும்?" சித்தார்த்தன் மெதுவான குரலில் கேட்டான்: "இன்னும் சில நாள் போகட்டும். என்னுடைய அன்பு மற்றும் பொறுமையால் அவன் இதயத்தைக் கவர முயலுகிறேன். நாளடைவில் அது சாத்தியமாகலாம். நதியும் ஒரு சந்தர்ப்பத்தில் அவனுடன் பேசலாம். அப்படி அவனுக்கும் ஆத்மஞானம் ஏற்படலாம்!"

வஸுதேவனின் முகத்தில் ஒளி படர்ந்தது. "ஆமாம், கண்டிப்பாக அவனுக்கும் ஒருநாள் உள்ளுக்குள்ளிருந்து ஒரு குரல் கேட்கலாம். ஆனால், அந்தக் குரல் நீ உத்தேசிக்கும் மார்க்கத்தைத் தொடர்வதாக இருக்காது. அவன் துன்பம்-இன்பம் இரண்டும் மாறி மாறி வரும் இந்த மாயப் பிரபஞ்சத்தின் எல்லா நீழ்ச்சுழிகளிலும் மூழ்கிக் குளிக்கவும், அதிலுள்ள ஆபத்துகளை நேரிடவும் முயல்வான். அந்த வழியைத்தான் அவன் தேர்ந்தெடுக்கக்கூடும். அவனது துயரத்துக்கும் ஏமாற்றத்துக்கும் அளவே இருக்காது. அவன் இதயம் கர்வம் நிரம்பியதாகவும், கடினமானதாகவும் விளங்கும். பலவிதமான பாவங்களையும் செய்யும் வாய்ப்பு உள்ளது. சொல், நண்பா, நீ அவனுக்குத் தேவையான பயிற்சிகளை அளிக்கிறாயா? எப்போதாவது அவன் உனக்குக் கீழ்ப்படிந்ததாகவோ, அல்லது அதற்காக நீ அவனை தண்டித்ததாகவோ உண்டா?"

"இல்லை வஸுதேவா, நான் அதையெல்லாம் செய்ததே இல்லை!"

"அதுவும் எனக்குத் தெரியும். நீ தேவையான அளவுகூட அவனிடம் கோபம் காட்டுவதோ, கடுமையாக நடந்து கொள்வதோ கிடையாது. ஏனெனில், இனிமையான பழக்கம் முரட்டுத்தனத்தை விடவும், நீர் பாறையை விடவும், அன்பு சக்தியை விடவும் விலை உயர்ந்ததென்று நீ கருதுகிறாய். அது நல்லதும் பாராட்டப்பட வேண்டியதும் கூட. இருந்தாலும், புத்திமதி சொல்லாமல் இருப்பதும் ஒருவிதத்தில் மூடத்தனமாகத் தெரியவில்லையா? உன்னுடைய அன்பினால் அவனை இந்தக் குடிசை என்னும் பாதாளச் சிறைக்குள் அடைத்துவிட விரும்புகிறாய். உனது அன்பாலும் கருணையாலும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. மாறாக வெட்கமும், வருத்தமும்தான் ஏற்படுகிறது. செல்லமாக வளர்ந்து சீரழிந்த இந்தக் குழந்தையை, வாழைப்பழமும் தண்ணீரும் சாப்பிட்டு வாழும் இரண்டு கிழவர்களுடன் இந்தக் குடிசையில் வாழுமாறு வற்புறுத்துகிறாய். அதற்கு அவன் ஒப்புக்கொள்ள மாட்டான். நமது அன்றாட நடவடிக்கைகளும், சிந்தனைகளும் அவனுடையதிலிருந்து மிகவும் மாறுபட்டவை. அவனுடனான உனது நடவடிக்கைகள் அவனுக்கு மேலும் துயரத்தையும் அதிருப்தியையுமே தருகின்றன."



சித்தார்த்தன் முகத்தில் வருத்தம் அதிகரித்தது. தலை தாழ்த்தி கண்களை நிலம் நோக்கித் தாழ்த்தி திகைப்பு நிறைந்த குரலில் அவன் கேட்டான்: "வஸுதேவா, இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறாய்?"

வஸுதேவனது பதில் இப்படித்தானிருந்தது: "நீ அவனைப் பட்டணத்துக்குக் கொண்டு போ. அவன் தாயாரது வீட்டில் அவனை விட்டுவிடு. அங்கு ஏராளமான வேலைக்காரர்களும், தின்பண்டங்களும், விளையாட்டுப் பொருள்களும் அவனுக்குக் கிடைக்கும். அதையே அவன் விரும்புகிறான். ஒரு வேளை பட்டணத்தில் அதெல்லாம் இல்லாதபட்சத்தில் அவனை ஒரு குருகுலத்தில் சேர்த்துவிடு. அவன் படிக்கவில்லையானாலும்கூட அவன் வயதொத்த பிற ஆண்-பெண் குழந்தைகளுடன் பழகவாவது அவனால் முடியும். இதைப்பற்றி நீ எப்போதாவது யோசித்திருக்கிறாயா?"

"உன்னால் மனத்தின் ஆழங்களிலுள்ள விஷயங்களைக் கூட யூகிக்க முடிகிறது..." சித்தார்த்தன் துயரத்துடன் பேசினான்: "நான் எத்தனையோ தடவை அதைப்பற்றி யோசித்திருக்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட மோசமான பிடிவாதமுள்ள ஒருவன் எப்படி இந்த உலகத்தில் தனியாக வாழ முடியும்? மற்றவர்களைவிட தான் மிக உயர்ந்தவன் என்றும், பொய்யான மாய சுகங்களில் ஒன்றி, பாவ கர்மங்களைச் செய்தும் அல்லவா வாழ்வான்? சம்சார சாகரத்தில் மூழ்கி, அவன் தன் ஆத்மாவையே அழித்துக் கொள்ள மாட்டானா?"

படகோட்டி மீண்டும் புன்னகைத்தான். நட்புடன் சித்தார்த்தனின் தோளில் தட்டியபடி வஸுதேவன் இப்படிக் கூறினான்: "நண்பா, இந்தக் கேள்வியை நீ நதியிடம் கேட்டுப் பார். நதி சொல்வதை உற்று கவனி. நீ வாழ்க்கையில் உன் மகனை

ஒதுக்கவா நினைக்கிறாய்? உன்னால் உன் மகனை சம்சாரக் கடலிலிருந்து காப்பாற்ற முடியும் என்று கருதுகிறாயா? அதெப்படி முடியும்? அறிவுரைகள் சொல்லியும், பிரார்த்தனை செய்தும் அதை நிறைவேற்ற முடியுமா என்ன? அன்பு நண்பனே முன்னொரு தடவை நீ, 'சித்தார்த்தன்' என்கிற ஒரு பிராமண இளைஞனின் கதையை என்னிடம் சொன்னதை இதற்குள்ளாகவா மறந்துவிட்டாய்? பேராசையிலிருந்தும், முட்டாள்தனங்களிலிருந்தும், உலகத்தின் பிற சஞ்சலங்களிலிருந்தும், யோக்கியனான ஒரு பிராமணனை யார் காப்பாற்றினார்கள்? அவன் அப்பாவின் மதபரமான பக்தியா, குருமார்களின் அறிவுரையா? அவன், தானே கற்றுக்கொண்ட அறிவா? எந்த ஒன்றுமே சித்தார்த்தனைக் காப்பாற்றவில்லையே?

"ஓர் அப்பாவாலோ, ஆசிரியராலோ சித்தார்த்தனை அவன் சுயமாகத் தேர்ந்தெடுத்த பாதையிலிருந்து மாற்றிக் காப்பாற்ற முடிந்ததா? அந்த வழிகள் எவ்வளவு பாவகரமானவையாக இருந்தன? சொந்த விருப்பத்துடன் நடந்து கொள்ளும் எந்த ஒரு மனிதரையாவது பிறிதொரு மனிதனால் திசைமாற்ற முடியுமா? முடியாது என்பதுதான் எனது கருத்து. உன் மகனை நீ நேசிப்ப தாலேயே அவனை இந்த மாயப் பிரபஞ்சத்தின் கஷ்டங்களி லிருந்தும் மாயைகளிலிருந்தும் விடுவித்து விடவேண்டுமென்று விரும்புகிறாயா? அதுதான் உனது நினைப்பா? நீ அவனுக்காகப் பத்துத் தடவை ஆத்மத் தியாகம் செய்தாலும் அவனுடைய விதியை ஓர் அணுவளவு கூட உன்னால் மாற்ற முடியாது."

வஸுதேவன் இதற்கு முன்பு ஒருபோதும் இவ்வளவு அதிகமாகப் பேசியதே இல்லை. அவனது உபதேசங்களுக்காகப் பணிவுடன் நன்றி தெரிவித்த சித்தார்த்தன் படுத்துக் கொண்டான். ஆனால், தீவிரமான மன உளைச்சலின் காரணமாக அவனால் உறங்க முடியவில்லை. வஸுதேவன் கூறிய விஷயங்களைக் குறித்து ஏற்கெனவே சித்தார்த்தன் பல தடவை யோசித்திருக்கிறான். ஆனால், மகனுடனான அன்பின் காரணமாக அவனால் அந்த அறிவுரைகளைச் செயல்படுத்தவும் முடியாமல் இருந்தது. மகனிடமிருந்த விருப்பமும், ஒருவேளை அவனை இழந்துவிட



நேருமோ என்கிற பய உணர்வும் சித்தார்த்தனை முற்றிலும் செயலற்றவனாக மாற்றி விட்டிருந்தன.

சித்தார்த்தன் அன்பு நண்பனான வஸுதேவனின் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவே இல்லை. பாலசித்தார்த்தனை விட்டுப் பிரிய அவன் தயாராக இல்லை. தன்னிடம் மகன் திமிர்த்தனம் காட்டவும், மரியாதையற்று நடந்து கொள்ளவும் சித்தார்த்தன் அனுமதித்தான். அமைதியாக இவற்றையெல்லாம் பொறுத்துக் கொண்டது எதற்காக? பொறுமை மற்றும் அன்பின் உதவியால், நாளடைவில் மகனது அன்பையும் ஆதரவையும் பெற்றுவிடலாம் என்று நினைத்ததால்தான். எல்லையற்ற பொறுமையுடன் வஸுதேவனும் காத்திருந்தான்.

ஒருநாள் பாலசித்தார்த்தனின் முகத்தைப் பார்த்தபோது அவன் அப்பாவுக்கு, கமலாவின் நினைவு வந்தது. எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் கமலா அவனிடம் கூறிய ஒரு விஷயம் அத்துடன் நினைவுக்கு வந்தது. 'உங்களால் யாரையும் நேசிக்க முடியாது!' அப்படி அவள் சொன்னபோது அதை ஒப்புக் கொள்ளவும் செய்தோம். வானவெளியில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் ஒரு நட்சத்திரம்தான் தான் என்றும், மற்றவர்கள் பழுத்து, உலர்ந்து உதிர்ந்து கீழே விழும் சருகுகள் என்றும் நினைத்திருந்தோம். இருப்பினும் கமலாவின் வார்த்தைகள் அவனுள் குற்ற உணர்வையே ஏற்படுத்தின.

மற்றவர்களது காரியங்களில் உற்சாகம் காட்டுவதோ, மற்ற மனிதர்களிடம் அன்பை முன்னிட்டு விட்டுக்கொடுப்பதோ, அனுசரித்துப் போவதோ சித்தார்த்தனுக்கு வழக்கமில்லை. அதற்கான மனநிலை அவனிடம் இருந்ததும் இல்லை. சாதாரண மனிதனுக்கும் சித்தார்த்தனுக்கும் இடையே இருந்த வேறுபாடே இதுதான் என்றுகூட, அதற்காக அவன் பெருமிதம் அடைந்ததுண்டு. இப்போதோ தன் மகன் தன்னுடன் இருப்பதால் தானும் மற்ற சராசரி மனிதர்களைப் போல் அதையெல்லாம் செய்கிறோம். மகனுடனான அன்பு எல்லையற்றதாக இருக்கிறது. அன்பு நிறைந்த ஒரு முட்டாளாகவே அவன் மாறிவிட்டான்.

அப்பாவுக்கும் மகனுக்குமான உறவில் அவனுக்கு உறவுணர்வே மிகவும் வலுவானதாகத் தோன்றியது. அதன் மூலம் தானே மீண்டும் உயிர்த்தெழுந்ததாக சித்தார்த்தனுக்குத் தோன்றியது. அதனால் பேறு பெற்றதாகவும் மனம் நினைத்தது.

பால சித்தார்த்தனுடன் தனக்குள்ள அன்பு, மனித இயல்பு வாய்ந்த சாதாரணமான ஓர் உணர்வு என்றும் சித்தார்த்தனுக்குத் தோன்றியது. சம்சார சாகரத்தில் கிடந்து உழலும் யாருக்கும் தோன்றக்கூடிய ஓர் உணர்வுதான்! ஆனால், அது ஆபத்தான விசையை அடிப்புறம் கொண்டுள்ள ஒரு நீர்ப்பரப்பு. இருப்பினும் இந்த அன்பு தனது இயல்புக்குப் பொருத்தமானது என்றும் உணர்ந்தான். அவனுக்கு அப்போது ஏற்படும் வேதனையும் ஏமாற்றங்களும் மற்ற பிற தோல்விகளும்கூட ஓரளவுக்கு, தான் அனுபவிக்க வேண்டியதுதான் என்றும் அவன் தீர்மானித்தான்.

இதற்கிடையில் சித்தார்த்தனின் மகன், தேவையான அளவு முட்டாள்தனங்களைச் செய்யவும் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தந்தான். சொந்தத் தகப்பனிடம் அவனைக் கவரத்தக்க எந்த ஓர் அம்சமும் இருப்பதாக அவனுக்குத் தெரியவில்லை. அப்பாவிடம் பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. வயதான தன் தந்தை ஒரு நல்ல மனிதன்தான். இரக்கமும் தெய்வ பக்தியும் உள்ள ஒரு புண்ணிய ஆத்மா. இருப்பினும் இவை அவனைக் கவரக்கூடிய குணங்களாக இருக்கவில்லை. தன்னை இந்தக் குடிசையில் கட்டிப் போட்டிருந்தது வேறு. சித்தார்த்தன் மீது அவன் வெறுப்பு கொள்ளக் காரணமாக இருந்தது. தனது பணிவற்ற நிந்தனைக்கு உரிய செயல்களை சித்தார்த்தன் சிரிப்பும் அன்பும் கொண்டு நேரிட்டபோது தந்திரசாலியான அந்தக் கிழவனிடம், பாலசித்தார்த்தனுக்கு இரக்கம் தோன்றவில்லை. அவனைத் தண்டித்தும், அறிவுரைகள் சொல்லியும் நடந்து கொண்டிருந்தால் ஒருவேளை அவன் தன் தந்தையை நேசித்து மரியாதையோடு நடத்தியிருப்பானோ என்னவோ?

இப்படி இருந்தும் பாலசித்தார்த்தன் தன் தந்தையிடம் மிக அதிக அளவில் வெறுப்பையும் கோபத்தையும் காட்டிய ஒரு



நாளும் வந்தது. சித்தார்த்தன் தன் மகனிடம் தோட்டத்திலிருந்து சுள்ளிகள் சிலவற்றை உடைத்துவரச் சொன்னான். அடுப்பு எரிப்பதற்காக அவனிடம் விறகு பொறுக்கி வருமாறு சில நேரம் சித்தார்த்தன் சொல்வதுண்டு. அன்று அவன் அதைச் செய்யத் தயாராக இல்லை. கோபமும் விரோதமும் அவன் முகத்தில் மாறி மாறிப் பிரதிபலித்தது. கையை மடக்கி ஆட்டியபடி அட்டகாசமாக அலறினான்: "உங்களுக்குத் தேவையானால் விறகை நீங்களே கொண்டு வாருங்கள். நான் இந்தக் குடிசையின் வேலைக்காரன் அல்ல. நீங்கள் என்னை அடிக்க மாட்டீர்கள் என்றும் எனக்குத் தெரியும். அதற்குத் தேவையான தைரியம் உங்களிடம் கிடையாது. ஆனால், அதற்கு பதிலாக அன்பு, ஆறுதல் வார்த்தை போன்ற வற்றின் உதவியால் நீங்கள் தினமும் என்னை மிரட்டுகிறீர்கள். நானும் உங்களைப் போல் மாற வேண்டுமென்பது உங்களது நினைப்பு. அது ஒருபோதும் நடக்காது. உங்களைப் பழி வாங்கு வதற்காகவாவது நான் ஒரு திருடனாகவோ, கொலைகாரனாகவோ மாறி நரகத்துக்குச் செல்வேன். என் அம்மாவின் காதலனாக இருப்பினும் நீங்கள் ஒருபோதும் என் அப்பாவாக முடியாது!"

கடுமையான கோபமும் வெறுப்பும், வருத்தமும் சேர்ந்து கொண்டதால் அவன் சிவந்த முகம் நீலமடைந்தது. அவனுள் பல நாள்களாக தகிக்கும் ஏமாற்றத்துக்கும், மனக்காயத்துக்கும் ஓர் ஆறுதல் கிடைத்ததுபோல் தெரிந்தது. தனது கோபத்தையும் பழி உணர்வையும் வெளிப்படுத்தியவன் அங்கிருந்து ஓடிப்போனான். ஏறத்தாழ இருட்டும் நேரத்துக்குத் திரும்பி வந்தான்.

மறுநாள் பொழுது விடிந்தபோது பாலசித்தார்த்தனைக் காணவில்லை. படகில் பயணம் செய்பவர்கள் கூலியாகத் தரும் நாணயங்களைப் போட்டு வைத்திருந்த கூடையுடன் மறைந்து விட்டிருந்தான். படகுத் துறையிலிருந்த படகையும் காணவில்லை. ஆனால், படகு எதிர்க்கரையில் இருப்பது சித்தார்த்தனுக்குத் தெரிந்தது. மகன் ஓடிப் போய்விட்டான்.

"நான் அவனைத் தேடிக் கண்டுபிடிக்கப் போகிறேன்!" சித்தார்த்தன் சொன்னான். முந்தைய நாள் அவன் பேசிய

வார்த்தையும், நடந்துகொண்ட விதமும் சித்தார்த்தனின் மனத்தை மிகவும் காயப்படுத்தியிருந்தது. அவன் சொன்னான்: "ஒரு குழந்தை ஆபத்துகள் மறைந்திருக்கும் காட்டு வழியில் தனியாகப் பயணம் செய்ய முடியாது. அவனுக்கு ஏதாவது ஆபத்து நேரலாம். நாம் ஒரு தெப்பம் கட்டி மறுகரைக்குப் போகலாம்."

"போகலாம்" வஸுதேவன் ஒப்புக் கொண்டான்: "ஆனால், நாம் போவது உன் மகன் கொண்டு சென்ற படகைத் திரும்பக் கொண்டு வருவதற்காகத்தான். அவன் போகட்டும் நண்பா! அவன் இப்போது ஒரு குழந்தை அல்ல. அவனது காரியங்களைச் செய்து கொள்ள அவனுக்குத் தெரியும். ஒருவேளை பட்டணம் போவதற்கான வழியை விசாரித்தபடி இப்போது அவன் சென்று கொண்டிருக்கலாம். அதையும் நீ மறக்கக்கூடாது. நீ வாழ்க்கையில் எதையெல்லாம் ஒதுக்கித் தவிர்த்தாயோ, அதையெல்லாம் அவன் செய்ய முயற்சிக்கிறான். அவன், அவனது வழியைப் பார்த்துக் கொள்ளட்டும். நீ இந்த விஷயத்துக்காக அதிகமாக மனம் வருந்து கிறாய், கவலைப்படுகிறாய் என்றும் எனக்குத் தோன்றுகிறது."

சித்தார்த்தன் பதில் எதுவும் சொல்லவில்லை. கையிலிருந்த கோடரியின் உதவியால் மூங்கில் கம்புகளைச் சீவி, விரைவிலேயே ஒரு தெப்பம் கட்டினான். இருவரும் அக்கரைக்கு வந்தனர்.

"நீ எதற்காகக் கோடரியைக் கையிலேயே எடுத்து வந்திருக்கிறாய்?" சித்தார்த்தன் வஸுதேவனிடம் கேட்டான்.

"நமது படகில் உள்ள துடுப்புகள் ஒருவேளை பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கலாம். அதற்காகத்தான்!" வஸுதேவன் சொன்னான்.

படகை நெருங்கியபோது வஸுதேவனது யூகம் சரிதான் என்பது தெரிந்தது. கோபம் கொண்ட பாலசித்தார்த்தன், இரண்டு துடுப்புகளையும் கண்டபடி உடைத்துப் போட்டிருந்தான். படகில் தொடர்ந்து வந்து யாராவது தன்னைப் பிடித்துவிடக்கூடும் என்று பயந்தே அவன் அவ்வாறு செய்திருந்தான்.



வஸுதேவன் உடனடியாக இரண்டு துடுப்புகள் செய்து அதை இழைத்துப் பளபளப்பாக்கும் வேலையில் ஈடுபட்டான். சித்தார்த்தன் மகனைத் தேடிப் பட்டணம் சென்றான்.

சித்தார்த்தன் காட்டு வழியாகச் செல்லும் குறுக்குப் பாதையில் வெகு நேரம் நடந்தான். நெடுந்தொலைவு வந்த பிறகு, தான் தேடிச் செல்வது வியர்த்தமான வேலை என்றும், இதற்குள் அவன் பட்டணத்தின் உட்பகுதிக்குள் சென்று விட்டிருக்கக் கூடுமென்றும் தோன்றியது. அல்லது தன்னை யாராவது நிச்சயமாகத் தேடி வரக்கூடும் என்பதற்காக பட்டணத்துக்குள் ஒளிந்திருக்கவும் செய்யலாம். மகனைப் பற்றி நினைத்தபோது அவனுக்கு ஆபத்து எதுவும் நிகழவில்லை; தனது பயத்துக்கு அர்த்தமே இல்லை என்றும் சித்தார்த்தன் முடிவு கட்டினான். அவனைக் காப்பாற்ற முடியாமல் போனால்கூடப் பரவாயில்லை. கடைசித் தடவையாக அவனைப் பார்ப்பதற்காகவாவது பட்டணம் செல்வதென்று தீர்மானித்து மீண்டும் நடக்கத் தொடங்கினான்.

பட்டணத்தின் எல்லையை ஒட்டிச் செல்லும் விசாலமான ராஜபாட்டையை அடைந்தபோது, முன்னொரு காலத்தில் அந்த இடத்தில் முதன்முதலாக கமலாவை சந்தித்தது நினைவில் எழுந்தது. இருபதுக்கும் மேற்பட்ட வேலைக்காரர்கள் புடைசூழ பல்லக்கில், ஒரு பெரிய குடையின் கீழ் கவர்ச்சிகரமாக அவள் பயணம் செய்தது ஒரு பெரும் ஊர்வலம் மாதிரியே இருந்தது. கமலாவின் பூந்தோட்டமும், அதையொட்டிய மண்டபமும், அறைகளும் தூரத்திலிருந்தே கண்களுக்குத் தட்டுப்பட்டன. இறந்தகால நினைவுகள் அவனுள் மேலெழும்பின. கௌபீனம் உடுத்திய, செம்பட்டை முடியும், செருப்புகள் அற்ற பாதத்துடன் இருந்த தனது அன்றைய கோலமும் மேலெழும்பி வந்தது. திறந்து கிடந்த நந்தவனத்தின் வாசல்புற வழியாக உள்ளே நுழைந்தபோது உட்புறத்தில் மஞ்சள் நிற ஆடையணிந்த புத்த பிட்சுக்கள் வாதம் புரிவதையும், அங்குமிங்குமாக உலவுவதையும் சித்தார்த்தன் கவனித்தான்.

சித்தார்த்தன் ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டு வெகுநேரம் அங்கேயே நின்றான். தனது கடந்த கால வாழ்க்கையின் சுருள்கள்

படங்கள் போல் ஒவ்வொன்றாக மலர்ந்தன. இளைஞனான சித்தார்த்தனும் கமலாவும் நகைச்சுவையாகப் பேசியபடி அந்த நந்தவனத்தில் ஒன்றாக இணைந்து உலாவியதும், முதன் முதலாக கமலா தன் சிவந்த பளபளப்பான உதடுகளால் அவனை முத்தமிட்டதும் தெளிவடைந்தது. பின்பு தன்னுடைய வனவாச வாழ்க்கையைத் துச்சமாகக் கருதி, காமசாமியுடன் இணைந்து வியாபாரத்தில் ஈடுபட்டதும், ஏராளமாகப் பணம் சம்பாதித்ததும் மாறி மாறித் தெரிந்தது. காமசாமியின் வீட்டில் அழகாகவும் நாகரிகமாகவும் உடை உடுத்தியிருந்த வேலைக்காரர்களும், விருந்து உபசாரங்களும் சூதாட்டமும், பாடும் பெண்கள்... ஆடும் பெண்கள் எல்லாருமே கவனத்துக்கு வந்தனர். பாட்டுப் பாடும் கமலாவின் மைனாப் பறவையும், அதன் தங்கக் கூண்டும் தெரிந்தது. மானசீகமாக அந்தப் பழைய நிலையில் மீண்டும் அவன் வாழ்ந்தான். வனவாசியாகி, பிறகு கிரக தனாகி, தற்கொலைக்கு முயன்ற ஒருவனாக... இப்படிப் பல நிலைகளில் வாழ்ந்து, கடைசியில் 'ஓம்'கார நாதம் கொடூரமான செயலிலிருந்து அவனை விடுவித்ததும் மனத்தில் தெளிவடைந்து வந்தன.

இந்த சிந்தனையில் மதிமறந்து நந்தவன வாசல் அருகிலேயே வெகுநேரம் நின்ற சித்தார்த்தனுக்கு தன்னைப் பட்டணத்துக்கு விரட்டிய உணர்வு கடுமையானது என்று புரிந்தது. மகனிடம் தனது சொந்தக் கருத்துகளைப் பலவந்தமாக அதுவும் அவன் விரும்பாமலேயே புகுத்துவது விரும்பத்தக்கது அல்ல. அவன், அவனது விருப்பப்படிதான் நடப்பான் என்றும் தோன்றியது மகனிடம் அன்பும், இரக்கமும் தோன்றியது. எதிர்பார்ப்போ, ஆனந்தமோ அவனிடம் மீதமாக இருக்கவில்லை. மௌனத்துடன், பொறுமையாக அங்கு காத்திருந்தான். இந்தப் பொறுமையை அவன் நதியிடமிருந்து கற்றிருந்தான். மனத்துள்ளிருந்து ஏதாவது ஒரு புதிய வெளிச்சம் அல்லது உத்தரவு கிடைக்கக் கூடுமென்ற ஆசையில் மணிக்கணக்காக சமாதியில் இருப்பதுபோல் அந்த வழியோரத்திலேயே நின்றிருந்தான். புத்த பிட்சுக்கள் கொஞ்சம் பொரி மற்றும் பழத்தை இலை ஒன்றில் எடுத்து வந்து அவனுக்கு முன்பாக வைத்தனர். ஆனால், கண்ணை மூடி அமர்ந்திருந்த வயதான மனிதன் அதை கவனிக்கவே இல்லை.



தோளில் யாரோ தொட்டது மாதிரி இருக்கவே, சித்தார்த்தன் சமாதி நிலையிலிருந்து விழித்தான். அது ஈரமான கைகளின் தொடு உணர்வாக இருக்கவே, அவனுக்கு மகிழ்ச்சியளித்தது. இருந்த இடத்திலிருந்து எழுந்த சித்தார்த்தன் தன்னைத் தேடி வந்த வஸுதேவனை வணங்கினான். கருணை வழியும் வஸுதேவனின் முகத்தில் சுருக்கங்களின் ஊடாகப் புன்னகை ஒன்று பொங்கியது. களங்கமற்றதும், கனிவுள்ளதுமான அந்தக் கண்களின் ஒளி எப்படிப்பட்டவரையும் வசீகரிக்கக் கூடியதாக இருந்தது. சித்தார்த்தனும் சிரித்தான். தனக்கு முன்பாக புத்த பிட்சுக்கள் வைத்திருந்த பொரியையும் பழத்தையும் அப்போதுதான் பார்த்தான்.

இருவருமே அதைச் சாப்பிட்டு ஓரளவு பசியைத் தணித்துக் கொண்ட பிறகு, தங்களது ஓலைக் குடிசைக்குத் திரும்பினர். காட்டு வழியில் மேற்கொண்ட திரும்பு பயணத்தில் இருவரும் மௌனமாகவே வந்தனர். பாலசித்தார்த்தனைக் குறித்துப் பேசவில்லை. அவன் ஏற்படுத்திய வடுக்களை மறக்க முயன்றனர் இருவரும். தனது படுக்கையில் படுத்தபடி சித்தார்த்தன் மீண்டும் சிந்திக்கத் தொடங்கினான். சற்று நேரத்துக்குப் பிறகு சீவியெடுத்த இளநீருடன் வஸுதேவன் உள்ளே வந்தபோது, சுகமான மோன நிலையில் லயித்துக் கிடந்த சித்தார்த்தனை பார்த்தான்.

## 11. 'ஓம்'

**பா**லசித்தார்த்தனின் பிரிவு சித்தார்த்தனிடம் ஏற்படுத்திய காயத்தால் வெகுநாள் அவன் வேதனையடைந்தான். அவன் படகில் மறுகரை சேர்க்கும் எத்தனையோ பயணிகளில் பலர் பால சித்தார்த்தனின் வயதில் ஆண்களும் பெண்களுமாக இருந்தனர். அவர்களைப் பார்த்த சித்தார்த்தன், ஓரளவு பொறாமைப்படவே செய்தான். எத்தனையோ பேருக்கு சொந்தக் குழந்தைகள் மகிழ்ச்சி அளிக்கின்றன. எனக்கு மட்டும் ஏன் இப்படி நேர்ந்தது? ஊர் சுற்றித்

திரிபவனுக்கும், திருடர்களுக்கும்கூட குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களும் தங்கள் குழந்தைகளை நேசிக்கின்றனர். பதிலாகக் குழந்தைகளும் தங்கள் தாய், தந்தையரை நேசிக்கின்றனர். சராசரி மனிதர்களைப் போல இதையெல்லாம் நினைத்து சித்தார்த்தன் நிம்மதி இழந்தான்.

மனிதர்களையும், அவர்களது செயல்களையும் வித்தியாச மான ஒரு கோணத்தில்தான் சித்தார்த்தனால் மதிப்பிட முடிந்தது. தான் மிகவும் கெட்டிக்காரன் என்று முன்பிருந்த கர்வம், இப்போது அவனிடமில்லை. எனவே, மற்ற மனிதர்களுடன் இரக்கத்துடனும் அன்புடனும் அவனால் நடந்துகொள்ள முடிந்தது.

இப்போதெல்லாம் படை வீரர்கள், பெண்கள், வியாபாரிகள் போன்றவர்களைப் படகில் ஏற்றி மறு கரைக்குக் கொண்டு செல்லும்போது அவர்கள் 'அன்னியர்' என்ற உணர்வு அவனிடம் எழுவதில்லை. அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொள்ளவும், அவர்களிடமிருந்து ஆறுதல் பெறவும், அவர்களது ஆசை மற்றும் ஏமாற்றங்களில் தன் மனத்தைச் செலுத்தவும் முன்புபோல் அவனுக்குக் கடினமாக இருக்கவில்லை. சித்தார்த்தனின் மனம் கடுமையான பயிற்சியிலும் ஈடுபட்டு இருந்தமையால், மகனது பிரிவு ஏற்படுத்திய துயரமும் சகித்துக்கொள்ளக் கூடியதாகவே இருந்தது. சாதாரண ஜனங்களை சொந்த சகோதர-சகோதரிகளைப் போல் பார்க்கவும் அவனால் முடிந்தது. அவர்களுடைய மோசமான ஆசைகளும், துச்சமான இயல்பும் கண்டிக்கத்தக்கதல்ல.

அவர்களை சரியாகப் புரிந்து கொள்ளவும், ஓரளவு வரை மரியாதை செலுத்தவும் இப்போது சித்தார்த்தன் தயாராக இருந்தான். அம்மாவுக்கு சொந்தக் குழந்தையிடம் ஏற்படும் அளப்பரிய அன்பும், ஓர் அப்பாவுக்குத் தன் ஒரே மகனிடம் ஏற்படும் அன்பும், அறிவற்ற ஓர் இளம் பெண்ணுக்கு நகைகளின் மீது ஏற்படும் ஆசைகளையும்கூட, அவனால் இப்போது புரிந்துகொள்ள முடிந்தது. வெகுசாதாரணமான இந்த நிகழ்ச்சிகள் பொருளற்றவையாக இருப்பினும், அதே நேரம் பலம் உள்ளவையாயும், மனிதர்களால் தவிர்க்க முடியாத உணர்வுகளாக



இருப்பதும் சித்தார்த்தனுக்குப் புரிந்தது. இவற்றுக்காக மனிதர்கள் தாங்கமுடியாத கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றனர். அவன், வாழ்க்கையை அதன் ஒளியற்ற பிரமாண்டத் தன்மையிலும் பார்த்திருக்கிறான். அழிவற்ற, பூரணமான வாழ்க்கையின் அன்றாட இணைப்புகள். சித்தார்த்தன் ஓர் ஆயுட்காலம் முழுவதும் இதைத் தேடியல்லவா அலைந்தான்?

அவர்களது செயல்களிலும், ஆசைகளிலும் பிரதிபலிப்புக்கு உட்படாத ஆவேசங்களிலும் சித்தார்த்தனுக்கு அதீதமான ஆர்வம் தோன்றவே செய்தது. ஒரே ஒரு சிறிய காரியத்தைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் அவர்கள் ஞானத்தில் முதிர்ந்த ரிஷிகளுக்கு சமமானவர்களாக இருந்தனர். அந்த நிலை எல்லா வாழ்க்கையினுடையதும் அடிப்படையான ஐக்கியத்தைக் குறிப்பது என்பது அவர்களுக்குத் தெரியாத விஷயமும் கூட. இதுகூட அந்த அளவு முக்கியத்துவம் உள்ள ஒன்றுதானா என்று சித்தார்த்தன் சந்தேகப்பட்டான். ஒருவேளை இதுவும் மனத்தின் ஒருவகை ஊனம்தானோ? லௌகீக விஷயங்களில் மூழ்கியுள்ள மனிதர்களும் தத்துவ ஞானிகளைப் போன்றவர்களே. இன்னும் சொல்லப்போனால்... ஞானிகளைவிட மேன்மை வாய்ந்தவர்கள். பறவைகள், மிருகங்கள் கூட தங்கள் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள மேற்கொள்ளும் துல்லியமான அறிவில் மனிதர்களுக்கு சமமில்லையா?

சித்தார்த்தனுக்கு விவேகம் என்பது என்னவென்று கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கியது. அவனது வெகு நாளைய தேடலின் நோக்கமும் அதுவாகத்தானே இருந்தது? விவேகம் ஆத்மாவை, வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்துக்கு மான இடைவெளியற்ற தொடர்பு குறித்து உள்ளுணர்வு கொள்ள வைக்கிறது. காலம் என்கிற எண்ணத்தை வெற்றி கொள்ளுங்கள். இந்தச் சிந்தனை அவனுள் திடமாக வேரூன்றியது. வஸுதேவனின் குழந்தைத்தனமான முகத்திலும் இது பிரதிபலிக்கிறது. பிரபஞ்ச சம்பவங்களின் நிலையான ஐக்கியம் குறித்த உணர்வு அது.

இப்படியெல்லாமிருப்பினும் சித்தார்த்தனின் மனத்திலேற் பட்டிருந்த காயம் அவனை எப்போதும் வேதனையடையச்

செய்தது. சொந்த மகனைக் காணவேண்டும் என்ற ஆசை அதிகரித்தது. அந்த மகனிடம் தனது அன்பை வெளிப்படுத்தவும் திரும்ப அவனிடமிருந்து அன்பைப் பெறவும் அவன் தீவிரமாக விரும்பினான். மகனது பிரிவு மூலம் ஏற்பட்ட வேதனை அவனது ஆத்மாவை அரித்துத் தின்றது. இந்தத் தீ ஜுவாலை ஒருபோதும் அணைந்து அடங்கிவிடுவதில்லை.

ஒருநாள் மனம் மிகவும் கஷ்டப்பட்டபோது சித்தார்த்தன் படகிலேறி மறு கரைக்குப் போனான். அங்கிருந்து நந்தவனம் போகும் பாதையில், பட்டணத்தை நோக்கி, மகனைத் தேடிச் செல்லும் வேளையில் நதியின் மென்மையான சங்கீதம் அவன் காதில் அலையடித்தது. அது சாந்தமாக ஆனால், மேன்மையுடன், இடைவெளியின்றி ஒலித்தது. வேனிற் காலமாக இருந்தபோதிலும், நதியின் நீரோட்டம் வலுமிக்கதாகவும் அது எழுப்பிய ஒலி வேறுபாடுள்ளதாகவும் இருந்தது. அது சிரிக்கிறது. ஒருவிதத்தில் கேலி செய்வது போன்ற சிரிப்பு!

சித்தார்த்தன் அசைவற்றவனாக தலையைத் தாழ்த்தி, நதியின் நீர்ப்பரப்பை உற்றுப் பார்த்தான். அது சொல்வதை கவனிக்கவே அப்படிச் செய்தான். அமைதியாக ஓடும் நீர்ப்பிரவாகத்தில் அவன் முகம் பிரதிபலித்தது. அதைப் பார்த்தவாறே யோசனையில் ஆழ்ந்தபோது அந்த பிரதிபிம்பம் - அவனது பிரதிபிம்பமே வேறொரு நபரை நினைவுக்குக் கொண்டு வந்தது. வெகு நாட்களாகத் தான் மறந்திருந்த ஒருவரின் உருவத்தை! சிறு வயதில் தன்னால் ஆராதிக்கப்பட்ட - அன்பு செலுத்தப்பட்ட ஏன் பயப்பட்ட வந்தனைக்குரிய தன் தந்தையின் உருவத்தை!

இளம் பருவத்தில் என்னென்னவோ செய்து அப்பாவிட மிருந்து பிடிவாதமாக அனுமதி பெற்றுப் பைராகிகளுடன் சேர்ந்து கொண்டதும், பிறகு ஒருபோதும் வீட்டை நோக்கிச் சென்றது இல்லையென்பதும் சித்தார்த்தனது நினைவில் எழுந்தது. அதன் காரணமாகத் தன் அப்பாவுக்கு ஏற்பட்ட இதய வேதனை, தனக்கு இப்போது தன் மகன் மூலம் ஏற்பட்டதற்கு சமம் அல்லவா? இதயம் நொந்து, தளர்ந்து தன் தந்தை தன்னைக் காணாமலேயே



காலத்துக்குள் மறையவில்லையா? எனவே, அப்படிப் பார்த்தாலும் தனக்கும் அந்த துர்விதி பொருந்தும் அல்லவா? தனக்கும் அது அருகதை உள்ளதுதான். இது திரும்பத் திரும்ப நடைபெறும் சுவார யம் நிறைந்த ஒரு காட்சியாகவே சித்தார்த்தனுக்குத் தோன்றியது.

நதி உரத்த குரலில் சிரித்தது. அது, 'எப்போதுமே அப்படித் தான். முடிவு, தொடக்கம் என்று கருதுவதெல்லாம் மறுபடி சம்பவிக்கிறது. மனிதர்களுக்குத் துயரமும், சந்தோஷமும் மற்ற மனோநிலைகளும் ஒரே மாதிரி பாதகமானவைதான். சித்தார்த்தன் உடனே படகில் ஏறித் திரும்பவும் குடிசைக்கு வந்தான். திரும்பும்போதும் எதையெல்லாமோ நினைத்தான். அவன் அப்பாவும், மகனும் நினைவில் எழுந்தனர். நதியின் கேலியான சிரிப்பு, மகன் தொடர்பாக மனத்தில் எழுந்த வேதனை... இப்படி என்னவெல்லாமோ எழுந்தன. அவனுக்குக் கடுமையான ஏமாற்றம் தென்பட்டது. மனக்காயம் அவனை வேதனைப்படுத்திக் கொண்டிருந்தது. விதிக்கு எதிராக அப்போதும் போர் புரிந்து கொண்டிருந்தான். இடைவெளியற்ற நிரந்தரமான போராட்டம். மனத்துக்கு அமைதியோ, சோதனைகளை வெற்றி கொள்ளும் உறுதியோ கிடையாது.

குடிசைக்குள் நுழைந்தவுடன் வஸுதேவனிடம் எல்லா வற்றையும் மனந்திறந்து கூறவேண்டுமென்ற தீவிர வாஞ்சை ஏற்பட்டது. அப்படியாவது மனத்தின் பாரத்தைச் சற்று குறைக்கலாமே! பொறுமையுடன், சுமுகமாக எல்லாவற்றையும் மனத்தில் வாங்கிக் கொள்ளும் வஸுதேவனின் இயல்பு அபாரமானதுதான்!

சித்தார்த்தன் அந்த வயதான மனிதனை நெருங்கி அமர்ந்து மெதுவாகப் பேசத் தொடங்கினான். இதுவரை வஸுதேவனிடம் சொல்லாதிருந்த காரியங்களையெல்லாம் ஒளிவு மறைவின்றிச் சொல்லி முடித்தான். அன்று மகனைத் தேடிப் பட்டணம் புறப்பட்டதையும், மனத்தைக் காயப்படுத்தும் பாலசித்தார்த்தனின் பிரிவும், குழந்தைகளிடம் அன்பு கொண்ட பெற்றோர் மீது

அவனுக்கு ஏற்பட்டிருந்த பொறாமை. இதுபோன்ற குழந்தைத் தனமான மனத் துயரங்களையெல்லாம் வஸுதேவனின் முன்னால் கடை பரப்பினான். வஸுதேவனிடம் எல்லாவற்றையும் சொல்லலாம். மிகவும் வேதனைக்குரிய விஷயங்களைக்கூட. நதி, சித்தார்த்தனின் பொருளற்ற நடவடிக்கைகளையும் பார்த்துப் பரிகாசம் செய்து உரத்துச் சிரித்ததையும் அவன் வஸுதேவனிடம் சொன்னான்.

சித்தார்த்தன் பேசிக் கொண்டிருந்தபோது வஸுதேவனின் முகம் தெளிவடைந்தது. சித்தார்த்தன் கூறியவற்றை மிகவும் கவனமுடன் கேட்டான். அவனது பிரச்சினைகள் மற்றும் மன உளைச்சல்களில் தனக்கும் பங்கு உள்ளது என்று தோன்றுமாறுதான் வஸுதேவன் நடந்து கொண்டான். தன் மனத்திலிருந்ததை யெல்லாம் கொட்டித் தீர்த்தபோது, ஒரு புண்ணியமான கோயில் குளத்தில் மூழ்கி எழுந்த மாதிரி இருந்தது சித்தார்த்தனுக்கு. ஒவ்வொன்றையும் சொல்லி முடிக்கும்போதும் அருகில் அமர்ந்து கேட்பது வஸுதேவன் இல்லையோ என்றுகூட சித்தார்த்தனுக்குத் தோன்றியது. அசைவற்றவனாக, உற்சாகமற்று அவன் சொல்வதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் புண்ணியசாலி, மரம் கொடிகள் மழை நீரை உறிஞ்சுவதுபோல் சித்தார்த்தனது குற்றங்களை ஒப்புக்கொள்ளும் வார்த்தைகளைத் தன்னில் உள்வாங்கினான்.

வயதான படகோட்டி, ஞான ரகசியங்களின் உறைவிடமான நதி, சாக்ஷாத் பிரம்மம், முடிவற்ற நிலையோ என்றுகூட சித்தார்த்தனுக்குத் தோன்றியது. அவன் தன்னைக் குறித்தும் தன் மனோவேதனையைக் குறித்தும் சிந்திப்பதை நிறுத்தினான். வஸுதேவனிடம் ஏற்பட்ட மாற்றத்தைப் புரிந்துகொள்ள முயன்றான். வஸுதேவனைப் பார்த்தபடியே சித்தார்த்தன் வெகுநேரம் பேசாமல் அமர்ந்திருந்தான். அப்போதுதான் வஸுதேவனிடம் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்றும் தோன்றியது. வஸுதேவன் என்றுமே அப்படித்தான். சித்தார்த்த னால் அதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது என்பதே



உண்மை. சித்தார்த்தனும் கூட வஸுதேவனிடமிருந்து வேறுபட் டிருக்கவில்லை. அவன் மனமார வஸுதேவனிடம் விடைபெற முயன்றான்.

சித்தார்த்தன் பேச்சை நிறுத்தியவுடன், சற்றுத் தளர்ந்த முகத்துடன் வஸுதேவன், அவன் முகத்தைப் பார்த்தான். வஸுதேவன் எதுவும் பேசவில்லையெனினும் அவன் முகத்தில் அன்பும் கருணையும், இரக்கமும் நிறைந்து வழிந்தது. சித்தார்த்தனின் கையைப் பற்றி, நதிக்கரையிலுள்ள அவர்களுடைய வழக்கமான இருப்பிடத்துக்குச் சென்று நதியை நோக்கினர். அது புன்னகை மட்டுமே புரிந்தது.

“நதி சிரிப்பதை நீ இதற்கு முன்பும் கேட்டிருக்கிறாய்!” வஸுதேவன் சொன்னான்: “ஆனால், அது சொல்வது எல்லாவற்றையும் நாம் கேட்டதில்லை. நாம் அதை கவனிப்போம். அது இன்னும் எவ்வளவோ விஷயங்களை உன்னிடம் சொல்ல வேண்டி உள்ளது.”

அவர்கள் கவனித்தனர். பலவித ஒலிகள் கலந்த நதியின் தாளலயம் மிகுந்த உள்ளுறை சங்கீதம் அவர்களுடைய கன்னங்களில் வந்து படிந்தது. சித்தார்த்தன் நதிப்புறம் பார்த்தபோது, அதில் பல வடிவங்கள் மாறிமாறிப் பிரதிபலித்தன. மகனது பிரிவால் துயரடைந்திருக்கும் ஏகாங்கியான தன் தந்தையும், தன்னந்தனி யனாக - முன்பின் பழக்கமற்ற பட்டணத்தில் சிக்கி நாள் கடத்தும் பாலசித்தார்த்தனது வடிவமும் அந்த நீர்ப்பரப்பில் தெளி வடைந்தன. ஒவ்வொருவரும் அவரவரது லட்சியத்தைக் கால் இடறாமல் பின்தொடர்கின்றனர். லட்சியத்தை அடைவதற்காக இவர்கள் எப்படிப்பட்ட சோதனைகளையெல்லாம் தாங்கிக் கொள்கின்றனர்! நதியின் சுரமும் சோக மயமாக இருந்தது. சோகமும் கருணையும் கலந்த கீதத்தை இசைத்தபடி அதன் முன்புறமாகப் பாய்கிறது - அதன் லட்சியத்தை அடைவதற்காக!

“உனக்குக் கேட்கிறதா?” வஸுதேவன் கண்ணால் சமிக்ஞை செய்தபடி கேட்டான்.

சித்தார்த்தன் தலையை அசைத்து ஒப்புக்கொண்டான்.

"இன்னும் கூர்மையாக கவனி!" வஸுதேவன் அவன் செவியில் மந்திரித்தான்.

சித்தார்த்தன் நதியின் பேச்சை மேலும் உன்னிப்பாக கவனித்தான். தெளிவான - களங்கமற்ற அந்த நீர்ப்பரப்பில் முதலில் அவன் அப்பா, பாலசித்தார்த்தன், கமலா போன்றோரின் உருவங்கள் தெளிவடைந்தன. பிறகு கோவிந்தனின் உருவம் தென்பட்டது. சட்டென்று இதெல்லாம் நதியின் ஒரு பகுதியாக மாறியது. இவர்களுடைய லட்சியங்கள் எல்லாம் நிறைவேறாதவை எனலாம். அவை அடக்க முடியாத ஆசைகளும் கூட. அதற்காக எப்படிப்பட்ட சோதனைகளையும் சந்திக்க அவர்கள் தயார். ஆனால், நதியின் சத்தமோ, அதைக் கேலி செய்வது போல் இருந்தது. நதி அதன் லட்சியத்தை நோக்கி, முடிவற்ற பரப்பை நோக்கிக் குதித்துப் பாய்ந்தது.

மறுபடியும் அந்த நீர்ப்பரப்பின் ஆழத்தில் தனது உருவமும் தான் அது வரை சந்தித்த மனிதர்கள் எல்லாருடையதுமான உருவங்களும் தெரிந்தன. ஒவ்வோர் அலையும் நீர்க்குமிழியும் குதித்துப் பாயும் அந்த நதியின் விரிந்த மார்புப்பகுதியின் ஊடாக முன்புறமாகப் பாய்ந்தது. அது வெகுதூரம் பாய்ந்து பாதையில் பயணம் செய்து விசாலமான கடலின் ஒரு பகுதியாகிவிடும். அப்போது ஒவ்வொரு லட்சியமும் நிறைவேற்றப்படும். தண்ணீர் ஆவியாகி மேற்புறமாக உயரும். பிறகு அது மழையாக வடிவம் பெற்று மீண்டும் மண்ணைத் தொடுகிறது. மழை நீர் காட்டருவி, நதிகளாக மாறி மீண்டும் சமுத்திரச் சூல்பையை அடைகின்றன. இந்தச் செயல் இடைவெளியின்றி யுகாந்திரமாகத் தொடர்கிறது.

எனினும் படிப்படியாகக் கஷ்டங்களினதும் கடினமான வேதனைகளினதும் சொல்லத் தயங்கும் சுரத்தின் ஊடாக நதி ஆனந்தம் மற்றும் நன்மை-தீமைகளினதும் சத்தங்களையும் எழுப்பத் தொடங்கியது. சில நேரம் அது சிரிப்பது போலவும் சில நேரம் மனிதர்களின் உலகியல், நடவடிக்கைகள்



அர்த்தமற்றவையாக முடிவது போலும் தென்பட்டன. இப்படி ஆயிரம் ஆயிரம் சத்தங்களை அது ஓய்வின்றி எழுப்பியது.

சித்தார்த்தன் இப்போது மிகவும் கவனத்துடன், ஏகாக்கிரக சிந்தையுடன் கவனித்தான். எல்லாவற்றையும் புரிந்துகொள்ளும் ஆர்வம் அவனுள் அதீதமாக வளர்ந்து வந்தது. விஷயங்களைத் தெளிவாகக் கற்றுக் கொள்ளும் வல்லமை இப்போது சித்தார்த்த னுக்கு வாய்த்திருந்தது. இந்த சத்தங்களும் நீர்க்குமிழிகளும் அலைகளும் எத்தனையோ நாட்களாகப் பார்த்தவைதான். ஆனால், இன்றைக்கு மட்டும் அவற்றுக்கு ஏதோ ஒரு முக்கியத்துவம் இருப்பதாகவும் வசீகரிப்பதாகவும் தெரிந்தது. அதன் நுட்பமான பொருள் சித்தார்த்தனுக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்தது. ஆனந்தத்துக்கும், துயரத்துக்கும் ஒலியில் எழுந்த வேறுபாட்டை அவனால் பிரித்தறிய முடியவில்லை.

அதுபோலவே ஒரு குழந்தை மற்றும் வயதான ஒரு மனிதனின் குரல்களில் அணுவளவு மாற்றத்தையும் அவனால் கண்டறிய முடியவில்லை. அவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருந்தன. பண ஆசை பிடித்த மனிதர்களின் ஆசை மோசத்தால் எழுந்த பரிதாபகரமான ஓசைகளும், விவேகிகளான மனிதர்களின் மென்மையான குரலில் அமைந்த சிரிப்புச் சத்தமும், மரணமடைந்த மனிதர்களின் கோபமும், வேதனையும் கலந்த கூப்பாடுகளும் எல்லாம் கலந்த ஒலியாக இருந்தன. அவையெல்லாம் ஒரே தாளத்தில், ஒரே ராகத்தில் ஒரே மாதிரியே ஆலாபிக்கப்பட்டன. எல்லா சத்தங்களும், லட்சியங்களும், வாஞ்சைகளும், தாபமும், சந்தோஷமும், நன்மை-தீமைகளும் ஒன்றாகக் கலந்த உலகத்தில்தான் இடம்பெற்றிருக்கின்றன. இந்தச் சம்பவத் தொடர்களின் அடிப்படையான இணைப்பைப் புகழ்த்தியபடிதான் வாழ்க்கை சங்கீதம் இயற்றப்பட்டுள்ளது.

அதன் மந்திரக்குரல், எல்லாவற்றின் உள்ளுறைப் பொருளான ஐக்கியத்தை வாழ்த்தியது. சித்தார்த்தன், நதியின் ஓய்வற்ற நீரோட்டத்தை கவனித்தபோது - ஆயிரமாயிரம் சத்தங்கள் உள்ள வாழ்க்கை சங்கீதத்தை ஏகாக்கிரக சிந்தையுடன்

கேட்டபோது அவனுக்கு ஒருபோதும் தோன்றாத வியப்பு ஏற்பட்டது. சித்தார்த்தன் தன் ஆத்மாவை ஒரே சத்தத்தில் மட்டுமே குவித்து வைக்காமல் எல்லாவற்றையும் ஒன்றாகக் கேட்கத் தயாரானபோது, அந்த சங்கீதத்தை ஒரு பல்லவியாக மட்டும் கேட்க முடிந்தது. 'ஓம்' புனிதம் நிறைந்த சிரேஷ்டமான சத்தம். எதிரொலி கேட்கும் பிரபஞ்ச ரகசியங்களை உட்கொள்ளும் ஒரு சொல் 'ஓம்'.

"உனக்குக் கேட்கிறதா?" வஸுதேவன் கேட்டான்.

வஸுதேவனின் புன்னகை அவனுள் எழுந்த ஆனந்தப் பரவசத்தை எடுத்துரைத்தது. முதுமை காரணமாக ஏற்பட்டிருந்த சுளிவுகள் நிறைந்த அந்த முகத்தில் விவரிக்க முடியாத திருப்தியும், மகிழ்ச்சியும் அலையடித்தன. 'ஓம்' என்கிற பவித்திரமான சத்தம் அந்த நதி முழுவதும் எதிரொலிப்பதுபோல் தோன்றிய அதே கணம், தன் நண்பன் முகத்தைப் பார்த்த வஸுதேவனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்த்தது. சித்தார்த்தனின் புன்னகையும் அதுபோல் திருப்தியும், மகிழ்ச்சியும் நிறைந்ததாக இருந்தது. அவன் மனத்தின் காயங்கள் ஆறத் தொடங்கியிருந்தன. வலியும் குறைந்தது போல் இருந்தது. ஆத்மா, விரைவிலேயே பிரபஞ்சத்தின் உரிமையான ஏகத்துவத்தில் சுற்றிச் சூழ்ந்து பரவியது.

அந்த விநாடியிலிருந்து, அவன் தனது விதிக்கு எதிராக நிரந்தரமாக நடத்திய போராட்டம் முற்றுப் பெற்றது. ஞானப் பிரகாசத்தினால் முகம் பளபளப்பாக ஜொலித்தது. மோட்சம் கைவரப்பெற்ற ஒரு சாத்வீகனின் நிலைதான் அவனுக்கு அப்போது ஏற்பட்டது. மனோவியல் ரீதியான தொல்லைகள் முற்றிலுமாக அகன்றன. வாழ்க்கையின் நீரோட்டத்தில் சம்பவத் தொடர்ச்சிகளின் ஒன்றிய ஆத்ம நிலையில் அவனும் கருணையும், இரக்கமும் நிறைந்த ஆத்மாவாக மாறி ஒன்றிக் கலந்தான்!

வஸுதேவன் இருந்த இடத்திலிருந்து எழுந்தபடி தன் நண்பனிடம் ஏற்பட்ட உணர்ச்சி மாற்றத்தை உணர்ந்து, விவரிக்க முடியாத ஆனந்த நிலையை அடைந்தான். நட்புடன் தன் கையை சித்தார்த்தனின் தோளில் வைத்தபடி, "இந்த நிமிடத்துக்காக நான் எத்தனை நாட்களாகக் காத்திருந்தேன் தெரியுமா, நண்பா!



இப்போது அந்த வாய்ப்பு கைவரப்பெற்ற நிலையில் நான் விடை பெற அனுமதி கொடு. நான் வஸுதேவன் என்கிற படகோட்டியாக வெகுநாள் வாழ்ந்தாகி விட்டது. அந்த வாழ்க்கை இப்போது முற்றுப் பெறுகிறது. ஓலைக் குடிசையே... விடை பெறுகிறேன். நதியே, விடை பெறுகிறேன். சித்தார்த்தா நீயும் எனக்கு விடை கொடு!" என்றான்.

சித்தார்த்தன் தனக்கு முன்பாக நடந்து விலகும் நண்பனை நோக்கித் தலைகுனிந்து வணங்கி விடையளித்தான். அவன் மெதுவான குரலில் சொன்னான்: "எனக்குத் தெரியும், நீ காட்டுக்குத்தானே போகிறாய்?"

"ஆமாம் காட்டுக்குத்தான்! எல்லாவற்றின் மையப்பகுதியான ஏகத்துவத்தை நோக்கி!" வஸுதேவன் மகிழ்ச்சியுடன் இதைக் கூறினான்.

இப்படியாக வஸுதேவன் அந்தக் குடிசையையும், சுற்றுப்புறத்தையும் துறந்து, கடுங்காட்டை நோக்கி நடந்து மறைந்தான். சித்தார்த்தன், அவன் போவதையே பார்த்தபடி வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். மகிழ்ச்சியும் அதேசமயம் கம்பீரமும் அவன் முகத்தில் தெளிவடைந்தது. வஸுதேவனோ தெளிந்த ஆத்ம நம்பிக்கையுடனும் பெருகிய மகிழ்ச்சியோடும் நடந்தான்.

## 12. கோவிந்தன்

ஒரு தடவை கமலா, புத்த பகவானுக்குப் பரிசளித்த நந்தவனத்தில் ஏனைய சன்னியாசிகளுடன் கோவிந்தனும் சில நாட்கள் ஓய்வெடுப்பதற்காகத் தங்க நேர்ந்தது. அப்போதுதான் ஒருநாள் பயணத்தில் அடைந்து விடக்கூடிய ஆற்றங்கரைப் பகுதியில் அற்புதமான ஒளி பொருந்திய ஒரு படகோட்டி, யோகி வரர் வசிக்கும் செய்தியைக் கோவிந்தன் கேள்விப் பட்டான். நந்தவனத்திலிருந்து புறப்படும் நேரத்தில், புத்திசாலியான படகோட்டியைப் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்தான். அது வரையிலும் கோவிந்தன் கடுமையான நெறிமுறைகள் கொண்ட

அன்றாடப் பயிற்சிகளை மேற்கொண்டான். தனது மேன்மையான சன்னியாச வாழ்க்கையின் பயனாக இளைஞர்களான பிட்சுக்கள் பலரின் பெருமதிப்புக்கும் உரியவனாக இருந்தான் கோவிந்தன். இருப்பினும் அவன் மனம் பல்வேறு சந்தேகங்களால் சூழப்பட்டுக் கலங்கியிருந்தது. தனது தேடுதல் ஒருவேளை இன்னும் முழுமை அடையவில்லையோ என்கிற தவிப்பு அவன் மனத்தை அலைக் கழித்தது.

கோவிந்தன் ஆற்றங்கரைக்கு வந்ததும் சித்தார்த்தன் அவனை மறு கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தான். கோவிந்தன்தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

“நீங்கள் புத்த பிட்சுக்களுடனும், தீர்த்த யாத்திரைக்காரர் களுடனும் மிகவும் கருணையுடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் ஏராளமான மனிதர்களை மறுகரைக்குக் கொண்டு செல்கிறீர்கள். நீங்கள் கூட சரியான மோட்ச மார்க்கத்தைத் தேடும் ஓர் ஆர்வலர்தானே?”

சித்தார்த்தன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

“வயதான புண்ணியாத்மாவே, தாங்களும் மோட்ச மார்க்கம் தேடும் ஒருவரல்லவா? தாங்கள் வெகு காலமாக ஒரு புத்த பிட்சுவாக இருக்கிறீர்களல்லவா?”

“எனக்கு வயதாகிவிட்டது என்பது உண்மையே!” கோவிந்தன் தொடர்ந்தான்: “மோட்ச மார்க்கத்துக்கான எனது தேடலை நான் இன்னும் நிறுத்தவில்லை. அதை ஒருபோதும் நிறுத்தவும் போவதில்லை. அதுதான் என் விதி. நீரும் தேடிக் கொண்டிருந்தீரே. அதைப்பற்றி என்னிடம் சொல்ல முடியுமா நண்பரே!”

சித்தார்த்தனது பதில் இப்படித்தான் இருந்தது: “நீ அதிகமாகத் தேடுவதால், அதை உன்னால் பார்க்க முடிவதில்லை என்பதைத் தவிர, நான் வேறு என்ன சொல்ல?”

“அதெப்படி?” கோவிந்தன் அதிகமான ஆர்வத்துடன் கேட்டான்.



“யாராவது, எதையாவது தேடும்போது, அவர்கள் தேடுவதை மட்டுமே சாதாரணமாக மற்றவர்கள் கவனிப்பார்கள்...” சித்தார்த்தன் தொடர்ந்தான்: “மற்றெதையாகிலும் பார்க்கவும், புரிந்து கொள்வது மான தங்களது வல்லமையை அப்படிப்பட்டவர்கள் இழந்து விடுகிறார்கள். அவர்களது லட்சியம் மட்டுமே அவர்களுக்கு முன்னால் இருக்கிறது. தேடுவது என்றால், ஒரு லட்சியம் இருக்கிறது என்று பொருள். கண்டடைவது என்பது முற்றிலும் வித்தியாசமான ஒன்று. அது சுதந்திரமும் அனுபவபூர்வமுமான லட்சியமும் இல்லாத ஒன்று. மகானான யோகீ வரா, தாங்கள் மோட்ச மார்க்கம் தேடும் ஒருவராக இருக்கலாம். ஆனால், தங்களது தேடுதலின் நடுவே தங்கள் முன்பாக உள்ள பல பொருள்கள் தங்கள் கண்களில் படாமலேயே போய்விடுகின்றன.”

“நீங்கள் சொல்வதன் பொருள் எனக்கு முற்றிலுமாகப் புரியவில்லை...” கோவிந்தன் கூறினான்: “மேலும் சற்று விளக்கிச் சொல்ல முடியுமா?”

“புண்ணியாத்மாவே, எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் தாங்கள் இந்த நதிக்கரைக்கு வந்தபோது ஒருவன் இங்குள்ள மர நிழலில் படுத்து உறங்குவதைக் கண்டதாக உங்களுக்கு நினைவிருக்கிறதா? நீங்கள் அவனுக்கருகே காவலிருந்ததும், படுத்துறங்கிய நபரை அடையாளம் தெரிந்து கொள்ளாதிருந்ததும் நினைவுக்கு வருகிறதா கோவிந்தா?”

வியப்பினால் வாயடைத்துப்போன அந்தப் பிட்சு, படகோட்டியின் முகத்தை ஊன்றி கவனித்தான்.

“நீ சித்தார்த்தன்தானா?” சற்று வெட்கம் கலந்த குரலில் கோவிந்தன் கேட்டான்: “இந்தத் தடவையும் என்னால் உன்னை அடையாளம் தெரிந்துகொள்ள முடியவில்லை. மறுபடியும் நாம் சந்திக்க நேர்ந்ததற்கு நன்றி. நீ மிகவும் மாறியிருக்கிறாய். இப்போது நீ ஒரு படகோட்டியும்கூட!”

சித்தார்த்தன் மனம் திறந்து சிரித்தபடி பேசினான்: “ஆமாம், நான் இப்போது ஒரு படகோட்டியும்கூட. நாம் எல்லாரும் பலவிதமான மாற்றங்களுக்கு ஆளாக வேண்டியுள்ளது. பல

வேடங்களை அணிய வேண்டும். நண்பா, நான் இப்போது அப்படியொரு வேடம் போட்டிருக்கிறேன். கோவிந்தா, உனது வருகை நல்வரவாகட்டும். இன்று இரவு நீ என்னுடைய குடிசையில் வந்து தங்குமாறு நான் உன்னை அன்புடன் அழைக்கிறேன்!"

கோவிந்தன் அன்று இரவு சித்தார்த்தனது குடிசையில் தங்கினான். வஸுதேவனின் கட்டிலில் கோவிந்தன் படுத்திருந்தான். தன் பால்யகால நண்பனுடன் அவன் ஏராளமாகப் பேச வேண்டி இருந்தது. நிறையக் கேள்விகள் கேட்க வேண்டியிருந்தது. சித்தார்த்தனுக்கும்கூட அவனிடம் ஏராளமான விஷயங்களைச் சொல்ல வேண்டி இருந்தது.

பொழுது விடிந்தபிறகு குளித்துப் பழ வகைகள் சிலதைச் சாப்பிட்ட பிறகு, கோவிந்தன் புறப்படத் தொடங்கும்போது வெகு தயக்கத்துடன் இப்படிக் கேட்டான்: "நான் உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்வதற்கு முன்னால் உன்னிடம் ஒரேயொரு கேள்வியைக் கேட்கட்டுமா? ஏதாவது தத்துவ போதனைகள் உன்னிடம் உள்ளதா? ஒரு நம்பிக்கைப் பிரமாணம்! அதை வாழ்க்கையின் முக்கியப் பாடமாகப் பின்பற்றி வாழ்ந்தால் மோட்ச வழி சாத்தியமாகுமா?"

சித்தார்த்தன் பதிலளித்தான்: "சிறு வயதில் நாம் பைராகிகளுடன் சேர்ந்து காட்டில் வாழ்ந்த காலத்திலேயே எனக்குத் தத்துவத் தொகுப்புகளோடும் பிரமாணங்களோடு சற்றும் பிடிப்புக் கிடையாது என்பதை நீ புரிந்து கொண்டிருப்பாயே. அதன்பிறகு எனக்குப் பல குருநாதர்கள் இருந்தும் இன்னும் எனது கருத்து அதுதான். பேரழகியான ஒரு தேவதாசியும், மகாபிரபுவான ஒரு வியாபாரப் பிரமுகரும் ஒரு சூதாடியும் வெகு காலம் என் குருவாக இருந்தனர். ஒரு சந்தர்ப்பத்தில் கௌதம புத்தரின் சீடரின் ஒருவர்கூட எனக்கு ஆசானாக இருந்திருக்கிறார். அவர் தனது தீர்த்த யாத்திரையையே எனக்காகத் தள்ளி வைத்துவிட்டு, காட்டில் தளர்ந்து, எந்தவித உதவியுமற்றுப் படுத்திருந்த எனக்குக் காவல் இருந்திருக்கிறார். அவரிடமிருந்தும் நான் சிலவற்றைக் கற்றுக் கொண்டேன். அதற்கு நான் என்றென்றும் நன்றி உள்ளவனாக இருப்பேன்.



"அவர்களிடமிருந்து நான் கற்றுக் கொண்டதைவிட, எத்தனையோ மடங்கு இந்த நதியிடமிருந்தும் இங்கு முன்பு படகோட்டியாக இருந்த வஸுதேவனிடமும் கற்றுக்கொண்டேன். வஸுதேவன் ஒரு பெரிய சிந்தனையாளன், பெரிய படிப்பாளி என்று சொல்ல முடியாது. ஒரு சாதாரண மனிதன். இருப்பினும், பிரபஞ்ச ரகசியங்களின் ஊற்றுப் பகுதியை மகானான கௌதம புத்தரைப்போல் வஸுதேவனும் சரியாகப் புரிந்து வைத்திருந்தார். அவர் புனிதமான ஆத்மஞானியான ஒரு புண்ணியனும்கூட!"

"நீ இப்போதும்கூட வேடிக்கையாகப் பேசுகிறாயே. நீ எந்த குருநாதரின் கீழும் இருந்ததில்லை என்று எனக்குத் தெரியும். இருப்பினும், உனக்கே உரித்தான சில சிந்தனைகள் இல்லையா? சொந்தமான சில கருத்துகள். அதைப் பின்பற்றி நடந்தால் மோட்சப் பிராப்தி அடைய முடியுமா? அதைப்பற்றி எனக்குக் கொஞ்சம் கூறினால் மிகவும் மகிழ்ச்சியடைவேன்!" கோவிந்தன் கேட்டான்.

"உண்மைதான்! எனக்குச் சில அடிப்படைக் கருத்தும், அதுகுறித்து சில அபிப்பிராயங்களும் உள்ளன. அவை பற்றியெல்லாம் என்னால் விவரமாகப் பேச முடியவில்லை. இருப்பினும் ஒரே ஒரு விஷயம் என்னைப் பிடித்து உட்கார வைத்துச் சிந்திக்கச் செய்திருக்கிறது. அது ஞானத்தை யாருக்கும் விநியோகம் செய்ய முடியாது என்பதுதான்! பண்டிதர்கள், மற்றவர்களுக்குப் புரிய வைக்கிற ஞானம் பற்றிய பாடங்கள் பெரும்பாலும் உள்ளீடற்றவை கோவிந்தா!"

"வேடிக்கைக்காகச் சொல்கிறாயா?" கோவிந்தன் கேட்டான்.

"இல்லை, நான் கரையேறிவிட்டேன். சில முடிவுகள் குறித்துச் சற்று விளக்கமாகவே உன்னிடம் பேசுகிறேன். அறிவை மற்றொருவருக்குப் பகிர்ந்து அளிப்பதில் எந்தவிதமான தடையும் கிடையாது. ஓலைச்சுவடி மற்றும் உபன்யாசம், உபதேசம் மூலமாக அதைச் செய்யலாம். ஆனால், விவேகம் அப்படிப்பட்டதல்ல. அதற்கு நேர் எதிரானதும்கூட. விவேகத்தை ஒருவர் சொந்தமாக்க முடியும். அதையொட்டி வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்ளவும் செய்யலாம். அதிலிருந்து சக்தி பெறலாம். அதன்மூலம் பல

அற்புதங்களையும் செய்யலாம். ஆனால், அதை மற்றொருவருக்குக் கற்றுக்கொடுக்க முடியாது. விவேகத்தை எந்த வழியிலும் மற்றொருவருக்கு அளிக்கவோ, அல்லது அதுகுறித்துப் புரிய வைக்கவோ முடியாது. மிகவும் சிறு பருவத்திலேயே இதைக் குறித்து என்னுள் சந்தேகம் எழுந்தது.

"அதனால்தான் வீட்டைவிட்டு நான் வனவாசியாக நேர்ந்தது. அந்த சந்தர்ப்பத்தில் நான் என் குருநாதர்களைக் கூடப் பிரிய நேர்ந்தது. அவர்களது போதனை முறை சரியல்லவென்று எனக்குத் தோன்றியது. எனது சிந்தனைப்போக்கு உனக்கு வேடிக்கையாக இருக்கலாம் கோவிந்தா! ஒருவேளை முட்டாள்தனமானது என்றுகூடத் தோன்றலாம். அது என்னவென்று கேட்கிறாயா? ஒவ்வொரு சத்தியத்துக்கும் விபரீதமானது எது? அது சத்தியமேதான்! பாதி சத்தியத்தை மட்டுமே வார்த்தைகளால் விளக்க முடியும். அதற்கு முழுமையோ, ஐக்கியத் தன்மையோ கிடையாது. புண்ணியாத்மாவான ஸ்ரீ புத்தர் பிரபஞ்சத்தைப் பற்றியும், அதன் ரகசியங்களைக் குறித்தும் பிரசங்கம் செய்தபோது அவர் அதை சம்சாரம் என்றும், நிர்வாணம்என்றும் இரண்டு நிலைகளாகப் பிரித்தார். இந்தப் பிரிவிலும் மாயை என்றும் சத்தியமென்றும், துயர் என்றும், மோட்சமென்றும் அதைப் பல வழிகளில் தமது சீடர்களுக்குப் புரிய வைக்க முயன்றார். கற்றுக்கொள்ள முயல்பவர்களுக்கு இப்படிச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால், பிரபஞ்சமோ, நம்மிலேயே குடிகொள்வது. முயல்பவர்களுக்கு இப்படிச் சொல்வதைத் தவிர வேறு நாம் இயல்பாக அதன் சுவாதீன சக்திக்கு ஆதீனமாகவும் செய்வதால் ஒருபோதும் பாதி உண்மை ஆவதில்லை.

ஒரு மனிதனையோ... சம்பவத்தையோ... ஒன்று சம்சார நிலையில் அல்லது நிர்வாண நிலையில் என்று வேறுபடுத்தி வெளிப்படுத்த வழியில்லை. மனிதனோ, சம்பவமோ, ஒன்று புனிதம் நிறைந்தது அல்லது பாவபூர்வமானது என்று பிரித்துக் காட்டக்கூடாது. இந்தப் பிரிவு நம்முள் காலம் யதார்த்தம் என்கிற நினைவைப் படியச் செய்யும். யோசித்துப் பார்த்தால் உண்மையில் காலம் யதார்த்தம் அல்ல, கோவிந்தா. இது எனக்கு முழுமையாகத்



தெரிந்த ஒரு விஷயம். பல சந்தர்ப்பங்களில் நான் இதை உணர்ந்திருக்கிறேன். காலம் யதார்த்தம் அல்லவென்றால், நிலையற்ற இந்த உலகம், நிலையான உலகம் போன்றவற்றுக்கு இடையே, போராட்டம்-முக்தி, நல்லது, கெட்டது போன்றவற்றுக்கு இடையே உள்ள எல்லைகளும்கூடப் பொய்தான்!"

"ஏன் அப்படி?" கோவிந்தன் இந்தத் தத்துவச் சிந்தனையைக் கேட்டுச் சற்று குழம்பிவிட்டான்.

"கவனித்துக் கேள் நண்பா! நானும் நீயும் பாவிகள்தான். ஆனால், ஒரு நாள் பாவி பிரம்மமாக நிர்வாணம் அடைவான். அவனே பின்னொரு நாள் ஸ்ரீபுத்தனாவான். அப்படி எனில் இந்த 'ஒரு நாள்' என்பது மாயைதான். அடையாளப்படுத்தவோ, வித்தியாசப்படுத்தவோ மட்டும்தான். பாவி ஒருபோதும் புத்தரின் நிலையை அடையப்போவதில்லை. அவர் மோட்ச நிலை பெறுவதுமில்லை. பிறகு... ஒவ்வொரு பாவிக்குள்ளும் ஒரு புத்தன் எப்போதும் நிலைபெற்றிருக்கிறான். அவன் புத்தன்தான். அது ஒரு பரிணாமமல்ல. பலவீனனாக உள்ள புத்தனை நாம் கண்டறிய வேண்டும். அந்த புத்தன் உனக்குள்ளும் மற்றெல்லாரிலும் இருக்கிறான். உலகம் முழுமையற்றிருந்து பிறகு படிப்படியாக முழுமை அடையவில்லை கோவிந்தா! கண்டிப்பாக இல்லை. ஒவ்வொரு விநாடியிலும் அது பரிபூரணமானது.

"ஒவ்வொரு பாவத்திலும், புனிதம் உள்ளது. ஒவ்வொரு குழந்தையும் முதுமை அடையும். ஒவ்வொரு கிளை மற்றும் காம்பிலும் மணம் மறைந்திருக்கிறது. ஒருவரைவிட மற்றவர் மோட்சமார்க்கத்தின் வழியாக எவ்வளவு தூரம் பயணம் செய்தார் என்று சொல்ல முடியாது. திருடனிமும், சூதாடியிடமும் புத்தனைக் காண முடியும். அதேபோல் புத்தனிலும் மேற்குறிப்பிட்டவர்களைக் காண முடியும். ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடும் ஒருவரால் காலத்தை வெல்ல முடியும். ஒரே சமயத்தில் கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் மூன்றும் அவர் முன் வெளிப்படுகிறது. அப்போது எல்லாவற்றையும் அததற்குரிய மொத்தத் தொகுப்புத் தன்மையுடன் பார்க்க முடியும். அந்தக் காட்சி அழகானதும், அதே நேரம்,

முழுமையானதும்கூட. அதுதான் சாக்ஷாத் பிரம்மமும்கூட. எனவே, பிரம்மத்தில் நிலைபெற்றிருக்கும் எதுவுமே நல்லதுதான்.

"உயிரும், மரணமும், பாவமும், புண்ணிய கர்மங்களும், விவேகமும் - விவேகமற்ற தன்மையும் எல்லாம் நல்லவைதான். எல்லாமே தேவையுங்கூட. அவற்றை அதனதன் அர்த்தத்திலேயே நாம் புரிந்துகொண்டால் போதும். இப்போது என்னால் எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ள முடிகிறது. அவை என்னை ஆபத்துக்கு உள்ளாக்குவதில்லை. எனது உடல் மற்றும் ஆத்மாவைத் தெரிந்து கொண்டேன். எனக்கு லௌகீக வாழ்க்கையுடன் ஒரு காலத்தில் தீவிர ஆர்வம் பிறந்தது. பொருள்கள் மற்றும் பணத்துக்காக அலைந்து திரிந்தேன். கடைசியாக பௌதிகபரமான சொத்துகளை வாரிச் சேர்க்கும் முயற்சியின்போது இந்த வாழ்க்கையுடன் ஏமாற்றமே மிஞ்சியது.

"நாம் பிரபஞ்சத்திலுள்ள அண்ட சராசங்களுடனும் அன்பும் அனுதாபமும் கொள்ள வேண்டும். இகலோகத்தை மற்றோர் உலகத்துடன் ஒப்பிடக்கூடாது. மேன்மையான, சிரேஷ்டமானவை இந்த உலகத்துக்காக உள்ளன என்றும் கருதக்கூடாது. வாழ்க்கையை, அதற்குரிய நன்மை-தீமைகளுடன் நாம் சுவைக்க வேண்டும். அந்த நிலையில் நாம் அதை நேசிக்கவும், அத்துடன் ஒன்றிக் கலக்கவும் முடியும். கோவிந்தா, இதுதான் என் மனதிலுள்ள சில சிந்தனைகள்!"

சித்தார்த்தன் குனிந்து தரையிலிருந்து ஒரு கல்லை எடுத்துக் கையில் பிடித்தபடி பேசினான்:

"இது ஒரு கல். ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குப் பிறகு இது மண்ணாக மாறிவிடும். அந்த மண்ணிலிருந்து ஒரு செடியோ, மிருகமோ, மனிதனோ உண்டாகும். முற்காலத்தில் நான் ஒரு வெறும் கல்லாக இருந்தேன் என்றுகூட அது சொல்லலாம். மாயப்பிரபஞ்சத்தில் உள்ள மதிப்பற்ற ஒரு பொருள். ஆனால், பரிணாம வளையத்துக்குட்பட்டு அது மனிதனாகவோ, வேறு ஏதோ ஒரு சக்தியாகவோ மாற வேண்டும் என்றிருப்பதால், இதற்கும் முக்கியத்துவம் உண்டு. இப்போது நான் நினைப்பது இந்தக் கல் ஒரு மிருகமும், தெய்வமும் ஸ்ரீபுத்தர் என்றும்தான்.



"அதற்கு நாம் மதிப்பளித்து மரியாதை செலுத்துவது, அது ஒரு பொருளாக இருப்பதாலோ, காலக்கிரமத்தில் மற்றொன்றாக மாறும் என்பதாலோ அல்ல. அது எப்போதும் மொத்தப் பிரம்மமாக இருப்பதால்தான். இன்று இது எனக்கு ஒரு கல்லாகத் தோன்றுகிறது. அதன் பொருட்டே நான் அதை நேசிக்கிறேன். அதன் ஒவ்வொரு சுருக்கத்திலும், கோடுகளிலும் எனக்குப் பல அர்த்தங்கள் தெரிகின்றன. மஞ்சளும் சாம்பலும் கலந்த அதன் நிறம், உறுதி, மேற்புறத்திலுள்ள ஈரம் போன்றவற்றிலும் என்னால் பல மகத்தான தத்துவங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது. எண்ணெய் மற்றும் மெழுகின் தன்மை கொண்ட கவர்ச்சிகரமான கல்லும் உண்டு. பச்சிலை, குறுமணல் போன்று லாகவமான கற்களும் உண்டு. இவையெல்லாம் வேறுபட்ட கற்கள்! ஒவ்வொன்றும் அததற்கு உரிய முறையில் 'ஓம்'கார நாதத்தை பூஜிக்கின்றன. ஒவ்வொன்றும் பிரம்மம்தான். ஆனால், அதே நேரம் அது வெறும் கல்லும்கூட. எண்ணெய் அல்லது மெழுகு போன்ற விஷயம்தான் என்னைக் கவர்வது. அந்த ஒன்றுக்காகவே நான் அதை ஆராதிக்கவும் செய்கிறேன். ஆனால், இதைப்பற்றி நாம் அதிகமாகப் பேசுவதில்லை. வார்த்தைகளுக்கு, உண்மையான பொருளை வெளிப்படுத்தப் பல சந்தர்ப்பங்களில் முடிவதில்லை. அதை மட்டும் சொல்லலாம். வார்த்தைகளின் வழியாக மனத்திலிருப்பது வெளியே வருவதற்குள் பொருள் மாறுபாடு ஏற்பட்டு விடுகிறது. இது ஒருவேளை மடத்தனமாகக் கூடத் தோன்றலாம். ஒருசிலருக்கு விலை உயர்ந்ததாகவும் ஞான அம்சம் உட்கொள்ளக்கூடியதுமான சிந்தனைகள் மற்ற சிலருக்குப் பொருளற்றவையாகத் தோன்றுவதும்கூட என்னை மகிழ்ச்சிப்படுத்தவே செய்கிறது!"

கோவிந்தன் மௌனமாக எல்லாவற்றையும் செவிமடுத்த பிறகு சற்றுத் தயங்கியபடியே கேட்டான். "நீ எதற்காகக் கல்லைப் பற்றி என்னிடம் சொன்னாய்?"

"அது எந்தவித உள்நோக்கமும் இன்றி சும்மா சொன்னதுதான். ஒருவேளை நான் இந்தக் கல்லையும், நதியையும், கண்ணுக்குத் தெரியும் மற்ற அனைத்து உயிரினங்களையும் நேசிக்கிறேன் என்ற விஷயத்தை இந்த ஓர் உதாரணத்தின் மூலம்

புரிந்துகொள்ளலாம். இவற்றிலிருந்தெல்லாம் மிக உயர்ந்த பலவற்றை நாம் கற்றுக்கொள்கிறோம். என்னால் ஒரு கல்லையோ, மரத்தையோகூட இப்போது நேசிக்க முடியும், கோவிந்தா! அவை உயிர்த்துடிப்பு இல்லாத பொருள்களாகக்கூட இருக்கலாம். ஆனால், யாராலும் வார்த்தைகளை நேசிக்க முடியாது. எனவே, குருநாதர்களின் உரைகள் எந்தவொரு பயனையும் விளைவிப்ப தாக எனக்குத் தோன்றவில்லை.

"அவற்றுக்கு நிற வேறுபாடோ, மென்மையோ, கடினத் தன்மையோ, வாசனையோ, ருசியோ எதுவுமே இல்லை. அவை வெறும் வார்த்தைகள் மட்டுமே. அதனால்தான் இதுவரை நீ பதில்களைப் பெற முடியாதிருக்கிறது. தர்மமோட்சங்களுக்குக் கூட நாம் பல வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம் சம்சாரம், நிர்வாணம் என்பவைகூட வெறும் வார்த்தைகள் மட்டுமே. கோவிந்தா, குறிப்பாக நிர்வாணம் என்பது ஒரு நிலை அல்ல, அது ஒரு வார்த்தை மட்டுமே!"

"அன்பு நண்பா, நிர்வாணம் என்பது வெறும் ஒரு வார்த்தை மட்டுமல்ல, அது ஒரு லட்சியமும்கூட!"

சித்தார்த்தன் சாந்தமான, தெளிவான வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேச்சைத் தொடர்ந்தான்: "அது ஒரு லட்சியமாக இருக்கலாம் அன்பு நண்பா! ஆனால், வார்த்தைக்கும் லட்சியத் துக்குமிடையே எனக்கு வேறுபாடு எதுவும் தெரியவில்லை. உண்மையைச் சொன்னால் லட்சியம், நோக்கம் போன்றவற்றைக் கூட நான் பொருட்டாகக் கருதுவதில்லை. நான் பொருள்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருகிறேன். உதாரணமாக என் வழிகாட்டியாக இங்கு படகோட்டிக் கொண்டிருந்த மனிதர் தேர்ந்த ஒரு பண்டிதராகவும், என் குருநாதராகவும் இருந்தார். அவர் எத்தனையோ வருடங்களாக இந்த நதியை மட்டுமே நம்பிக் கொண்டிருந்தவர்.

"நதியின் சுரத்தை அவர் கவனித்துக் கொண்டிருந்தார். அதிலிருந்து ஞானம் பெறவும் செய்தார். அந்த நதிதான் அவருக்கு ஞானம் புகட்டியது. காலக்கிரமத்தில் அவருக்கு இந்த நதியே



தெய்வமாகக்கூடத் தோன்றியது. பல வருடங்களாகக் காற்றும், மேகமும், பறவையும், வண்ணத்துப்பூச்சியும்கூட துல்லியமான புனிதமானவை. மேன்மையுள்ள நதியைப் போலவே அவற்றாலும் நமக்குக் கற்பிக்க முடியும் என்பதைப் படகோட்டி நண்பர் அறிந்திருக்கவில்லை. ஆனால், கடைசியில் அந்த மகாத்மா காட்டுக்குள் மறைந்தபோது எல்லாவித ஞானத்தையும் பெற்றிருந் தார். நீயும் நானும் பெற்றுள்ளதைவிட மிகவும் கூடுதலான அறிவு. மாபெரும் பிரமாணங்களிலிருந்தோ, பண்டிதர்களான குருநாதர் களிலிருந்தோ அவர் இவ்வளவையும் கற்றுக்கொள்ளவில்லை. நதியின் பொறுமை, அன்புபூர்வமான பயிற்சியிலிருந்துதான் அதைக் கற்றார்."

"அப்படியானால், நீ பொருள் என்று சொல்வது யதார்த்தமான ஒன்றுதானா? அல்லது மனோவியல் ரீதியிலான பொருள் ஏதேனும் அதற்கு உண்டா? அது வெறும் ஒரு மாலை மட்டும்தானா? நிழலா? நீ சொல்கிற கல்லும், மரமும் எல்லாமே யதார்த்தம்தானா?" கோவிந்தன் அதிகப்படியான ஆர்வத்துடன் கேட்டான்.

"இந்த விஷயங்களும் என்னை அலைக்கழிப்பதில்லை!" சித்தார்த்தன் தொடர்ந்தான்: "கல்லும், மரமும் மேகமும் காற்றும் மாயை என்றால் நானும்கூட மாயைதான். அதனால் அவற்றின் இயல்பும் என்னுடையதைப் போல் ஆகிறது. அதனால்தான் நான் அவற்றுடன் அன்பு கொள்கிறேன். நீ பரிகாசம் செய்ய இடம் தரும் மற்றொரு தத்துவம் இது. அன்புதான் உலகிலேயே மிகவும் முக்கியமானது. தத்துவச் சிந்தனையாளர்கள் முக்கியமாக உலகத்தை வெறுக்கவும், அதை மற்றவர்களுக்கு விவரித்துக் கூறவும் செய்கிறார்கள். ஆனால், உண்மையில் உலகத்தை நேசிப்பதுதான் முக்கியம். அதை வெறுப்பதல்ல. பர பரம் நேசிப்பதுடன், மரியாதை கொள்வதும், எல்லாரிடமும் இரக்கத்துடன் நடந்து கொள்வதும்தான் முக்கியமாக நாம் கைக்கொள்ள வேண்டியவை!"

"எனக்கு இது புரிகிறது!" கோவிந்தன் சொன்னான். "இதையேதான் புண்ணிய ஆத்மாவான புத்தரும் உபதேசித்தார். அவர் மனிதர்களுக்குக் கருணையும், இரக்கமும், பொறுமையும்,

தீனர்களுக்கு மனம் இரங்குவதும், சகிப்புத்தன்மை ஆகியவை யெல்லாம் தேவை என்றல்லவா சொன்னார். ஆனால், நடைமுறை உலகத்தில் பர பர அன்பு உண்டாவது இயல்பான ஒன்றாக இல்லை. அது நம்மை மாயப் பிரபஞ்சத்துடன் மிகவும் நெருங்கவே வைக்கிறது."

"எனக்கும் தெரிகிறது..." சித்தார்த்தன் வசியமாகப் புன்னகை புரிந்தபடி பேசினான்: "இங்குதான் லட்சியம் மற்றும் வார்த்தைகள் பொருந்தாததைப் பார்க்கிறோம். மனிதர் மீது அன்பு செலுத்துவது குறித்த எனது கருத்து சரியான பொருளில், புத்ததேவரின் கருத்துகளுக்கு, உபதேசங்களுக்கு எதிரானதாகக்கூட இருக்கலாம். அதனால்தான் வார்த்தைகளை நான் அவ்வளவாகப் பொருட் படுத்துவதில்லை. ஆனால், 'எதிரானது' என்ற பதம்கூட யதார்த்தமானதல்ல. என்னுடையதும், புத்த தேவனுடையதும் கருத்துகள் ஒன்றுதான். ஒரு ஜென்மம் முழுவதும் மனிதர்களுக்கு உதவவும், அவர்களுக்கு முக்தி மார்க்கத்தை உபதேசிப்பதற்குமாக ஒதுக்கிய ததாகருக்கு அன்பு குறித்து இருந்த கருத்து எனது கருத்துடன் பொருந்தி வருமா என்று எனக்குத் தெரியவில்லை. புத்ததேவரது காரியத்தில் அவரது உபதேசங்களைவிட, நான் அதிகமாக மதிப்பது வாழ்க்கை நடைமுறைகளைத்தான். பௌத்தச் சிந்தனை மற்றும் உபதேசங்களிலும் மகத்துவம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவரது வாழ்க்கையும், பழக்கவழக்கங்களும் மகத்தானவை என்பதை மறுப்பதற்கில்லை!"

இருவரும் வெகு நேரம் மௌனமாக இருந்தனர். கடைசியில் புறப்படத் தயாரான கோவிந்தன் கேட்டான்: "உன்னுடைய கருத்து மற்றும் சிந்தனைகள் குறித்து என்னுடன் விளக்கமாக எடுத்து உரைத்ததற்கு நான் என்றென்றும் நன்றி உடையவனாயிருப்பேன். சித்தார்த்தா, நீ சொன்ன சில விஷயங்கள் எனக்கு விசித்திரமாகத் தோன்றுகிறது. அதன் உட்பொருள் கொஞ்சம்கூடப் புரியவில்லை. எப்படியிருப்பினும் உனக்கு மங்களம் நேரட்டும்!"

கோவிந்தனின் மனத்தில் பல்வேறு விதமான சிந்தனைகள் மேலெழும்பி வந்தன. 'சித்தார்த்தனது தத்துவங்களில் ஏதோ ஒரு பெரும் தவறு உள்ளது. சில பைத்தியக்காரத்தனமாக உள்ளன. இதைவிட எவ்வளவோ உயர்ந்தவை சிரேஷ்டரான புத்தரின் தத்துவங்கள். அவை மிக எளிமையானதும், புரிந்து கொள்ள சிரமமில்லாதவையும்கூட. ஆனால், சித்தார்த்தனின் உடல் வனப்பும், கண்களும், சிரிப்பும் மூச்சின் ஏற்ற இறக்கங்களும் அவனது தத்துவங்களுக்கு எதிரான ஒன்றாகத் தட்டுப்படுகிறது. இருப்பினும் புத்ததேவர் நிர்வாணமடைந்த பிறகு, சித்தார்த்தனைப் போன்ற ஒரு யோகீ வரனை நான் இதுவரை கண்டதில்லை. அவனது கருத்துகள் விசித்திரமாக இருக்கலாம். அதை விளக்கும் வார்த்தைகள் மூடத்தனமானதாக இருக்கலாம். எனினும் உடல்வாகும், கண்களும், தலைமுடி, தாடி, மீசை போன்றவை எல்லாம் அமைதியையும், புனிதத்தையும் சொரியவே செய்கின்றன. இவ்வளவு ஒளி சொரியும் ஒரு யோகீ வரனை புத்தனுக்குப் பிறகு நான் பார்த்ததே இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மைதான்.'



கோவிந்தனது சிந்தனை இந்தத் திசையில் திரும்பியபோது பர பரம் மாறுபாடான இரண்டு சித்தாந்தங்களின் கடுமையான போராட்டம் அவனுள் எழுந்தது. அவன் நட்புடன் மீண்டும் தன் பால்யகால நண்பனை, கோபமில்லாத ஒருவனாகத் தனக்கு முன் அமர்ந்திருக்கும் சித்தார்த்தனைத் தலைகுனிந்து வணங்கினான்.

"சித்தார்த்தா, நாம் இப்போது வயோதிகர்கள்..." கோவிந்தன் பேசத் தொடங்கினான்: "நாம் மீண்டும் சந்திப்போம் என்றும் சொல்ல முடியாது. நீ கடைசிக் கட்டமாக லட்சியத்தை அடைந்து விட்டாய் என்று தெரிகிறது. எனக்கு இன்னும் அந்த நிலை கைவரவில்லை. புண்ணியனான நண்பா, அதைப் பற்றியெல்லாம் என்னிடம் கூறு - எனக்குப் புரிகிற மாதிரி. எனக்கு உதவக்கூடிய வகையில் அதைச் சொல். எனது பாதை அந்தகாரம் நிறைந்ததாகவும், துயரம் நிறைந்ததாகவும் இருக்கிறது."

சித்தார்த்தன் அமைதியாக இருந்தான். அமைதி தவழும் தன் முகத்தால், கோவிந்தனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தான். அங்கு துயரமும், மன தாபமும், ஆசையும், இடைவிடாத தேடல் முயற்சியும், தோல்வியுமே சித்தார்த்தனுக்குத் தென்பட்டன.

அதைப் புரிந்துகொண்ட சித்தார்த்தன் ஒரு தடவை புன்னகைத்தான். "என்னிடம் நெருங்கி வா!" சித்தார்த்தன்

கோவிந்தனின் காதில் மந்திரித்தான்: "என் முன்பாகத் தலைகுனிந்து, என் நெற்றியில் ஒரு தடவை முத்தமிடு கோவிந்தா!"

கோவிந்தனுக்கு வியப்பாக இருந்தது. இருப்பினும் பூர்வகால நட்பினாலும் உணர்வுபூர்வமான நிலையாலும் கோவிந்தனால் அதைச் செய்யாமலிருக்க முடியவில்லை. கோவிந்தன், சித்தார்த்தனின் நெற்றியில் முத்தமிட்டான். இதைச் செய்ததுடன் அற்புதகரமான ஒரு மாற்றத்துக்கு ஆளானான் கோவிந்தன். சித்தார்த்தனின் பழக்கமற்ற புதிய வார்த்தைகளின் பொருளைப் புரிந்து கொள்ளவும், 'காலம்' என்கிற நிலையின் தன்மையை மனத்திலிருந்து அகற்றவும், நிர்வாண நிலையும் சம்சார நிலையும் ஒன்றுதான் என்பதையும் சற்று கேலித்தொனியுடன் ஒப்புக் கொள்ளவும் அவன் தயாராகிவிட்டிருந்தான். அப்போதுதான் இது நிகழ்ந்தது.

அதன்பிறகு தன் பால்யகால நண்பனான சித்தார்த்தனின் முகத்தை கோவிந்தன் அங்கு காணவில்லை. அதற்கு பதில் பல்வேறு வகையான, தொடர்ச்சியாக மாறுகிற முகங்கள் அங்கு தெரிந்தன. முதலில் நூற்றுக்கணக்கில் தெரிந்தவை, பிற்பாடு ஆயிரக்கணக்கில் தென்பட்டன. ஒவ்வொன்றும் திடுமென்று தோன்றி அதே வேகத்திலேயே மறையவும் செய்தன. இருப்பினும் அந்த முகங்கள் எப்போதும் அங்கேயே இருப்பதாகவும் ஒரு மயக்கம். மேற்குறிப்பிட்ட அத்தனை முகங்களும் சித்தார்த்தனின் ஒரே முகத்திலேயே பிரதிபலிப்பதாகவும் கோவிந்தனுக்குத் தோன்றியது. இறந்துபோன ஒரு வெளவால் மீனினதும், பச்சை ரத்தத்தின் நிறம் உள்ள ஒரு பிஞ்சுக் குழந்தையின் முகமும் அங்கு கோவிந்தனுக்குத் தென்பட்டன.

அதே நேரம் அட்டகாசமாக அலறியபடி ஒரு மனிதனின் நெஞ்சில் கட்டாரியைப் பாய்ச்சிக் கொல்லும் கொலைகாரனையும், மறுவிநாடி கொலைகாரனை சிறையதிகாரிகள் பிடித்துத் தூக்கிலேற்றிக் கொல்வதும் தெரிந்தது. அடுத்த விநாடி உடை ஏதுமற்ற ஆண்-பெண் இணையொன்று உடலுறவில் ஈடுபட்டிருப்பதும் தெரிந்தது. குளிர்ந்து, மரத்துப்போன பிணங்களும், கரடி,



முதலை, யானை, காளை மாடு போன்றவற்றின் தலைகளும் தென்பட்டன.

அக்கினி பகவான் மற்றும் கிருஷ்ணபகவானது உருவங்கள் தென்பட்டன. இந்த வடிவங்களும் அவற்றின் முகத்தில் தெரிந்த உணர்வுகளும் மாற்றம் பெற்றும் தெரிந்தன. சில ரௌத்திரமாகவும், சில அன்புடன் துவேஷம் கலந்ததாகவும் தோன்றின. ஒவ்வொன்றும் அழியக்கூடியது: அதே நேரம் உணர்வுகளின் தீவிரத்துடனும் விளங்கின. நிலையற்ற உணர்வுகளுடன் வேதனை கலந்த உதாரணங்கள். இருப்பினும் ஒன்றுகூட மரணத்துக்கு இரையாகவில்லை. மறுபிறப்பு மூலம் அவை புதுப்புது வடிவங்கள் பெற்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு புதிய முகம் இருந்தது. நேரம் மட்டுமே ஒரு பழைய முகத்துக்கும் புதிய முகத்துக்கும் இடையே இருந்தது. இந்த உணர்வுகளும், முகங்களுமெல்லாம் அசைந்துகொண்டிருக்கும் நதிப்பிரவாகத்தில் பர பரம் ஒன்றி முன்புறமாக நகர்ந்தன. ஆனால், மென்மையும், பார்வை ஊடுருவக் கூடியதுமான ஏதோ ஒன்றினால் அவை மூடப்பட்டிருந்தன.

பனிப்படலமோ, வெண்மையான கண்ணாடி போன்ற ஒரு பொருளாலோ அது மூடப்பட்டிருக்க வேண்டும். அது ஒரு பொய் முகம். அந்தப் பொய் முகம் சித்தார்த்தனது புன்னகை தவழும் சாந்தமான முகமாக இருந்தது. கோவிந்தன் தன் உதடுகளால் முத்தமிட்ட அதே முகம். இந்தப் பொய் முகத்தின் சிரிப்பு எல்லா உயிர்களின் அடிப்படையான உயிர் இணைப்பைப் பறையடித்துத் தெரிவிக்கும் சிரிப்பாக இருந்தது. ஆயிரம் ஆயிரம் உயிர் மரணங்களின் தாரதம்மியத்தை வெளிப்படுத்தும் சிரிப்பு. அமைதியும் அதே சமயம் கேலியும் கலந்த கோடானு கோடி உணர்வுகளை கௌதம புத்தரின் சிரிப்புடன் பொருத்துவது போன்ற சிரிப்பாகக் கோவிந்தனுக்குத் தோன்றியது. கோவிந்தன் பலதடவை பயபக்தியுடன் ஊன்றி கவனித்திருக்கும் நிறை வளிக்கும், வசிய சக்தியுள்ள புண்ணியாத்மாவான ஸ்ரீபுத்தரின் சிரிப்பு.

'காலம் யதார்த்தமானதுதானோ என்றும், இந்தக் காட்சி இரண்டு அல்லது மூன்று நிமிடங்களோ அல்லது ஓராயிரம்

வருடங்களாக நீண்டு நின்றிருந்ததா என்றும் புத்தரும், சித்தார்த் தனும், ஆத்மாவும் எல்லாமே நிலையாக இருப்பதுதானா?' என்றெல்லாம் குழம்பிய மனத்துடன் கோவிந்தன் வியப்பால் அசைவற்று அப்படியே நின்று போனான். கோவிந்தனின் ஆத்மாவில் ஒரு தேவ அம்பு எய்தது போன்ற ஒரு சொர்க்கீய அனுபவம் வாய்த்தது. இது அடுத்த நிமிடம் வரை எல்லாம் நிகழ்கால - எதிர்கால சம்பவங்களின் அரங்கமாகத் தெரிந்தது. தான் அன்புடன் முத்தமிட்ட பால்யகால நண்பனின் முகத்தை உற்சாகத்துடன் பார்த்த கோவிந்தன் எவ்வளவு நேரம் அப்படியே நின்றிருந்தான் என்று தெரியவில்லை!

கோடானுகோடி உணர்வுகளின் பிரதிபலிப்புகள் மேற் புறத்தில் தோன்றி மறைந்தபோதிலும் சித்தார்த்தனின் உடலிலோ வடிவத்திலோ குறிப்பிடத்தக்க எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அவனது புன்னகை விரும்பக்கூடியதாகவும், அமைதியுடனும் அதே நேரம் கேலித்தொனி கலந்ததாகவும் இருந்தது - புத்தருடையது போலவே!

கோவிந்தன் குனிந்த தலையுடன் நின்றிருந்தான். வயோதிகத் தால் சுருக்கம் விழுந்த அவன் கன்னப் பரப்புகளின் மீது கண்ணீர் இடைவெளியின்றி வழிந்தது. சித்தார்த்தனோடு உள்ள பக்தியாலும், அன்பாலும் அவன் எதுவும் செய்ய முடியாத செயலற்ற நிலைக்கு ஆட்பட்டிருந்தான். அசைவற்ற உதடுகளுடன், தனக்கு முன்பாக இருந்த நண்பனை, தனது வாழ்க்கையில் மிகவும் விலை உயர்ந்த தும், புனிதமானதுமான எல்லாவற்றினுடைய அடையாளமாகவே என்றென்றும் நேசித்திருந்தான். பால்யகால நண்பனான சித்தார்த்தனை, கோவிந்தன் பாதம்தொட்டு வணங்கினான்!